43150
THE REGISTRAR OF BOOKS
1949
MADRAS
TAMIL NADU ARCHIVES LIBRARY
1041-79
43150
Cover as titlepage



# ஓவியப்பரிசு

வை.மு.கோ.
80 வது நாவல்

“உலகளந்த உத்தமனின் லீலாவிநோதங்களின் அத்புதம் ஒன்றா இரண்டா? அனந்தம். அவைகளை அளவிட்டுச் சொல்லத்தான் முடியுமா! தம்பதிகளின் ஜோடியைப்பார்த்தால் கண் த்ருஷ்டி வராதிருக்க

வேண்டுமே என்று தோன்றுகிறது. இதே காமாக்ஷியின் வயிற்றில் பிறந்த மற்றப் பெண்களும் அழகுதான்; இருந்தாலும் இப்படி ஜோடியமைய வில்லை. இதுதான் அபாரமான எழிலுடன் அமைந்திருக்கிறது. எங்கா வது நன்றாக இருக்கவேண்டும்"......என்று ஒரு நடுத்தர வயதுடையவள் மற்றொருத்தியிடம் கூறினாள்.

"ஆமாம். எல்லாம் காலத்தின் கோலம். காமாக்ஷியின் குடும்பத் திற்கே இப்போது தசாநாதன் பார்வை விழுந்திருக்கிறது. ஏதோ போ! பூகம்பத்தில் ஒருபுறம் ஏறினால் ஒருபுறம் இறங்குகிறது. அதே கதிதான் காமாக்ஷியின் குடும்பத்திற்கு வந்திருக்கிறது. இதில் என்ன அதிசயப் படக்கூடியது இருக்கிறது? அதிசயம் என்றால் அதிசயம். இல்லை என் றால் இல்லை. உலகமே ஒரு நாடகமேடை. அதில் காணும் சகலமும் நாடக பாத்திரங்கள். வாழ்க்கையின் ஒவ்வொரு சம்பவமும் ஒவ்வொரு நாடகக் காக்ஷி. அதை நடத்திவைக்கும் ஸூத்திரதாரிதான் ஜகத்ரக்ஷகன்"...

என்று வேதாந்த முறையில் வெறுப்பும் கரகரப்பும் கலந்த தொனி யில் மற்றொருத்தி இந்த சம்பாஷணையில் கலந்துகொண்டாள். அப்போது தான் கணகணவென்று கெட்டிமேளம் கொட்டி முகூர்த்தம் நடப்பதை அறிவித்ததும் எல்லோரும் எழுந்து தம்பதிகளை ஆசீர்வதிக்க ஓடினார்கள்.

மங்கள கீதமும், மங்கள வாத்தியமும் ஜம்மென்று ஒலிக்கும் இன்ப ஓசையைக்கேட்ட எத்தகையோருடைய இதயத்திலும் ஒருதனித்த இன்ப உணர்ச்சி—ஆனந்தப் பெருக்கு—அலைமோதுவது ஸகஜமல்லவா? அந்த கும்பலில் 5 வயது சிறுமி உயர்ந்த ஆடையாபரண அலங்காரத்துடன் வெகு உத்ஸாகத்துடன், தம்பதிகளையும் அவர்களைச் சுற்றிநிற்கும் மற்ற பெண்டு களையும் அவர்களுடைய அத்புதமான அலங்காரங்களையும் மாறிமாறிப் பார்த்து அதில் ஒரு தனி இன்பத்தை அனுபவித்தவாறு, கலக்கமோ களங் கமோ இல்லாத ஒரு தனி உணர்ச்சியுடன் உலாவி வரும் அழகைக் கண்டு எல்லாருமே பூரித்தார்கள்.

அவளுடைய கண்களில் ப்ரகாசிக்கும் அதியத்புதமான ஒரு தெய்வீக ஒளி காண்போர் உள்ளங்களைக் கவர்ந்து அக்குழந்தையை வலுவில் இழுத்து ஒரு அன்பு முத்தமாலையை அணிவித்துச் சென்றால்தான் ஆவ லடங்கும்—என்கிற நிலைமையை உண்டாக்கும் அபூர்வசக்தி வாய்ந்திருந் தது. ஆழ்ந்த கருத்துடன் அவள் பார்க்கும்போது எதையோ அவள் கண்கள், அப்படியே புகைப்படம் எடுக்கிறதோ! என்று சந்தேகிக்கும் படியான ப்ரகாசத்தை அள்ளி வீசியது.

சிறுமி கல்யாணச் சடங்கையும் மற்றவர்களையும் மாறிமாறிப் பார்த்து ஓடியாடி விளையாடியபடியே நாலாபுறமும் கண்களைச் சுழட்டி எதையோ தேடுவதுபோல் பார்த்தாள். அந்தப் பார்வையில் எத்தனைவித உணர்ச்சிகள் மின்வெட்டுப்போல் ஜ்வலித்தன என்பது ஊன்றி கவனித் தவர்களுக்குத்தான் தெரியும்.

அப்படியும், இப்படியும் சுற்றிச் சுற்றிப் பார்த்தாள். இத்தனை கும் பலில் அவள் தேடும் அரிய பொருள் வேறு எதுவுமில்லை. தன்னருமை

தாயாரையேதான் வலைபோட்டுத் தேடினாள். பெண்கள் மயமாக உள்ள இடத்தில் அவளைக் காணாதது அச்சிறிய இளந்தளிர் உள்ளத்தில் ஒரு மகத்தான குறையைக் கிளப்பியதால் தடதடவென்று உள்ளே சென்றாள். கூடத்திலுள்ள அறைகள், தாழ்வாரத்து விடுதிகள் முற்றிலும் காணாததால் சமையல் கட்டிற்குச் சென்றாள்.

அங்கு அவள் தாயாராகிய பானுமதி, எல்லோரும் இட்டிலி சாப்பிட்ட இலைகளை எடுத்து அவ்விடத்தைச் சுத்தம் செய்துகொண்டிருந்தாள். அதோடு, மற்றப் பெண்களைப்போல் தன் தாயார் புதிய உடையணிந்து அலங்காரம் செய்துகொள்ளாமல் தினம் இருப்பதுபோலவே நெத்தியிலும் ஒன்றுமின்றி தலையும் வேஷமுமாக வேலைக்காரியைப்போல் வேலை செய்வதைக்கண்டதும் அந்த சின்னஞ்சிறு கண்களுக்கு என்ன தோன்றியதோ அந்தச் சிங்கார உள்ளத்தில்தான் எத்தகைய உணர்ச்சி உண்டாகியதோ தெரியவில்லை.

தாயாரின் அருகில்சென்று வாயே திறக்காமல் சில விநாடிகள் இமை இமைக்காமல் அவளையே பார்த்தவாறு முதலில் நின்றாள். பச்சைக்குழந் தையானாலும் வித்யாஸங்களின் உணர்ச்சி நன்றாக ஊடுருவிப்பாய்ந்து வேலைசெய்வதை அவளுடைய பார்வையும் முகபாவமும் எடுத்துக் காட்டியது. அச்சமயம் அங்குவந்த ஒரு உறவினர், இக்குழந்தை நிற்கும் கன ஜோரான நிலையைக்கண்டு வியப்புற்றவாறு..."இந்துமதீ!...என்னம்மா ஏதோ ஆழ்ந்த யோசனையுடன் பார்க்கிறாய்?" என்று அன்புடன் கேட்டார்.

சிறுமி சற்றும் தயங்காமல்..."இல்லே மாமா, கூடத்திலே கல்யாணம் நடக்கிறது. எத்தனையோ மாமிகள் நன்னா அலங்காரம் பண்ணிண்டு அழகா அங்கே வந்து நிக்கறா, ஏதோ பாடறா...ஆலத்தி சுத்தரா, என்னல் லாமோ செய்யறாளே, எங்கம்மா மட்டும் அசடாட்டம் தலையும் வாரிக்காமே நெத்திக்கும் இட்டுக்காமே நல்ல புடவை கட்டிண்டு பூ வெச்சிண்டு ஜோரா அங்கு வந்து நிக்காமே எச்சில் இலெயே எடுத்து சுத்தி பண்ணி வேலே செய்துண்டே இங்கே இருக்கிறாள்...அது ஏன் என்றுதான் பார்க்கிறேன். அம்மாவுக்குகூட நிறைய புடவைகள் பீரோவிலே இருக்கு மாமா!"...

என்று கள்ளங் கபடு அற்ற பரிசுத்தமான உணர்ச்சியுடன் கேட்பதை யறிந்த அந்த மனிதரின் வயிற்றில் சங்கடம் செய்தது. இந்தப் பச்சை பாலகிக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் திணறிப் போய் கண்ணைத் துடைத்தவாறு நழுவி விட்டார். இந்துமதியின் வார்த்தைகளைக் கேட்ட பானுமதிக்கு எங்குமில்லாத துக்கம் கரை புரண்டோடும் காட்டு வெள்ளம் போல் பொங்கிவிட்டதால் அங்கு நிற்கவும் முடியாது தடதடவென்று புறக்கடைப் பக்கம் போய்விட்டாள்.

கல்யாணச் சடங்குகள் முடிந்து சாப்பாட்டிற்குப்பின் எல்லோரும் தாம்பூலம் தரித்துக்கொண்டே தம் தம் போக்காகப் பேசிக் கொண்டார்கள். பானுமதி அந்த கும்பலின் பக்கமே வரவில்லை. கலியாணத்திற்கு வந்துள்ள ஒருத்தி மற்றொருத்தியைப் பார்த்து "ஏன் மாமீ!......பானுமதி தான் காமாக்ஷியம்மாளின் மூத்த பெண்ணா?" என்று கேட்டாள்.

கமலா:—ஆமாம்......மூத்தப் பெண்ணால்தான் இன்று காமாக்ஷி இந்த நிலைமையில் இருக்கிருள். ஆனல், அந்த மூத்த பெண்ணின் வாழ்வுதான் மூழ்கிவிட்டது.

விமலா:—ஏம் மாமி! எனக்கு விவரம் புரியவில்லை. யார்யாரோ எப்படி எல்லாமோ சொல்கிருர்கள். அதனல் கேட்கிறேன்; பானுமதியின் கணவன்......

கமலா:—ஏன் இழுக்க வேண்டும்? பானுமதியின் கணவன் வயதான வன்தான். மூன்ரும்தாரமாக அந்தக் கிழவனுக்கு பானுமதியைக் கிணற்றில் தள்ளுவது போல் தள்ளினர்கள். எல்லாம் பணத்திற்கு ஆசைப்பட்டுச் செய்த பரிபவந்தான்...

விமலா:—பானு அதற்கு ஒப்புக் கொண்டாளோ?

கமலா:—ஆமாம். பெண்ணின் அபிப்ராயத்தைக் கேட்டுத்தான் செய் திருர்களாக்கும்; இந்த காலத்திய சில பெண்களைப்போல் பானுமதி துடுக் கான பெண்ணல்ல. அடங்கிய சரக்கு பாவம்! தாய் தந்தையர் தனக்கு அனுகூலமான காரியத்தைச் செய்வார்களேயன்றி ப்ரதிகூலமாகச் செய்யமாட்டார்கள் என்று நம்பினள். இவர்களுக்குத்தான் தரித்திரம் பிடுங்கித்தின்றது. ஏதோ கிழமோ கிட்டோ கல்யாணம் என்ற கடனை முடித்துவிட்டால் பணம் கிடைத்து விடுகிறது என்கிற சுயநல லாபத் திற்காக கட்டி வைத்தார்கள்.

விமல:—மூத்த மனைவிகளுக்குக் குழந்தைகள் இல்லையா மாமி?...

கமல:—ஒரு பிள்ளை இருப்பதாகக் கேள்வி...யாருக்குத் தெரியும் இவர்கள் ரகஸியம்? சட்புட்டென்று கல்யாணமும் நடந்தது. பிறகு நான்கு வருஷத்திற்குள் பானு வயிறும் பிள்ளையுமாயிருக்கையில் கிழவனும் மறைந்துவிட்டான். அவன் இறந்து விடுவான் என்பதை யறிந்து, சொத் துக்கள் சுயார்ஜிதமாகையால் பானுவின் தகப்பனர் சகலத்தையும் தன் பெண் பேருக்கே கக்கிக்கொண்டு முன்ஏற்பாடாகவே தயாராக விருந்தார்...

வியல:—நிஜமாகவா மாமீ! அத்தகைய தைரியங்கூட வருமா! தன் மகளின் வாழ்வு பாழாகி விடுகிறதே என்கிற துக்கந்தானே முதலில் போராடும்?

கமல:—திடீரென்று நேர்ந்துவிடும் விஷயமானல் அப்படி கலங்கும். இவர்கள் பணத்திற்காகவே மணத்தை முடித்தார்கள். அப்போதே பிணத் தையும் எதிர்பார்த்தார்கள். அம்மாதிரி முன் ஜாக்ரதையுடன் செய்கிற வர்களுக்கு பணம் வாராது போய்விடுமானல்தான் துக்கமேயன்றி பணம் வந்து விட்டால் துக்கமேது என்கிற கோஷ்டியாயிற்றே இவர்கள்! பெண் ணும் பணமும் சேர்ந்து வீட்டிற்கு வந்துவிட்டதால் வாழ்வும் உயர்ந்து விட்டது. உலகத்தில் மக்களுக்குப் பெற்ற தாய்தந்தைகளைவிட உற்ற துணைவர்கள் யாரிருக்கிருர்கள்?

விமலா:—நீ சொல்வதெல்லாம் எனக்கு ஏதோ கதை கேட்பது போலிருக்கிறதேயன்றி உண்மையான விஷயமாகவே தோன்றவில்லை... இந்துமதி எப்போது பிறந்தாள்?

கமலா:—வயிற்றுப் பிள்ளையுடன் பிறந்தகத்துக்கு வந்தாள்...... மாதங்கள் நிறைந்ததும் "பெண்ணாகப் பிறந்ததே" என்று கலங்கினாள். ஆனால் அவளுடைய பெற்றோர்கள் அபரிமிதமாகச் சந்தோஷமடைந்தார்கள்... இதோ பார் விமலா! எந்த விஷயமும் கதையில் நடப்பதற்கு மேலான ருசியுடன் வாழ்க்கையில் நடப்பதை நான் ப்ரத்யக்ஷமாகப் பார்க்கிறேன். அதில் இது ஒன்று. மூத்தவளுக்கு ஒரு மகன் இருக்கிறான். அவனைத்தான் இந்தமனிதன் அனாதையாக நிறுத்திவிட்டதால் அவனுடைய தாய் மாமன் மனக் கஷ்டத்துடன் இவர்களை சபித்துக்கொண்டே அழைத்துக்கொண்டு போய்விட்டார். பிறகு வருஷ திவசத்திற்குகூட இவன் அங்கு போகவில்லை. அவனையும் கூப்பிடவில்லை. அந்த பையனைப் பற்றி ஒன்றுமே தெரியாது. இருக்கிறானா, இறந்து விட்டானா! என்று கூடத்தெரியாது.

விமலா:—அட பாவமே!.....கொண்டுவந்த சொத்துக்களையாவது சரிவர வைத்திருக்கிறார்களா?

கமலா:—ஆகா! மிக மிக அக்கரையாக வைத்திருக்கிறார்கள்...... போதுமே வயிற்றெரிச்சல்... இந்த மூத்தப் பெண்ணின் வாழ்வைப் பாழ்படுத்திப் படுகுழியில் தள்ளியதன் பயன் இரண்டு பெண்களுக்கு நன்றாகச் சீர்வகைகள் செய்து நல்ல இடத்தில் விவாகத்தைச் செய்துவைத்தார்கள். இரண்டு பிள்ளைகளையும் நன்றாகப் படிக்கவைத்தார்கள். குட்டிப் பையனும் படிக்கிறான். அந்தப் பையனுக்கே இந்துவைக் கட்டிவிடுவதென்று ஒரு புள்ளியை முதலிலேயே குத்தியிருக்கிறார்கள். இரண்டு வீடுகளை வாங்கி ஒன்றில் தாம் இருந்துகொண்டு மற்றதை வாடகைக்கு விட்டிருக்கிறார்கள். நிலங்கள்கூட ஏதோ வாங்கியிருப்பதாகக் கேள்வி...சகலமும் பானுமதியின் சொத்துதான்,

விமலா:—நீங்கள் சொல்வதைப் பார்த்தால் பானுமதிக்கு ஒரு லக்ஷ ரூபாய் சொத்து இருக்கும்போல் தோன்றுகிறதே.

கமலா:—கிட்டதட்ட இருக்கும்... உம்... அதோ பானுமதி போகிறாள் பாரு. இந்த காலத்தில் இவளைப்போன்ற உத்தமி, வைராக்ய சிகாமணி யாரிருக்கிறார்கள்? ஆனைகட்டிய இடத்தில் பூனை படுக்கவாவது இடம் மிச்சமாகுமோ அல்லது......

என்று இவர்கள் பேசுவதைக் கேட்டுக்கொண்டே வந்த பானுவின் தாயார்..."என்னடியம்மா! ரகஸியம் பேசுகிறீர்கள்?...நேரமாகிறது. கல்யாணப் பந்தலை அலங்கரித்து கச்சேரிக்கும் டீபார்ட்டிக்கும் ஏற்பாடு செய்யுங்கள்" என்று உத்தரவிட்டாள். அதோடு அவர்களுடைய சம்பாஷணைக்கு முற்றுப்புள்ளி விழுந்தது.

## 2

தேன்மாரி பொழிவதுபோன்று கானமாரியை ஒரு அழகிய மாதரசி பொழிந்துத் தள்ளுகிறாள். கூட்டமோ ஏராளமாய் கூடிவிட்டார்கள். டீபார்டியில் சாப்பிட்டுவிட்டுக் கச்சேரியை ரஸித்து அனுபவித்

துப் பின் வெத்திலே பாக்கு பெற்றுக்கொண்டு போகும் கூட்டத்தை— அதிலும் பெண்களின் விதவிதமான விசித்திர அலங்காரங்களேயும் கண் களேப் பறிக்கும் வர்ண ஜாலங்களுடன் கண்ணேச் சிமிட்டும் உடைகளின் சிறப்பையும்—உலகமறியாத கேவலம் பச்சிளங்குமரி இந்துமதி வெகு வெகு ஊக்கத்துடன் கவனித்துவந்தாள்.

காலேயில் கல்யாணப் பந்தலில் பார்த்தபோதே ப்ரமித்த சிறுமி இப் போது இன்னும் அபரிமிதமான வியப்பைக் கொடுக்கும் சிங்கார மனே கரிகளேக் கண்டதும், காலேயில் தோன்றிய அதே எண்ணம், அதே யோசனேகள்தான் அவளது இதயத்தில் வேலே செய்தன. "அன்று அம்மா வின் பீரோவைத் திறந்தபோது அதில்கூட நிறைய சரிகைச் சேலேகள் இருந்ததே, ஏன் அம்மாமட்டும் இப்படி அவைகளேக் கட்டிக்கொண்டு இங்கு வரவில்லே?" என்கிற ஒரே எண்ணம் மறுபடியும் தலேதூக்கி வேலே செய்ததால் உள்ளே ஓடிவந்தாள்.

அவளது மான் விழிகளின் பார்வை நாலாபுறமும் சுழன்றது. உள்ளே யாரோ சில அத்தைப் பாட்டிகளும் வேலேக்காரிகளுந்தான் இருந்தார்கள். பானுமதியைக் காணவில்லே. அச்சமயம் காமாக்ஷி ஏதோ காரியமாக அங்கு வந்தாள். இந்து இங்கு தனியாக நிற்பதைப் பார்த்ததும் "ஏண்டா கண்ணு இங்கே தனியா நிக்கறே? என்ன வேணும்? அப்பிச்சி வேணுமா?" என்று அன்புடன் கேட்டபடியே குழந்தையைத் தூக்கி முத்தமிட்டாள்.

இந்து:—அப்பச்சி வேண்டாம் பாட்டீ! நானு காத்தாலே முதல் பாக்கரேன். அம்மாமட்டும் நன்னு சிங்காரிச்சுக்காமே ஏன் வேலேக்காரி போலே வேலே செய்துண்டிருக்கா? அம்மாவுக்கும் நெறய புடவை, நகை, எல்லாம் இருக்கெ பாட்டீ! அவ ஏன் போட்டுக்கல்லே? பாட்டுக் கச்சேரிக்கு ஏன் வரல்லே? அம்மாவே கூட்டிண்டு போகத்தான் வந்தேன். அம்மா எங்கே!...என்று கேட்கும்போது பெத்த வயிறு சும்மா இருக்கமுடியுமா! அவளேயும்மீறி சங்கடம் செய்தது. கண்ணில் முட்டிய நீரைத் துடைத்துக் கொண்டு "ஏண்டா ராஜா! நீ கச்சேரிக்கு வருகிறவர்களுக்கு அழகா நின் னுண்டு குங்குமம் கொடுக்கப்படாதோ! சித்திகல்யாணத்துக்கு பெண்ணு வேலே செய்யவேண்டாமோ! ஓடியா ராஜாத்தி!" என்று குழந்தையின் கவனத்தைச் சடக்கென்று மாற்றி வாசலுக்கழைத்துக்கொண்டு போய் குங்குமச் சிமிழை வாங்கிக் குழந்தையின் கையில் கொடுத்து "கண்ணு! நீ இங்கேயே நின்று சமத்தாய் வருகிறவர்களுக்கெல்லாம் குங்குமம் கொடுக் கிருயா?" என்று ஆசையைத் தூண்டிவிட்டுச் சென்ருள்.

குழந்தைகளின் சுபாவமே ஒன்றைவிட்டு ஒன்றில் தாவுவது சகஜம் என்ருலும் இந்துமதி தான் முதலில் நினைத்திருந்ததை அடியோடு மறந்து விடவில்லே. குங்குமம் கொடுப்பதையும் பெருமையாகவே எண்ணிக் கொடுத்தவாறு பக்கத்திலேயே புஷ்பம், சந்தனம் கொடுக்கும் பெண்களே உற்றுப் பார்த்தாள். ரதிதேவியைப்போல் அலங்காரத்துடன் நிற்பதைப் பார்த்த இந்து, "ஏன் சித்தீ! நீ மட்டும் இப்படி அலங்காரம் பண்ணிண்டு ஜோரா இருக்கயே எங்கம்மா ஏன் இப்படி செய்துகொள்ளல்லே?" என்ருள்.

அதற்கந்த பெண் "உஸ்...பயித்தியம்போல் இப்படியெல்லாம் கேட்காதே. அப்புறம் உன்னை அசடு என்று பரிகாஸம் செய்வார்கள். பேசாமல் சமத்தாயிரு" என்று பூடகமாக அடக்கினாள்.

காலைமுதல் ஒரே நினைவுடன் பிடிவாதமாகவிருக்கும் குழந்தையா சடக்கென்று அடங்குகிறவள்? "ஏன் சித்தி! எங்கம்மாவைப் பத்தி கேட்டா கூட பரிகாஸம் பண்ணுவானேன்? பாட்டிகூட இன்னிக்கு எங்கம்மாவுடைய பெரிய ஜரிகைப் புடவையைத்தானே கட்டிண்டிருக்கா. அதோடே பாட்டியும் தாதாவும் உங்களுக்கெல்லாம் பட்டுப் புடவை வாங்கிக் கொடுத்தாளே. எங்கம்மாவுக்கு மட்டும் ஏன் வாங்கித் தரல்லே? அந்த கோவந்தான் ஏங்கம்மா பட்டு புடவை கட்டிக்கலையோ என்னவோ?" என்று முன்னைவிடச் சிறிது கற்பனையுடனேயே கேட்டாள்.

கூடவிருந்த மற்றொரு பெண் சற்று சிள்ளென்ற குரலில் சுளித்த முகத்துடன் "போடி அசடே...உங்கம்மாதான் 'விடோ'வாச்சே. அவளுக்கு சுமங்கலி ப்ரார்த்தனை செய்ய புடவை வாங்கிக் கொடுப்பாளா என்ன? இந்த பெரிய வார்த்தைகளை எல்லாம் நீ பேசப்படாது. தெரியுமா?" என்று அதட்டினாள்.

"அம்மா விடோவா...அப்படீன்னா என்ன?...எனக்குப் புரியலயே?" ...என்றாள். அதற்கந்த பெண்கள். "ஆமாம்! பெரிய நூத்துப் பாட்டிக்குப் புரியணும் பாரு. போடீ பயித்தியம். இப்படி எல்லாம் தோணப்புவதாயிருந்தால் நீ இப்பவே உள்ளே போயிரு" என்று கோபித்ததும், உண்மையில் விவரமும் புரியவில்லை, ஆசையும் விடவில்லை. தானாகவே ஏதேதோ எண்ணியவாறு பதுமைபோல் நின்று குங்குமம் கொடுத்துவந்தாள்.

கல்யாணங்கள் முடிந்து வந்தவர்களெல்லாம் போய்விட்டார்கள். இந்துவும் பள்ளிக்கூடம் போகும் பரபரப்பிலும் முதல்முதல் எழும்பிய வேகம் மட்டும் மனத்திலேயே இருந்தது. "விடோ என்றால் என்ன!... என்ற புரியாத கேள்வி அந்த இளந்தளிர் உள்ளத்தில் ப்ரமாதமாக வேலை செய்துதான் வந்தது. தான் குழந்தையாகையால் தனக்கு யாரும் சரியாகப் பதில் சொல்ல மறுக்கிறார்கள் என்பதையும் அவள் எப்படியோ யூகித்தறிந்து கொண்டாள். இதைப்பற்றி யாரிடம் கேட்பது என்று ஒவ்வொருவருடைய முகத்தையும் பார்ப்பாள். ஏதோ ஒருவிதமான பயம் பாதிப்பதால் பேசாதுபோய்விடுவாள்.

இந்துவின் மூத்த மாமாவாகிய ராஜசேகரன் சித்ரகலா நிலயத்தில் படித்துப் பட்டம்பெற்ற ஒரு சைத்ரீகன்தான். ஆனால், எந்த சாபக்கேட்டின் தாண்டவமோ, சௌந்தர்ய தேவதையின் அபூர்வதேஜஸ்ஸில் ஒரு திவலைகூட அவன் கையில் அனுக்ரகம் செய்யவில்லை. ஏதோ, குழந்தைகளின் பாடபுத்தகங்களை வெளியிடும் ஆபிஸில் மாதச்சம்பளத்திற்கு வேலைக்கமர்ந்து, அணில், ஆடு, மரம், மாடு, ஏணி, ஏற்றம், பம்பரம், என்ற பொம்மைகளைத்தான் எழுதிவந்தான். அந்த புத்தக சம்மந்தமாக சில சமயம் மனித உருவங்களைக்கூட ச்ருஷ்டித்துவந்தான். அவைகளுக்

குக்கீழே; இவன் மனிதன் என்பதையும் தவறாது எழுதி விளக்கிப் பெருமை யடைவான்.

அன்று வீட்டில் உட்கார்ந்து ஏதோ நாலைந்து உருவங்களைத்தீட்டி அதைப் பார்த்துக்கொண்டிருந்தான். இந்துமதி அவ்வுருவங்களை ஆவலுடன் பார்ப்பதோடு "இதென்ன இப்படி இருக்கிறதே......மூக்கையே காணமே...காக்காய் மூக்குபோலிருக்கிறதே...ஐயையோ! மாமா! கழுத்தென்ன இப்படி அமுக்கி மொத்தையா அடுப்புபோலே இருக்கே. ஏன் மாமா! இவளுக்கு ஏன் நெத்தியிலே ஒன்னுமே வைக்கலேயே! மறந்து போயிட்டயா!" என்றாள்.

மாமா:—போடீ அசடே!...எடுப்பு எடுக்கிறதுதான் உனக்கு வேலை. நீ இதைவிட அழகாய் எழுதிவிடுவாய். உன் ஆம்படையான் எழுதப் போகிறான். போடீ வாயாடீ!...நெத்தியிலே யார் இட்டுக்கொள்வா, யார் இட்டுக்கொள்ளமாட்டாள் என்பதே உனக்குத் தெரியலேயே! இவ ஒங்க அம்மா மாதிரி விடோ! அதான் நெத்தியிலே இல்லே. நகைகள் இல்லே. ஒன்றுமில்லே, இவள் எங்கம்மாமாதிரி சுமங்கலி. அதான் எல்லாம் இருக்கு, இப்ப தெரிஞ்சுதா...

என்றதைக் கேட்டதும் வெகு நாட்களாகச் சின்ன இதயத்தைப் பெரியதாக வாட்டிக்கொண்டிருந்த ப்ரசனை திடீரென்று மறுபடி கிளைக்கும்படி மாமா பேசியதும் இதய பாதாளம்வரையில் அந்த உணர்ச்சி வேலைசெய்து முகம் மாறியது. இந்த சந்தேகத்தைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளக்கூடிய சமயம் இதுதான் என்பதை உணர்ந்த இந்துமதி... "ஏன் மாமா!...விடோன்னா என்ன அர்த்தம்? அவா ஏன் ஒன்னும் பண்ணிக்கக்கூடாது?"...என்று கேட்டாள்.

மாமா:—ஆமாம். நாத்துப்பாட்டியைப்போல் கேளு. விடோன்னா, கணவன் இல்லாதவர்கள். விதவைகள் என்று அர்த்தம் "நம்ப அத்தை பாட்டி இருக்கா பாரு. அந்தமாதிரின்னு அர்த்தம்...சரிதான், போ! தொணதொணவென்று உபத்திரவம் செய்யாதே, போய் விளையாடு— என்று கூறி யனுப்பிவிட்ட பிறகுதான் இந்துமதிக்கு ஒருவாறு புரிந்ததும் புரியாததுமான இரண்டுங்கெட்டான் நிலைமை உண்டாகியது.

அவளுடைய சுறுசுறுப்பான கைகள் சதா எதையோ கிறுக்கிக் கொண்டே இருக்கும். அவள் தானாக கோடுகளைக் கீறி 'இதுதான் குருவி.' என்று சாதித்துப் பெருமையடைவாள். மாமாவின் இன்றைய சித்திரங்களைப் பார்த்ததும், அவளும் மனித உருவங்களைக் கிறுக்க வாரம்பித்து "இதுதான் பாட்டி. நெத்தியில் பொட்டு இருக்கிறது. இதுதான் அம்மா, பொட்டில்லே. இது விதவை... இது அமங்கலி" என்றுதானே பலகையில் சாக்கினால் கிறுக்கிக்கொண்டே சொல்வதைக் கண்ட பானுமதிக்குத் தூக்கி வாரிப்போட்டது. சித்திரம் எழுதப் பழகும் சுறுசுறுப்பை ஆனந்திப்பதா? இம்மாதிரி கண்ராவிப் பேச்சைக் கேட்டும்; பார்த்தும் வயிறெரிவதா? சில விநாடிகள் தலை சுற்றியது. ஒன்றுமே பேசாமல் பதுமைபோல் நின்றாள். உள்ளத்தில் செய்யும் சங்கடம் வெயர்வையாக வழிந்தது.

காற்று வேகமாக அடிப்பதைவிடச் சில சமயம், நாட்கள் மாதங்கள், வருடங்கள் ஓடி மறைந்துவிடுகின்றன. இன்றுதான் மாங்கொட்டை நட்டதுபோலிருக்கிறது; பழத்தைக் கொடுக்கும்போது வியப்பாக விருக்கிறது. அதுபோல் குழந்தைகள் இப்போதுதான் பிறந்தது போல் தோன்றும். வளர்வது தெரியாது திடுதிடென்று யுவதியாய் நிற்கும்போது பார்க்கையில் "அடாடா! இப்பதான் பிறந்ததுபோல் தோன்றுகிறது. இதற்குள் இத்தனை வயதாகிவிட்டதா!" என்று சற்று ப்ரமிக்கத்தான் செய்யும், அப்போதுதான் காலம் ஓடுகிற வேகத்தின் அளவு ஓரளவு தெரிகிறது.

அதேபோல் இந்துமதி S. S. L. C. பரிக்ஷைக்குப் போகிறாள் என்பதைப் பார்க்க நமக்கே சற்று ப்ரமிப்பாகத்தானே இருக்கிறது. இப்போதெல்லாம் அவள் தன் பொழுதை ஒரு நிமிஷங்கூட வீணாகப் போக்குவதில்லை. சித்திரம் எழுதுவதிலுள்ள ஆர்வம் தினே தினே பெருகிக்கொண்டே வந்தது. பானுமதிக்குத் தன் மகளுடைய மனம் எந்த கலையில் சென்று லயித்ததோ, அதையே வ்ருத்தி செய்து அவளை மகிழ்விக்கவேண்டும் என்பதே அவளுடைய ஆவல். ஆகையால் இந்துமதிக்குச் சித்திரம் கற்றுக்கொடுக்க ஓர் சிறந்த சைத்ரீகனையே உபாத்தியாயாக நியமித்தாள்: மிகமிக ஆர்வத்துடன் இந்துமதி சைத்ரீகரிடம் கற்றுக்கொள்ளும் வேகத்தில் அழகிய உருவங்களை எல்லாம் தீட்டத் தொடங்கினாள்.

இந்துமதியின் ஒவ்வொரு சிறிய கோடுகளைக்கூட கண்டு பானுமதி அகமகிழ்ந்து பூரித்துப் போவாள். அவளுடைய உடைந்த இதயத்தின் சுக்கல்களைச் சேர்த்து வைக்கும் கருவி இந்துமதியும் அவளுடைய சித்திரமுமேயாகும். பானுமதி தற்காலத்துப் பெண்களைப் போன்ற துணிச்சலோ தைரியமோ, துடுக்கோ கொண்டவளில்லை பாவம்! பயந்து பயந்து நடுங்கும் சுபாவமுடையவளாகையால் பெற்றோர்களிடம் கூட உரத்துப் பேசமாட்டாள். ஏன்? தகப்பனாரின் எதிரில் அவள் வந்து பேசுவதே கிடையாது. மாமனாரிடம் நடக்கும் மருமகளைப்போலத்தான் பானு தகப்பனாரிடம் நடந்து வந்தாள்.

ஏதாவது கேட்டால் பதில் சொல்வாளேயன்றி தானாக, அப்பா! என்று அழைத்துப் பேசுவதை அவளுடைய விவாகத்திற்குப் பிறகு விட்டுவிட்டாள். விதி அவளை இங்கேயே, இவர்களுடைய காலடியிலேயே கொண்டு சேர்த்துவிட்டதால் பின்னும் வெறுப்பும், துக்கமும் வாழ்க்கையிலேயே மகத்தான எரிச்சலும் உண்டாகிவிட்டதால் முதலிலெல்லாம் தற்கொலை செய்துகொள்ளவும் துணிந்தாள். "பணத்திற்காகத்தானே தெரிந்து கிழவனுக்குக் கொடுத்து வாழ்வைமடித்தார்கள். அந்த பணம் வந்துவிட்டது. அதை அடைந்து ஆனந்தப்படட்டும். அதன் பிறகாவது புத்தி வருமா?" என்று எண்ணினாள்.

தன் கருவிலுள்ள சிசு முதலில் தடை செய்தது. ப்ரஸவித்த உடனே தற்கொலை செய்துகொள்ளலாம் என்று எண்ணினாள். ஆனால் சந்திர

பிம்பம்போன்ற முகமும் குறுகுறுப்பான வசிகரத்தை அள்ளி வீசும் கண்களும் கடைந்தெடுத்த தந்த பொம்மைபோன்று பிறந்துள்ள இந்துமதியைப் பார்த்ததும் இத்தகைய சுகுமாரியைப் பரதேசியாய்...பணப்பேய்களிடம் பரிதவிக்க விட்டுவிட்டு நாம் ஏன் சாகவேண்டும்? விதியின் வலிமையான பாறை என்னமோ தலைமீது புரண்டாகிவிட்டது, இனிமேல் இக்குழந்தையின்மூலமாகவாவது சிறிது துக்கம் ஆறும் மார்க்கம் கிடைத்திருக்கையில் ஏன் சாகவேண்டும்? உலகில் இத்தகைய அபாக்யவதிகள் எத்தனையோ பேர்களிருக்கிறார்கள். அந்த ஜாபிதாவில் இந்த பாவியும் இருந்துவிட்டுப் போகட்டும். இத்தகைய அனர்கமான குழந்தையைவிட்டுப் போக மனமில்லை...என்று தனக்குள் தானே எண்ணி, தானே தீர்மானித்துக்கொண்டாள். அன்று முதல் இன்றுவரையில் தாமரை நீர்த்துளி போலவே தான் பெற்றோர்களிடம் வாழ்க்கை நடத்துகிறாள்.

அப்படி இருந்தும், பெற்ற தாயாரின் மனத்தில் தனது மற்றய பெண்களுக்குச் செய்யவேண்டும் என்கிற ஆசையும், "சிறிய பெண்ணுக்குச் சகாயமாக சற்று நீ போய் செய்." என்று பானுமதியை ஏவுவதும்தான் முக்யமாகத் தோன்றியதேயன்றி மற்ற பெண்ணிடம் இவளை அனுப்புவது இளப்பமில்லையா? என்பதையே மறந்தாள்,

ஆனால், பானுமதிமட்டும், "எந்த தங்கையானாலும் சரி, தம்பியானாலும் சரி, யாருக்காகட்டும் நீயே போய் செய்துகொள்ளு. நான் இந்த வீட்டைப் பார்த்துக்கொள்கிறேன்; வேறு எங்கேயும் போகமாட்டேன்" என்று கண்டிப்பாய் சொல்லிவிட்டதால் தாயாருக்கு கோபந்தான். 'உனக்குக் கூடப்பிறந்தவர்கள்மீது ஆசை கிடையாது. அவர்கள் எக்கேடு கெட்டால் என்ன என்று நீ இருக்கிறாய். உன் பெண்ணானால் நீ இப்படி இருப்பாயா?'...என்று குற்றஞ்சாட்டி வேறு கூறத்தொடங்கினாள். ஆனால் அதை அவள் சட்டை செய்யவே இல்லை.

காலை சாப்பாடாகிய பிறகு காமாட்சி கைநிறைய வெத்திலையுடன் வாசல் திண்ணையில் வந்து உட்கார்ந்தாள். வழக்கம்போல் எதிர்வீட்டு பாட்டியும் வந்தமர்ந்தாள். பக்கத்து வீட்டு மாமியும் வந்தாள். இவர்கள் ப்ரஸங்கம் துடங்குவதற்குமுன்பே இந்துமதியின் சித்திர வாத்தியார் வந்தார். அன்று சனிக்கிழமை லீவாகையால் அவர் பகல் வேளையே வழக்கம்போல் வந்தார். அவர் உள்ளே செல்வதைப் பார்த்ததும் அடுத்த வீட்டு மாமி முகத்தை ஒருவாறு முறுக்கித் திருப்பி உதட்டையும் பிதுக்கியவாறு எதிர்த்த வீட்டு அத்தையைப் பார்த்தாள்.

இதற்குள் அத்தெருவிலுள்ள இன்னும் முக்யமான அங்கத்தினர்களும் வந்தார்கள். "இவன் வந்து போனதும் பாட்டு வாத்யார் வரவேண்டாமா!" என்று நாக்கை நீட்டினாள் கோமளி...."ஏன்? பாட்டு வாத்தியார் வந்ததும் ப்ரைவேட்டு வாத்யார் வரவேண்டாமா! அதை மறந்துவிட்டீர்களா!" என்றாள் விசாலம்...

சேஷிபாட்டி மெல்ல பொக்கை வாயை அறைத்துக்கொண்டே... "ஏண்டியம்மா! காமாக்ஷி! உன் பேத்தியின் போக்கைப் பார்த்தால் ஏதோ

ராஜா வீட்டு இளவரசியே நடத்தருப்பலென்னு இருக்கு. ஏதோ, குடும்பத்துலே ஒத்தாப்பலெ கொள்ளே கொள்ளேயா வேலெயே செய்துண்டு கொழந்தை குட்டிகளே பெத்துண்டு ஒன்னுட்டும் நல்ல பேரோடே வாழ்ந்தா நன்னருக்குமா?... இப்படி சதா பாட்டும் கூத்தும், படிப்பும் பொம்மெ எழுத்தும் இதென்னடியம்மா! அழகாயிருக்கு. என்னெப்போல எழுத்தே தெரியாமெ மொத்தா இருக்கவேண்டாம். ஏதோ நாலெழுத்து தெரிஞ்சா போராதோடீ! மூளி இல்லாமெ கவுரிகல்யாணம் பாடின போராதோ! இன்னும் நாட்டியம் வேறெ சொல்லிக்கொடுக்கப் போரதாகக் கேள்விப் பட்டேனே... தகப்பன் இல்லாத பெண்ணெ வளத்து நல்ல பேரெடுக்க வழி தேடாமெ இதென்னக் கூத்து? என்ன செலவு? இந்துமதி என்ன இன்னும் பாப்பாவா! 14 வயசு ஆச்சு. இன்னும் என்ன படிப்பும் பள்ளிக்கூடமும்? காலாகாலத்துலே ஒரு கல்யாணத்தெ செய்துவிடக்கூடாதோ... எங்காவது வரன் இருக்கிறதா'' என்று வெகு அக்கரையுடன் கர்மசிரத்தையாய்க் கேட்டாள்.

அதைத் தொடர்ந்து பேசுவதற்கே வந்ததுபோல் ஆரம்பித்த கோமளி ''என்னமோம்மா! காமாட்சி நம்ம சொந்த மனுஷிபோல் இருப்பதால் யாராவது ஏதேனும் சொன்ன நமக்கு சுருக்குனு கண்ணுலே பொத்துராப்லெ இருக்கு; பானுமதியைப்பத்தி யாராவது ஒரு கடுகத்தனே வார்த்தே சொன்னலும் கண்ணவிஞ்சி போயிடும். அது நமக்குத் தெரியாதான்ன... என்னமோ புத்தி கெட்ட ஜனங்கள்... சித்ரக்காரனேடே பேசரு... பாட்டு வாத்தியாரின் எதிரே பெண்ணுடன் தானும் உட்கார்ந்து தாளம் போடரு ...இல்லேபா... இப்படிப்பட்ட காசுக்கு ஒதவாத விஷயங்களெல்லாம் பாழும் ஜனங்கள் கோயிலிலே கொளத்திலே பேசரு. நான் நன்னு சண்டெ சண்டேயா போட்டுட்டேன்.''...

என்று முடிப்பதற்குள் ஹிந்தி சொல்லிக் கொடுத்துவிட்டு வாத்தியாரம்மாள் வீட்டுக்குப் போனள். அவளேப் பார்த்ததும், ''இதென்ன அலங்காரம்; என்ன நாகரீகம்!'' என்று எல்லோரும் நங்கு காட்டினர்கள். வாத்தியாரம்மாளே வழியனுப்ப வந்த இந்துமதி இங்கு நடக்கும் திண்ணே புராண ப்ரமுகர்களே ஒருதரம் முறைத்துப் பார்த்துவிட்டு உள்ளேபோனள்.

தன்னேப் பற்றித்தான் ஏதோ பேசுவதாக இந்துவுக்கு அரை குறை வார்த்தைகளால் புரிந்து விட்டது. உள்ளே சென்றவள் தான் கற்க வேண்டிய சித்திரக் கலேயைக் கற்றுக் கொள்ளும் முறையில் வாசத் திண்ணேயில் கூடியுள்ள வம்பர் மகா சபையை அப்படியே எழுதி விட்டதைக் கண்ட வாத்தியாரே திகைத்துப் போனர்.

சிறுமி சும்மா இல்லாமல் தன் மாமாவின் குழந்தையிடம் அந்தப் படத்தைக் கொடுத்து ''பாப்பா! இதைக் கொண்டுபோய் வாசலில் பாட்டியிடம் காட்டி விட்டு வாம்மா!'' என்றாள். குழந்தை மிக்க ஆசையுடன் அதைத் தூக்கிக் கொண்டு வாசலுக்கு வந்து ''பாட்டீ! இந்து அக்கா இதை ரொம்ப அழகா எழுதி இருக்கு. இந்தா உனக்கு குடுக்கச் சொன்ன''... என்று கூறிக் கொடுத்தது.

காமாக்ஷி படத்தைப் பார்த்ததும் தன்னுடைய உருவத்தை அப்படியே தீட்டியிருப்பதையும் அதிலும் தான் எப்படி உட்கார்ந்திருக்கிறாளோ அதே மாதிரி—வெத்திலை போட்டுக்கொண்டிருக்கும் ஸேவையில்—காக்ஷியளிப்பதும், எதிர் வீட்டுக் கோம்பிளிப் பாட்டி வாயில் ஒரு பல்லு கூட இல்லாத பொக்கை வாயை அசைவு போட்டுக்கொண்டே காலை நீட்டிய வாறு உட்கார்ந்திருப்பதும், இன்னும் மற்றவர்களும் அப்படியே தத்ரூபமாக விருப்பதும் கண்டதும் ஆச்சரியக் கடலில் மூழ்கி மற்றவர்களுக்குக் காட்டியதும், அவர்களது கோபம் உச்சஸ்தாயியை எட்டி நர்த்தனம் செய்து "எங்களை யெல்லாம் அவமானப்படுத்தி பரிகாஸமாக எழுதி இருக்கிறாளே சிறுக்கி. பச்சமிளகாய்! இப்படியா கொழுப்பேறிவிட்டது? நாகரீகத்தின் ஆட்டமா இது? பெரியவா சின்னவா கிடையாதா"...... என்று...தம் தம் மனம் போன போக்காகத் திட்டிக்கொண்டே எல்லாரும் எழுந்து "போகும்போது பிசாசு வெறுமை போகாமல் கல்லைத் தூக்கிப் போட்டுவிட்டுப் போகுமாம்" என்பதுபோல் "அடியம்மா காமாக்ஷி! ஒம் பேத்தி சூர்ப்பநகைதாண்டியம்மா!... அது இன்னும் கொஞ்ச நாளில் ஓடித்தான் போய்விடும். அது குடித்தனத்தில் வாழாது" அந்த முறையில் ஆத்தாள் பழக்குகிறாள்; தானும் பழகுகிறாள்." என்று சென்றார்கள்.

அதுவரையில் படத்தைப் பார்த்து சற்று பெருமையே அடைந்த காமாக்ஷியம்மாளுக்கு இவர்கள் போட்ட தூபத்தினால் திடீரென்று கோபம் வந்துவிட்டது. "படத்தை வேண்டுமென்று பரிகாசமாகத்தான் எழுதியிருக்கிறாள்." என்று அவள் மனத்திலும் பட்டுவிட்டதால் பல்லைக் கடித்துக் கொண்டு வெகு கடுகடுப்புடன் உள்ளே வந்தாள். அவள் கோபத்தின் வேகத்தில் நடைகூட ஓட்டமாகவே மாறியது.

## 4

"இதோ பாரம்மா இந்து! ஒரு பெண்மணியின் மடியில் குழந்தை உட்கார்ந்திருக்கிறது என்றால், கை இப்படி வளைந்து குழந்தையின் கழுத்தில் கட்டியிருக்கவேண்டும். நீ போட்டிருப்பது கை நீளமாயிருக்கிறது. உடம்புக்குத்தகுந்த அளவு இப்படியிருக்கவேண்டும்" என்று, தானே எழுதி காட்டிக்கொண்டிருந்தார் தினகரன்...

பானுமதி சற்று தூரத்தில் நின்று, இந்துமதி வரைந்த மற்ற சித்திரங்களைப் பார்த்துக் கொண்டிருந்தாள், ஆவேசத்துடன் உள்ளே வந்த காமாக்ஷியம்மாள் இதைப் பார்த்துவிட்டு ஏதோ சடக்கென்று யோசனை செய்தபடியே வெளியே போய்விட்டாள். சற்று நேரங்கழித்து பானுமதி ஏதோ காரியமாய் சமயல்கட்டிற்கு வரும்போது காமாக்ஷியம்மாள் உட்கார்ந்து பெரியதாகப் புலம்பிக் கொண்டிருந்ததைக் கண்டதும் பானுமதிக்குத் திடுக்கிட்டது. "திடீரென்று இப்படி ஏன் அழவேண்டும்?" என்று கலங்கியவாறு தாயாரின் அருகில் போய்... "என்னம்மா...ஏன் விசனப்படுகிறாய்? என்ன சமாச்சாரம்? உடம்பு சரியில்லையா? தேள் கீள் கொட்டிவிட்டதான்னம்மா?...என்று அன்பும் பரிவும் தொனிக்கக் கேட்டாள்.

காமாக்ஷியம்மாள் மின்னும் தூபம் போட்ட பிசாசுபோல் விசும்பி விசும்பி அழுதவாறு, "ஐயோ! தேளோ பாம்போ கடித்து என்னைக் கொண்டுபோனால்கூட நான் சந்தோஷமாயிருப்பேனே! நான் பண்ண பாவத்தின் பலன் மூத்த பெண்ணாகிய உன்னை இக்கோலத்தில் பார்த்துப் பத்தி எரிகிறேன்: அது போதாது இன்னும் பகவான் சோதிக்கிறாரேடியம்மா...என் கண் பண்ண பாவமா! காது செய்த பாவமா! கோயில் குளத்தில் எல்லாம் பாவிப்பெண்கள் உன்னைப் பற்றிக் கண்டபடி வம்பளக்கிறார்களாம். ஏதோ பெரும்பாவத்தைச் செய்து நீ இந்த கதியை அடைந்திருக்கிறாய். ஊர் நாய்கள்வாயில் ஏன் விழுந்து புறப்படும்படி நடந்துகொள்ளவேண்டும்?...

இந்த எரிமலை போன்ற வார்த்தையைக் கேட்டதும் பானுமதியின் தலை சுழன்றது. ஒன்றுமே புரியாது திடுக்கவாறு "அம்மா!...நீ என்ன சொல்கிறாய் என்றே எனக்குப் புரியவில்லையே! என்னையா!...வம்பளக்கிறார்களா?" என்று கண்ணீர் பெருகக்கேட்டாள்.

காமாக்ஷி:—என் வயிறு கொதிக்கிற கொதிப்பு யாருக்குத் தெரியும்? ஊர் கழுதைகளுக்கு என்ன தெரியும்? நீ நெருப்புபோல் இருப்பதை அந்த நாய்கள் அறிந்தால் இப்படி உளறுவார்களா! இதற்கெல்லாம் இனிமேல் இடங்கொடுக்காதேம்மா! நம்ப விதி இப்படி ஆட்டுகிறது. பெண் குழந்தைக்கு எந்த மட்டும் வித்தை சொல்லவேண்டுமோ, அந்தமட்டில் சொல்லிக்கொடுத்தால் போதாதா! அவள் சித்திரம் எழுதி எந்தக் கோயிலையும் அரண்மனையையும் அலங்கரிக்கப் போகிறாள்? சித்திரக்காரன், பாட்டுக்காரன், ப்ரவேட்டுக்காரன் இவர்களுடன் நீயும் பழகுகிறாயாம்... சிவ சிவ!......இந்த மட்டும் வந்தது போதும், இன்னும் விபரீதத்திற்குப் போகவேண்டாம். இந்த வாத்தியார்களை எல்லாம் நிறுத்திவிடு, உன் பெண்ணுக்கு வந்திருக்கிற படிப்பும் கலையும் போதும். வேணும்னா ஒரு பெண்மணியை வைத்துப் பாட்டுமட்டும் சொல்லிக் கொடுக்கச் செய்யலாம். ஏதோ, விதி செய்த கொடுமையால் படுகிற துன்பம் போதும். நாமே தேடிக்கொள்ளவேண்டாம். பணத்தைச் செலவிட்டு இம்மாதிரி பல வாத்யார்களை வைத்துச் சொல்லிக்கொடுப்பதால் ஒரு பெண்பிள்ளைக்கு உபயோகம் ஏது? உத்யோகமா செய்யப்போகிறாள்?......

பானுமதிக்கு விஷயம் விளங்கிவிட்டதால் அதற்குமேல் அங்கு நிற்க மனம் சகிக்கவில்லை. "ஐயோ! மனம் காவலா! மதில் காவலா...... இதென்ன அக்ரம உலகம்!"...தலைசுற்றி அயோமயமாகிவிட்டதால் உடனே எழுந்துபோய் விட்டாள். தன்னை லக்ஷ்யம் செய்யாமல் போனதாகவே காமாக்ஷி நினைத்தாள். தன் கணவனிடம் சொல்லி, இதற்கோர் வழிசெய்து விடவேண்டும் என்றே அவள் தீர்மானித்தாள்.

உள்ளே சென்ற பானுமதி எத்தகைய பதிலும் சொல்லவே இல்லை. மெஷின் போலவே தன் காரியத்தைச் செய்துவந்தாள். பானுவின் தகப்பனார் ஊரிலில்லை. அவர் வருவதற்கு இரண்டு நாட்களாகும் என்பது காமாக்ஷிக்குத் தெரியும். அதற்குள் தான் எதுவும் சொல்லவேண்டாம் என்று சற்று மவுனமே சாதித்தாள்.

மறுதினம் எந்த உபாத்தியாயரும் வரவில்லை. மகா மானியான பானுமதியின் முகமும் கண்களும் வீங்கிச் சிவந்திருப்பதை மட்டும் காமாக்ஷியம்மாள் அறியாமலில்லை. இந்தும்தி அழுது அழுது ஆகாரங்கூடச் சரியாகச் சாப்பிடவில்லை. விஷயமும் சரியாக விளங்கவில்லை.

அன்று இரவு தாயும் மகளும் வெகு நேரம் நித்திரை இன்றித் தவித்தார்கள். இந்துமதி தாங்கமுடியாத துக்கத்துடன் தாயின் அருகில் வந்து உட்கார்ந்து..."ஏம்மா! என்னைப் பேசக்கூட விடாமல் வாயைப் பொத்தி விடுகிறாய்! எனக்குச் செலவழிக்கக் கூடவா என் தகப்பனாரின் பணம் உபயோகப்படக்கூடாது? ஒன்று இரண்டா! லக்ஷரூபாய் சொத்து நமக்கு அப்பா வைத்திருப்பதாகச் சொல்கிறார்களே, அப்படிக்கிருக்க ஏன் இந்த வாத்தியார்களை நீ என்னைக் கேட்காமலேயே ரகஸியமாக நிறுத்திவிட்டாய்? நான் பாட்டியைக் கேட்கிறேன்."...என்று விம்மிவிம்மி அழுதாள்.

பானுமதி:—கண்ணா! உனக்கு உலகமே தெரியாது. நான் ஒரே வார்த்தையில் சொல்கிறேன். உன் பெத்த தாயாரிடம் உனக்கு நம்பிக்கையும், மதிப்பும், விச்வாசமும் இருந்தால் என் வார்த்தையைத் தட்டாதே. என் மனப்படி நடந்து காலத்தைத் தள்ளு. உன் பாட்டியிடம் எதுவும் கேட்காதே. பாட்டிதான் இவர்களை நிறுத்தும்படிக் கட்டளையிட்டாள்.

இந்து:—என்ன!...பாட்டியா சொன்னாள்! எதற்காக?...

பானு:—என் தலைவிதிக்காக...வீணாகக் கேள்விகள் வேண்டாமம்மா! என் வயிற்றில் செய்யும் சங்கடத்தைச் சொல்லிமுடியாது. எல்லாம் காலவிதிதான். லக்ஷரூபாய் உன்பிதா உனக்காகவும் எனக்காகவும் வைக்கவில்லை. அந்த பாழாய்ப்போன பணத்திற்காகத்தான் என்னை உங்கப்பாவுக்கு...லொடலொட கிழவனுக்கு...விற்று வாழ்நாளையே அதபாதாளத்தில் தள்ளி மிதித்துவிட்டார்கள். எந்த தெய்வத்தின் ஆசியோ கருணையோ அந்த பயங்கர மிதித்தலையும் மீறி ஒரு சிறுவிதை நீ கிளம்பியிருக்கிறாய்...

இந்து:—அம்மா! என்றுமே என்னைக் குழந்தை குழந்தை என்று ஒரு விஷயமும் சொல்லாது மூடிவைக்கிறாய். உன்னை இப்படி மூன்றாம் தாரமாகக் கொடுத்த வயிற்றெரிச்சலை என் பள்ளிக்கூட வாத்யாரம்மான் கூறித்தான் தெரியும்... அம்மா! இனியும் நான் குழந்தையல்ல. நீயும் நிரந்தரமான அடிமையல்ல. நாம் நம்முடைய பணத்தில் ஒரு தனி வீடு வாங்கிக்கொண்டு ஏன் தனிக்குடித்தனம் போகக்கூடாது?...

பானு:—கண்ணா! இன்னும் என்னை சோதனைசெய்யாதே. இத்தனை பேர்களுடைய ஆதரவில், பாதுகாப்பில், அடிமையைப்போல் சகலவிதமான ஆசைகளையும் உதறித்தள்ளிவிட்டு ஒரு எந்திரம்போல் உழைத்துக்கொண்டிருக்கும்போதே உனக்கு வரும் உபாத்தியாயர்களுக்கும் எனக்கும்...ராம ராமா...சொல்லவும் நாக்கு கூசுகிறது...அப்படி உலகம் உளறுகிறதாக என்னைப்பெற்ற தாயாரே சொல்லும்போது நாம் தனிக்குடித்தனம் வேறு போய்விட்டால் இருவரும் ஓடிவிட்டதாக ஜாதிப்ரஷ்டமே செய்து, நம்மை எத்தனை தூரம் ஹதம் செய்யமுடியுமோ அவ்வளவு உலகம் செய்துவிடும். உலகம் என்பது நம் வீடுதான், சொந்த மனிதர்கள்தான். தெரியுமா? கண்மணி! என்னுடைய சகலமான ஆசைக் கோட்டை

யும் இடிந்து பொடிபொடியாகி, தூள்தூளாகப் பறந்துவிட்டது. ஆனால் ஒரே ஒரு நம்பிக்கைமட்டும் ஊசலாடுகிறது. அதுதான், உன் ஒரு பிம்பத்தின் பாசம்... அதையும் நீ வெட்டிவிடாதே. உன்பொருட்டு நான் கட்டும் கோட்டையாவது உருவாகி, ஆனந்த நிலயமாகி என் வாழ்நாள் முடிவதற்குள் பார்த்துவிட்டால் போதும்.

இந்து:—ஏம்மா ஏதேதோ சொல்கிறாய்? நானும் பலதரம் கேட்க வேண்டும் என்று எண்ணினேன், பயந்து பேசாதுபோய்விட்டேன். அப்பா வழியைச் சேர்ந்த மனிதர்கள் ஒருவர்கூடவா கிடையாது?

பானு:—யாருமே இல்லை என்று இவர்கள் சொல்வதுதானே எனக்குத்தெரியும். யாராவது இருந்தால் கல்யாணத்திற்காவது பிறகு கர்மாந்திரத்திற்காவது வந்திருக்கமாட்டார்களா? உன் தகப்பனாரின் இளைய மனைவிக்கு ஒரு பிள்ளையிருப்பதாயும் அவன் தாயார் இறந்த அன்றே அவனை அவனுடைய மாமா கொண்டுபோய்விட்டதாயும் கேள்விதான். அந்தப் பிள்ளை உன் தகப்பனார் கர்மாதிக்கு வந்திருந்தானும். அந்த அயோமயமான நிலையில் அவனை என்னிடம் உன் தாதா பாட்டிகள் சேரவே விடவில்லை. அவனும் இந்த கட்டுக்காவல்களை மீறி வரவில்லை. பிறகுகூட அவன் வரும்படியான வழியும் இவர்கள் செய்யவில்லை. உன் பிதாவின் பணம் சகலமும் சுயார்ஜிதமாகையால் அந்தப் பையனுக்குக் காலணாகூட இல்லாமல் சகலமும் எனக்கே எழுதி வாங்கிக்கொண்டதால் அவனை அவன் தாய் மாமன் கர்மங்கூடச் செய்யவேண்டாம் என்று சண்டை போட்டு இழுத்துக்கொண்டு போகப் பார்த்தாராம். எப்படியோ அந்த கதை முடிந்தது. அதன் பிறகு அதைப்பற்றி எந்த விதமான தகவலுமே தெரியாது. இந்த கதியில் தனியாய்ப் போவதாவது குட்டிச்சுவராவது? அவசரப்பட்டு எதையும் பேசாதேடா கண்ணு—என்று கண்ணீர்விட்டாள்.

இந்துமதியின் உள்ளத்தில் இத்தனை நாளும் இல்லாத ஒரு பெரும் புயல் திடீரென்று கிளம்பியது. இதற்குமேல் தான் கேள்வி கேட்கவோ, தன் தாயாரின் புண்பட்ட மனதைப் பின்னும் கிளறவோ இஷ்டப்படவில்லை. அவள் மனமும் ஏதேதோ கலக்கத்திலாழ்ந்துவிட்டதால் மறு பேச்சின்றி தன் படுக்கையில்படுத்தாள். தூக்கம் என்பதே அற்று கண்கள் அப்படியே விரிந்து கிடந்தன. சற்று நேரத்துக்கொருதரம் இதயத்தைப் பிறிக்கொண்டு பெருமூச்சும் 'புஸ் புஸ்' என்று வந்தது.

மோகினி வெள்ளிவிழா வெளியிடுகள்.

**1. தபால் விநோதம்!**—வை மு. கோ. 79-வது நவீனம்
உயரிய கிளேஸ் பதிப்பு. ரூ. ஒன்றுதான்

ப்ரம்மாண்டமாய் வானையளாவி நிற்கும் உயரிய மரங்கள் தோப்புபோல் நிறைந்து, குளிர்ச்சியாகக் காட்சியளிக்கும் அழகிய தோப்பிற்குள் ஒரு வசீகரமான பங்களா கம்பீரமாகக் காட்சியளித்தது. அதன் முன்பக்கத்தில், காண்போர் உள்ளங்களைக் கொள்ளைகொள்ளும் வசீகரம் நிறைந்த, வேணுகான க்ருஷ்ணனுடைய சிலைக்கு ப்ரதிகாலையும் புஷ்ப மாலை சாற்றி குங்குமத் திலகமிட்டு கற்பூர ஹாரத்தி செய்து ப்ரதக்ஷண நமஸ்காரம் செய்துவிட்டுத்தான் நமது துப்பறியும் வீரசிங்கமாகிய ராஜாராம் நாயுடுகாருவும் அவருடைய அருமையான வளர்ப்புப் புதல்வி ஸ்ரீ அம்புஜமும் ஆகாரம் அருந்துவது வழக்கம்.



அன்றும் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவிற்கு ஹாரத்தி எடுத்தவாறு "ஹரேமுராரே! மதுகைடபாரே! கோவர்த்தனகிரிதாரி! ராதே கோவிந்த பஜே! ப்ருந்தாவன சந்த்ரபஜே"......என்று அம்புஜம் அவளுடைய அத்புதமான மதுர கண்டத்தின் அமுதம் சொரிய, பக்திப் பரவசத்துடன் பாடுவதைக் கேட்டு அப்படியே உள்ளம் பூரித்த நாயுடுகாரு ஆனந்த பாஷ்பம் பெருக அம்புஜத்தை முதுகில் தட்டிக்கொடுத்து..."பேஷ் குமாரீ! எனக்கு எந்தவிதத்திலும் குறை என்பதே பகவான் வைக்கவில்லை. ஆனால், சில தினங்களாகமட்டும் ஒரே ஒரு குறை ஊசலாடுகிறது.

அதாவது,—சதா சர்வகாலமும் கொலை கொள்ளை இவ்விரண்டு விஷயத்திலேயே நமது காலம் கடந்துவிடுகிறது. இனிமேலாவது ஒரு தனியிடத்தில் நிம்மதியான ஆச்ரமத்தை அமைத்துக்கொண்டு, பகவத் விஷயத்திலும், உள்ளத்தை ஒருங்கே கவரும் சங்கீத கான அமுதைப் பருகி இன்புறுவதிலும்தான் காலத்தைக் கடத்தவேண்டுமென்பதே...

என்று முடிப்பதற்குள் அம்புஜம் கடகடவென்று சிரித்துக்கொண்டே "அப்பா! நீங்கள் குறை என்று ஆரம்பித்தபோது நான் என்ன நினைத்தேன் தெரியுமா! "ஐயோ! வயது ஏறிக்கொண்டே வருகிறதே! பாலியத்திலிருந்த முறுக்கும் தெம்பும் பலமும் குறைந்துவிடுகிறதே. பொதுஜன சேவையை செய்வதற்கான சக்தி குறைந்துவிட்டால் என்ன செய்வது? பகவானே! எனக்கு மறுபடியும் பாலிய தசையைக் கொடுத்து ரக்ஷிக்கமாட்டாயா!" என்று கேட்பீர்களோ என நினைத்தேன். நீங்கள் என்னடாவென்றால், இந்த உத்யோகத்திலிருந்து ஓய்வு எடுத்துக்கொள்ளப் பார்க்கிறீர்கள். திடீரென்று இம்மாதிரி உங்களுக்குத் தோன்றுவதற்கு என்ன காரணம்பா!...உங்களுக்கும் எனக்கும் திடீரென்று பால்யதசையை பகவான் கொடுத்துவிடும்படித்தான் நான் தினம் வேண்டுகிறேன். நீங்கள் எனக்கு நேர்மாறாகவன்றோ ஆசைப்படுகிறீர்கள். அப்பா! உடலில் சக்தியும் ஆசையும் இருக்கும்வரையில் பொதுஜன ஸேவைசெய்துதான் கடைசி மூச்சை விடவேண்டும். அப்பா! இனி நீங்கள் இம்மாதிரி எண்ணவேண்டாம். ஆண்டவன் சகல ஜீவராசிகளின் இதயங்களிலும் கோயில்கொண்டிருப்பதை நீங்களறியவில்லையா...ஏதோ கண்ணுக் கெட்டாத தூரத்தில் காவி உடையணிந்து கண்ணை மூடி, மூக்கைப்பிடித்து ஜபம் செய்தும் தவம் செய்தும் யாக யக்ஞம் செய்தும் பகவானைப் பஜித்தால்தான் உண்மையான பக்தி செய்ததாகும், இல்லையேல் ஒன்றுமே இல்லை என்று நினைக்கிறீர்களா?...அப்பா! கலியுக தர்மத்தில் அவைகளை அனுஷ்டிக்கவும் முடியாது; அனுஷ்டிக்கவும் தெரியாது.

ஒவ்வொரு ஆத்மாவினுள்ளும் பகவான் கோயில்கொண்டிருப்பதையும், நாம் ஒரு எறும்புக்குச் செய்யும் உபகாரமும் தர்மமும் கூட அந்த ஆண்டவனுக்கே செய்ததாகும் என்கிற தத்துவத்தையுந்தான் நாம் வாழ்வின் லக்ஷ்யமாகக் கொள்ளவேண்டும். அதை மனத்தில் கொண்டு இதயபூர்வமாக பஜனையுடன் பக்தி செய்தால் அதுவே முக்தியளிக்கும்......

என்று பேசும்போது கணகணவென்று டெலிபோன் மணியடித்தது. "ஹலலோ...யாரு...மகாலக்ஷ்மீ பாங்கா...என்ன விஷயம்...அப்பா இருக்கிறார்...கூப்பிடுகிறேன்"...என்று அம்புஜம் நாயுடுவிடம் ரிஸீவரைக் கொடுத்தாள்..."என்ன சார்...அவசரமா...என்ன என்ன!...மகாலக்ஷ்மி பாங்கியில் திருடா...இரும்பு பெட்டியையா உடைத்திருக்கிறது. கதவுகள் பூட்டியபடி இருக்கிறதா...திறந்திருந்ததா...பூட்டை உடைத்திருந்ததா... சரி...இதோ வருகிறேன். போலீஸார் வந்தார்களா...ஓகோ! ஏகாம்பரம் தான் என்னைக் கூப்பிடச்சொன்னாரா...சரிதான். வருகிறேன். என்ன பொருள் களவுபோயிருக்கிறது...பாங்கில் அடமானம் வைத்திருந்த நாலு வைரநெக்லேஸா...பிறகு...அடேயப்பா...லக்ஷ ரூபாயிக்குமேல் பணமும் காணவில்லையா...கவலைப்பட்டு ஆவதென்ன சார்! பகவானை வேண்டுங்கள். இதோ வருகிறேன்." என்றார்.

அம்புஜம் கலகலவென்று சிரித்து, "அப்பா! நீங்கள் ஆச்ரமத்தில் ஆனந்தமாக பாட்டுகேட்க நினைத்தால் பகவான் எப்படி உங்கள் பேருபகாரத்தை உலகிற்கு அளிக்கும்படித் திட்டமிடுகிறார். பார்த்தீர்களா?" என்றாள்.

அச்சமயம் யாரோ கடிதம் கொடுத்ததாகச் சேவகன் கொண்டு கொடுத்தான். அதை அம்புஜம் படிக்கவாரம்பித்தாள்.

"துப்பறியும் வீரசிங்கமே!...பழுத்த அனுபவம் வாய்ந்த மாமிசப் பிண்டமே! மகாலக்ஷ்மி பாங்கு விஷயமாக நடந்துள்ள கொள்ளையைக் கண்டுபிடிக்கும் மகத்தான உத்ஸாகத்துடன் நீ கிளம்பும்வரையில்தான் உன் உயிர் உன் கையிலிருக்கும். பிறகு பாங்கியிலிருந்து உன் பிணங்கூட வீட்டிற்குக் கிடைக்குமோ கிடைக்காதோ! ஜாக்ரதை. இந்த கேஸில் தலையிடாமலிருந்தால் பிழைத்தாய். இல்லையேல் முடிந்தது உன் வாணாள். பத்ரம்"

இதைப் படிக்கும்போது அம்புஜத்தின் முகத்தில் கவலையும் பயமும் விசனமும் கவ்விக்கொண்டன. தகப்பனாரின் முகத்தைப் பார்த்தாள். நாயுடு கடகடவென்று சிரித்தவாறு "என்னம்மா பார்க்கிறாய்! பொது மக்களுக்கு சேவைசெய்ய சமயம் கிடைத்ததைக்கண்டு சந்தோஷமல்லவா படவேண்டும்?...ஏன் ஏதோமாதிரி பார்க்கிறாய்?" என்றார்.

அம்புஜம்:—நான் கவலைப்பட்டுப் பின்னடையவில்லையப்பா! நான் எதற்காகப் பார்த்தேன் என்றால், நீங்கள் இப்போது போகவேண்டாம்; நான் போய் பார்த்துவிட்டு வருகிறேன். பிறகு சற்று ஆற அமர யோசித்துக்கொண்டு போகலாம்...நான் போய்வருகிறேனப்பா!

நாயுடு:—நீ கூடவா இதற்குப் பயப்படுகிறாய்! அட அசடே! இது போன்ற கடிதம் நமக்கு இதுதானா புதிது? எத்தனையோ வந்தாயிற்று. அத்தகைய ஆபத்துக்களில் எல்லாம் காப்பாற்றிய கடவுள் இதிலும் காப்பாற்றாமலா விட்டுவிடுவார்? பயப்படாதே அம்புஜம்! நானே போய்வருகிறேன்; தைரியமாக இரு—என்று தனது கைத்தடி சகிதம் கிளம்பினார்.

என்ன சொல்லியும் கேட்காது சென்று விட்டதால் அம்புஜத்திற்கு உள்ளுக்குள் ஒரு விதமான பயம் உண்டாகியது. அதே கடிதத்தைத் திருப்பித் திருப்பிப் படித்தாள். படிக்கப் படிக்க அவளுடைய பயமும் கவலையும் மின்னும் அதிகரித்தன. ஒரு விநாடி யோசித்தாள். வேண்டாமென்று சொல்லிவிட்டுப்போயிருக்கையில், தான் சென்றால் தகப்பனார் கோபித்துக்கொள்வாரோ என்ற பயம் ஒருபுறம், இக்கடிதத்தின் பயமுறுத்தல் ஒரு புறம் பாதித்ததால் தன் ரகஸிய அறையில் சென்றாள்.

அடுத்த நிமிஷம் பக்கா போலீஸ்காரனைக் கருக்குமீசையுடன் மாறி ஸைகிலில், தன்னுடைய மனோவேகத்திற்குச் சரியான வேகமாகச் சென்றாள். அவளுடைய உள்ளத்தில் அப்போதுதான் ஒரு சிறிது சாந்தி நிலவியது. தன் பிதாவுக்கு எத்தகைய ஆபத்தும் வாராதிருக்கவேண்டுமே என்கிற மகத்தான வேதனை நெஞ்சையழுத்துகிறது. பகவானை வேண்டியபடி இதயம் ப்ரார்த்தனை செய்கிறது.

---

## 6

சுமார் 16 வருஷங்களுக்கு முன்பு பானுமதியுடன் படித்து விளையாடிய ஜானகி இன்று தற்செயலாக அவளைப் பார்க்க வந்தாள். பானுமதியின் வாழ்க்கையின் அலங்கோலம் எதுவுமே அறியாத ஜானகி அவளும் தன்னைப்போலவே மணந்து குழந்தை குட்டிகளுடன் க்ஷேமமாகவிருப்பதாக எண்ணினாள். முதலில் காமாக்ஷியம்மாள்தான் காக்ஷியளித்தாள். மிகவும் சிறிய வயதில் பார்த்த பிறகு இடையில் எத்தனையோ வருஷங்கள் கழிந்துவிட்டதால் அவளை அடையாளமே தெரியவில்லை. யாரோ என்று விழிப்பதைக் கண்ட ஜானகி "எம்மாமீ! என்னைத் தெரியவில்லையா! பானு எங்கே? அவளுடன் படித்து விளையாடிய ஜானகி நான்...

என்று பெயரைக் கூறிய பிறகுதான் காமாக்ஷிக்கு ஆள் புரிந்தது. "ஜானகியா! வாடியம்மா!... அடையாளமே தெரியலேயே. நன்றாக வளர்ந்து பெரிய மாமிபோலாகிவிட்டாய்......உனக்கு எத்தனை குழந்தைகள்? உன் கணவருக்கு எங்கு வேலை? எந்த ஊரிலிருக்கிறாய்?"...என்று அடுக்கடுக்காய் கேட்டாள்.

ஜான:—எனக்கு நான்கு பசங்கள் மாமீ! என் கணவருக்கு போலீஸ் இன்ஸ்பெக்டர் உத்யோகம். நாங்கள் அம்பலபுரியிலிருக்கிறோம். ஒரு மாதம் லீவு எடுத்துக்கொண்டார். அவருடன் நானும் வந்தேன். பானுவுக்கு எத்தனை குழந்தைகள்? அவள் எந்த ஊரிலிருக்கிறாள்?

காமாக்ஷி:—ஊம்... அவள் கதெயெ ஏன் கேக்கறே?... அதோ கூடத்து உள்ளே இருக்கிறாள். போய் பாரு—என்றுமட்டும் கூறிவிட்டாள். ஏதோ புதிர் போடுவதுபோன்ற இந்த வார்த்தை ஒன்றுமே புரியாத ஜானகி பானுமதியிருப்பதாகக் கூறிய அறைக்குச் சென்றாள்.

ஏதோ பூவேலை செய்தவாறு உட்கார்ந்திருந்த - விதவை கோலத்துடன் விகாரமாகக் காக்ஷியளித்த—பானுமதியைப் பார்த்ததும் ஜானகி திடுக்கிட்டு

விட்டாள். "இவளா பானுமதி!......சேச்சே!......வேறு யாராகவாவது இருக்குமோ!" என்று சில விநாடிகள் தயங்கினாள்.

முகச்சாயல், கன்னத்தில் த்ருஷ்டிப் பொட்டுவைத்ததுபோன்ற மச்சம், நீண்ட கருவிழிகள் முதலியவைகள் சோபை அற்றிருப்பினும் பானுமதி இவள்தான் என்று ருசுப்படுத்தியதும் தூக்கிவாரிப் போட்டது..."பானு!"...என்றாள். அதற்குமேல் பேசமுடியாது தலை கனத்துத் தட்டாமாலை சுற்றியது.

ஜானகியை பானு புரிந்துகொண்டு மிக்க சந்தோஷத்துடன் அவளைத் தட்டிக்கொடுத்தவாறு, "போடீ அசடே!... அழுகை எதற்கு? கட்டை தான் நன்றாகத் தொலைத்துவிட்டதே... இந்த மூதேவி சரித்திரத்தையே நினைக்காதே... அது அப்படியே போகட்டும்... உன்னைப் பார்த்து எத்தனை யுகங்களாகிவிட்டது... நீ எந்த ஊரிலிருக்கிறாய்?' என்ற குசலப்பிரசனம் செய்து பரஸ்பரம் தத்தம் சரித்திரங்களைக் கூறிக்கொண்டு அழுது விம்மித்தெளிவு பெற்றாயிற்று.

ஜான:—பானு! விதி செய்த கொடுமை பாதி, மனிதர்கள் செய்த கொடுமை பாதி. நீ கேவலம் இப்படியா பாழாகிவிடுவது? உன்னைப் போன்ற பால்ய விதவைகள் எத்தனை பேர்கள் தம் பொழுதை கவலையற்று இன்பமளிக்கும் கல்வித் துறையில் கழித்து உத்ஸாகமாயிருக்கிறார்கள். நீ பார்த்ததில்லையா? நீயும் ஏன் உடனே படிக்கத் தொடங்கியிருக்கக் கூடாது?...

பானு:—ஜானகி! உரக்கப் பேசாதே. நீ சொல்லும் வார்த்தைகள் இந்த வீட்டைத் தவிர வேறு இடங்களுக்குப் பொருந்திய நியாயமேயன்றி இங்கு பொருந்தாது. என் குழந்தையின் க்ஷேமத்தைக் கோரி அவளைச் சந்தோஷமாக வாழ்க்கை நடத்தும் முறையில் நான் செய்வதுகூட உலகம் பொறுக்கவில்லை. அதைக்கூட நிறுத்தியாகிவிட்டது... இந்த வீணை பேச்சு வேண்டாமே ஜானகி...

ஜான:—பானு! இந்தப் பாழும் உலகத்தை என்னால் நம்பவே முடியவில்லை... அது கிடக்கட்டும்... உன்னைத்தான் பாழுங்கிணற்றில் தள்ளுவது போல் தள்ளினார்களே உன்னுடைய பணத்தை எல்லாம்...

பானு;—உஸ்...ஜானகி! இதைப்பற்றிய பேச்சே வேண்டாமென்று முதலிலேயே சொன்னேனே! என்னுடைய சகல விஷயமும் என் பெற்றோரைச் சேர்ந்ததேயன்றி எனக்கு எதுவுமே தெரியாது...

என்று பேசிக்கொண்டிருப்பதை எல்லாம் வெளியில் நின்று கேட்டுக் கொண்டிருந்த காமாக்ஷியம்மாள் எள்ளும் கொள்ளும் வெடிக்கும் முகத்துடன் அங்கு வந்து, "அம்மா! பரதேவதே! இத்தனை வருஷங்கள் கழித்து ஒரு குடியைக் கெடுத்துக் கலகத் தீ மூட்டி எரிப்பதற்கும், உத்தமியாயிருப்பவளைத் தீய வழியில் தள்ளி வேடிக்கை பார்க்கவும் வந்தயா... போதுமடியம்மா! நானும் அப்போதுமுதல் சகல சம்பாஷணைகளையும் கேட்டுக் கொண்டுதானிருக்கிறேன். அவள் தலையில் பகவான் கல்லைப்போட்டது போதும். நீ வேறு புகுந்து பாழாக்கவேண்டாம். இதற்குத்தான் பாவம்

தேடிக்கொண்டு வந்தாயா! படிப்பாம், வாத்தியாராம், வேலையாம்...... போருண்டியம்மா போரும். எழுந்து போ'' என்று திடுதிடுவென்று சொல்லியதைக் கேட்டதும் பானுமதி திடுக்கிட்டு அலறினாள். ஜானகியின் இதயம் வெடித்துவிடும்போலாகிவிட்டதால் ஒன்றுமே தோன்றாது திகைத்துக் கல்லாய்ச் சமைந்துவிட்டாள். ஆசையுடன் பார்க்கவந்த இடத்தில் தான் சற்றும் எதிர் பாராதவிதம் பானுமதியின் அலங்கோலத்தால் ஒரு தாக்குதல் என்றால், காமாக்ஷியம்மாளின் பாணப்ரயோகத்தின் தாக்குதல் அவளை ஒரே கலக்காகக் கலக்கிக் கண்களில் நீர் வழியச் செய்தது.

## 7

"போஸ்டு''...என்ற குரலைக்கேட்டதும் பானுமதியின் தகப்பனார் விரைந்துசென்று கவரை வாங்கிப்பார்த்தார். ஸ்ரீமதி பானுமதி தேவிக்கு...என்று எழுதியிருப்பதைக் கண்டதும்...''என்ன! பானுமதிக்கு கடிதம் எழுதுகிறவர்கள் யாரிருக்கிறார்கள்?'' என்ற பெரிய ப்ரசனை எழும்பியதால் ஓசைப்படாமல் கவரைத் தானே உடைத்துப் படித்தார்.

''அன்பு மிக்க பானுமதிக்கு, உபயக்ஷேமங்கள். நாங்கள் ஊர் ஊராகச் சுற்றி லீவை முடித்துக்கொண்டு எங்கள் ஸ்வஸ்தானம் வந்து சேர்ந்தோம். ஒரு வாரங்கூட ஆகவில்லை. மாற்றிவிட்டார்கள். மறுபடியும் டேராவைக் கிளப்பிக்கொண்டு போகவேண்டும். இத்தனை தொல்லையில் உனக்குக் கடிதமே எழுத நேரமில்லை. அன்று உன் வீட்டில் நடந்த தாண்டவ வைபவத்தைப் பார்த்த பிறகு உன் விஷயத்தில் என் மனம் தவிக்கும் தவிப்பை அளவிட்டுக் கூறமுடியாது.

உலக விசித்திரங்கள்......உலகம் பலவிதம்...மாயப்ரபஞ்சம்...கலியின் கூத்து...என்றெல்லாம் சொல்வதைக் கேட்கும்போது முதலில் நம்பவில்லை எனினும், காலம்போகும் வேகத்தில் அறிந்துகொண்டேன். ஆனால் "தாயும் பிள்ளையானாலும் வாயும் வயிறும் வேறுதான்'' ''பணம் என்றால் பிணமும் வாய் திறக்கும். பணம் பத்தும் செய்யும்'' என்றெல்லாம் ஏதேதோ பழமொழிகளைச் சொல்கிறார்களே அதைமட்டும் நான் இதுவரையில் நம்பவில்லை. அதிலும் 'தாயும் பிள்ளையானாலும் வாயும் வயிறும் வேறுதான்' என்பதை அடியோடு நம்பாது, இது வேண்டுமென்று யாரோ திமிர் பிடித்தவர்கள் எழுதிவிட்ட வாக்யம் என்றுதான் எண்ணினேன்...

பானு! அன்று உன் வீட்டிற்கு வந்து உன் பரிதாபத்தை நேரில் பார்த்த பிறகு அந்த பழமொழியை நம்பியதோடல்லாமல் அதைவிட அழுத்தமான; கர்ரஸாரமான வாக்யத்தில்கூட புதிய மொழி செய்துவிடலாம் என்றும் தோன்றும்படியான நிலைமைக்கு வந்துவிட்டேன். ''மக்களுக்குச் சத்ரு மாதா பிதா'' என்கிற பழமொழி முக்காலும் உண்மை...சுயநலப் பேய்களுக்கு சுற்றமேது, மக்களேது...பணப்பேய் பிடித்தவர்க்குப் பாசமேது? பண்பு ஏது? என்கிற புதுமொழிகளை நானே எழுதிவிட்டேன்.

பானுமதி! நீ யாரோ, நான் யாரோதான், இருப்பினும் பால்யம் முதல் நாம் பழகிய சினேக வர்ஞ்சை வேரூன்றிவிட்டதால் இன்று உன் நிலைமையை என்னால் கண்டு சகிக்கமுடியவில்லை. இனியும் நீ சிறு குழந்தையல்ல, உன்னுடைய வாழ்வைப் பாழாக்கிப் பணம் திரட்டத் துணிந்த உன் பெற்றோர்களின் கைபொம்மையைப்போல் ஆடினதுபோதும், அவர்களிடமும் மற்றவர்களிடமும் நீ அடங்கி அடங்கிப் புழுவைப் போல் வாழ்க்கை நடத்தியதுபோதும். ஊரார் உன்னை ஏசுவதாயும் பேசுவதாயும் உன்னைப்பெற்ற தாயே சொல்லி உன் குழந்தையின் அபிவிருத்திக்கும் உலைவைத்த சதியை நீ ஏன் பொறுக்கவேண்டும்?

உன் மகளுடன் நீ தனிக்குடித்தனம் கிளம்பிவிடு. உன் பணத்திற்கு உன் தகப்பனாரிடம் கணக்குக் கேளு. உன் குமாரிக்கு நல்ல வரனைத் தேடி மணத்தைக் காலாகாலேயில் முடித்து, அந்த புதிய சம்பந்தத்தின் ஆதரவு மூலம் நீ உன் துக்கத்தை மறந்து இருக்கலாம். என்னுடைய நாத்தனாரின் மகன் மன்மதவடிவாய் இருக்கிறான். நல்ல புத்திசாலி, இரண்டே பிள்ளைகள். மூத்தவன் இவன்தான். சுமார் ஒருலக்ஷ ரூபாய்க்குச் சொத்திருக்கிறது. என் நாத்தனார் மகா விவேகி, வெகு உத்தமி. உலகானுபவத்தைக் கரைகண்ட மேதை, இவ்வூர் மாதர் சங்கத்தின் தலைவி. பழய நாகரீகம், புதிய நாகரீகம் இரண்டையும் நம் வாழ்க்கைக்குவேண்டிய முறையில் ஆதரிக்கும் ஜனரஞ்சகி, எத்தகைய கலையையும் போற்றி வளர்க்க ஆதரவளிக்கும் பரமரஸிகை, அவருடைய அன்புக்கு உன் கண்மணி இந்துமதியை நாட்டுப் பெண்ணாகச் செய்தால் உனக்கும் அவளுக்கும் எத்தனையோ உயர்வாகும். அதோடு நீயும் வீண்பொழுதுபோக்காது என் நாத்தனாருடன் சங்கத்தை வெகுவெகு சிறந்த முறையில் நடத்தி அதன் மூலம் நீ பல வேலைகளைச் செய்து பொழுதுபோக்கலாம். இத்தனை நன்மைகளையும் நீ சற்றும் சிந்திக்காமல் ஏதோ பொம்மை வாழ்வு வாழ்வதால் உபயோகமே இல்லை. உனக்கு இதை இத்தனை அவசரமாக எதற்கு எழுதுகிறேன் என்றால், குழந்தை இந்துவின் சித்திரக்கலை, சங்கீதக் கலை இரண்டையும் நிறுத்தி அவள் இதயத்தைப் புண்ணாக்கியதைக்கண்டு பரிதாபப்படுவதாலும், உடனே நீ இந்த சம்பந்தத்தைச் செய்ய முயற்சி செய்வாயோ என்ற ஆசையாலும்தான். உன் கடிதத்தைப் பார்த்த பிறகே என் நாத்தனாருக்கு எழுதவேண்டும். அடுத்த வாரத்திற்குள் உன் கடிதத்தை எதிர்பார்க்கிறேன்.

ஜானகி."

இதைப் படித்ததும் அவருக்கு ஜானகியின்மீது கடுங்கோபமும், பகை உணர்ச்சியும், தன் குடும்பத்தைக் கெடுக்கத்தான் இந்த சண்டாளி முற்பட்டிருப்பதாகவும் தோன்றியதேயன்றி, தான் செய்தது மகத்தான பாதகம், த்ரோகம், வஞ்சனை என்கிற உணர்ச்சியே உண்டாகவில்லை.

இக்கடிதத்தை பானுமதிக்குக் காட்டினால் அனர்த்தமாகிவிடும் என்று தோன்றியதால் உடனே கிழித்துச் சுக்கல்நூறாக்கிக் குப்பைத்தொட்டியில் எறிந்துவிட்டு உள்ளேவந்தார். முகத்தில் எள்ளுங்கொள்ளும் வெடிக்கிறது

மனைவியிடத்தில்கூட இந்த கடிதவிஷயத்தைச் சொல்லவில்லை. இந்துவுக்கு S. S. L. C. ஆனவுடனேயே பள்ளிக்கூடத்தை அதோடு நிறுத்திவிட வேண்டும்—உடனே தங்கள் கடைசி பிள்ளைக்கு விவாகத்தைச் செய்துவிடவேண்டும்—என்பதுதான் இவர் தீர்மானித்துள்ள முடிவு.

காமாக்ஷியம்மாள் டம்ளரில் பாலை எடுத்துக்கொண்டு கணவனிடம் சென்று, பாலைவைத்துவிட்டுக் காலைநீட்டி மடக்கியவாறு உட்கார்ந்தாள்... "என்ன...இன்று உங்கள் முகத்தில் ஏன் ஏதோ கோபம் தாண்டவமாடுகிறது? என்ன சமாச்சாரம்?" என்றாள்.

கணவன்:—சமாச்சாரமா! மண்ணாங்கட்டி சமாச்சாரம். அது கிடக்கட்டும். இந்துமதிக்கு விவாகத்தை விரைவில் முடித்து விடவேண்டும். என்று தோன்றுகிறது. நம்ம கிட்டுவுக்குத்தான் இந்துவை ஆதிமுதல் பாடிக்கொண்டிருக்கிறோம். வயதும் 14 ஆகிறது, என்ன சொல்லுகிறாய்?

காமாக்ஷி:—சொல்வதென்ன இருக்கிறது? செய்துவிட வேண்டியதுதான். ஏதோ நாம் இருவரும் திடமாயிருக்கையில் அதற்கோர் ஆதாரத்தைச் செய்யாவிட்டால் மற்றவர்கள் யார் கவனிக்கப் போகிறார்கள்? குழந்தையின் புத்திசாலித்தனமும் அழகும் நாளுக்கு நாள் செழு செழு என்று வளர்ந்து வருவதைப்பார்த்தால் கண்த்ருஷ்டி படாதிருக்க வேண்டுமே என்று பயமாயிருக்கிறது.....

கணவன்:—உம்...ஆதியில் பானுமதிமட்டும் இந்த வயதில் எப்படி இருந்தாள்? அவளைப்போல் அதிர்ஷ்டஹீனம் இவளுக்கு இல்லாதிருந்தால் போதும். இந்த S. S. L. C. பரிக்ஷையுடன் படிப்பை நிறுத்திவிட்டு கல்யாணத்தைச் செய்துவிட்டால்தான் நல்லது. எனக்கும் மிக்க பலவீனமாக விருக்கிறது. அதோடு பானுமதியின் மனத்தைக் கலைத்துக் குட்டிச் சுவரடிக்கும் அதிகப்ரஸங்கிகளின் சகவாஸம் தினேதினே உண்டாவதாகத் தெரிகிறது. இந்தச் சகவாஸத்தின் பயங்கரம் அவளுடைய வாழ்க்கையையே எங்கு பாழாக்கிவிடுமோ! என்று பயமாயிருக்கிறது...

காமாக்ஷி:—இம்மாதிரி வீண்வம்பும் தும்பும் பேசவேண்டாம். நாம் பண்ணிய பாவந்தான் அவளை இப்படிப்பட்ட நிலைமையில் கண்ணால் பார்க்கிறோம். அபவாதமாக வேறு நீங்களே பேசினால் அவள் ப்ராணனையே விட்டு விடுவாள். தெரியுமா! அப்படி கண்டபடியான சகவாஸம் அவளுக்கு ஒன்றுமே கிடையாது.

கணவன்:—போதும் உன் பரிசல்!...ஏதோ ஒரு குடி கெடுக்கும் நாய் கடிதம் எழுதியிருக்கிறதைப் பார்த்துவிட்டுத்தான் சொல்லுகிறேன். இனி இம்மாதிரி வரும் எவரையும் வீட்டில் சேர்க்காதே...என்றார்.

அப்போது அந்தப்பக்கமாகச் சென்ற பானுமதியின் செவிகளில் முற்றிலும் கேட்கவில்லை எனினும், சில வார்த்தைகள் கேட்டதும், தன் பெற்றோர்களா இப்படிப் பேசுகிறார்கள்...உண்மையில் இது கண்முன்பு காணும் சம்பவமா...என்று துடிதுடித்தாள். தலை சுழன்றது. தனக்கு ஏதோ கடிதம் வந்திருப்பதாயும் அதை யவர்கள் மறைத்துவிட்டதாயும் நன்றாகப் புலப்பட்டுவிட்டது. தனக்கு யார் அக்கறையுடன் கடிதம்

எழுதியிருப்பார்கள், என்கிற ப்ரச்னை பலமாக எழுந்து வாதாடியது. எல்லாவற்றையும்விட தன் இந்துவை கிட்டுவுக்கே மணம் செய்து முடித்து விட ஏற்பாடுசெய்வதைத்தான் அவளால் பொறுக்கமுடியவில்லை. இந்துவுக்கும் கிட்டுவுக்கும் மாமன் என்கிற பந்துமுறை சம்பந்தத்தைத் தவிர வேறுவிதத்தில் மலைக்கும் மடுவிற்கும் உள்ள வித்தியாசத்தை அவர்கள் சற்றும் உணராதது பெருத்த வியப்பாகவும் துக்கமாயுங்கூட விருந்தது.

இந்துவுக்கும் கிட்டுவுக்கும் சுமார் 15 வயதுக்குமேல் வித்தியாஸம் உண்டு. உருவத்திலோ சொல்லவே வேண்டாம். கிட்டுவுக்கு சின்ன வயதில் காக்காய் வலிப்புகண்டு மிக்க அவஸ்தைப்பட்டதும், அதற்காகச் செய்த வைத்தியங்களும் பானுவுக்குப் புதிதல்ல. சில வருஷங்களாகத் தான் அவனுக்கு காக்காய்வலிப்பு வரவில்லை. இது உலகமறிந்த ரகஸ்யமாதலால் யாவரும் பயந்து அவனுக்குப் பெண் கொடுப்பதற்கே முன்வரவில்லை ஏன்? சொந்த மாமாவின் பெண்ணையே கொடுக்க மறுத்தார்கள்.

இத்தனை விஷயங்களையும் வீட்டுடன் இருந்து பார்த்துக்கொண்டே இருக்கும் என் குழந்தையின் வாழ்வையுமா நாசமாக்கப் பார்க்கிறார்கள்... ஐயோ! இந்த அக்ரமத்தை உலகம் நம்புமா! பெத்த தாயும் தகப்பனும் இம்மாதிரி செய்கிறார்கள் என்று நான் சொன்னால்,—எனக்குப் புத்தி ஸ்வாதீனமில்லை, பெற்றவர்களைவிட உலகில் மேன்மையானவர்கள் உண்டா...என்றல்லவா சொல்வார்கள்? அடாடா......பணமே......உன் மகிமைக்கு முன்பு இனி பெத்த மக்களும் துரும்புக்குச் சமானமானது தானா...இந்த அனியாய யோசனை இந்துவின் காதில் விழுந்தால் துடிப்பாளே...குழந்தைக்கு எத்தகைய சுகத்தையும், சந்தோஷத்தையும் தேடிக் கொடுக்காவிட்டாலும் இத்தகைய பயங்கரத்தை...அதிர்ச்சியை விளைவிக்காமலிருந்தால் போதுமே......என்று இடிந்துபோய்விட்டாள். தன் பெற்றோரே இப்படி நினைத்துப் பேசும் வியப்பும், கொதிப்பும் அவளைச் சித்திரவதை செய்தது.

## 8

அம்புஜம் வெகு சுறுசுறுப்புடன் ஸைகிலை வேகமாக விட்டுக் கொண்டு சென்றான். மகாலக்ஷ்மி பாங்கு உள்ள வீதியில் கூட்டம் சொல்ல முடியாது. இத்தனைப்பெரிய கட்டடத்தில் எப்படித்தான் கள்ளன் புகுந்து பாறைபோன்றுள்ள பூட்டை உடைத்திருப்பான்? இதுஉள்ளுளவு அறிந்த கள்ளன் செய்த வேலையாக இருக்கவேண்டுமேயன்றி திடீர் திருடன் செய்திருக்க முடியாது. காவல்காரனும் கட்டடத்திலேயே இருக்கும் குமாஸ்தாவும் உள் உளவில்லாமல் இத்தனை பெரிய காரியத்தைச் செய்திருக்கமுடியுமா?...என்று பொதுஜனங்கள் தமக்குத் தோன்றியவாறெல்லாம் பேசிக்கொண்டே பார்த்தார்கள்.

அம்புஜத்தின் ஸைகில் போவதற்குக்கூட தெருவில் இடம் கிடைக்கவில்லை. நடந்து தள்ளிக்கொண்டே பொதுமக்களின் அபிப்ராயங்களையும், விமர்சனங்களையும் கேட்டவாறு கட்டடத்தை நெருங்கினாள். போலீஸார், ஏகப்பட்டபேர்கள் வந்து தடபுடலாக விசாரித்துக்கொண்டிருக்கிறார்கள். உள்ளே தன் பிதா இருக்கிறாரா என்று அறியும் நோக்கத்துடன் பார்ப்பதற்குள் பாங்கின் உத்தியோகஸ்தர்களில் ஒருவர், "இன்னும் நாயுடு வரவில்லையே...என்ன செய்கிறார்? இதோ புறப்பட்டுவிட்டேன் என்று சொன்னாரே...மறுபடியும் போன் செய்யுங்கள்" என்று தம் குமாஸ்தாவுக்கு உத்தரவிடுவதைக் கேட்டவுடனே அம்புஜத்தின் பாடு நடுநடுங்கிவிட்டது. 'என்னது! இன்னும் அப்பா வரவில்லையா!...... அவர் கிளம்பி சுமார் ஒருமணி நேரமாகிறதே...என்ன வேடிக்கை இது!" என்று இடி இடித்ததுபோலாகிவிட்டது.

பல போலீஸ்காரர்களுடன் தானும் ஒருவராய் கும்பலில் கோவிந்தமாக உள்ளே சென்று ஒருதரம் சுற்றி வளைத்துப்பார்த்தாள். நாயுடுவை காணவில்லை. போலீஸார் தம் சட்டப்படி ஏதேதோ கேட்பதும் பார்ப்பதும், எழுதுவதும் தடபுடல் படுகிறது. இன்னும் நாயுடு வரவில்லையே! என்கிற வார்த்தைகளும் இடை இடையே பலர் வாயினின்றும் வந்தன.

அம்புஜத்தின் திகில் அதிகரித்துவிட்டது. இன்ஸ்பெக்டர் ஏகாம்பரம் நாயுடுவிடம் அதிக பழக்கமுள்ளவராகையால் தன்னைப் பார்த்த உடனே அவர்மட்டும் ஒருவேளை புரிந்துகொண்டுவிடலாம். தன்னை வெளியிடாதபடி அவர் மறைத்துப் பேசும்படிச் செய்யவேண்டும்—என்று ஜாக்ரதையுடன், எந்த இடத்தில் பூட்டுக்களை உடைத்திருந்ததோ அதே இடத்திற்குத் தானும் சென்று கவனித்தாள்.

சாமான்யமான வெறும் திருடன்மட்டும் இந்த பெரிய இரும்புப் பெட்டியின் பூட்டை உடைத்திருப்பதாகத் தெரியவில்லை. இரும்பு பெட்டியின் அனுபவம் நுணுக்கம் முதலிய சகலமும் நன்றாகத் தெரிந்துள்ள தேர்ந்த ஆள்தான் இதை உடைத்திருக்க வேண்டும் என்பதை நன்றாக அறிந்துகொண்டாள். இங்கு எதையும் கவனிக்கக்கூட அவள் மனது இடந்தரவில்லை. நாயுடு அப்போதே புறப்பட்டவர் இத்தனை நேரம் எங்கு சென்றிருப்பார்? அக்கடிதத்தில் குறித்திருந்தவாறு ஒருவேளை அவர்கள் வழியிலேயே ஏதாவது செய்திருப்பார்களா? நினைக்கும்போதே மிகவும் பயமாயிருக்கிறதே!...என்ற குழப்பம் அவளை பாதித்ததால் அங்கு நிற்க மனமின்றி அவ்விடம் விட்டுச் சென்றுவிட்டாள்.

"எங்குபோயிருப்பார்? எங்கு தேடுவது?" என்று தெரியாமல் வீட்டிற்கே வந்தாள். இன்னும் அவர் வரவில்லை என்று தெரிந்ததும் அவளைத் தூக்கிவாரிப்போட்டது. நிமிடத்திற்கு நிமிடம் "நாயுடு இன்னும் வரவில்லையே! எங்குபோயிருக்கிறார்?" என்று டெலிபோனில் கேட்டவாறிருக்கிறார்கள். அம்புஜம் நாயுடுவைவிடத் தைரியசாலி என்று பெயர்தான். இருப்பினும் இப்போது அவள் உள்ளம் படும் வேதனை சொல்லிமுடியாது. அதேசமயம் வேலைக்காரன் ஒரு கடிதத்தைக் கொண்டுவந்து கொடுத்தான்.

"ஏ வீரசிங்கத்தின் குட்டிச்சிங்கமே! எங்கள் வார்த்தையைக் கேட்காமல் உயிரைத் தானே பலிகொடுக்க வந்துள்ள வீரசிங்கம்... தீரசிங்கம்...ஒரு சுண்டெலியைப்போல் எங்களிடம் சிக்கிக்கொண்டு உயிரை விடப்போகிறது. இந்த வழக்கில் இனி நீயாவது ப்ரவேசிக்கா திருந்தால் உயிர் தப்புவாய். இல்லேயேல் தந்தையுடன் உனக்கும் சீட்டுக் கிழித்துவிடலாம். ஜாக்ரதை...உன் போலீஸ் உடையை இனி கழட்டிவிட்டு அடக்கமாய் சேலே கட்டிக்கொண்டு வாழு...உஷார்"...

ஏற்கெனவே கலங்கித்தவிக்கும் அவளுடைய இதயத்தில் தீ மூண்டது போலாகி விட்டது. கடிதத்தை நன்ருகப் புரட்டிப்பார்த்தாள். அப்போது தான் எழுதி, இங்கிகூட உலராதிருப்பதால் அவளுடைய வியப்பு மிகவும் அதிகரித்தது. அதோடு, தான் போலீஸ் உடையிலிருப்பதும் அறிந்து எழுதி யிருப்பதால் கட்டுமீறிய திகைப்பும் வியப்பும் கரைபுரண்டது.எதிரி நம்மு டன் கூடவே இருந்து வேலே செய்கிருனு?...கடிதத்தில் இங்கிகூட உலரா திருப்பதைப்பார்த்தால் கடிதம் எழுதி அதிக நேரமாகவில்லே என்றும் அதை எழுதியவர்கள் அதிக தூரத்தில் இல்லே என்றும் தெரிகிறது. இப் போது என்ன செய்வது?" என்று பலமாக யோசித்தவாறு இடிந்து உட் கார்ந்துவிட்டாள். இத்தனே காலமாக எத்தனேயோ சாகசக்யங்கள் செய்து உழைத்ததெல்லாம் நொடியில் மறைந்துபோய் தனக்கேதோ பெரிய ஆபத்து வந்துவிட்டதென்கிற அதிர்ச்சியினுலும் உணர்ச்சியினுலும் உள்ளம் குழம்பித் தவிக்கையில் பாங்கியிலிருந்து போன்மேல் போன் பறக்கிறது. 'நாயுடு பேராபத்தில் அகப்பட்டுக்கொண்டிருக்கிருர் என்பதை வெளியிட் டால் அது மிக்க ஆபத்தாகிவிடும். அதை மறைத்தே வேலே செய்யவேண் டும்' என்று எண்ணியவளாய் போன்வந்தபொழுது தானே பதில்சொல்ல வாரம்பித்தாள்..."ஓ!...ஏகாம்பரந்தானே...அப்பா வேருெரு காரியமாக வெளியில் போயிருக்கிருர். அவர் வந்ததும் கட்டாயம் நாங்களிருவரும் வந்து பார்க்கிருேம். நீங்களே கேஸைக்குறித்து ரிப்போர்டு எடுத்து தயவு செய்து ஒன்றை இங்குஅனுப்பினுல் தேவலே. அல்லது தாமே போகும் போது இங்கு வந்துவிட்டுப் போங்கள். அதற்குள் அப்பா வந்து விடுவார்...சரி...கட்டாயம் வரவும்"...என்று தைரியமாகக் கூறினுள். ஏகாம்பரம் வந்தபிறகு அவருடைய உதவியைக் கோரித்தான் நாயுடுவின் விஷயத்தை அறியவேண்டும் என்று எண்ணி தன் உடையை மாற்றிவிட்டு அவர் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் உள்ளம் படும் வேதனேயோ நிமிடத்திற்கு நிமிடம் அதிகரித்தது.

## 9

வெகு கும்மாளத்துடன் குதித்துக்கொண்டு இந்துமதி ஓடி வந்தாள். "அம்மா! அம்மா! இதோபார் கடிதம், சித்ரகலாசாலேயிலிருந்து வந்திருக்கிறது. நான் அன்று பத்திரிகையின் விளம்பரத்தைப் பார்த்து விட்டு ஒரு படம் எழுதி அனுப்பினேன் பாரம்மா... அதற்கு முதல் பரிசு



வந்திருக்கிறதாம்'' என்று பானுமதியிடம் காட்டிப் பூரித்தாள். அதில் எழுதியிருந்ததாவது:—

''குமாரி இந்துமதிக்கு, குழந்தாய்! நீ எழுதியனுப்பிய உயிர் ஓவியம், ஓவியப்பரிசோதகர்களால் முதல் பரிசுக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டிருப்பதை உனக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறோம். பட்டினியால் வருந்தும் விவசாயிகளின் குடும்பத்தையும், மதோன்மத்தாகத் தின்றுவிட்டு எத்தகைய கவலையுமின்றித் திரியும் செல்வச் செருக்கு படைத்த குடும்பத்தையும், விவசாயி வயலையும், ஆகாயத்தையும் பார்த்துக் கண்ணீர் விடுவதையும், செல்வவந்தன் நிழலுக்குள் அமர்ந்து பலருடன் விருந்து உண்பதையும் வெகு வெகு தத்ரூபமாய், உள்ளத்தை உருக்கும் வகையில் சித்திரித்திருப்பது மிகவும் போற்றற்குரியதாகும். சித்ரகலாசாலையின் கண்காக்ஷித் திறப்பு விழாவுக்கு அழைப்பு வரும், அதற்கு வரவும். பரிசு வழங்கும் தேதியைப் பிறகு குறிப்பிடுவோம்...வந்து தங்கப்பதக்கத்தைப் பெற்றுக் கொள்ளவும். தயவுசெய்து உன் புகைப்படத்தை அனுப்பவும்.

மாதவன்.
சித்ரகலாசாலையின்
காரியதரிசி.''

இதைப் படித்து பானுமதி பூரித்துப் புலகிதமடைந்தாள். ''தங்கமெடலா!...என் கண்ணே!...பகவான் உன் பங்கில் இருந்து உன்னை எப்போதும் காக்கத் தயாராயிருக்கிறான் என்பதை இதோ இக் கடிதமே எடுத்துக்காட்டுகிறது. அதைப் பார்த்தால்கூட உன் தாதா பாட்டி கோபிப் பார்களோ என்னவோ! என்று பயமாக இருக்கிறது. கிழவராகவிருந்தால்கூட, உன் பிதா உயிருடன் இருந்தால் உன் மதிப்பு எப்படித்தான் ப்ரகாசிக்கும்?'' என்று கூறும்போது அவள் கண்களில் நீர் வழிந்தது.

இந்து:—அம்மா! நீயும் நானும் இனியும் கைக்குழந்தைகளல்ல. எதை வேண்டுமாயினும் அவர்கள் சொல்லட்டும்; நான் கட்டாயம என் புகைப் படத்தை அனுப்பத்தான் போகிறேன், அவர்களுக்கு நீ சொல்லாதேம்மா! பகவானாக ஒரு புகழைத்தேடித் தருகிற சமயம் நாம் ஏன் அதை வேண்டாமென்று சொல்லவேண்டும்? இக்கடிதம் நல்லவேளையா தாதா கையில் சிக்காமல் என் கையிலேயே கிடைத்ததும் ஒரு நன்மைதான்.—என்று சந்தோஷ மிகுதியால் சொல்லிக்கொண்டே ஓட்டமாக ஓடித் தன் புகைப் படம் ஒன்றை எடுத்து அப்போதே சித்ர கலாசாலைக்கு அனுப்பியதோடு அவர்களுக்குத் தன் வந்தனத்தைத் தெரிவித்துக் கடிதமும் தானே எழுதிப் போட்டுவிட்டாள்.

மேலும் நாலைந்து தினங்களாயின. பத்திரிகையில் சித்ரகலாசாலையின் திறப்பு விழாவின் குறித்த தின நிகழ்ச்சியும், அதைத் திறந்துவைக்க ஜில்லாகலெக்டர் இசைந்திருப்பதாயும் கண்காக்ஷிக்கு வைத்துள்ள சித்திரங்களில் இன்னின்னாருடையது பரிசு பெற்றுள்ளது என்ற விவரமும் அவர்களுடைய புகைப்படங்களும் ப்ரசுரித்திருந்தன.

காலையில் பத்திரிகையைக் கையில் எடுத்துக்கொண்டு பானுமதியின் தகப்பனரிடம் அவருடைய நண்பர் நாணு ஐயர், வாய்நிறைய ப்ரம்மபத்திர ஊற்று சுரந்து தாடைகள் இரண்டும் ஒத்து ஊதுகிறவன் கன்னம்போல் புடைத்துக் காக்ஷியளிக்க "இதோ பாத்ழிகளா...ஒங்க பேத்தி...பழம்"... என்று காட்டியபிறகு, வாயில் சுரந்த தம்பல நீரை ரத்தமழை பொழிவது போல் சதுக்கென்று துப்பினர்.

பானுவின் தகப்பனர் பத்திரிகையை வாங்கிப் பார்த்தார். இந்துமதியின் புகைப்படமும் அதோடு இன்னும் சில ஆண்பிள்ளைகளின் படங்களும் ப்ரகாசமாகப் போட்டிருந்தன. அதன் மேல்பக்கத்தில்,

"சித்திர கலாசாலையின் கண்காக்ஷி விழாவின் வைபவம். சித்திரக் கண்காக்ஷியில் முதல் மூன்று பரிசுகள் பெற்றுள்ள சித்திரங்களைத் தீட்டிய நிபுணர்கள். குமாரி இந்துமதியின் சித்திரம் முதல் பரிசு பெற்றுள்ளது"......

என்ற வரையில் படிக்கும்போதே அவருக்கு ரத்தக் கொதிப்பு எடுத்துக் கண்கள் சிவந்ததைக்கண்ட வந்த மனிதர், பின்னும் உத்ஸாகத்துடன் "பேஷ்! பலே பேஷ். பேத்தியின் ப்ராபல்யம் ஜமாய்க்கிறது. இப்போதே இவளைச்சுற்றி ஆண்பிள்ளைகள் இத்தனே பேர்களிருக்கிறர்கள் தங்கப்பதக்கம் வாங்கிய பிறகு இன்னும் ஒரு பட்டாளம் பேருடன் காக்ஷியளிப்பாள்......

என்று—சிலர் வத்தியைக் கிறி வைத்ததுமல்லாது பின்னும் எண்ணெயை ஊற்றி எரியச் செய்வதுபோல்—சொல்வதைக் கேட்டவாறு பத்திரிகையுடன் தடதடவென்று உள்ளே போனர். "ஏ காமாக்ஷி! இங்கு வா!" என்று அதிகார த்வனியுடன் கூப்பிட்டார்: இக்குரலைக் கேட்கும்போதே ஏதோ விபரீதத்திற்குத் தான் கூப்பிடுகிறர் என்பதை பானுமதி உணர்ந்துகொண்டு நடுங்கியவாறு "அம்மா காவேரிக்குப் போயிருக்கிறள்"...என்றுமட்டும் உள்ளிருந்தே பதில் சொன்னள்.

"காவேரிக்குப் போய் ஒரே முழுக்கு முழுகிவிடப் போயிருக்கிறளோ! நீதான் இப்படி வா!...இதோ! உன் பெண்ணழகைப் பாரு. மானம் போகிறது. சித்திரக்கலையாவது, கொலையாவது...உன் பெண்ணை—அதிலும் ஒரு இளம் விதவையின் பெண்ணை—நீ வளர்க்கும் அழகு உலகமே போற்றத்தான் போகிறது. நீ உன் பெண்ணை சம்சாரி லக்ஷணத்தில் வளர்க்கப்போகிருயா! கெட்டுப்போன நாய்களின் கூட்டத்தைப்போல் வளர்க்கப்போகிருயா! இத்தனை தடியன்களின் மத்தியில் நல்ல வயது வந்தப் பெண்ணின் புகைப்படம் என்னவேண்டியிருக்கிறது என்கிறேன். வீட்டில் நாங்கள் எல்லாரும் பெரியவர்களாக இருப்பதாக எண்ணமே உனக்கும் உன் அதிகப்ரஸங்கிப் பெண்ணுக்கும் இல்லையா.....அல்லது நாங்கள் செத்தே போய்விட்டதாக எண்ணமா! எங்களைக் கேட்காமல் இந்த மானங்கெட்ட வேலையை எப்படிச் செய்தாய்?" என்று கர்ஜனை செய்வதைக் கண்டு பானுமதி நடுநடுங்கி இடிந்துப்போய் கண்ணீர் பெருக நின்றுவிட்டாள். பதில் பேசவும் தெரியவில்லை.

இந்துமதி அகஸ்மாத்தாக அங்கு வந்தாள். தன் தாயாரின் கண்ணீர் அவள் இதயத்தின் அடிபாதாளத்தில் தீப்போல் பாய்ந்துப் பதறச் செய்த தால் "என்ன தாதா!...ஏம்மா கண்ணீர் விடுகிறாய்?...என்று அன்பு முற்றும் பொங்கி எழும் குரலில் ஆத்திரத்துடன் கேட்டாள்.

கிழவர் தத்திக் குதித்துத் தாண்டவமாடியவாறு "என்னவா! இதோ இந்த வெட்கக்கேட்டின் வயிற்றெரிச்சலைத்தான் கேட்கிறேன். நீயும் உன் தாயாரும் என்னதான் மனத்தில் எண்ணி இருக்கிறீர்கள் என்பது தெரிய வில்லை. நீ குடும்பத்திற்கு ஏற்ற ஒழுங்குடன் வாழப்போகிறாயா? அல்லது இப்படித்தான் ஆட்டம் ஆடி ஓடிவிடப்போகிறாயா?......

இந்த வார்த்தை இந்துவினால் சகிக்கமுடியாத வேதனையைக் கொடுத்த தால் ஆத்திரம் பின்னும் பீறிக்கொண்டு வந்தது,..."தாதா! அதிகமாய்ப் பேசவேண்டாம், கடவுள் என் தாயாரின் தலையெழுத்தைத்தான் உங்கள் மூலம் படுகுழியில் தள்ளி வதைக்கும்படி எழுதிவிட்டார். அவளைப் பணயம் வைத்து நீங்கள் பணப்பந்தயத்தில் கெலித்துவிட்டீர்கள். அதோடு விடாமல் இன்னும் ஏன் சித்திரவதை செய்யவேண்டும்? இனியும் நாங்கள் எடுப்பார் கைக் குழந்தையல்ல.......என்று கூறி முடிப்பதற்குள் கிழவர் அடங்காத ஆத்திரத்துடன் பளீர் பளீர் என்று இந்துமதியின் முதுகில் நாலறை வைத்துவிட்டார்.

மின்னல் வேகத்தில் நடந்த இந்த அனியாயச் செய்கையைக் கண்டு ஏற்கெனவே மனந்தவித்து நிற்கும் பானுமதியின் இதயம் சுக்கல் சுக்க லாக உடைந்து "ஐயோ!...வேண்டாம் அப்பா!...குழந்தையை அடித்துக் கொன்றுவிட வேண்டாம். இந்த ஒரு ஆத்மாவின் பொருட்டுத்தான் நான் இந்த உலகத்திலிருக்கிறேன். அதையும் பாழாக்கிவிடவேண்டாம்...... அப்பா...அப்பா!" என்று கத்திவிட்டாள்.

காவேரியிலிருந்து ஸ்நானம் செய்துவந்த காமாக்ஷியம்மாள் இந்த அமர்க்களத்தைப் பார்த்து "ஐயையோ! இதென்ன ஆத்திரம்? இந்துவையா இப்படி அடிக்கிறீர்கள்? ஏண்டியம்மா!......என்ன நடந்தது" என்று அவளும் பதைக்கப் பதைக்கக் கேட்டாள்.

"நடந்ததா?...அனர்த்தம் நடந்தது. இந்த பாலிய விதவையும் இந்த சிறுக்கியும் ஓடிவிடத்தான் போகிறார்கள். இதோ பாரு உன் பேத்தியின் பவிஷை..."ஏன் இந்த அநியாயம்?" என்று கேட்டதற்கு இப்படியா தா...தை. என்று தலைக்குமிஞ்சி குதிப்பது......ஓவியப் பரிசாம்! பரிசு" என்று கூவிக்கொண்டே போய்விட்டார். இந்துமதி மறு பேச்சு பேசாமல் விக்கி விக்கி அழுதுகொண்டே தன்னறைக்குச்சென்று படுத்துவிட்டாள்.

பானுமதியும் தாங்கமாட்டாது புலம்பியபடியே இந்துவிடம் சென்று "அம்மணீ! கண்ணூ!...நம் தலைவிதியை நீ மறந்துபோய் அவரிடம் எதிர்த் துப் பேசலாமா?... இந்த மகத்தான சிறைவாஸத்திலிருந்து நம்மை பக வான் என்றுதான் விடுதலையடையச் செய்யப்போகிறாரோ! இவர்களை உதறிக்கொண்டு நாம் போய்விடுவதற்கு வெகுநேரம் ஆகாது.

உன் பிதாவின் சொத்து பூராவும் இவர்களிடந்தான் இருக்கிறது. அதில் காலணாவும் கொடுக்கமாட்டார்கள். நாம் வயிறு வளர்ப்பது எப்

படி? அதோடு விட்டார்களா! உன்னையும் என்னையும் அடியோடு தலை எடுக்கமுடியாதபடிப் படுகுழியில் தள்ளிவிட சகல பந்துக்களும் ஒன்று சேர்ந்துவிடுவார்கள். 'பெற்றோர்களைவிடப் பாதுகாக்கக்கூடிய மனிதர் கள்கூட உலகில் உண்டா! அத்தகையவர்களை த்வேஷித்துக்கொண்டி ருப்பதால் துர்கடத்தையுடன்தான் வந்திருக்கவேண்டும்.' என்று அஞ்சா நெஞ்சம் படைத்த பாவிகள் சொல்வார்கள்.

உன் ஒருத்தியால்தான் உலகில் வாழ்கிறேன் என்பது நீ அறியாததா கண்ணா! எப்படியாவது உனக்குக் கல்யாணம் செய்துவிட்டபிறகு அந்த வ்யாஜத்தைக்கொண்டு உன்னுடன் நானும் வெளியேறிவிடலாம். அது வரையில் பொறுத்திரு என் கண்மணீ! ஓவியப்பரிசு உனக்குச் செய்த நன்மை போதும்'' என்று முடுக்கிவிட்ட மெஷின்போல் அவள் சொல்லிக் கொண்டே போவதை இந்து காதில் வாங்கினாளோ இல்லையோ! அழுது அழுது முகம் வீங்கிவிட்டது.

## 10

சித்திரகலாசாலைக் கண்காட்சிப் பந்தலில் ஒரே தேவேந்திர போகமாய் தடபுடல் படுகிறது. கார்களின் வரிசையே தெருவை அலங் கரித்துப் பேரானந்தத்தை அளித்தது. அன்றுதான் சித்திரம் எழுதிய நிபுணர்களுக்கு ஓவியப்பரிசு கொடுக்கப் போவதால் பத்திரிகையில் விளம் பரம் செய்யப்பட்டிருந்தவர்கள் வெகு ஆடம்பரமாகத் தம்மைத்தாம் அலங் கரித்துக்கொண்டு இரவல் காரோ, வாடகைக் காரோ வைத்துக்கொண்டு ஜம்பமாக வந்து அமர்ந்தார்கள்.

பானுமதியின் தம்பியும் சித்திரம் எழுதுகிறவன்தான் பாவம்! நேற்று முளைத்த இந்துமதிக்கு இதற்குள் ஓவியப்பரிசு கிடைப்பது. தான் மொத்துபோலிருப்பதா—என்கிற வயிற்றெரிச்சல் அவன் உள்ளத்தில் கொழுந்துவிட்டு எரிந்ததால் அதை அடக்கமாட்டாது பானுமதியையும் இந்துமதியையும் வெகு ஆத்திரத்துடன் சுட்டுவிடுபவன்போல் காய்ந்தான்.

பானுவும் தான்பெற்ற பெண்தான். இந்த ப்ரகஸ்பதியும் தான் பெற்ற பிள்ளைதான். இந்துமதி ஓவியப்பரிசாகத் தங்கப்பதக்கம் வாங்கும் விஷயத்தில் காமாக்ஷியம்மாளுக்குக்கூட பொறாமையே தலைதூக்கி நின்றது என்றால் தாயும் மகளுமானாலுங்கூட வாயும் வயிறும் வேறு என்கிற பழ மொழி மிகமிக உண்மையாகிவிட்டதல்லவா! ''பொட்டைக் கட்டைக்குத் தங்கமெடலாம் தடபுடலாம். ஆண் சிங்கத்தைக் கேட்பார் காணவில்லை. காலம் கலிகாலமல்லவா! நாகரீகத்தின் விபரீதம் தலைகீழ் மதிப்பாகிவிட்டது. இவைகளை எல்லாம் உத்தேசித்துத்தான் ஆதிகாலத்தில் மதிப்புப் பூராவும் ஆண்களுக்கே கொடுத்து பெண்களை வீட்டோடு வைத்திருந்தார்கள். தெரி யாமலா பெரியவர்கள் செய்தார்கள்? இத்தனை வருஷமாய் படித்து எழுதிற வனை மதிக்காமல் இந்த சாண் சிறுக்கி எழுதியதற்கு ஓவியப் பரிசாம். பரிசு... இவனைவிட எழுதிவிட அவள் மகா மேதாவியோ! பெண்பிள்ளை...

சிறுக்கி...என்றதனால் பரிசு!''...என்கிற விபரீத வார்த்தைகளை பானுமதி, இந்துமதி காது கேட்கவே தன் மகனுடன் பேசுகிறாள் என்றால் அந்தம் மாளின் மனத்தில் எத்தகைய வித்யாஸம் புகுந்து வேரூன்றி இருக்க வேண்டும் என்பது தெட்டென விளங்கவில்லையா?...

''மாமனும் ஒரு சித்திர நிபுணனாகவிருக்கையில் அவனை அசட்டுப் பட்டம் கட்டிவிட்டு இவள் போய் சபையில் மெடல் வாங்கினால் ஊர் சிரிக்கும்; ஆகையால் அங்கெல்லாம் போகக்கூடாது. வேண்டுமானால் வீடு தேடிக்கொண்டு வந்து கொடுக்கட்டும்...ஏதோ உங்களுடைய அக்கரைக்கும் க்ஷேமத்திற்கும் சொல்கிறேன்.'' என்று கூடவே ஒரு சொட்டு வார்த்தையும் கூறிச் சட்டம் தீர்த்துவிட்டாள்.

அன்று தாதாவிடம் அடிபட்டுச்சென்ற இந்துமதி சிறுமியாயிருப்பி னும் அவள் இதயம் கொந்தளிக்கும் கொந்தளிப்பை அவளால் கட்டுப் படுத்தவே முடியவில்லை. தங்கள் கற்பிற்கு மனங் காவலா? மதில் காவலா? பெற்றவர்களே பாசமற்று ஏதோ ஒரு அடிமையை நடத்துவது போல் நடத்துகையில் இவர்களிடமே நாம் ஏன் இருக்க வேண்டும்? இந்த அம்மா எதற்காக இப்படிப் பயப்படுகிறாள்? இதோடு தலையா போய் விடும்? சொந்த ரத்தபாசமுள்ள மனிதர்களிடம் ஒரு கைதி... அடிமைக் கைதியைப்போல் இருந்து, மானமிழந்து சாவதைவிட ஏன் தனியாகப்போய் பிறரிடம் பிச்சை எடுத்துப் பிழைக்கக் கூடாதா! அது இதைவிடக் கவுரவ மான முறையாயிற்றே!''...என்றெல்லாம் அதிதமாகத் தோன்றியதேயன்றி சாந்தியோ, சமாதானமோ அடையவில்லை.

தாயாருடன் இது விஷயமாகவே பலமான சண்டையும் போட்டுப் பார்த்தாள். மகா மானியும் மிகுந்த பயந்த சுபாவமும் உடைய பானுமதி பெண்ணையே அடக்கிப் பொறுத்துக்கொள்ளும்படியாகக் கூறினாளே யன்றி துணிந்து வீட்டைவிட்டுக் கிளம்ப அவள் பயந்த உள்ளம் இடந்தர வில்லை. நாட்கள் உருண்டு ஒருவாரமாகிவிட்டது.

கண் காட்சிச்சாலையின் திறப்பு விழாவின் அழைப்புத்தாள் கிழவ ரிடமே கிடைத்து அப்படியே மறைந்துவிட்டது. அன்று மாலை ஒரு அழ கான கார் பானுமதியின் வீட்டுவாசலில் வந்து நின்றது. உடனே இந்து வின் தாதா பரக்கப் பரக்க ஓடிவந்து பார்த்தார்.

இதற்குள் வண்டியிலிருந்து ஒரு கனவான் இறங்கி மரியாதையுடன் நமஸ்காரம் செய்துவிட்டு ''ஸார்! குமாரி இந்துமதிக்கு இன்று ஓவியப் பரிசு வழங்கப்போவதை நீங்களறிந்திருக்கலாம். இன்னும் வராததால் எங்கள் சித்ரகலாசாலையின் அதிபர் கார் அனுப்பியிருக்கிறார். அவர்களைக் கூப்பிடுங்கள்'' என்றார்.

இதைக்கேட்ட சுந்தரேசன் மகா ஆத்திரத்துடன் ஒருமாதிரி பார்த்த படியே...''சார்! இந்துமதி வரமுடியாது. 'அவளுக்கு உடம்பு சரியில்லை. படுத்திருக்கிறாள்' என்று சொல்லிவிடுங்கள். வயதுவந்த ஒரு நங்கையை இப்படி அழைத்துப்போக ஒருவர் வருவது வெகு அழகு''...என்று அசம்பா விதமாயும் அந்த மனிதன் திகிலடையும்படியும் கூறி உள்ளே வந்தார்.

ஐயோ பாவம்! வந்த மனிதர் இந்த அநாகரீகச் செய்கையைக் கண்டு மனம் நொந்தவாறு மறு பேச்சின்றிப் போய்விட்டார். ஆனால் இந்துமதிக்கு உடம்பு ஒன்றுமில்லை. வேண்டுமென்றுதான் அனுப்பாமலிருக்கிறார்கள் என்பதை உணர்ந்து மிக்க ஏமாற்றத்துடன் சென்றவரை "எங்கே இந்துமதி?" என்று கலாசாலைத் தலைவர் ஆவலுடன் கேட்டார்.

இந்துமதிக்கு ஜுரமாம். வரமுடியாதென்று அங்கு யாரோ ஒரு கிழவர் சொல்லி அவமரியாதையுடன்—துரத்தாதக் குறையாக—துரத்தி விட்டார்...என்று நடந்ததைக் கூறினார். "உம்...உலக விசித்திரமே ஒரு அதிசயமானதல்லவா! நான் அன்றே சொல்லவில்லை? ராஜசேகரனின் பொறாமையும் அவள் பெற்றோர்களின் சூழ்ச்சியுந்தான் இது...சரி... காரியத்தை நடத்துவோம். நம் நாட்டில் பெரும்பாலோருக்கு, இயற்கையாகவே அமைந்துள்ள தெய்வத்தன்மையின் கலாரஸனைப் பூர்த்தியை வெளியாகவிடாமல் தடைசெய்து அதைப் பாதாளத்தில் புதைத்துவிடவே கங்கணங் கட்டிக்கொண்டு நாசமாக்கிவரும் துர்ப்புத்தி போகவில்லை. பகவான் இருக்கிறான் காப்பாற்றுவான்." என்று கூறியவாறு சென்றார்.

விழாவின் வைபவத்தைச் சொல்லி முடியாது. பரிசுபெற்ற நிபுணர்களைப்பற்றி சபையோருக்கு அறிமுகம் செய்துவைத்து தடபுடலாகப் பேசிக் கொண்டாடினார்கள். இந்துமதி என்கிற சிறுமி—இதோ, இந்த நிகரற்ற ஓவியத்தை உயிருள்ள தத்ரூபமான காக்ஷியைப்போல் வரைந்துள்ள ஸ்ரீ. குமாரி இந்துமதி—யின் திறமையை நாம் போற்றிப் பாராட்டாதிருக்க முடியாது. விளையும் பயிர் முளையிலே என்பது பழமொழி. அதேபோல் குமாரி இந்துமதியின் ஓவியத்தைமட்டும் பார்த்த பிறர் அவளை மிகவும் கை தேர்ந்த அனுபவம் வாய்ந்த பெரியவள் என்றுதான் நினைப்பார்களே யன்றி ஒரு சின்னஞ் சிறுமி இத்தகைய அழகான ஓவியத்தை வரைந்திருக்கிறாள் என்றால் நம்பவேமாட்டார்கள். அதற்காகத்தான் நாங்கள் அச் சிறுமியின் புகைப்படத்தை வெளியிட்டோம். அந்தக் குழந்தை இச் சமயம் இங்கு நம்முன்பு வந்து காக்ஷியளிக்க முடியாத தேக அசவுக்யமாயிருக்கிறதானது நம் துர்ப்பாக்யந்தான் என்று கூறினால் மிகையாகாது.

இப்படி ஏன் அச்சிறுமியைப் புகழ்ந்து பேசுகிறோம் என்றால் அச் சிறுமியின் கைத்திறன் ஓவிய நிபுணர்களை ப்ரமிக்கச்செய்கின்றது. அவள் நம் சித்ரகலாசாலையில் படித்தவளல்ல. ஒரு ஓவிய நிபுணரிடம் படித்து இத்தகைய வ்ருத்தியாகியிருப்பதைப் பார்த்து, பாரபக்ஷமின்றி கலையின் ஜீவநாடிக்கும் அழகிற்கும் நாம் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதை நிரூபிப்பதற்கே இதைக் கூறுகிறேன். நமது கலாசாலையிலேயே படித்த அநேகர் வெறும் பொம்மை, உயிரற்றக் கட்டைகளையே வரைவதைப்பார்க்க, நாம் உண்மையில் அச்சிறுமியைக்கண்டு பொறாமையே கொள்ளவேண்டும். நம் கலாமந்திரத்தில் படித்தவர்களைவிட ஒரு சாதாரணச் சிறுமி இத்தகைய அபூர்வச் சித்திரத்தை வரைந்து ஓவியப்பரிசை அடித்துக்கொண்டு போவதானது நம் சித்திரகலாசாலையில் படிக்கும் சிறுவர் சிறுமியர்களுக்கு ஒரு

படிப்பினையாகும். அவர்களுக்கு மனத்தில் ஒரு உத்வேகத்தையும், ஆத்திரத்தையும் உண்டாக்கி, நாமும் பரிசுகள் பெறவேண்டும் என்கிற மகத்தான ஆசையுடன் இனி படித்துப் பதக்கங்கள் பெறுவார்கள் என்று எனக்குத் தோன்றுகிறது......

என்று அவர் பேசுகையில் அந்தப் பந்தலே கிடுகிடு என்று ஆடும்படியான உத்ஸாகத்துடன் கரகோஷம் அண்டத்தை அளாவியது. அக்கூட்டத்தில் உட்கார்ந்திருந்த ராஜசேகரனுக்குத் தன்னை மட்டந்தட்ட வேண்டுமென்றுதான் இம்மாதிரி பேசுகிறார்கள் என்று ஒரு புதிய உணர்ச்சியும், அதன் பலனாக இந்துமதி, பானுமதி இருவர்மீதும் அடக்க முடியாத கடும்பகையும்,பொறாமை உணர்ச்சியும் உண்டாகியதும் அவனைப் படைத்த ஆண்டவனுக்குக்கூடத் தெரியுமோ! தெரியாதோ!

இதன் விஷ உணர்ச்சி அவன் மனத்தை ஆழமாகத் தாக்கி இதற்குப் பழிக்குப்பழி தீர்க்கும் ஆவேசமே மேல்தூக்கிப் புயல்போல் கிளம்பியது. "இங்கு ஓவியப்பரிசு பெற்ற அச்சித்திராங்கிக்கு என் தம்பி கிட்டுவை—என்றும் மறக்க... மாற்ற... ஆற்ற... அகற்ற... முடியாத பரிசாக... உயிர் ஓவியப் பரிசாக......... இப்போதே இந்த தைமாதத்திலேயே கட்டிவிட்டு அவள் கொழுப்பை அடக்கிவிட வேண்டும். இதுதான் அந்த திமிர்படைத்தக் கழுதைகளுக்கு நான் செய்யும் மாறாத தண்டனையாகும்." என்று தனக்குள் பலமாக எண்ணமிட்டுக் கொண்டிருந்த வேகத்தில் மேல்கொண்டு அவர் என்ன பேசினார் என்பதை அடியோடு கேட்கவேயில்லை.

இதற்குள் இந்துவைப் பற்றிப் பேசுவது முடிந்து பரிசுகள் வழங்கத் தொடங்கினார்கள். வெகு கம்பீரமாயும் பெருமையுடனும் பரிசுகளைப் பெற்றவர்கள் வாங்கிக்கொண்டு ப்ரதிவந்தனமும் பாராட்டுதலும் தெரிவித்தார்கள். குமாரி இந்துமதி...என்று தலைவர் கூறி "இந்த ஓவியப்பரிசை இதோ அச்சிறுமிக்கு நான் என் மனமார்ந்த ஆசீர்வாதத்துடன் கொடுக்கிறேன். இத்தகைய அற்புதப்பிறவிகளை சித்ரகலாசாலையிலேயே உபாத்தியாயினியாகக்கூட நியமித்தால் தன் கைத்திறனைப் பிறருக்கும் போதித்து இக்கலையை மேன்மையாக வளர்க்க வசதி உண்டாகலாம். அச்சிறுமி வராததால் இப் பொற்பதக்கத்தை அச்சிறுமியின் படத்திற்குமுன் சமர்ப்பிக்கிறேன்"...என்று கூறி அங்கு மாட்டப்பட்டிருந்த இந்துமதியின் புகைப்படத்தில் இப்பதக்கத்தை மாட்டினார்.

கரகோஷம் மறுபடியும் வானையளாவியது. தன்னைக்கூப்பிட்டுத்தான் பரிசைக் கொடுப்பார்கள் என்று எண்ணியிருந்த ராஜசேகரனுக்கு இதுவும் தன்னை மிகவும் அவமானப்படுத்திவிட்டதாயும் இத்தனைக்கும் காரணம் இந்துமதிக்கு ஓவியம் சொல்லிக்கொடுத்த வாத்தியார்தான் மறைந்துசெய்யும் சதி என்பதாயும் ஒரு உணர்ச்சி தோன்றியது. "மிரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்." என்கிறபடி ஒரு கோளாறு உள்ளத்தில் புகுந்து பொறாமைத் தீயைக் கிளறிவிட்டதைப் பின்னும் தூண்டிவிடுவதுபோல் தோன்றியதும் அதற்கு ஏற்றாற்போல் அந்த சபையில் ராஜசேகரனைத் தெரிந்தவர்கள் இவனையே உற்றுப்

பார்த்துச் சிரிப்பதுபோலும் குசுமுசு என்று பேசிக்கொள்வதுபோலும் ஒரு குயுக்தி தோன்றியதும் தலைபிரக்கமுண்டாகி வதைத்தது.

எப்படியும் பரிசு பதக்கத்தைத் தன்னிடந்தான் கொடுத்தனுப்புவார்கள். வீட்டிற்குப்போய் இதைக் கொடுக்கும்போது தன் வஞ்சத்தை மறைத்துக்கொண்டு, மிகமிக ஸ்தோத்திரம் செய்து கொடுத்து அதே மூச்சில் காக்காய் வலிப்பு இட்டுவுக்கும் இவளுக்கும் நிச்சயஞ் செய்துவிட வேண்டும். அம்மா அப்பாவிடம் சரியானபடி தூபத்தைப் போட்டுவிட வேண்டும். இந்த ஓவியப் பரிசு பெற்றதன் பலன் இளம் மாணவர்கள் இந்துவை அப்படியே தூக்கிக்கொண்டு போய்விடப் பார்க்கிறார்கள், காமக் கண்களால் பார்த்துப் பேசுகிறார்கள்...என்றெல்லாம் கற்பனைக் கனலை வீசி ஒரு சூழ்ச்சி செய்துவிடவேண்டும்—என்று உறுதியாகத் தீர்மானித்துக் கொண்டான். அந்த உணர்ச்சியின் வேகம் ஒரு பெரிய நீண்ட நெடு மூச்சாக புஸ்ஸென்று வந்தது.

# 11

சரீரத்தை வேண்டுமாயின் ஒரு கட்டுக்கடங்கச் செய்து சிறையில்போட்டு அடைத்துவைக்கலாம். இதயத்தை,...மனத்தை...அவ்வாறு கட்டுப்படுத்தி வைப்பதற்கு சர்வேச்வரனைத் தவிர வேறு யாருக்கு முடியும்? பானுமதிக்கும் இந்துமதிக்கும், இன்று பரிசு கொடுக்கும் தினம் என்பது வெகு நன்றாகத் தெரியும். ஆனால் என்ன செய்வது? தங்கள் நிரந்தரமான கைதிகளுக்கு ஒப்பான நிலைமையில் பெற்றவர்களிடமே கட்டுண்டு கிடப்பதால் அவர்களுடைய பகிரங்கமான உத்தரவை மீறிக்கொண்டு போவதற்கு பானுமதி பயந்தாள்.

இளங்கன்று பயமறியாது என்றபடி இந்துமதி இந்தத் தளையை அறுத்துக்கொண்டு போய்விடவேண்டும் என்றுதான் துடிதுடித்தாள். பானுமதி சுபாவத்திலேயே மிக்க பயந்தவள். பிறர் என்ன சொல்வார்களோ! எப்படிப் போனால் எப்படி வருமோ! என்கிற பயத்திற்குப் பூர்ணமாக அடிமையாகி இருந்ததனால்தான் தன்னை தெரிந்திருந்தும் ஒரு கிழவனுக்குக்கொண்டுத் தள்ளியதை எப்படியோ சகித்துக்கொண்டு தன் வாழ்க்கையைப் பலியிட்டாள்.

"பெற்றோர் செய்வது மக்களுக்கு நன்மையில்லாமலா போகும்? இந்தப் பெண் வீணாக அட்டகாஸம் செய்கிறதே" என்று பிறர் தன்னைக் குறைகூறி விடுவார்களோ!—என்கிற பயத்தினால் பொறுமையை வகித்த பரம ரகஸியம் யாருக்குத் தெரியும்!. அதேபோல் இன்று தன்னுடைய பரிதாபகரமான...வாழ்க்கை சிதறிப் பாழாகிவிட்ட...நிலைமையில் தன் பெற்றோர்களை த்வேஷித்துக் கொண்டால் தனக்கு எப்படியானாலும்,

சின்னஞ் சிறுமியான தன் கண்மணியின் வாழ்க்கை நிலைமையை பாதிக்காமலிருக்க வேண்டுமே அதனால் அவளுடைய வாழ்வும் ஸாரமற்று வரண்ட சூன்யமாகிவிட்டால் என்ன செய்வது? என்கிற பயத்தினால் பெண்ணையே கட்டுப்படுத்தி அடக்கிவைத்துவிட்டாள். ஓவியப்பரிசு வழங்கும் அந்த நாளில் இந்துமதியின் உள்ளம் கொதித்தது. அவளுடைய அபரிமிதமான ஆசையில் தன் தாயார்மீதுகூடக் கடுங்கோபங்கொண்டு கலங்கினாள். "அம்மா...நீ என்றைக்கும் நிரந்தர அடிமையாகவா இருக்கப்போகிறாய்? நான் இதை ஒருபோதும் ஒப்புக்கொள்ளவே மாட்டேன். நாம் என்ன விதத்தில் அக்ரமம் செய்தோம்? யாரை நாம் அலக்ஷியம் செய்தோம்? ஒவ்வொன்றுக்கும் தாதா பாட்டி அபிப்ராயத்தை மீறி எப்போதாவது நடந்தோமா? அனியாயமாய் என் கலை வளர்ச்சிக்கு உலை வைத்துப் பாழ்படுத்துவது தர்மமா? நீ இத்தனை பயந்து பயந்து நடந்து கொள்ளும் சிறப்பை அந்த மூடர்கள் கிஞ்சித்தாவது உணர்ந்தார்களா?

மூத்தப்பெண் நீ வாழ்வை இழந்து இப்படிப் பரிதவிக்கும்போது உன்னைப் பெற்ற தாயார் இப்போதுதான் யௌவன சுந்தரியைப்போல். உன்னுடைய சேலைகளைத் தான் கட்டிக்கொண்டு அலங்காரவதியாய் மினுக்குவதைக் கண்டு பிறர் எத்தனை பரிகாஸம் செய்கிறார்கள் என்பதை அவள் உணர்ந்தாளா......நம் பணத்தையே தான் ஸ்வாஹா செய்வதை தாதாதான் உணர்ந்தாரா?......என்று ஆத்திரத்துடன் கூறிக்கொண்டே போவதைக் கேட்டு நடுநடுங்கிப்போன பானுவதி, இந்துவின் வாயைத் தன் கைகளால் இறுகப் பொத்திக்கட்டி யணைத்தவாறு கண்களைத் துடைத்துக் கொண்டே..."உஸ்...இந்து! என் கண்மணீ! நிறுத்து...ஆத்திரத்தை அடக்கிக்கொள்ளு...கோபம் பாபம் சண்டாளம்...என்பார்கள் பெரியோர் நம்மைப் படைத்த ஆண்டவன் என்றும் எதையும் பார்த்துக் கொண்டுதானிருக்கிறான். அவன் தூங்கவில்லை. உன் புகழை வளர்க்கும் மார்க்கத்தை அவன் வகுக்காமல் தூங்குவதாக நீ எண்ணாதே......

இந்து தாயாரின் கைகளைப் பிடித்துத் தள்ளியவாறு எழுந்து நின்றாள்..."அம்மா!...போதும் உன் வேதாந்தம். நான் நாஸ்தீகத் திமிர் படைத்த சு. ம. கக்ஷியைச் சேர்ந்த உதவாக்கரைப் பெண்டென்று நினைக்காதே. பகவான் ஒருவன் இருக்கிறான். அவனுடைய அபூர்வ சக்திதான் நம்மைக் காப்பாற்றுகிறது என்கிற சத்தியத்தின்மீதுதான் நான் நடக்கிறேன். அவனன்றி ஓர் அணுவும் அசையாது. ஆண்டவனை நான் மறந்திருப்பேனேயானால் என்னையே நான் மறந்தவளாவேன். அம்மா! முதல் முதல் நான் சித்திரம் கற்க ஆசைகொண்டு வெறுங் கோடுகளைக் கிழித்து உருவமாக்கியபோதுகூட "குழந்தை பகவானின் உருவத்தையே வரைகிறாளே! என்ன ஆச்சரியம்" என்று என் வாத்தியார் அதிசயப்பட்டதைக்கூட மறந்துவிட்டாயா! சதா சர்வகாலமும் உங்களை எல்லாம் விட நான்தான் பகவானின் திவ்ய மங்கள விக்ரகத்தில் மனம லயித்தவள் பாலக்ருஷ்ணனை எப்படி வரையலாம்; குழலூதுங் கண்ணனை எப்படிச் சித்திரிக்கலாம்; எசோதா க்ருஷ்ணனை எவ்வாறு உருவகப்படுத்தலாம். தசாவதாரத்தைப் புதிய முறையில் எப்படி சிருஷ்டிக்கலாம், என்கிற அலை

மோதும் எண்ணம் என்னிதயத்தை விட்டகலாதிருப்பதால் அந்த பரந்தாம னும் என் நினைவைவிட்டு அகலவேமாட்டான். நான் ஒருபோதும் கடவுளை மறந்து நடப்பவளல்ல......இருப்பினும் கண்மூடிக் கபோதியைப்போல் என்றும் நடுங்கிககொண்டே வாழ்க்கையை நிரந்தர அடிமையாக்கிக் கொள்ள நான் விரும்பமாட்டேன்...

அம்மா!...நான் இப்போதே தாதா பாட்டியிடம் என் தகப்பனர் வைத்த சொத்தின் கணக்கைக் கேட்கத்தான் போகிறேன். பணந்தானே அவர்களை யப்படிச் செய்கிறது...பணத்தை என்னவோ அவர்கள் இனி அப் பாவிடம் போய்தான் கணக்கு ஒப்பிக்கப் போகிருர்கள். அது தெரிந்த விஷயம். அதைப்பற்றி நாம் ஏன் இனியும் எதிர்பார்த்து ஏமாறவேண்டும். அதோடு, கடவுளாகப் பார்த்துக் கொடுத்துள்ள மகத்தான அதிருஷ் டத்தையும் ஏன் போக்கிக்கொண்டு இவர்களிடமே அடிமையாகக் கிடக்க வேண்டும்? உன்னையும் உன் வாழ்வையும் பணத்துக்காக விற்ருர்கள். அந்த சிறுமையை மிக்க பெருமையாக எண்ணிப் பூரிக்கும் எதிரொலி தான் இவ்வீடு 30 ஆயிரத்திற்கு ப்ரகாசிக்கிறது. உன் சகோதரிகள் சிறந்த பணக்காரக் குடும்பங்களில் வாழ்க்கைப்பட்டு ஜ்வலிக்கிருர்கள். எனக் கொன்றும் தெரியாதென்று நினைக்கிருப்? நான் இப்போதுதான் பிறந்த குழந்தை இல்லை. உலகத்தை ஒரு சிறிது அறிந்துதான் பேசுகிறேன்... என்று ஆவேசத்துடன் பேசுவதைக்கேட்ட பானுமதிக்கு குலை நடுங்கியது.

இவர்கள் பேசும் அறையின் ஜன்னல் பக்கத்தில் ஒரு உருவம் இந்த சம்பாஷணைகளைக் கேட்டவாறு நிற்பதை பானுமதி அப்போதே உணர்ந்ததும் தீயை மிதித்தவள்போல் துள்ளினுள். அவள் இதயம் சுக்கல் நூருக வெடித்ததுபோலாகித் தலை சுழன்றது.

## 12

டபடப என்று மோட்டார் ஸைகிளின் ஓசையைக் கேட்ட வுடனே அம்புஜத்தின் உடல் அவளை அறியாது சிலிர்த்தது. சிட்டுக்குருவி போல் எழுந்து ஓடிவந்து இன்ஸ்பெக்டர் ஏகாம்பரத்தை வரவேற்ருள். சிரித்த முகத்துடன் ஏகாம்பரம், "என்னம்மா! அப்பா இன்னுமா வர வில்லை? அவசரமான இச்சந்தர்ப்பத்தில் உதவிக்கு வராமல் இதைவிட அதி அவசரமான வேலை வேறு என்னவிருக்கிறது? ஓசைப் படாமல் போய் விட்டாரே?" என்று கேட்டார்.

அவரும் மகா நிபுணராதலாலும், இதே வீரசிங்கத்தினிடம் பழகியிருப் பவராகையாலும் அம்புஜத்தைக் கூர்ந்து பார்த்தவுடனே அவருக்கு ஏதோ ஒரு மாதிரியான சந்தேகம் தோன்றியது. திடுக்கிட்டவராய் "என்னம்மா விஷயம்..,உன் முகத்தின் தோற்றமும் கண்களின் பார்வையின் வேகமும் நெத்தியின் கோடுகளுமே எனக்கு ஏதோ மர்மமிருப்பதைக் காட்டுகிறது. உண்மை என்ன?"...என்று கேட்டார்.

அம்புஜம் கண்ணீர் முட்டியவாறு அன்று வந்த இரண்டு கடிதங்களை யும் எடுத்து அவரிடம் மவுனமாகவே கொடுத்தாள். ஏகாம்பரம் அதை வெகு கவனமாகப் படித்து விஷயத்தை அறிந்ததும் ஒருக்ஷணம் அவரும் ப்ரமித்தார். சில நிமிஷங்கள் ஆழ்ந்த யோசனையுடன் தம்பித்து உட் கார்ந்திருந்தார்.

ஏகா:—அம்புஜம்! நான் அவசரமாக வெளியில் போய் வருகிறேன். எனக்கென்ன தோன்றுகிறதென்றால் இந்த பாங்கி கொள்ளைக்கும் இந்த கடிதத்திற்கும் ஏதோ நெருங்கிய சம்பந்தமிருப்பதாக நடித்து, நம்மை ஏமாற்றுவதற்காக இந்தமாதிரி சூழ்ச்சி செய்திருக்கிறார்களேயன்றி இவ் விரண்டுக்கும் சம்பந்தமிருப்பதாக எனக்குத் தோன்றவில்லை.

அம்:—நிஜமாகவா?... அதெப்படி நினைக்க முடியும்! இதில் சம்பந் தப்படாத இதரர்களுக்கு திடீரென்று இவர்மீது ஏன் க்ஷாத்திரம் வரவேண் டும்? இந்த வழக்கில் கலந்துகொள்ளாதபடி ஏன் இம்மாதிரி செய்ய வேண்டும்? எனக்கு இது புரியவில்லையே.....

ஏகா:—நீ இத்தனை காலமாக அவரிடம் பழகியும் உனக்கு இந்த சிறிய விஷயங்கூட விளங்கவில்லையா?... நாயுடுகாருவுக்கு எதிரிகளுக்கா குறைவு? எனக்குத் தெரிந்து எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள். முக் கியமாக போலீஸ்காரர்களுக்கும் துப்பறிபவர்களுக்கும் தினக்கண்டம் தீர்க்காயுஸ்-தான். அவருடைய பழய விரோதியொருவன் அவர்மீது அடங்காப்பகை கொண்டிருக்கிறான். அவன் இந்த பாங்கிக் கொள்ளை யில் சம்பந்தப்பட்டதுபோல் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு தன் வஞ்சத்தைத் தீர்த்துவிட்டால் பாங்கிக் கொள்ளைக்காரர்கள்தான் இதை யும் செய்ததாக வழக்கும அனுமானங்களும் சகலமும் அவர்கள்மீதே பாய்ந்துவிடும். நடுவில் தான் எதிலும் படாது தப்பித்துக் கொள்ளலாம்— என்று வெகுவெகு தீரமாயும், கூர்மையாயும் யோசித்து எவனோ தனிப் பட்ட நபர் செய்த வேலைதான் இதுவேயன்றி பாங்கிக்காரர்கள் செய்த தல்ல என்பதுதான் என் அபிப்ராயம். இப்போதே எழுதி இப்போதே அருகில் இருந்தவாறே இக்கடிதங்களை தன்னுடைய வேறு கையாட்கள் மூலம் அனுபபி இருக்கிறானேயன்றி வேறில்லை. அதுவும் முதல் கடிதத் திற்கும் இரண்டாங் கடிதத்திற்கும் எழுத்தால் வித்யாஸ மிருக்கிறதை நீ கவனித்தாயா?...

அம்:—கடிதத்திலுள்ள விஷயம் என் கருத்தையே இருள் மூடிவிட் டது. அதனால் நான வேறு எந்த நுணுக்கங்களையும கவனிககவே இலலை. இப்போது நீங்கள் சொல்லிய பிறகுதான் வித்யாஸமிருபபதாகத் தெரி கிறது... இதோ பாருங்கள்...கடிதததில் கரி படிந்திருப்பதுபோலத் தெரி கிறதே... கரிதானா இது... ஆம். விரலின் நுனிபோலல்லவா காண்கிறது... இருங்கள். கண்ணாடிகள் கொண்டுவருகிறேன்...என்று ஓட்டமாக ஓடிச் சென்று பூதக்கண்ணாடி கொண்டுவந்து இருவரும் சேர்ந்து உற்றுப்பார்த் தார்கள். கடிதம் எழுதியிருப்பது வெவ்வேறு மனிதர்கள் என்றும், ஆனால் ஒரே இங்கி ஒரே பேனாவினால்தான் எழுதியிருப்பதாயும் கண்டுபிடித் தார்கள்...

ஏகா:—அம்புஜம்! நீ ஆண் உடைதரித்த விஷயத்தை அறிந்துதான் எழுதியிருக்கிறான். ஆகையால் இந்த உளவறிந்த கள்ளன் நம் சமீபத்தில் தான் இருக்கிறான் என்பது நிச்சயமாகப் புரிகிறது. அதோடு எழுதிய கடிதத்தில் கரியின் அடையாளம் படிந்திருப்பதால் இதை எழுதியுள்ள மனிதன் கரிக்கடையின் சொந்தக்காரனாகவோ அல்லது கரிக்கடையில் ஊழியனாகவோ இருக்கவேண்டும். மேல் கவரில்கூட கரியின் அடையாளம் தட்டுகிறது பாரு...

அம்:—ஆமாம்! வேண்டுமென்றே கரியைப்பூசி அந்த விதத்தில் நம்மை அவமானப்படுத்தவோ, ஏமாற்றவோ செய்திருக்கலாமல்லவா...

ஏகா:—அப்படி நினைப்பதும் சகஜம்தான். ஆனால் இதை கவனித்துப்பாரு. தானாகக் கரிபூசிய வடு இதில்லை. அவனையறியாது கரி படிந்திருக்கிறது. இதோ, இம் மூலையில் பாரு. கரியைத் துடைத்திருப்பதில் காகிதங்கூடச் சிறிது தேய்ந்திருக்கிறது. ஆகையால் நான் முதலில் சொல்லியதுபோல் பழய விரோதி புதிய கொள்ளையுடன் இதைக் கலந்து விட்டுத் தான் ஒன்றுமே அறியாது தப்பிவிடவே இக்காரியத்தைச் செய்திருக்கிறான் என்பதுதான் என் தீர்மானம். இதற்குமேல் நாம் என்ன செய்வது, என்பதுபற்றித்தான் இப்போது யோசிக்கவேண்டும்.

எனக்கென்ன தோன்றுகிறதென்றால், நாயுடுகாரு எதிரியிடம் அகப்பட்டுக்கொண்டு இருப்பதாகவே நாம் காட்டிக்கொள்ளக்கூடாது. அவர் நம்மோடு இருப்பதாகவே பிறர் அறியும்படியான வேலைகளைச் செய்ய வேண்டும். நான் சாவகாசமாக யோசித்துக்கொண்டு வந்து சொல்கிறேன். நீ தைரியமாயிரு. யார் வந்து கேட்டாலும் வெளியில் போயிருப்பதாகவே சொல்லு. வேறு எந்த விஷயமும் மூச்சுவிடாதே. நான் வரட்டுமா?

அம்பு:—பாங்கி வழக்குக்கும் இதற்கும் சம்பந்தமில்லை என்று சொல்லுகிறீர்கள்? அப்படியானால் பாங்கியின் கொள்ளையைப் பற்றி என்ன தீர்மானம் செய்தீர்கள்?

ஏகா:—தீர்மானமா! இப்பொழுதே செய்துவிட முடியுமா! இனிமேல் தான் உள்புகுந்து ஆராய்ச்சி செய்யவேண்டும். அதற்குள் "கிணறு வெட்டப் பூதம் கிளம்பியது" என்பார்கள். கிணறு வெட்டாமலேயே பெரும்பூதம் கிளம்பி நாயுடுவைத் தூக்கிக்கொண்டு போய்விட்டதே என்ன செய்வது? சரி...நான் போய் சாயங்காலம் வருகிறேன். அதற்குள் என்னென்ன நடக்கிறதோ பார்க்கலாம்—என்று கூறிவிட்டு எழுந்துவந்தான். கதவு சாத்தியிருந்தது கண்டு, திறக்கப்போனால் கதவு வெளிப்புறம் தாழ்ப்பாள் போட்டிருப்பதால் திறக்கமுடியவில்லை.

ஏகாம்பரம் அலறிப்போய்..."அம்புஜம்!... இதென்ன கதவு வெளியில் போட்டிருப்பதுபோல் தோன்றுகிறதே! உன் பூட்டு வேறு இருக்கிறதா! திறந்துபாரு" என்றார். பரபரப்புடன் அம்புஜம் ஓடிவந்து கதவை இழுத்துப் பார்த்துத் திடுக்கிட்டவாறு "ராம்ஸிங்...ராம்ஸிங்...வேலம்மா வேலம்மா!...முத்துசாமி!" என்று வீட்டு வேலையாட்களை பேர் போராகக் கூப்பிட்டுக் கதவைப் பலமாகத் தட்டினாள். எவ்வித சந்தடியும் தெரிய

வில்லை. இருவரும் பொறியிலகப்பட்ட எலிபோல் ஒருவரை யொருவர் பார்த்துத் திகைத்தும் கலவரமடைந்தும் தவிக்கையில் கடகடவென்று சிரிக்கும் சிரிப்பொலி தூரத்திலிருந்து கேட்டு நடுநடுங்கினார்கள். "யாரது சிரிப்பது...வேலம்மா...ராம்ஸிங்க்"—என்று மறுபடியும் கூப்பிட்டும் எத்தகைய பதிலும் இல்லாது திகைத்துப் போனார்கள். மீண்டும் அந்த பயங்கரமான சிரிப்பொலி கேட்டு உடல் நடுங்கியது.

## 13

ஒன்றும் விவரம்புரியாத சிறுமி என்றும், தன் குடும்பத்து விஷயத்தை எதுவுமே தெரிந்துகொண்டிருக்கமாட்டாள் என்றும் பானுமதி எண்ணியிருந்ததற்கு நேர்மாறான விஷயத்தைக் கூறிய இந்துமதியின் வார்த்தைகள் பானுமதியை கதிகலக்கி நடுங்கச் செய்துவிட்டன. எத்தனை தான் இந்துமதியைச் சமாதானம் செய்தும் அவள் அடங்குகிற வழியைக் காணாததால் பயத்துடன் தவிக்கையில் ஜன்னலின் அருகில் தெரிந்த உருவத்தின் நிழலைக் கண்டதும் தூக்கிவாரிப் போட்டது.

கதவருகில் வந்து எட்டிப் பார்த்தாள். இவளுடைய தம்பி கிட்டுதான் நின்று ஒட்டுக் கேட்பதைக் கண்டதும் கோபமும் அருவருப்பும் கொண்டு "என்னடா செய்கிறாய்?"...என்று அதட்டுவதுபோல் கேட்டாள்.

கிட்டு வெகு முடுக்கான த்வனியில் "இரு இரு. இங்கு நடந்த அத்தனையும் இப்பவே போய் அப்பாவிடம் சொல்லிவிடுகிறேன். உங்களிருவருக்கும் இத்தனை திமிரா வந்துவிட்டது?" என்று கூறிக்கொண்டே ஓட்டமாகச் சென்று சகல விஷயங்களையும் ஒன்றுவிடாமல் முதலில் தாயாரிடத்திலும் பிறகு தகப்பனாரிடத்திலும் சொல்லிவிட்டான்.

ஆனால் தாயாரோ, தகப்பனாரோ அப்போது ஒன்றும் கேட்கவில்லை. எதைப்பற்றியும் பேசவுமில்லை. அந்த நிலைமையிலிருக்கையில் நாம் முன்பு தெரிவித்ததுபோல் சித்ரகலா நிலயத்திலிருந்து காரில் ஒருவர் வந்ததும் அதற்குப் பிறகு நடந்ததும் நிகழ்ந்தன. இப்போதே தாமும் போய் கடுமையாக நடந்து கொண்டால் விஷயம் ரஸாபாஸமாகப் போய்விடும் என்பதனால் தாமே இந்துவுக்கு உடம்பு சரியில்லை என்ற புளுகுபுராணத்தைக் கொட்டியளந்துவிட்டார்.

பரிசு வழங்கிய பொற் பதக்கத்தை எப்படியும் தன் மகனிடந்தான் கொடுப்பார்கள் என்கிற எதிர்பார்ப்புதான் இவரிடமும்இருந்ததால் மகனின் வரவை நோக்கியவாறு வீதியிலேயே காத்திருந்தார். சிறிது நேரத்திற்கெல்லாம் மறுபடியும் ஒரு அழகான கார் வந்து நின்றது. அதிலிருந்து இரண்டு மூன்று பேர்கள் இறங்கினார்கள். தட்டில் வெற்றிலைப்பாக்குடன் தங்கப்பதக்கமும் ஒரு அழகான பெட்டியில் வைக்கப்பட்டிருந்தது.

சித்ரகலா நிலயத்தின் பெரியவர் இந்துமதியின் தாதாவைப் பார்த்து "ஸார்! குழந்தையிடம் இதை நேரில் கொடுப்பதற்காகவே நாங்கள் வந்தோம். தயவுசெய்து சற்று கூப்பிடுங்கள். என்ன அபூர்வமான கைத்

திறமை போங்கள் குழந்தை வருங்காலத்தில் நமது ரவிவர்மாவைப் போலத்தான் ப்ரகாசிப்பாள் என்று இப்போதே தெரிகிறது'' என்று கூறுவதைக் கேட்ட கிழவரின் முகத்தில் சந்தோஷமோ, வியப்போ ஒன்றுமே தோன்றாது விளக்கெண்ணெய் குடித்தவன் முகம் போல் இருந்தது. எனி



னும் பெரிய பெரியவர்கள் வீடேறி வந்திருப்பதால் அவர்கள் முன்பு வேறு எவ்விதமான வித்யாசமும் காட்டிக்கொள்ளாமல் அவர்களை உட்காரச் சொல்லிப்பின் "குழந்தைக்கு ஜுரம்; கண்ணையே திறக்கவில்லை. அவள் பால் இத்தகைய அன்பும் ஆர்வமும் கொண்டு தாங்கள் வந்ததுபற்றி மிக்க சந்தோஷம். இப்படிக் கொடுத்தால் பிறகு நான் கொடுக்கிறேன்." என்று கூறினர்.

இவைகளை எல்லாம் தாயும் மகளும் உள்ளிருந்து கேட்டுக்கொண்டிருந்தார்கள். இந்துவின் உள்ளம் ஒரேயடியாகக் கரை உடைத்துக் கொண்ட உணர்ச்சி வெள்ளத்தை யடைந்ததால் இவளுடைய செய்கை இவளுடைய தாயாருக்குக் கூடத் தெரியவில்லை; சற்றும் எதிர்பார்க்கவுமில்லை. தாயாரிடம் சொன்னால் இந்த இடத்தைவிட்டு அசைவதற்கே அனுமதியளிக்க மாட்டாள் என்பது தெரியும்; ஆதலால் தடதடவென்று தானே ஒருவிதமான அசுர தைரியத்தையடைந்து அந்த இடத்திற்கு வந்து அப் பெரியாரை நமஸ்கரித்துப் பதுமைபோல் நின்ருள்.

இச்செய்கை பானுமதியின் மண்டையில் ஓங்கி அறைந்ததுபோல் அதிர்ச்சி உண்டாக்கியது. இந்துமதியின் தாதாவுக்கு ஏற்கெனவே உள்ள கோபத்தைக் கிளறி எரியும் தீயில் மண்ணெண்ணெயை வார்த்ததுபோல் செய்துவிட்டது. வந்தவர் தட்டுடன் இந்துமதியின் கையில் கொடுத்து அவளை இதய பூர்வமாக வாழ்த்தி ஆசீர்வதித்துப் பின்னர் விடைபெற்றுக் கொண்டு சென்ருர்.

சிறுமியாயிருப்பினும் அவளுடைய இந்தத் துணிகரமான செய்கையின் போக்கைக் கண்டு மனங்கொதித்த அவள் தாதா இந்துவை விழுங்கி விடுகிறவர்போல் விழித்துப் பார்த்தார். ஏற்கெனவே கோபமும் துக்கமும் தாண்டவமாடுவதால் அவள் தாதாவைத் திரும்பிக் கூடப் பார்க்காமல் தட்டை எடுத்துக்கொண்டு உள்ளே சென்று தன் தாயாரிடம் காட்டி, "அம்மா! இதோ பாரு. அன்புடன் கடவுள் எனக்கு அளித்த "ஓவியப் பரிசு" என்று பெருமிதத்துடன் கூறினள்.

பானுமதிக்குச் சந்தோஷம் ஒருபுறம் இருப்பினும் இந்துமதியின் துணிச்சலும் செய்கையும் நடுக்கமுண்டாக்கின. தன் தகப்பனரைச் சற்றும் லக்ஷியம் செய்யாமல் இவள் தானகப் போனது ஒரு குற்றம், அவருக்குக் காட்டாமல் நேரே உள்ளே வந்துவிட்டது மற்ருெரு குற்றம். இந்த வினையினல் என்ன விபரீதம் நடக்குமோ! ஏற்கெனவே கிட்டு வேறு தூபம் போட்டிருக்கிருன். இவைகளின் பலன் எந்தமட்டில் கொண்டுவிடுமோ! என்று குலை நடுங்குகிறது.

இந்துமதியை இனியும் தான் ஒன்றுமறியாத சிறு குழந்தையைப் போல் நினைக்கக்கூடாது என்ற பயமும் உண்டாகி அவள் பாடு திருசங்கு சொர்க்கமாகிவிட்டது. அவள் குழப்பங்களை அடக்கிக்கொண்டு "கண்ணு! இதை முதலில் பகவானிடம் வைத்து நமஸ்காரம் செய். அதன் பிறகு உன்னை அரும்பாடுபட்டு வளர்க்கும் உன் தாதா பாட்டியிடம் காட்டி அவர்களையும் நமஸ்காரம் செய்யம்மா! நாம் யாரையும் பகைத்துக்கொள்ளக்

கூடாது. எப்போதும் பெரியவர்களுக்கு அடங்கி மரியாதையுடன் நடந்தால் அதில் எவ்விதமான குறையும் வராது. இன்னும் ஒரு படிக்கட்டு மேன்மையும் நன்மையும் உண்டாகுமேயன்றி தீமை வராதம்மா! போய் தாதாவிடம் காட்டி நமஸ்காரம் செய்துவிட்டு வாம்மா"... என்று அன்பு ஒழுகக் கூறினாள்.

இந்து:—அம்மா! உன் வார்த்தையைப் பார்த்தால் நான் தாதாவையோ, மற்றவர்களையோ அலக்ஷ்யம் செய்வதாகவன்றோ தெரிகிறது. நான் எத்தனைவிதங்களால் அவர்களுடைய மனம் கோணாது நடக்கமுடியுமோ, அப்படி நடப்பதை நீ அறியமாட்டாயாம்மா! என்னுடைய கலை வளர்ச்சியில் அக்கரைகொண்டு அதை விருத்தி செய்து முன்னுக்குக் கொண்டுவரவேண்டிய தாதாவே அதை அமுக்கிக் குழிவெட்டி மூடிவிடப் பார்ப்பது நியாயமா! எதடா இத்தனை சிறிய பெண்ணுக்கு ஓவியப் பரிசு——அதிலும் முதல் பரிசு தங்கப்பதக்கம்—வந்திருக்கிறதே. எத்தனை சந்தோஷம். ஆச்சரியம்!—என்று மிகைப்பட சந்தோஷப்பட்டு என்னையும் அழைத்துக்கொண்டு போகவேண்டுவதைவிட்டு எனக்கு ஜுரம், வரமுடியாது என்று ஏனம்மா சொல்லியனுப்ப வேண்டும்?

அதோடு விட்டாரா! இப்போதும் அந்த நிலயத்தினரின் முன்புகூட நான் வரக்கூடாது என்கிற எண்ணத்துடன்தானே அவர் பேசினார். எந்த மகானுபாவர்கள் எனக்குப் பரிசு கொடுக்கிறார்களோ அவர்கள் நம் வீடேறி வந்திருக்கையில் கூட இதென்ன மறியல் நாடகம்? அவர்களுடைய கையினாலேயே நான் வாங்கிக்கொள்ளவேண்டும் என்கிற ஆசையினால்தான் நானே நேரில்போய் வாங்கிக்கொண்டேன். இந்த விஷயத்தில் சிறிதுகூட சிரத்தையோ ஆசையோ இல்லாத மனிதரிடம் நான் போய் காட்டினால் விபரீதமாகப் பேசி மனத்தை இன்னும் புண்படுத்துவாரேயன்றி மகிழ்ந்து ஆசி கூறமாட்டார் என்பது எனக்குத் தெரிந்துதான் வந்தேன்... உன் மனத்திற்கு ஏன் கவலை? இதோ போய் நமஸ்காரம் செய்துவிட்டு வருகிறேன். கண்ணீர் விடாதேம்மா" என்று கூறியவாறு தட்டுடன் முதலில் பகவானிடம் வைத்து வணங்கிவிட்டுப் பிறகு தாதாவிடம் சென்று "தாதா! இதோ பாருங்கள்" என்று தட்டுடன் காட்டிவிட்டு நமஸ்காரம் செய்தாள்.

அதே சமயந்தான் ராஜசேகரன் மகத்தான கோபத்துடன் பொறுமைத் தீ கண்களில் பறக்க முடுக்காக அங்கு வந்தான். மாமாவைப் பார்த்ததும் அவனையும் நமஸ்கரித்தாள். அவனுடைய ஆத்திரத்தின் வேகத்தில் "பல வருஷங்களாக இதே தொழிலில் மேன்மையடைந்துள்ள மாமனை அவமானப்படுத்திவிட்டுத் தேவடியாள் தளுக்குடன் நீ மயக்கிக் குலுக்கி உன் பழைய வாத்தியாரின் பரமாதமான முயற்சியினால், சிபாரிசினால் வாங்கி விட்டப் பரிசுக்கு உன் பாட்டனார் பல்லிளிக்கிறாரோ... போதும் நமஸ்காரம். ஈறை பேனாக்கி, பேனை பெருமாளாக்கி இத்தனை தூரம் கொண்டு வந்ததற்குத் தகுந்த மரியாதை போதும். அந்த கொட்டகையில் என்னால் தலை நிமிரவே முடியவில்லை. இந்த அழகான சித்திரத்தைவிட ஆயிரம் பங்கு அதிகரித்த சித்திரத்தை என் கை தீட்டும்... ஆனால் தளுக்கு சுந்தரிகளுக்குள்ள ஏற்றம், மதிப்பு உண்மை உழைப்பாளிகளுக்கேது!"

என்று கர்ண கடூரமான வார்த்தைகளாகிய பாணங்களை வீசிய படியே தை...தை என்று குதிக்கிறான். தகப்பனாரைப் பார்த்து நறநற வென்று பல்லைக் கடித்துக்கொண்டே, "அப்பா! இந்த அவமானத்தை என்னால் தாங்கமுடியவில்லை. ஏதோ எனக்குத் தங்கப்பதக்கம் வரவில்லையே என்கிற பொறாமையினால் பேசுவதாக நினைத்துவிடவேண்டாம். அதைப்பற்றி நான் சொல்லவில்லை. அந்த சித்ரகலாசாலையில் கூடியிருந்த ஜனங்கள் உங்கள் அழகான பேத்தியையும் பெண்ணையும் பற்றிப் பேசும் அவமானம் என்னால் தாளவேமுடியவில்லை. இந்த மதனசுந்தரியின்மீது கண் வலை வீசி, நான் நீ என்று இப்போதே போட்டிபிட்டுக் கொண்டு அடித்துச் செல்லும் முறையில் வ்யவகாரம் பெருகிவிட்டது.

உங்கள் பெண்ணை நீங்கள் ப்ரமாதமாகச் சிறையில் வைத்திருப்பதாக நினைத்து ஏமாறுகிறீர்கள். அந்த சித்ரவாத்தியாரின் தொடர்பில்தான் இன்று தங்கப்பதக்கம்...ஓவியப் பரிசு. பெற்றுவிட்டாள்....எனக்கேன் சனியன் பிடித்த விசாரம்? என்னை வேறு ஊருக்கு மாத்தல் செய்யப் போகிறார்கள். நான் கண்மறையப் போய்விடுகிறேன். ஏதாவது சொன்னால் பொல்லாப்பாகத்தான் முடியும். போனது போகட்டும். இனியாவது மானத்தைக் காற்றில்விடாது இந்த சிறுக்கியை கிட்டுவுக்குக் கட்டிப் போட்டு ஒரு வழி செய்தால் இந்த அவமானம் சற்று மறையலாம். இல்லையேல் உங்கள் இஷ்டம்" என்று படபடவென்று பேசிவிட்டு தடதடவென்று மாடிக்குப் போய்விட்டான். மிக மிகச் சிறுமியாகவிருந்தபோதிலும் தன்னைப்பற்றி அவதூருகப் பேசியதைக்கூட இந்துமதி பொறுத்தாள். பவித்திரமான தியாகப் பதுமைபோன்ற தன் தாயாரைப்பற்றி அந்த மகா பாவி வாய்கூசாது சொல்லியதைத் தான் அவளால் தாங்கவேமுடியவில்லை. இதயம் வெடித்துவிடும்போல் பதறியது. இந்த உணர்ச்சி வேகத்தில் அவளுக்கு எங்கிருந்தோ ஒரு அசுர ஆவேசம் உண்டாகியதும் வெகு வெகு துணிச்சலுடன் தாதாவை நோக்கி "சீச்சீ! நீங்களொரு மனுஷ்யரா! அன்று சபையில் தம் பத்தினியை எதிரி துகிலுரிவதைக்கண்டு கம்பங்கள் போல் 5 வர்த்தாக்களும் உட்கார்ந்திருந்த கதையைப் படித்து உள்ளம் துடித்த எனக்கு அதைவிட விசித்திரமான நிலையில், தான் பெத்த மகளை... நெருப்புத்தணல போன்ற உத்தம மகளை...தான்பெற்ற மகனே அவதூருகப் பேசுவதைக் கேட்டுக்கொண்டு நிற்பதற்கு உமது உள்ளம் எப்படித்தான் இடம் கொடுக்கிறது? என் தாயாரின் பரிசுத்தம் உம கண்ணுக்குத் தெரியவில்லையா?... இந்த அக்ரமத்தை... இந்த அனியாயத்தை..." என்று கண்ணீர் பெருக ஆத்திரத்துடன் சொல்வதை உள்ளிருந்து கேட்டுக்கொண்டிருந்த பானுமதியின ஏற்கெனவே அளிந்த புண்ணுகி அவதியுறும் மனத்தைக் கிளறியது. ஓரே ஓட்டமாக ஓடிவந்து இந்துமதியின் வாயை கெட்டியாகப் பொத்தி, மறஙொரு கையினால அவளை பலமாக இழுத்துக்கொண்டு போனாள். சமாதியின் மவுனம்போல் அங்கு சூன்ய உணாச்சியுடன் கிழவர் நின்றிருந்தார். கோபமும் ஆத்திரமும் மட்டும் கண்களில் ஜ்வலித்தன.

"ராஜசேகர்! உன்னுடைய முயற்சி வெற்றி பெற்றுவிட்டது. ப்ரமாண்டமான பங்களாவை மாதம் 100 ரூபாய் வாடகையில் முடித்தாயிற்று. பீதாம்பரம், ரகுபதி, ரத்தினம், சந்திரகலாவதி...ப்ரபாகர், லீலாவதி முதலிய ஓவிய திலகங்களை ஏற்பாடு செய்துவிட்டேன். இனி ஆரம்பிக்கவேண்டியதுதான் பாக்கி. ஓவிய மந்திர் என்ற பெயரே பொருத்தமானது என்று பலரும் சொல்லிவிட்டதால் அதையே சலவைக்கல்லில் செதுக்கிவிட்டேன். அன்று நீ போட்ட போட்டில் உன் குடும்பத்தில் பலமான மாறுதல் உண்டாகிவிட்டதாமே. ஓவியப்பரிசு ராணி இப்போது என்ன செய்கிருள்? இதோ பாரு. நான் உனக்குக் கொடுத்த வாக்குறுதியின்படி உன்னிஷ்டத்தைப் பூர்த்தி செய்துவிட்டேன். இனி உன் வாக்குப்படி இந்துமதியை எனக்குக் கொடுப்பதைத் தாமதம் செய்யாதே. என்ன! பலமாக யோசிப்பதில் நான் சொல்வதொன்றும் உனக்குக் கேட்கவே இல்லையா?" என்று துரைராஜா கேட்டான்.

பலமான யோசனையில் தான் மூழ்கி இருந்தான் எனினும் அதைக் காட்டிக்கொள்ளாமல்..."அடேடே...நான் அத்தனை முட்டாள் என்று எண்ணிறாய்......உன் வார்த்தை சகலமும் கேட்டுக்கொண்டுதானப்பா இருக்கிறேன். அந்த திமிர்படைத்த சித்ரகலாசாலைக்கு எதிராக நாம் ஆரம்பிக்கப்போகும் ஓவிய மந்திரின் புகழ் வானளாவிச் செழித்துவிடவேண்டும். அவ்வாறு வ்ருத்தியடைவதற்கு என்னென்ன வழிகளில் வேலைசெய்தால் வெகு விரைவில் உன்னத நிலைமையை அடையமுடியும் என்றுதானப்பா யோசித்தேன். அதற்கோர் முடிவும் கண்டுவிட்டேன்.

துரை:— அதென்ன வழியப்பா!...சீக்கிரம் சொல்லு.

ராஜ:— அதுவா? முதலாவது,—சித்திர கலாசாலையில் உபாத்தியாயர்களுக்கு என்ன சம்பளம் கொடுக்கிருர்களோ, அதைவிட அதிக சம்பளத்தை நாம் கொடுக்கவேண்டும். இரண்டாவது, பெண்களையே நாம் அதிகமாகச் சேர்த்துக்கொண்டு சித்திர கலாசாலையைவிட சம்பளத்தை மிகக் குறைவில் வைத்துவிடவேண்டும். சித்திரம் சொல்லிக் கொடுக்கும் உபாத்தியாயர்களில்கூட பெண்களையே அதிகமாக வைக்க வேண்டும். தெரிந்ததா? அம்மாதிரி செய்துவிட்டால் சில மாதங்களுக்குள்ளேயே நம் புதிய மந்திரின் புகழ் விண்ணை எட்டி நிர்த்தனம் செய்யும் என்பதில் ஐயமில்லை. ஏதோ முதலில் கொஞ்சம் செலவு அதிகமானாலும் பாதகமில்லை. என்ன சொல்கிருய்?...

துரை:—சபாஷ்! இப்படியல்லவா புத்தி வேலை செய்ய வேண்டும். இன்னுமொன்றுகூடச் செய்யலாம். ஒவ்வொரு சிறிய வகுப்புமுதல் பெரிய வகுப்பு வரையில் அடிக்கடி உயர்ந்த சித்திரங்களைப் பொறுக்கி எடுத்து அவற்றை ப்ரசுரம்செய்து டாம் டாம் அடித்து பரிசுகள் வழங்க வேண்டும். அதோடு இன்னென்று பாரு, உன் விருப்பம் சித்திரகலாசாலை. என் விருப்பம் சினிமாக் கலாசாலை. இரண்டும் நிறைவேறும்

சந்தர்ப்பம் இப்போதே வந்துவிட்டதால் என்னுடைய முதல் படத்திலேயே உன்னுடைய ஓவிய மந்திரைக் கதையில் புகுத்திப் படம் பிடித்து ப்ரபலப்படுத்திவிட்டால் இதைவிட உயர்வுக்கு வழி வேறு என்ன வேண்டும்?''...

என்று அவன் சொல்லும் வார்த்தைகளாகிய மதுவை உண்ட ராஜ சேகரன் மதிமயக்கி சபாஷ் போட்டு அவனைப் பூரிக்கச்செய்தான். "சரி... துரைராஜ்!...நீ சொன்னபடி செய்ததுபோல்,நானும் செய்யத் தடையில்லை. என் தகப்பனரிடம் எந்தவிதத்தில் ப்ரஸ்தாபிக்க வேண்டுமோ அவ்வகை யில் சரியானபடி தூபம்போட்டு உன்னுசையை நிறைவேற்றி விடுகிறேன். ஆனல், அதிகமாக இந்த விஷயங்களை வெளியிடாதே. அவசரமும் படாதே. சற்று பொறுமையாயிரு. நான் வருகிறேன். மற்ற சகல ஏற்பாடுகளையும் நீ செய்துவிடு—என்று கூறிவிட்டு எழுந்துபோனன்.

அன்று இந்துமதிக்கு ஓவியப் பரிசு கிடைத்த பிறகு, இப்போது இடையில் ஆறுமாதகாலம் சென்றது தெரியாது சென்றுவிட்டது. உண் மையான நிரந்தரக் கைதிகளுக்குக்கூட அனுதாபத்தின் காரணமாக சற்று சலுகைக் காட்டுவதுண்டு. ஆனல், பானுமதிக்கும் இந்துமதிக்கும் அதைவிட மோசமான நிலைமையில் கைதிகளினும் கேடுகெட்டவர்கள் போல் விதி அமைந்தது.

இந்துவின் துடிதுடிப்பு மட்டும் வாங்கவே இல்லை. ஒரே வார்த்தை யில் பானுமதி அவன் வாயை அடக்கிவிட்டாள். அதாவது:—"என் சொல்லை மீறிக்கொண்டு நீ ஏதாவது செய்தால் உடனே நான் தற்கொலை செய்துகொண்டு விடுவேன். தாயின் உயிரும் மொழிகளும் உனக்கு முக்கியமா! மற்றவை முக்கியமா! நான் வேண்டுமானல், நீ சகலத்தையும் அடக்கிக்கொண்டு எனக்காக பொறுமையை வகித்துவா. சகலத்தையும் பகவானின் திருவடிகளில் அர்ப்பணம் செய்துவிட்டு அவனையே நம்பி பஜனை செய்துவா. மகாத்மா காந்தியடிகளை நீ உண்மையில் பக்தியுடன் போற்றுவதாயின் முதலில் அம்மகானுபாவரின் சாந்தத்தையும், த்யாகத்தை யும் கடைப்பிடித்துவா. எல்லாம் நல்லதற்கே, என்றபடி நன்மையாகவே முடியும். ஆததிரப்பட்டு நீ வெளிக்கிளம்பவேண்டும என்று பறந்தால் நீ மட்டுந்தான் போகவேண்டும். நான் என் பெற்றோரைவிட்டு வரமாட்டேன்'', என்று வாய்ப்பூட்டு சட்டத்தைப் போட்டுவிட்டாள்.

பாவம்! பதறித் துடித்து சிறகடித்துப் பறந்த ஆசைகள் பூராவும் படுசூர்ணமாகிவிட்டதால்,தன் முன்னறி தெய்வத்தை த்வேஷித்துக்கொண்டு தன் பெயரையும் கெடுத்துக்கொண்டு எதைச் செய்தால் என்ன உபயோகம்? இந்த ஜன்மம இப்படியே ஒழியட்டும்.—என கிற அதீத மான வெறுப்பும், வைராக்யமும், சகல ஆசைகளில் நிராசையும், உலக வாழ்வே கசந்துவிட்ட மனே நிலைமையும உண்டாகிவிட்டதால் தான் உணடு; தன் தனி வ்ருதி உண்டு என்ற நீண்ட மவுனத்துடன் புதிய வாழ்க்கையைத துடக்கிவிட்டாள்.

ஆனல், கைமட்டும் சும்மா இல்லை. தனக்கு பகவானகப் பார்த்து அளித்த ஓவியத் திறமையை வீணுக்காமல் புததகம புத்தகமாய்...தோன்றிய

உருவங்களை எல்லாம்... தோன்றிய காக்ஷிகளை எல்லாம்...கை சலிக்காமல் தீட்டுவதும், அதைக்கண்டு தனக்குத் தானே மகிழ்ந்துக் கண்ணீர் விடுவதுமாக ஆய்விட்டாள். இஷ்டமிருந்தால் சாப்பிடுவது, இல்லையேல் பேசாமலிருப்பது என்ற முடிவைத்தான் அனுசரித்து வந்தாள்.

பாட்டு, படிப்பு முதலிய சகலமும் நிறுத்தப்பட்டதால் வீட்டிலும் எவ்வித கலாட்டாவும் அதன் பிறகு நடக்க ஏதுவே உண்டாகவில்லை. ஆனல், வாழ்க்கையின் முக்கிய லக்ஷ்யமான விவாக விஷயத்தை சற்று அழுத்தமாகவே ஆரம்பிக்கத் தொடங்கினர்கள். கிட்டுவுக்கும் இவளுக்கும் ஆதியிலேயே போட்ட முடியை இன்று பகிரங்கமாகப் போட்டுவிட ஏற்பாடு செய்தார்கள். கண்ணீரும் கம்பலையுமாக இந்துமதியை மணையில் உட்காரச்செய்து நிச்சயதார்த்தம் என்கிற சடங்கையும் பந்து வர்க்கத்தினர் கூடி முடிக்கத் தீர்மானித்தார்கள். ஊமை எப்படிப் பேசாதோ அதே போலத்தான் இந்துமதி தன் வாழ்க்கையின் லக்ஷ்யம் பூராவையும் த்யாகம் செய்துவிட்டு வெறும் பொம்மைபோலாகிவிட்ட கண்ராவியைத் தாங்காது பானுமதியின் உள்ளம் துடித்தது.

இந்துமதியை அடக்கி அடக்கி வைத்ததெல்லாம் பானுமதியின் உள்ளத்தில் பெரும்போர் துவக்கிவிட்டது. தன் பெற்றேர் தன்னைப் பாழ்படுத்தியதைவிட மோசமான நிலைமையில்தான் தன் அருமை மகளை—அறிவு நிறைந்த கண்மணியை—பாழ்படுத்தும் விதி அமைந்துவிட்டதே என்கிற துக்கம் அடக்க முடியாது பெரும் பூகம்பம்போல் கிளம்பிவிட்டது. செய்கிற வழி ஒன்றும் தெரியாது பயித்தியம் பிடித்த நிலையில் அவள் விதியமைந்தது.

—○—

## 15

"ஏன்ன கடிதம்?...யாரிடமிருந்து வந்திருக்கிறது?" என்று காமாக்ஷியம்மாள் தன் கணவனைக் கேட்டாள். அவர் முகம் கருத்துச் சுண்டிபபோய்விட்டதுகண்டு மறுபடியும் திகிலுடன், "என்ன கடிதம்?"... என்று கேட்டாள்.

"கடிதமா! விபரீதமான கடிதம். உன் மருமகப்பிள்ளை காஷ்கீபர் சர்க்கார் பணத்தில் ஏராளமாகக் கையாடி தடபுடல் டம்பாச்சாரி வாழ்க்கை நடத்தி வந்தாரும். அந்த ரகஸ்யம் அம்பலமாகி அவனை உடனே கைது செய்திருக்கிருர்களாம். உன் மகள் இந்த விபரீதத்தைக் கேட்டு மூர்ச்சை போட்டு விட்டாளாம். பிறகு தெளிந்து எழுந்ததும் இக்கடிதத்தை எழுதி நேராக ஆள்மூலமனுப்பி இருக்கிருள். இந்த அவமானமும் ஆபத்தும் அவளுக்கு உயிர் போய்விடும்போலிருக்கிறதாம். உடனே மேற்கொண்டு பாவாமல் இதை இப்படியே அமுக்கிவிட 20 ஆயிரம் ரூபாயுடன் வரவேண்டுமாம். இதென்ன தலைவிதி? திடீரென்று 20 ஆயிரம் ரூபாயிக்கு எங்கு போவது? ரொக்கம் இருப்பதெல்லாம் கரைந்துவிட்டது. இனி வீடுகளோ, நகைகளோ விற்றுக்கொடுப்ப

தற்கும் அவகாசமில்லையே. அதோடு வீடுகள்மீதும் கடன் வாங்கித்தானே நமது கமலாவின் ருதுசாந்திக்கு ஏழாயிரம் ரூபாய் செலவாகிவிட்டதே! இப்போது என்ன செய்வது? ப்ராரப்தமாகவன்றோ மூடிந்துவிட்டது.''

என்று அவர் கலவரத்துடன் கூறும்போது ராஜசேகரன் அங்குவந்து விஷயத்தையறிந்ததும் தாய் தகப்பனரை வெகு ரகஸியமாக மாடியிலுள்ள தனியறைக்கு அழைத்துச் சென்று, ''அப்பா! நானும் எத்தனையோதரம் உங்களிடம் சொல்லவேண்டும் என்று எண்ணினேன். சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. இப்போதுள்ள நம்முடைய மிகவும் நெருக்கடியான சமயத்தில் நாமும் மௌனமாக நடந்துகொண்டு, நம் மருமகப்பிள்ளையையும் காப்பாற்றவேண்டும். கையிலோ காசில்லை. ஆனால் ஒரே மூச்சில் எடுத்த அடியில் 50 ஆயிரம் ரூபாயை நான் உங்கள் கையில் ரொக்கமாக வைக்கும் ஏற்பாட்டைச் செய்கிறேன்.

தகப்பனர் இடைமறுத்து......''ஆ......ஆ!...என்ன...50 ஆயிரம் ரொக்கமா? ஏதாவது குதிரைப் பந்தயம்...லாட்ரி...லக்கிச் சீட்டு...

மகன் குறுக்கிட்டு...''இல்லையப்பா! நீங்கள் நினைக்கிறபடி அப்படி எல்லாம் எதுவும் இல்லை. என்னுடைய நண்பர் ஒருவர் மகா விவேகி; வெகு உத்தமர். கோடீச்வரர் என்றால் மிகையாகாது. அவர் சிறந்த அறிவாளி. கலாரஸிகர். அவர் 5 லக்ஷம் ரூபாய் மூலதனம் வைத்து ஒரு சிறந்த சினிமாப்படம் தயாரிக்கப் போகிறாராம். தற்காலம் வெளிவரும் உதவாக்கரைப் படங்களைக் கண்டு அவர் வெறுப்பும் கோபமும் கொண்டு மக்களின் வாழ்க்கை லக்ஷ்யத்திற்கு மிகவும் உபயோககரமாக அபூர்வச்சித்திரம் ஒன்று தயாரிக்கப் போகிறாராம்... அதில் ப்ரதான பாகமேந்தி நடிப்பதற்கு நமது இந்துமதியை அவர் கேட்கிறார். அவளுடைய முகவெட்டின் அழகிற்கும், சங்கீதத்தின் அபூர்வ சக்திக்கும் 50 ஆயிரம் ரூபாயை முதல் படத்திற்கே தருவதாக என்னிடம் கூறி என்னை வற்புறுத்துகிறார்...

கிழவர்:—என்ன!...சினிமாவில் நடிப்பதற்கா!...

கிழவி:—இந்துமதியா சினிமாவில் சேரவேண்டும்?......ஏண்டா சேகர்!...நமக்கு சினிமாவும் ட்ராமாவும் அடுக்குமாடா...

சேகர்:—என்னம்மா கர்நாடகமாய்ப் பேசுகிறாய்? அப்பழுக்கற்ற அரிய பெரிய மனிதர்கள் சேர்ந்து ஏற்படுத்தும் சினிமாக் கம்பெனியம்மா அது...அதோடு இந்துமதிக்காகவே கதையை ஸ்பெஷலாக எழுதியிருக்கிறார். இந்துமதியின் சித்திரக்கலையின் முக்யத்தையே ஆதாரமாகவைத்து எழுதியிருப்பதால் கலைக்குள் கலை தாண்டவமாடும் படம்...இந்து எவனுடனும் கூடி நடிக்கவேண்டாம். அவள் யாருக்கும் மனைவியாக நடிக்க வேண்டாம். ஒரு த்யாகச்சுடரின் வாழ்க்கைச் சித்திரமாக இந்த படம் தயாராகி சர்வ தேசத்திற்கும் முதன்மையான படமாக விளங்கப்போகிறது. ஆகையால் எத்தகைய தோஷமும் கிடையாதம்மா!......மேலும், நாம் என்னமோ கிட்டுவுக்கு அவளை விவாகம் செய்விக்கப் போகிறோம். எந்த விதத்திலும் இதில் தீங்கே இல்லை. பிறத்தியான் மணப்பதாயின் என்னவாவது சொல்வானே என்று யோசிக்கவேண்டும். நாமே அவள் மணத்திற்கு பொறுப்பாளியாயிருக்கையில் எதற்காகப்பா பயப்படவேண்டும்?

50000 ரூபாய் என்றால் சாமான்யமான தொகையா? அதுவும் அனாயாசமாகக் கிடைப்பதை விடுவார்களா?... அதிலும் அவளுடைய கலையின் வளர்ச்சிக்கே மூலாதாரம் கொடுத்து எடுக்கப்படும் படத்தினால் அவள் உலக ப்ரஸித்தியாகவன்றோ ஆய்விடுவாள். அதன் பிறகு நீங்கள் ஏராளமான பணத்தைப் பெறலாமே......என்று சரியானபடி சமயத்தைப் பார்த்து வெகு வெகு ஆழமாகவும் ஆசையைக் கிளறும்படியாயும் தூபத்தைப் போட்டுவிட்டான்.

இங்கு நடக்கும் எந்த விஷயமும் இந்துமதிக்கோ, பானுமதிக்கோ தெரியாது. கிழவரின் நாக்கில் ஜலம் சொட்ட வாரம்பித்துவிட்டது. கிழவி முதலில் சற்று தியங்கினாள். எனினும் தன் மருமகப்பிள்ளையைக் கைது செய்திருக்கும் மகத்தான அதிர்ச்சியிலிருந்து மீட்பதற்கான வேறு வழியே இல்லாததால் அவள் இசைந்துவிட்டாள். இனி கேட்கவா வேண்டும்?

தகப்பனார்:—சேகர்!...இந்த சமயம் இதைவிட வேறு மார்க்கம் கிடைக்காததால் இதை உடனே செய்துவிட ஒப்புக்கொள்கிறேன். உடனடியாகப் பணம் கட்டுவார்களா! ஏதாவது தகராறில் நடக்குமோ!... 20 ஆயிரம் ரூபாய் இப்போது மருமகப்பிள்ளைக்குக் கட்டி இந்த பேராபத்திலிருந்து அவனை மீட்கவேண்டும். ஆகையால் இன்றே இப்போதே உடனே ஏற்பாடு செய்துவிடு. ஆனால் முதலில் இந்த விஷயத்தை வெளியிடாதே. பானு, இந்து இருவருக்கும் தெரியவேண்டாம். முதலில் 20 ஆயிரம் அட்வான்ஸாகக் கொடுத்து புக் பண்ணிவிடு; அதைக்கொண்டு நான் அந்த பேராபத்தைத் தவிர்க்க ஏற்பாடு செய்கிறேன். ஆகையால் உடனே செய்...என்றார்.

ராஜசேகரின் கொண்டாட்டம் கூறிமுடியாது. பழம் நழுவிப் பாலில் விழுந்து, அதுவும் நழுவி வாயில் விழுந்ததுபோல் ஆகிவிட்டதால் வெகு குஷியுடன்..."சரிப்பா...நான் இப்போதே போய் அவர்களைப் பணத்துடன் அழைத்துவருகிறேன். இந்துவை நன்றாகவும், நாசுக்காகவும் அலங்காரம் செய்துகொண்டிருக்கச் சொல்லுங்கள்" என்றுகூறித் தானும் வெகு வெகு ஷோக்காக உடை யணிந்துகொண்டு வெளியே போனான்.

கிழவருக்கும் கிழவிக்கும் தம் பெண்ணுக்கும் மருமகப்பிள்ளைக்கும் நேர்ந்த கஷ்டம் நீங்குவதற்கான மார்க்கத்தை பகவான் இன்றே, இப்போதே காட்டிவிட்டதை எண்ணி அபாரமான சந்தோஷம் உண்டாகியது.

—o—

## 16

ஒருநாளும் இல்லாமல் திருநாளைப்போல் காமாக்ஷியம்மாளே எண்ணெயும் சீப்பும் எடுத்து வைத்துக்கொண்டு "அம்மா...இந்துமதி! இங்கு வாடி என் கண்ணே...தலையைப் பின்னுகிறேன்...நீ எழுதிய சித்திரத்தின் மகிமையை நாங்கள்தான சரியானபடி அறிந்து அனுபவிக்கவில்லையேயன்றி, நீ ஓவியப்பரிசு வாங்கிய புகழ் உலகமே கொண்டாடு

கிறதாம். உன் தாதாவும், மாமாவும் பூரித்து புலகிதமடைகிறார்கள் இத்தனை அருமையான உயிர் ஓவியத்தை வரைந்த குழந்தையை நேரில் பார்க்கவேண்டும், என்ற பேராவலுடன் இன்று யாரோ வரப்போகிறார்களாம். [illegible]ம்மா...தலை பின்னிக்கொண்டு சற்று அழகாக உடையணிந்துகொ[illegible] என்று [illegible], பாகோ, திகட்டாகக் கனியோ என்று ப்ரமிக்[illegible]கூறினாள்.

இந்த அதி விச[illegible] வார்த்தையைக் கேட்டு இந்துமதி மயங்கிவிடவில்லை. இந்த வலைவீச்சு எதற்காக...ஒருகால் அம்மாவுடன் நானும் ஏதாவது கையெழுத்துப் போடும் கட்டம் இருக்கிறதோ என்னவோ! அதற்றாகத்தான் இந்த பரிவும் கனிபமும் நிறைந்த உபசாரமாகவிருக்குமோ ...அல்லது...விவாகத்திற்காக எவராவது பார்க்கவரும் வேட்டையாக இருக்குமோ...என்னைப் பார்க்க யார் வரவேண்டும்?...என்று பலமான யோசனை செய்தாளேயன்றி, பாட்டி கூப்பிட்டவுடனே எழுந்து ஓடிவந்துவிடவில்லை.

இதேபோல் பானுமதிக்கும் வியப்பும் பலமான யோசனையும் தோன்றின... ஆனல் வாய் திறக்கவில்லை. இந்துமதி பதிலும் பேசாது எழுந்தும் வராதிருந்ததால் காமாக்ஷியம்மாளே எழுந்து இந்துமதியிருப்பிடம் சென்று "ஏண்டி கண்ணு! நான் கூப்பிடுவது காது கேட்கவில்லையா! ஏனம்மா படுத்திருக்கிறே? என் ராஜாத்தி! எழுந்துவாம்மா. மணியாகிவிட்டது" என்றாள்.

இந்து:—நீ சொல்வது எனக்கு எதுவுமே புரியவில்லையே! என்னை எதற்காக, யார் பார்க்கவேண்டும்? அதற்காக நான் எதற்கு அலங்காரம் செய்துகொள்ளவேண்டும்? என்னுடைய ஓவியப் பரிசு இதோ இருக்கிறது. இதைக் காட்டியனுப்பிவிடுங்கள். என்னைப் பார்க்கவேண்டிய அவச்யமில்லை.

இந்த வார்த்தை காமாட்சியம்மாளை திடுக்கிடச் செய்தது. ஏதோ தன்னைக் கட்டிப் போட்டதுபோல் வைத்திருப்பதால் அதிலிருந்து விடுதலையாவதைப் பெருமையுடன் விரும்பி எழுந்து ஓடிவருவாள் என்றுதான் அவள் நினைத்திருந்தாள். அதற்கு நேர்மாருகக் கன்னத்திலறைவதுபோல் சொல்லியதும் மிக்க அதிர்ச்சியுடன் சில விநாடிகள் சிலைபோல் நின்றாள். பிறகு சமாளித்துக்கொண்டு..."கண்ணு! இதோ பாரு! உன்னுடைய புகழ் நீறுபூத்த நெருப்புப்போல் இருந்ததை உன் மாமாதான் நீறை விலக்கி ப்ரகாசமாகச் செயதுவிட்டான். இப்போதுதான் உன் தாதாவுக்கு உன்னுடைய அதியற்புதமான சக்தியும் மேப்பாடும் தெரிந்துவிட்டதால் மறுபடியும் உன்னை அவர் புகழ் ஏணியில் ஏற்றிக் களிக்கத் தாமே முன்வந்திருப்பதால்தான் நான் கூப்பிடுகிறன். எழுந்திரம்மா... இந்துமதி"...என்று அன்பும் ஆசையுந் ததும்பக் கூப்பிட்டாள்.

இந்து:—(ஒரு விதமான அலக்ஷ்ய பாவத்துடனும், சோகத்தின் ரேகை ப்ரகாசிக்கவும் சிரித்தவாறு)...பாட்டீ! வருகிறது யாராகவிருப்பினும் சரி, என் ஓவியத்தின் அழகைப் பார்க்க வருகிறார்களேயன்றி என் அழகைப்பார்க்க ஒருவரும் வரவேண்டாம். என்னைப் படைத்த ஆண்

109179

டவன் என் அழகைப் பார்த்தால் போதும். நான் வரமுடியாது...என்று அழுத்தமான குரலில் சொல்லும்போது ராஜசேகரன் "அம்மா, அம்மா!" ...என்று வெகு தடபுடலாகக் கூப்பிட்டுக்கொண்டே வந்தான்.

காமாக்ஷியம்மாள் கையை அசைந்துகொண்டே வந்து "என்னடாப்பா?" என்றாள். "அதோ அவர்கள் வந்துவிட்டார்கள். இந்துவைக் கூப்பிடு" என்றான்......

காமா:—இந்து ஒரே பிடிவாதமாய், தான் வரமாட்டாளாம். தன்னை யாரும் பார்க்கவேண்டாமாம். ஏதேதோ சொல்கிறாளே, என்னடா செய்வது!...

சேகர்:—சரிதான். நீ போ! நான் கூப்பிட்டுவருகிறேன்—என்று கூறிவிட்டு முன்கட்டு ஹாலுக்கு வந்தான். அங்கு வந்தவர்கள் வெகு தடபுடலாக நாற்காலிகளில் உட்கார்ந்திருந்தார்கள். கிழவரும் உட்கார்ந்திருந்தார். ஜெபியிலுள்ள நோட்டுக்களின் கத்தை வெளியில் தெரிவதைக் கழுகுக் கண்களுடன் பார்க்கும் கிழவரும் காமாக்ஷியும் உள்ளம் பூரித்தார்கள்...கிழவர் வந்தவர்களை தடபுடலாக உபசார வார்த்தைகளால் அர்ச்சனை செய்துப் பின் "அம்மா இந்துமதி! இந்துமதி! உன் ஓவியப் பரிசை இப்படிக் கொண்டுவாம்மா" என்றார்.

பானுமதியின் ஆக்கினை என்னவென்றால், தாதா பாட்டிக்கு எதிர்த்துப் பேசக்கூடாது என்பது. அதேபோல் தாதா கூப்பிட்ட உடனே எத்தகைய விவரமும் புரியாத...ஒரு விஷயமுமே தெரியாத பானுமதி ஓடி வந்தாள். ஒரு வேளை தன் கண்மணியை காக்காய் வலிப்பு கிட்டுவுக்குத் தள்ளிக் கொலை செய்யும் எண்ணம் யார் செய்த புண்ணியத்தினாலோ மாறிப்போய், நல்ல வரனைத் தேடி மணம் செய்விக்கப் போகிறார்கள் போலிருக்கிறது. அதனால்தான் யாரோ பார்க்க வந்திருக்கிறார்கள். எப்படியாவது இந்த காக்காய் வலியைவிட்டு வெளியில் போனால்போதும்.—என்று எண்ணியவளாய் இந்துமதியின் தலையைக் கோதிவிட்டுத் தங்கப் பதக்கத்தைக் கொடுத்துத் தானே இந்துவைத் தூண்டிவிட்டு..."கண்ணா! இச்சமயம் தடை செய்யாதே. என்னவிருந்தாலும் உன் தாதா பாட்டி உனக்கு நன்மைகளையே செய்வார்களேயன்றி தீமையை மனந்துணிந்து செய்யமாட்டார்கள். அத்தனை விரோதிகளல்ல. உன் கல்யாண விஷயமாகத்தான் இப்போது ஏதோ நடப்பதாக எனக்குத் தோன்றுவதால் நீ போய்வாம்மா!" என்று கெஞ்சியவாறு சொன்னாள்.

இதற்குள் தாதா பத்து தடவைகள் கூப்பிட்டுவிட்டதால் மெல்ல வேண்டா வெறுப்பாகவும் கவலையும் கடுகடுப்பும் நிறைந்த முகத்துடனும் இந்துமதி தினப்படியான சர்வ சாதாரண அலங்காரத்துடன் வந்து, தங்கப் பதக்கத்தை தாதாவிடம் கொடுத்துவிட்டுத் தான்மட்டும் தனியாக ஒதுங்கி நின்றாள். வந்தவர்களை ஒரு முறை பார்த்தாள். அவள் மனதில் அருவருப்பும் ஒருவிதமான அசங்கிய பாவமும் தோன்றியதால் அவர்களுக்கு நமஸ்காரம்கூடச் செய்யாமல் எங்கேயோ பார்த்துக்கொண்டு நின்றாள்.

கிழவியும் வாசற்படி யருகிலேயே நின்று ப்ரமாதமாகச் சிரித்துக் கொண்டேயிருந்தாள். இந்துவைப் பார்த்தவுடனே வந்தவர்கள் தம்மை

மறந்து ஏதேதோ புகழுவாரம்பித்துவிட்டதைக் கேட்கப்பிரியமற்ற இந்துமதி தடதடவென்று உள்ளே போய்விட்டாள். அங்கு நின்ற சொல்ப நேரத்திலும்—அவர்கள் என்ன பேசிக்கொண்டார்கள், இவர்கள் யாரு, எதற்கு வந்தார்கள், என்பவைகள் ஒன்றுமே புரியாதபடி பேசிக்கொண்டார்களேயன்றி விவரம் எதுவுமே புரியவில்லை. எனினும் விவாகத்திற்காக வந்தவர்கள் என்று அவளால் நம்பமுடியவில்லை.

அதே சமயம் 25 ஆயிரம் ரூபாய் நோட்டுக்களை கிழவர் எண்ணி வாங்கிக்கொண்டு அவர்களுடைய பாரத்தில் கிழவரும் மகனும் கையெழுத்துப் போட்டார்கள். வந்தவர்கள் தடபுடலாகப் பேசி எக்காளமிட்டு ஆர்ப்பரித்தார்கள். இதற்குள் சுடச்சுட டிப்பனும் காப்பியும் ஹோட்டலிலிருந்து வரவழைக்கப்பட்டு எல்லோருக்கும் கொடுத்தார்கள். வெகு அட்டகாஸமும் ஆரவாரமும் செய்தபடியே அவைகளைச் சாப்பிட்டவாறு அவர்களில் ஒருவன் "ஏன் சார்! இந்துமதியையும் கூட சாப்பிடக் கூப்பிடுங்கள்...இந்துமதி! இந்துமதி!...வாம்மா! ஜாலியாய் சாப்பிடலாம்... என்று மிக்க தைரியத்துடன் கூப்பிட்டான்.

அநாகரீகமும் அதிகப்ரஸங்கித்தனமுமான இவ்வார்த்தைகளைக் கேட்ட இந்துமதியின் உள்ளத்தில் சுருக்கென்றது முன்பின் னறியாதவர்கள் ஏன் இப்படி என்னை அழைக்கவேண்டும்...இதென்ன விகாரம் என்று எண்ணி பதிலே பேசாது கடுகடுத்த முகத்துடன் வீற்றிருந்தாள். ஒரே குழப்பத்திலாழ்ந்த பானுமதியும் விவரம் புரியாது திகைத்து இந்துவையே பார்த்தவாறு நின்றாள். அங்கு நடக்கும் கும்மாளத்தின் ஓசைமட்டும் இங்கு கேட்டு இவர்களின் கலவரத்தைப் பின்னும் கிளறியது.

——O——

## 17

புலிக்கூண்டில் அகப்பட்ட புலிகள் உறுமியவாறு அங்குமிங்கும் உலவுவதுபோல் ஏகாம்பரமும் அம்புஜமும் ஒன்றுமே தோன்றாமல் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தவாறு கதிகலங்கிப்போய் கதவை இடிப்பதும் வேலைக்காரர்களைக் கூப்பிடுவதுமாக எது செய்தும் ஒருபலனும் காணாது தத்தளித்தார்கள்.

சிரிப்பின் ஒலி அடிக்கடி கேட்டதால் பின்னும் அதிர்ச்சியை அடைந்த அம்புஜம் இந்த கூண்டைவிட்டு எப்படி வெளியேறுவது? இவ்விடமோ வாசலையடுத்ததும் இல்லை. அந்தரங்கமாகப் பேசுவதற்காக வீட்டின் மத்தியில் மறைவிடமாக உள்ள இடமாகையால் இந்த இடத்தில் அதிகமாக எந்த வேலைக்காரர்களும் சதா இருப்பதில்லை ராம்ஸிங் ஒருவன் தானிருப்பது வழக்கம். அவனை எத்தனைமுறைகள் கூப்பிட்டும் பதிலே இல்லை.

அசகாயசூர தைரியம் நிறைந்த அம்புஜம் அவ்வறையை முற்றிலும் ஒருமுறை சுற்றிப் பார்த்தாள். எத்தகைய ஆயுதமும் காணவில்லை. எந்த எதிரி இப்படி தம் வீட்டிற்குள்ளேயே வந்து இத்தகைய விபரீத காரியத்

தைச் செய்திருக்கக்கூடும்... என்கிற மகத்தான குழப்பத்துடன் கதவைத் தன்னால் முடிந்தவரையில் இடித்துப்பார்த்தாள்.

வெகு கெட்டியான கதவாகையால் அசையவுமில்லை. மேலே அண்ணாந்து பார்த்தாள். மங்களூர் ஓடுகளினால் மூடப்பட்ட இடமாகையால் சடக்கென்று ஒரு யோசனை தோன்றியது- மேஜைமீது நாற்காலியை இழுத்துப்போட்டு அதன்மீது மற்றொரு நாற்காலியைப்போட்டுக் கொண்டு வெகு தைரியமாக ஏறி, கைபிலகப்பட்ட ரூல்கட்டையினால் ஓடுகளை குத்தித் தள்ளி உடைத்து வழியை உண்டாக்கிக்கொண்டாள். இந்த அதி துணிச்சலான காரியத்தைக்கண்டு ப்ரமித்த ஏகாம்பரம் நாற்காலிகளைப் பிடித்துக்கொண்டு உதவி செய்தார்.

வெகு துணிச்சலுடன் மேல்வலிச்சல் த்ராவிகளைப் பிடித்துக்கொண்டு அந்த ஓடு இருந்த இடைவெளியினால் தொத்திப்பாய்ந்து மேலே ஏறிவிட்டாள். உடம்பில் பல இடங்களில் சிராய்த்துக் காயமும் பட்டது..."இன்ஸ்பெக்டர்வாள், நான் இறங்கிவந்து கதவைத் திறக்கிறேன். நீர் வரலாம்" என்று கூறிவிட்டு ஓட்டுக்களைத்தாண்டி மொட்டைமாடியை அடைந்து அதன் படிகளின் வழியாகக் கீழே வந்தாள். புறக்கடைக் கதவு திறந்து கிடந்தது. தங்கள் வேலையாட்கள் யாருமே காணவில்லை. சாமான்கள் தாறுமாறாக இறைந்து கிடந்தன. தைரியத்தை இழக்காமல் உள்ளே சென்றாள். அங்கு சமயல்கட்டில் தடதடவென்று ஓசை கேட்டது. பூனைபோல் எட்டிப் பார்த்தாள்.

நாலைந்துபேர்கள் — ஆண்களும் பெண்களுமாகக் கூடி உள்ளே இருக்கிற தின்பண்டங்களை எல்லாம் எடுத்து நடு உள்ளே வைத்துப் பரப்பியவாறு தின்பதும் இரைப்பதும் சிரிப்பதும் கும்மாளமடிப்பதுமான காக்ஷி இவளைத் திடுக்கிடச் செய்தது. ஓசை செய்யாமல் அறைக்கதவைச் சாத்தி வெளித் தாழ்ப்பாளிட்டுக்கொண்டு கூடத்துப்பக்கம் வந்தாள்.

என்னே கண்ட காக்ஷி!...நாயுடுவின் உடைகளை அணிந்துகொண்ட இரண்டு மூன்றுபேர்கள் அங்குள்ள சோபாக்களில் தாறுமாறாக உட்கார்ந்து குதித்துக் குதித்து ஆடியவாறு கப கபவென்று சிரித்து மகிழ்கிறார்கள். "இவர்கள் யார்...இந்த இடத்தை எப்படித் தாண்டுவது? இது ஏதோ விசித்திர மர்மமாக இருக்கிறதே!" என்ற கலவரத்துடன் சற்று ஒதுங்கி நின்றாள். ஒன்றுமே தோன்றவில்லை. தான் பகிரங்கமாக எதிரில் வந்தால் என்ன நடக்குமோ என்ற பயத்துடன் மறுபடியும் வேறுவழியாகத் தங்களைப் பூட்டியிருந்த அறைக்கு முன்பு வந்தாள். கதவு பூட்டியிருந்தது. எந்த சாவியைக்கொண்டு எப்படித் திறப்பது என்பதையறியாது ஜன்னல் பக்கம் வந்து ஏகாம்பரத்தை சமிக்ஞையினால்... "மேலே ஏறி என்னைப்போலவே வாருங்கள். வீட்டில் யார்யாரோ இருக்கிறார்கள்." என்று ரகஸியமாகக் கூறிப் பின் மறுபடி ஒரு தனியறையில் சென்று பதுங்கினாள்.

ஏகாம்பரம் வெகு ப்ரயாசையுடன் ஏறி இறங்கிவந்தார். அம்புஜம் இவரைத் தனி இடத்தில் சந்தித்து உள்ளே இருக்கும் அலங்கோலங்களைக்

கூறியதோடு தங்கள் ஆட்களைக் காணததால் இவர்கள் எதிரிகளின் கூட்டமாகத்தான் இருக்கவேண்டும், என்று தோன்றுவதால் நீங்கள் தோட்டத்துப் பின்புறத்து வழியாகச் சென்று அருகிலுள்ள இடத்திலிருந்து போலீஸ்ஸ்டேஷனுக்கு டெலிபோன்செய்து உடனே ஆட்களை வரவழையுங்கள். அதுவரையில் நான் தைரியமாகப் பார்த்துக்கொள்கிறேன்." என்று அனுப்பினுள்.

ஏகாம்பரம் போலீஸ் உடையை மாற்றிக் கொண்டு வெறும் உடையில் வெளியில் சென்றூர். அம்புஜத்திற்கு இவர்கள் சிரிப்பதும் கும்மாளமடிப்பதும் குதிப்பதும் ஒன்றுமே புரியவில்லை. நடுநடுவே பெரியதாக விசிலடித்துப் பெரிய குரல் எடுத்தே பாடுகிறூர்கள். விவரம் புரியாது திகைத்து நிற்கையில் ஏகாம்பரம் திரும்பி வந்தார்.

இருவரும் தைரியமாக அவர்கள் எதிரில் வந்து நின்று கையிலுள்ள தமது துப்பாக்கியைக் காட்டி "டேய்...டேய்! சோதாக் கூட்டங்களே..... யாரடா நீங்கள்?' என்று அதட்டிய ஏகாம்பரத்தைக் கண்டதும் கூடத்தில் அட்டகாஸம் செய்தவர்கள் அலறியடித்துக்கொண்டு எழுந்து தங்களையே தாங்கள் ஒருவரையொருவர் கட்டிப் பிடித்துக்கொண்டு 'ஓ!' வென்று பெரிய அலறலுடன் கூச்சலிட்டு அழக்கிளம்பிவிட்டார்கள்.

இதைக்கண்டு ஒன்றுமே தோன்றூது ப்ரமித்துப்போன அம்புஜம்... சமையல்கட்டில் இருந்தவர்களையும் கதவைத் திறந்துகொண்டு நேரில் சென்று பார்த்தாள். இவர்களைக் கண்டதும் அவர்கள் இன்னது செய்கிறோம் என்பதை யறியாது குதித்துக் கூத்தாடிப் பாடி, அழுது சிரித்து எதிர்பாராதவிதம் ஓடிவந்து அம்புஜத்தையும் ஏகாம்பரத்தையுமே கட்டிக் கொண்டு கடிக்க வாரம்பித்ததைக் கண்டதும் "இதென்ன நாடகம்!"... என்று பதறியவாறு அவர்களைப் பிடித்துத்தள்ளி நிற்கச்செய்து முழித்துப் பார்த்தார்கள்.

இதற்குள் போலீஸார் லாரியில் வந்து சேர்ந்தார்கள். உள்ளே வந்த உடனே அவர்கள் ஆச்சரியத்திஞல் திகைத்துப்போய் 'சார்!...பேஷான தமாஷ்நாடகமல்லவா நடந்திருக்கிறது! அட க்ரகசாரமே! பயித்தியக்கார ஆஸ்பத்திரியிலிருந்து 7, 8 பேர்களை திடீரென்று காணவில்லை. எப்படிப் போனூர்கள், எங்கு போனூர்கள், யார் அழைத்துச் சென்றூர்கள் என்பது ஒன்றுமே புரியாமல் அதிகாலையில்தான் ஸ்டேஷனுக்குப் போன் செய்துத் தேடும்படி தெரிவித்தார்கள்.

போலீஸ் அதிகாரியின் உத்தரவின் பேரில் பலபேர்கள் அந்தப் பயித்தியங்களைத் தேடிக்கொண்டு போயிருக்கிறூர்கள். அதே பேர்வழிகள் இதோ காக்ஷியளிக்கிறூர்களே, இதென்ன வேடிக்கை?" என்று ஒரு சப் இன்ஸ்பெக்ட்டர் கூறியதைக் கேட்டதும் ஏகாம்பரமும், அம்புஜமும் ஒருவரையொருவர் அசடுவழியப் பார்த்துக்கொண்டு கட கடவென்று சிரித்தார்கள். அதே சமயம் அந்தப் பயித்தியக்காரர்களும் வீடே அதிர்ந்து விடும்படிப் பெரிய கூச்சலிட்டுச் சிரித்தார்கள். அந்த ஓசையின் எதிரொலி அந்த கட்டடத்தைச் சூழ்ந்துகொண்டு கும்மென்று ஓசை உண்டாக்கியது.

வெறுப்புடன் உட்கார்ந்திருந்த இந்துமதியை அவள் மாமனும் பல குரல்கள் கூப்பிட்டான். ஒன்றுக்கும் பதிலளிக்கவில்லை. இதற்குள் பாட்டியம்மாள் தானாகப் பேசத் துடங்கி "குழந்தையொன்னே! இம்மாதிரி வெளிப் பழக்கம் எதுவுமே கிடையாது. வீடுண்டு, அவளுண்டு என்ற நிலைமையில் வளர்ந்துவிட்டாள். இன்னும் இரண்டொரு நாள் பழகினால் பிறகு பாருங்கள். எப்படி நடப்பாள் என்பதை நான் சொல்லவே வேண்டாம்"... என்றாள்.

வந்திருப்பவர்களில் ஒருவன் பெரிய த்வனியில் "ஆமாமாம். முதல் நாளே சில பெண்கள் பழகமாட்டார்கள். சிலர் தான் பார்த்தவுடனே பழகிவிடுகிறார்கள். நம்ம கம்பெனிக்கு வந்து அங்கு நடக்கும் ஷூட்டிங்கை ஒரு நாள் பார்த்தாலே போதும். உடனே பரிபக்குவமாகிவிடுவாள். இவளைப்போல் முதலில் வெட்கப்பட்ட பல பெண்மணிகள், இன்று முதல் ஸ்தானத்தை வகிக்கும் சினிமாராணிகளாய் ப்ரகாசிக்கிறார்கள். அவர்களையெல்லாம் இந்துமதியின் ஒரு கண் பார்வையே தோற்கடித்து விடாதா? நாளைக் காலை 10 மணிக்கு காரை அனுப்புகிறேன்...ஏன்?... நானே வருகிறேன். நீங்களும் இந்துமதியை அழைத்துக்கொண்டு வாருங்கள். சினிமா என்றால் என்ன, எப்படி படம் பிடிக்கிறார்கள், என்ன புதுமையாயிருக்கிறது என்பதை எல்லாம் பார்க்கலாம். இப்போது நவீன ஸீதா என்கிற படம் நடக்கிறது. அதனழகை ஒரு சீனில் பார்த்தாலே போதும். என்ன பாட்டியம்மா! அவச்யம் வாருங்கள். பெரிய கார் கொண்டுவருகிறேன்."

என்று கூறிய வார்த்தைகள் பாட்டியம்மாளின் இதயத்தில் அமுதம் பாய்ந்ததுபோன்ற சந்தோஷம் உண்டாக்கி வாய்மிளந்தே போய்விட்டது. கிழவியின் வேஷத்தில் தன்னை நடிக்கச் செய்தால்கூட நன்றாக நடிப்பாள் என்கிற பெரிய அபிப்ராயத்தை, வந்த மகா கனவான்களுக்கு உண்டாக்கும்படி நடந்துவிட்டாள். வந்தவர்கள் விடைபெற்றுச் சென்றதும் கிழவி, கிழவர், மகன் மூவரும் தனி இடத்தில் குசமசவென்று பேசிக்கொண்டார்களேயன்றி பகிரங்கமாக எதுவும் பேசவில்லை.

தாயும், தகப்பனும் ராஜசேகரனை இந்திரன், சந்திரன், குபேரன் என்றென்றெல்லாம் தோத்திரம் செய்து அகமகிழ்வதைத்தான் செய்தார்கள். ராஜசேகரின் சகல காரியங்களும் பரிபூர்ணமாக நிறைவேறி விட்டதைக் கண்டு அபரிமிதமான சந்தோஷத்தையடைந்து தான் புதிதாக நிர்மாணிக்கப்போகும் ஓவிய மந்திரத்தின் பெருமையை ஒரு அத்யாயம் பேசி பெற்றோர்களின் களிப்பிற்குப் பாத்திரமாகிவிட்டான்.

இந்துமதிக்கும் பானுமதிக்கும் விஷயம் இன்னதென்றே புரியாததால் ஒரே குழப்பமும் கலவரமும் இவர்கள் யாராகவிருக்கும், பெண்ணை விவாகத்திற்காகப் பார்க்க வருகிறவர்களானால் விவாகத்தைப் பற்றி ஒரு வார்த்தைகூட பேசியிருக்கமாட்டார்களா? அதோடு விவாகத்திற்காகப் பார்க்க வருகிறவர்கள் ஒரு மங்களகரமான தாம்பூலமும் புஷ்பமும் இல்லாமல் வருவார்களா! இதில் ஒன்றுமே தெரியவில்லையே. இவர்களுடன்

பேசியவர்களும் நமக்கு விவரம் சொல்லாது ஏன் இப்படி கூடிக் கூடிப் பேசி மவுனம் சாதிக்கவேண்டும்?...என்கிற பற்பல யோசனைகள் இவர்களுக்கு உண்டாகி அலைமோதுகிறது. தாயும் மகளும் ஒருவரையொரு பார்த்துக்கொண்டு விழிக்கிறார்களேயன்றி எதுவும் புரியவில்லை. ஆனால் இந்துமதிக்குமட்டும் தன் தாயின்மீது கடுங்கோபம் உண்டாகிவிட்டது.

பல்லைக் கடித்துக்கொண்டு "நீ தொந்தரவு செய்ததினால்தான் நான் போனேன். இல்லையேல் கட்டாயம் போயே இருக்கமாட்டேன். நீ வைத்துள்ள மரியாதையும் ப்ரியமும் உன்னிடம் உன் பெற்றோர்கள் வைத்திருக்கிறார்களா! இதை ஏனம்மா நீ அறியவில்லை? இன்று நடந்த நாடகம் எனக்கு ஏதோ விபரீதமாகத்தான் தோன்றுகிறதேயன்றி சாதாரணமாகத் தோன்றவில்லை. வந்தவர்கள் யாரு, என்ன...என்பதைப்பற்றி ஏதாவது ஒரு கடுகளவு விஷயமாவது உன் பெற்றோர்களோ உன் தம்பியோ உன்னிடம் சொன்னார்களா?...என்று கண்களில் கோபக்கனல் ஜ்வலிக்கக் கேட்டான்.

பாவம்! பயந்து பயந்து காலத்தைக் கைதியைப்போல் கழிக்கும் மகா சாதுவான பானுமதிக்கு என்ன பதில் சொல்வதென்றே தெரியவில்லை. கண்ணீரை ஆறுய்ப் பெருக்கியவாறு "கண்ணா! உன்னைவிட நான் வயதில் பெரிய குட்டிச்சுவராக இருப்பினும் அறிவில் அதபாதாளத்திலிருக்கிறேன். என் பாழும் பிறவியில் நான் கண்டது அடிமையிலும் அடிமையாகிப் பயந்து நடுநடுங்கிச் சாகும் உணர்ச்சியைத் தவிர வேறு இல்லை. உன்னுடைய க்ஷேமத்தை உத்தேசித்து நான் எத்தகைய கஷ்டங்களையும் அனுபவித்து வருகிறேன். எப்படியாவது விமோசனம் ஏற்பட்டால் போதும் என்பதுதான் என் கோரிக்கை. இன்று நடந்த சம்பவத்தின் மர்மம் எனக்கும் தெரியவில்லை; இருப்பினும் நீ சற்று பொறுமையை இழக்காதிரு. அவர்களே என்ன தெரிவிக்கிறார்கள் பார்க்கலாம்," என்று சமாதானம் செய்தாள்,

அன்று இரவு வண்டிக்கே பானுவின் தகப்பனார் மருமகப்பிள்ளையின் பேராபத்தை நீக்கும்பொருட்டு பணத்தை மூட்டை கட்டிக்கொண்டு போய்விட்டார். அப்போதுகூட உண்மையை ஒளித்து ஏதோ விசேஷம் என்று மட்டும் கூறிவிட்டுச் சென்றார். இரவு தாயார்கூட எத்தகைய விஷயத்தையும் கூறவில்லை. ஆனால் ராஜசேகரன் மனைவியின் கழுத்தில் புத்தம் புதிய வைர அட்டிகை திடீரென்று மிகப் பளபளப்பாய் ப்ரகாசித்ததிலிருந்து பானுமதிக்கு வியப்பாகவே இருந்தது.

மறுதினம் காலை 10 மணிக்கு முன்பே கிழவியும் ராஜசேகரனின் மனைவி ராஜாம்பாள் இருவரும் அலங்காரம் செய்துகொண்டு சாப்பாட்டை முடித்துவிட்டு இந்துமதியையும் தங்களுடன் தயார் செய்யக் கிழவி முன்வந்தாள். "அம்மா! இந்து! நேற்றுதான் என் வார்த்தையை நீ கேட்காமல் அலக்ஷியம் செய்துவிட்டாய். போனால் போகிறது· இன்றாவது என் சொல்லைக் கேட்டு என்னுடன் கூட வா. எங்கே, எதற்கு, யார் வீட்டிற்கு என்றெல்லாம் கேட்காதே. உன்னுடைய அமோகமான க்ஷேமத்தைக் கோரி நாங்கள் பாடுபடுகிறோம் என்பதைமட்டும் மறக்காமல்

பெரியவர்கள் என்கிற மதிப்புடன் என்னுடன் கூடவாம்மா!'' என்று கூறும்போது ராஜசேகரன் காமாக்ஷியைக் கூப்பிட்டான். காமாக்ஷி மேல்மாடிக்கு ரகஸியம் பேசச் சென்றுவிட்டாள்.

இந்துமதியின் ஆத்திரம் பீறிக்கொண்டு வந்தது...தாயாரைப் பார்த்து ...''ஏம்மா பேசாமலிருக்கிறாய்? பெரியவள் கூப்பிட்டால் உடனே போய் வரவேண்டும் என்று ஏன் நீ உன் பல்லவியைப் பாடவில்லை!...அம்மா! இன்று எப்படி நடக்கபோகிறது தெரியுமா! இந்த புதிய சம்பவமும் விசித்திரமும் இன்னதென்று புரியாததால் நாம் ஒன்றுமே விளங்காது தவிக்கிறோம். உன் மக்களும் உன்னிடம் எதையும் சொல்லப்போவதில்லை. நான் வயதிலும் அனுபவத்திலும் மிகமிகச் சிறுமியாகவிருப்பினும்கூட உன்னை விட எனக்கு யோசனைகளும், உலகத்தின் போக்கையறியும் விஷயத்தில் அதிகமான சக்தியும் இருப்பதாக நான் உணர்கிறேன். எனது முன்னறி தெய்வமாகிய உன் மனம் நோகக்கூடாதென்கிற ஒரே ஒரு விஷயத்திற்காக நான் சகலத்தையும் பொறுத்துக்கொண்டு போகிறேனேயல்லாது மற்றபடி நான் இந்த அல்பர்களுக்குச் சற்றும் இடமேகொடுக்கமாட்டேன்.

இப்போது இவர்களுடன் நான் சென்றால் எல்லா வண்டவாளங்களும் வெளியாகிவிடும். எந்த வரனுக்கு என்னை நிச்சயித்திருக்கிறார்கள் என்பதை அறிந்துவிடுவேன். உன்னை ஒரு கிழவனுக்குப் பணத்தாசை பிடித்து மடித்ததுபோல் என்னையும் கிழவனே, வ்யாதி பிடித்த குமரனே, நொண்டி, மூடம் முதலிய கோடி ஐச்வர்யக்காரனே ஒருவனுக்கு நிச்சயம் செய்வதாகவே நான் யூகிக்கிறேன். இல்லாவிட்டால் ராஜ பாட்டையோடு போவதை மறுத்து, மூடி மூடி மர்மமாகப் பேசுவானேன்? ஏதோ விஷமமும் கோளாறும் நிறைந்திருப்பதால்தான் இவர்கள் இப்படி நாடகம் ஆடுகிறார்கள். ஆகையால் நான்கூடப் போய்வருகிறேன். ஆனால், பாட்டியைப்போல் நான் எந்த அலங்காரமும் செய்துகொள்ளப் போவதில்லை. நீயும் அதைப்பற்றி வற்புறுத்தாதே. ஜாக்ரதையாயிரு! என்று கூறியதைக் கேட்ட பானுமதி வியப்புற்று ப்ரமித்து நின்றாள்.

இதற்குள் வெகு அழகான மோட்டார்கார்வந்து ஜம்மென்று நின்றது. உடனே ராஜசேகரன் ஓடோடிச் சென்று காரிலிருக்கும் மகா ப்ரபுவை வரவேற்று தடபுடல் செய்தான். காமாக்ஷியம்மாளின் முக மலர்ச்சிக்கு அளவே இல்லை, ''அம்மா!... இந்துமதீ வாம்மா!''... என்றாள். இந்து வெகு சாதாரணமான உடையுடன் மறு பேச்சு பேசாமல் விறைத்த பார்வையுடன் வந்து நின்றாள்.

''இதென்னடீ என் கண்ணே! உனக்குப் பட்டுப் புடவைகளுக்குத் தானா குறைவு? ஒன்று புதிதாகக் கட்டிக்கொள்ளக் கூடாதோ?'' என்று முடிப்பதற்குள் இந்துமதி நாலடி முன்னேகிச் சென்றுவிட்டாள். அவள் முதலில் வருவாளோ, மாட்டாளோ என்ற சந்தேகம் பூர்ணமாக இருந்து பயந்ததற்கு இம்மட்டும் வந்தாளே அதுவே போதும். பிறகு பார்க்கலாம்... என்று தாயும் மகனும் ரகஸியமாய் சமிக்ஞையினால் தீர்மானித்துக் கொண்டு ஒன்றும் பேசாமல் காரில் ஏறிக்கொண்டார்கள். காரும் வெகு குஷியுடன் கிளம்பிச் சென்றது.

# 19

அம்புஜத்திற்கும் ஏகாம்பரத்திற்கும் 'அழுவதா! சிரிப்பதா!' என்றே தெரியவில்லை. "பயித்தியக்கார ஆஸ்பத்திரியிலிருந்து இவர்களை இங்கு யார் கொண்டுவிட்டு இத்தகைய அமர்க்களத்தைச் செய்திருப்பார்கள்? இதென்ன கண்ராவி..." என்று திகைத்துப் போனார்கள்.

வீட்டு வேலைக்காரர்களையும் காணவில்லையாதலால் அம்புஜம் அந்த பைத்தியக்காரர்களை மிரட்டியவாறு, "ஏய்; உங்களை யார் இங்கு கொண்டு வந்தார்கள்?" என்று கேட்டாள். ஒருவருக்கும் சரியானபடி பதில் பேசத் தெரியாமல் தன்போக்காகப்பேசி அழவும் சிரிக்கவும் செய்வதால் என்ன செய்வது என்று தெரியாமல் விழித்தாள்.

அந்தப் பயித்தியக்காரர்களில் ஒருவனுடைய முதுகில் ஏதோ எழுத்து போல் தெரிந்ததும் ஆவலுடன் பார்த்தார்கள். வெள்ளை நாமக்கட்டியால்,

> "இந்த பைத்தியங்கள் புத்தி ஸ்வாதீனத்தை இழந்து ஏதோ செய்கிறார்கள். நீங்களிருவரும் புத்தி ஸ்வாதீனத்துடனேயே அசல் பயித்தியமாக இருக்கிறீர்கள். இதுதான் உங்களிருவரிடமும் உள்ள வித்தியாசம். அதனால்தான் இந்த வீட்டிற்கு இவர்கள்தான் லாயக்கு என்று கொண்டுவிட்டோம். சபாஷ்..."

என்று எழுதியிருந்ததைப் பார்த்ததும் ஆத்திரம் பீறிக்கொண்டு வந்தது. அந்த மனிதன் இவர்களைப் பார்த்து பக பகவென்று சிரித்தான். அவன் சிரிப்பில் ஏதோ விஷம் நிறைந்திருப்பதுபோல் அம்புஜத்திற்கு தோன்றியதும் அவனை உற்று உற்றுக் கவனித்தாள். அவளுக்கு ஏதோ சந்தேகம் தட்டியதும், ஏகாம்பரத்தை நோக்கி, "இன்ஸ்பெக்டர் ஸார்! நீர் முதலில் பயித்தியக்கார ஆஸ்பத்திரிக்கு போன் செய்து எத்தனை நபர்களை காணவில்லை என்றும் உடனே அங்குள்ள முக்யஸ்தர்களை இந்த இடத்திற்கு வரும்படியாயும் சொல்லிவிட்டு வாரும்" என்று ரகஸியமாகக் கூறியதோடு இந்த பைத்தியங்களை ஒரே இடத்தில் வைத்து சரியானபடி போலீஸ்பாரா போட்டுவிட்டாள்.

அப்போதும் அம்புஜம் வெறுமனே இல்லாமல், "இதோ பாருங்கள். உங்களுக்கு என்னென்ன வேண்டுமோ சொல்லுங்கள் தருகிறேன். உங்களை யார் இங்கு அழைத்துக்கொண்டு வந்தது? அதை சொல்லுகிறவர்களுக்கு ஏராளமான பொருள் தருவேன். ஏண்டியம்மா! உனக்கு என்ன வேண்டும் சொல்லு"...என்று ஒரு பெண்பிள்ளையை இழுத்து வைத்துக் கொண்டு கேட்டாள்.

அந்த பயித்தியம் பெரிய குரல் பாய்ச்சி அழுதுவிட்டு...எம் புருஷன் ......அதான் வேலாயுதம் பிள்ளை இல்லே...வேலாயுதம்...அவரு...சின்ன கண்ணம்மாவே......கொலே......கொலே......ஐய்யோ...கொலே சேஞ்சுபுட்டாரு...ஐயாசாமிதான் எங்களே இங்கு இட்டுகினு வந்து சுயராஜ்யம் வாங்கி தரேண்ணரு. அல்லாரும் வந்துட்டோம்.

"சுயராஜ்யம் அதிக தூரமில்லே அறிவிர்
தூய கதருடையைக் கட்டுவீரே ஏ...ஏ...ஏ...

என்று பெரிதாகப் பாடக் கிளம்பிவிட்டான்.

அவளை மட்டும் வெகு தைரியமாகச் சமாதானம் செய்து அம்புஜம் தன் தனியறைக்கு அழைத்துச்சென்று...நல்ல சோபாவில் உட்கார வைத்து... இதோ பாரு உன் பெயரென்ன...என்ருள்.

பைத் :—சொல்ல மாட்டேன்...என் பெயர் ராமதில்கம்...சொல்லிட்டேனே......

அம்பு :—ஓகோ! ராமதிலகமா...ராமராம ராமஸீதா ராமராம ராம்.

பைத் :—ஹி...ஹி ஹி ஹி...எனக்கா பாட்டு...எனக்கு பாட்டு... பாட்டு...பா...ஆ......ட்டு......

அம்பு —ஆமாம். உனக்குத்தான் பாட்டு. உனக்குத்தான் சுய ராஜ்யம். ஐயாசாமி யாரம்மா... இங்கிருக்கிருளே...எனக்குக்காட்டுகிருயா?

பைத் :—ஐயாசாமியா!...ஓடியே போயி சுயராஜ்யத்தை பொட்டளங் கட்டிண்டுவந்து என் தலையிலே வெப்பாரு...ஹி ஹி ஹி...

அதே சமயம் ஏகாம்பரம் வந்து "அம்புஜம்...மொத்தம் 8 பேர்களைக் காணவில்லையாம். காலேயில் உள்ளே உளவறிந்தவன் எவனோதான் இம்மாதிரி செய்திருக்கவேண்டும் என்று நினைக்கிருர்களாம். அவர்களே வருகிருர்களாம். முக்யமாக நாயுடுவின் தனி விடுதியை நாம் கவனிக்காது இந்த பயித்தியங்களுடனேயே இருந்துவிட்டோமே. அதைப் போய் பாரு. நான் இவர்களை கவனிக்கிறேன்." என்ருர்.

அதன் பிறகே அம்புஜத்திற்கும் அது தோன்றியதால் ஓட்டமாக ஓடினுள். என்ன ஆச்சரியம்! நாயுடுவின் தனியறை திறந்துகிடக்கின்றது. அவருடைய இரும்புப் பெட்டியும் திறந்து கிடக்கின்றது. அதனுள் இருக்கும் ஏராளமான பணமும், சில நகைகளும் முக்யமான தஸ்தாவேஜிகளும் காணப்படவில்லை. அதோடு பல பக்காப் பேர்வழிகளுடைய புகைப்படங்களை நாயுடு வெகு ஜாக்ரதையாக பத்திரப்படுத்தியிருந்தார். அவைகளை ஒன்றுகூடக் காணவில்லை. தாறுமாருகக் கிடந்ததைக் கண்டவுடனே அம்புஜத்தைத் தூக்கிவாரிப்போட்டுச் சித்திரவதை செய்துவிட்டது. ஏகாம்பரத்தைக் கூப்பிட்டுக் காட்டினுள்.

ஒன்றின்பின் ஒன்ருக நிகழும் இச்சம்பவங்கள் ஏதோ பெரிய முன்னேற்பாட்டுடனும் உளவறிந்து செய்திருப்பதாகவும் தெரிகிறதேயன்றி சாதாரணமாக நடக்கவில்லை என்பது சடக்கென்று விளங்கிவிட்டது. பெரிய பெரிய மகத்தான கொலைகளையும் கொள்ளைகளையும் அனாயாஸமாகத் தீர்த்துவைத்து உலகையே ப்ரமிக்கச்செய்யும் நாயுடுகாருவின் வீட்டிலுமா கொள்ளை...நாயுடுவையுமா பிடித்து ஏதோ செய்துவிட்டார்கள்! இதென்ன வேடிக்கை என்பதா! விபரீதமென்பதா!" என்று அம்புஜமும் இன்ஸ்பெக்டர்களும் மிக்க அதிர்ச்சியை அடைந்துவிட்டார்கள்.

இதற்குள் போலீஸ் அதிகாரிகளும் பயித்யக்கார ஆஸ்பத்திரி ஆள்களும் வந்தார்கள். அவர்களை பார்த்தவுடனே இந்த பயித்தியங்கள் தாறுமாருக ஓடவும் கத்தவுமாக, பயந்து நடுநடுக்கித் தவிப்பதை ஆஸ்பத்திரிக்காரர்களே அடக்கி நிற்கவைத்து மிரட்டினுர்கள்,

'இதே எட்டுபேர்தான் அங்கு காணவில்லை. இவர்களை யார் இங்கு கொண்டுவந்திருப்பார்கள்?' என்று அவர்களும் குழம்பியவாறு பயித்தி

யங்களை எத்தனை அதட்டி மிரட்டிக் கேட்டும் ஒன்றுமே விஷயம் விளங்க வில்லை. "இதென்ன முட்டாள்தனம், பயித்தியங்களை இங்கு கொண்டு அடைத்துவிட்டதால் தான் என்ன சாதித்துவிட்டதாக எண்ணிஞனே தெரிய வில்லையே! இச்செய்கைகூட பயித்தியக்காரத்தனமாகவன்றே இருக் கிறது. நாயுடுவுக்கும் பயித்தியங்களுக்கும் என்ன சம்பந்தம்?" என்று பயித்யக்கார ஆஸ்பத்திரியின் அதிகாரி கேட்டார்.

அதற்கு அம்புஜம் "ஸார்! சம்பந்தம் இல்லாதுபோன்றுள்ள விஷ யங்களில்தான் அதிக சம்பந்தம் இருக்கும். இது எங்களுடைய அநுப வம். ஒரு சமயம் ஒரு பெரிய கொலைக்கேஸில் அப்பாவும் நானும் வேலை செய்தபோது ஒரு போக்கிரி சில பெரிய வ்யாதிக்காரர்களைச் சேர்த்து எங் கள் வீட்டில் இரவோடிரவாகக் கொண்டுவிட்டு இந்த வீடுதான் உங்களுக்கு ஆஸ்பத்திரியாகப் போகிறது. ஆகையால் இங்கேயே படுத்திருங்கள் என்று கூறி நாங்களில்லாத சமயத்தில் அவர்களைக் கும்மாளமடிக்கச் செய் தான். எங்கள் வேலைக்காரர்களுக்கு அப்பாதான் இம்மாதிரி செய்யும்படி சொல்லியதாக நம்பும்படிக்குச் செய்து அவர்களுக்கு வேளா வேளைக்கு ஆகாரத்தைக் கொடுத்தும் வீட்டில் சகஜமாக இருக்கவும் செய்துவிட்டு அந்த நோயாளிகளுடன் கூடவே இரண்டு உளவறிந்த கள்ளர்களும் இருந்து அப்பாவின் அந்தரங்கமாக சில ரகஸியங்களை எல்லாம் அறிந்து கொண்டு அந்தக் கொலைப்பாதகனைத் தப்பவைக்க ஏற்பாடு செய்தார்கள்.

ஊரிலிருந்து வந்த நாங்கள் இதைக்கண்டு திடுக்கிட்டோம். கொலை யின் மர்மங்களை துப்பறிந்து எழுதி ரகஸியமாக வைத்திருந்ததையே கூட விருந்த ஆள் எப்படியோ கைப்பற்றி விட்டான். புலிக்குமேல் பக்காப்புலி யான அப்பாவிடமா அவன் ஜம்பம் பலிக்கும்? வெவன் அந்த முக்கிய காகிதத்தை அபகரித்தானே அதனை வெகு எளிதில் கண்டு பிடித்து அவனை உடனே போலீஸாரிடம் ஒப்படைத்துவிட்டார்கள்.

கேவலம் பெரியவ்யாதிக்காரர்களை இங்கு கொண்டுவைத்து என்ன உபயோகம் என்றுதான் வெளியார் நினைக்கக்கூடும். அந்த உபயோ கத்தின் விபரீதம் அறிந்த பிறகு போலீஸாரே ஆச்சரியப்பட்டார்கள். அதே போலத்தான் இதுவும். பயித்தியங்களை வைத்து அவமானப்படுத்துவ தோடு பயித்தியங்கள் செய்ததுபோல் முக்கியமான காரியங்களைத் தாம் செய்துவிட்டால் தம்மை விட்டுவிடுவார்கள், பயித்தியங்களின் வேலைக்கு சாக்ஷி ஏது, சம்மன் ஏது என்ற முறையில் வழக்கே அடிபட்டுவிடும் என்கிற முறையில்தான் இந்த மகத்தான காரியத்தைச் செய்திருக்கிறார்கள். ஏசாம்பரம் தெரிவித்ததுபோல் எங்கப்பாவின் எதிரிகளும் பாங்கியின் கொள்ளைக்காரர்களும் தனித்தனியே வேலை செய்திருக்கிறார்கள் என் றதை இப்போதுதான் அறிகிறேன். எங்களுடைய ஆட்கள் போனவழி தெரியவில்லையே......என்று கூறும்போது அலையக்குலைய ராம்ஸிங் ஓடிவந்து,

"அம்மா...அம்மா...நீங்க பாத்தீங்களா எஜமானை......லாரி ஏறி விட்டதாக ஒருவன் ஓடிவந்து சொன்னான். நான் நிலை தடுமாறி ஓடி விசாரித்ததில் அவன் சொன்ன அடையாளமுள்ள இடத்தில் எவ்விதமான

லாரி விபத்தும் நடந்ததாகத் தெரியவில்லை என்றார்கள். பல தெருக்களைச் சுற்றி அலைந்துவிட்டு இப்போதுதான் ஓடிவருகிறேன். எஜமானுக்கு ஒன்றும் ஆபத்தில்லையேம்மா?''...என்று வெகு பதைபதைப்புடன் கேட்டான். மூச்சுத் திணறுகிறது. இந்த விசித்திரமான செய்தி எல்லோரையும் ப்ரமிக்கச் செய்தது.

அம்பு:—ராம்ஸிங்!......நீ மகா புத்திசாலி என்றல்லவா எஜமானர் எண்ணி இருந்தார்! நீ இத்தனை மூடத்தனமாகவா வீட்டைவிட்டு ஓடுவது? சில வருஷங்களுக்கு முன்பு எஜமானரை யாரோ குத்திவிட்டதாகச் செய்தி வந்தபோது நான் வீட்டைவிட்டுப் போனேனா! நீ கூட ஆச்சரியப்பட்டு நம்பினாயே! அதுகூடவா இப்போது மறந்துவிட்டது. மற்ற வேலைக்காரர்கள் எங்கு போனார்கள்? எல்லோரையும் வீட்டைவிட்டு விரட்டிவிட்டு எதிரி உள் புகுந்து பெரிய கொள்ளையல்லவா அடித்திருக்கிறான்......

இதைக் கேட்ட ராம்ஸிங் தீயை மிதித்தவன்போல் துள்ளினான். மற்ற சகல விவரங்களையும் பிறகுதான் அறிந்து தன் முட்டாள்தனத்தை எண்ணி வெட்கமும் துக்கமும் அடைந்துக் கலங்கினான். பின்னும் சிறிது நேரத்திற்கெல்லாம் மற்ற இரண்டு வேலைக்காரர்களும் ஓடி வந்தார்கள்... இங்கு போலீஸ்காரர்களும், மற்றவர்களும் கூடி இருப்பதைப் பார்த்து ஒன்றும் புரியாது பதறிப்போய்... அம்மா! நம்ம பெரிய எஜமானுக்கு திடீர் என்று பைத்தியம் பிடித்துவிட்டதாயும், தெருவிலுள்ளவர்களை அடித்தும், காரி உமிழ்ந்தும், இம்சிப்பதால் போலீஸார் அவரை உடனே பயித்தியக்கார ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய் விட்டதாயும், நீங்களும் அங்கிருப்பதாயும் ஒரு போலீஸ்காரன் வந்து கூறினான்.

நாங்கள் அலையக்குலைய ஓடினோம். பைத்தியக்கார ஆஸ்பத்ரியில் பார்த்தால் ஒன்றுமே புரியவில்லை. எங்களுக்குப் பதில் சொல்பவர்களே காணவில்லை. ஆதலால் நாங்கள் வெகுதூரம் சுற்றியலைந்து உங்களைத் தேடினோம். விவரம் புரியாததால் நேரே ஓடிவந்தோம்...ஐயா எப்படி இருக்கிறார்? நீங்க ஐயாவைப் பார்த்தீர்களா......எங்களுக்கு ஒன்றுமே தோன்றாததால் அந்த போலீஸ்கார ஐயாவையே வீட்டுக்குக் காவல் வைத்து விட்டு ஓடினோம். ஐயா எங்கே?'' என்று தமது ஆவலைப் பூராவும் வெளியிட்டுக் கேட்டார்கள்.

இந்த விஷயத்தைக் கேட்ட போலீஸ்காரர்களே ப்ரமித்துப்போய் "போலீஸ்காரனா வந்து கூறினான்?''...என்று வியப்புடன் கேட்டார்கள்...

வேலைக்காரன்:—ஆமாங்க...மூஞ்சியிலே அம்மை புள்ளிகூட இருந்துதுங்க. 1888 நம்பர். போலீஸ்காரன்னு பில்லைகூட போட்டிருந்தானுங்க. கையிலே லாத்தி இருந்துதுங்க...போலீஸ்காரனே காவல் இருக்கும்போது பயமென்னான்னு எண்ணித்தான் வீட்டைவிட்டு ஓடினோம். போலீஸ்காரன் சொல்ரது பொய்யாக இருக்காதுண்ணு நம்பினோம்... கேக்காரதைப் பார்த்தா...என்று இழுக்கும்போது அம்புஜம் வெகு கோபத்துடன் "நீங்கள் எல்லோரும் சோந்தார்போல வடிகட்டிய முண்டங்கள் என்பது நன்றாகத் தெரிந்துவிட்டது. எத்தகைய ஆபத்து என்றாலும்

வீட்டைவிட்டுப் போகக்கூடாது என்று நாங்கள் சொல்லியதெல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்குபோலாகிவிட்டது. போலீஸ்காரன் வேஷத்தில் வந்தவன்தான் பெரிய எதிரி என்று தெரிந்துவிட்டது. இப்போது என்ன செய்வது?'' என்று கர்ஜித்தாள். எல்லோருக்கும் ஒரே குழப்பமும், கவலையும் குடிகொண்டுவிட்டது.

—o—

## 20

ஏதோ மந்திரம் போட்டு உட்காரவைத்தப் பதுமைபோல் இந்து காரில் உட்கார்ந்திருந்தாளேயன்றி அவள் முகத்தில் தெம்போ, உத்ஸாகத்தின் சாயலோ ஒரு துளிகூட இல்லை. வண்டியை ஓட்டும் மைனர் வெகு தட புடல் த்வனியில்..."ஹலோ! இந்துமதி! இந்தக் கார் உனக்குப் பிடித்திருக்கிறதா!'' என்று கேட்டதும் இந்துமதியின் முகத்தில் உண்டாகிய கசப்பும், அருவருப்பும். முகக் கடுகடுப்பும், கோபத்தின் பட படப்பும் ஒன்றுகூடி எள்ளும் கொள்ளும் வெடித்ததை காமாட்சியம்மாள் பார்த்து உள்ளுக்குள் திடுக்கிட்டாள். தானே முந்திரிக்கொட்டையைப்போல் முந்திக்கொண்டு......நான்தான் முன்பே சொன்னேனே குழந்தை மிகவும் சங்கோஜி. இதைவிட உயர்வான காரு அவளுக்கு வாங்குவதற்கு அவா தாதா ஏற்பாடு செய்திருக்கிறுர். அவள் தன் விருப்பு. வெறுப்பு எதையும் சொல்லி இக்காலத்துப் பெண்களைப்போல் பேசவே மாட்டாள். மகா மானி......

என்று பேசி முடிப்பதற்குள் கார் ஒரு அபூர்வமான அழகு வேலைப்பாடுகள் நிறைந்த கட்டடத்தின் கேட்டுக்குள் புகுந்து ப்ரமிக்கத்தக்க தேவ மாளிகை போன்ற கட்டடத்தின் முன்பு நின்றது. கட்டடத்தின் முகப்பில் பளபளப்பாக தங்கத் தகடுபோல் பித்தளை பலகையில் "அத்புதா பிக்ச்சர்ஸ்: அமரா ஸ்டுடியோ'' என்ற கொட்டை எழுத்துக்கள் தெரிந்ததும், எரிமலையே இவள் தலைமீது விழுவதுபோன்ற தாக்குதலும் அதிர்ச்சியும் உண்டாகித் தூக்கிவாரிப்போட்டது.

காரை நிறுத்திய உடனே மைனர் கதவைத் திறந்துவிட்டான். எல்லோரும் இறங்குவதற்குள், கார் வந்ததை யறிந்து உள்ளிருந்து ஓடிவந்த சில ஷோக்கு மைனர்கள் எக்காளமிட்டு விசிலடித்தவாறு அங்கு வந்து "ஹலோ! சேகர்......இதுதான் நம்ப ந்யூ ஸ்டாரா...பலே...என்று சேகரின் மனைவி ராஜம்மாளின் தடபுடல் அலங்காரத்தைப்'' பார்த்து ப்ரமித்து மயங்கிப்போய் கேட்டார்கள்.

இதற்குள் வண்டி ஓட்டிய மைனர்..."இல்லெப்பா...நம்ப ராணி இந்துமதி தேவி இதோ இருக்கிறுள். அந்தம்மாள் ஸ்ரீமதி சேகரன்... என்று கூறியதும் வெகு சூக்ஷ்ம புத்தியுடைய இந்துமதிக்கு சகலமும் ஒரு விநாடியில் புரிந்தது. தன் தாயைப் பணத்திற்காக விற்று வாழ்நாள் முழுதையும் பாழ்நாளாக்கிய சதி போதாமல், தன்னை அதைவிடக் கேவலமான, அத பாதாள, சாக்கடையில் தள்ளி அழியாத வடுவை உண்டாக்கித்

தாம் பணம் பறித்து இன்புறச் செய்துள்ள வேலையின் மர்மந்தான் இது என்பதை அறிந்ததும் அவள் தலை சுழன்றது...ஏன்... அந்த கட்டடமே அப்படியே தட்டாமாலை சுற்றுவதுபோல் தோன்றி ஒரு க்ஷணநேரம் நிலை கலங்கச் செய்தது. மெல்ல சமாளித்துக்கொண்டு நின்றாள். இதற்குள் கிழவியும் ராஜாம்பாளும் அந்த இடத்தையும் அதில் காணும் அத்புத விசித்திர விநோதங்களையும் கண்டு மெய்மறந்து பல்லிளித்தவாறு பார்த்துத் தம்பித்து நின்றார்கள். இந்த மைனர்கள் இவர்களைச் சுற்றி வளைத்துக் கொண்டார்கள். பாக்கு வெட்டியில் அகப்பட்டுக்கொண்டு தத்தளிக்கும் நிலைமையில் இந்து துடித்தவாறு செய்வதறியாது விழிக்கிறாள்.

"இவளா புதிய ஸ்டார்! இவளா இனிமேல் ராணி"...என்று தலா தலா கேட்பது இந்துவின் இதயத்தில் பாணங்கள் குத்துவதுபோலத் தோன்றிவதைக்கின்றன. நடிகைகளுக்கு வேஷம் போடும் அறைக்கு இவர்களை அழைத்துச் சென்றார்கள், நடிகைகளைப் பார்த்து இவர்களும் இவர்களைப் பார்த்து அவர்களும் ஒரே ப்ரமிப்பை அடைந்து விழித்தார்கள். இந்துமதியை ப்ரத்யேகமாக எல்லோருக்கும் ஷோ காட்டுவதுபோல் காட்டும் கோரமையைச் சகிக்கமுடியாத நிலைமையில் இந்து, ஒரு மெஷின் போல் நகர்ந்து சென்றாள்.

பல நடிகைகளை உட்கார வைத்து முகத்திற்கும் மற்ற அவயவங்களுக்கும் மேகப்பு செய்யும் விநோதத்தை...அச்சத்தைவிட்டு சரீரத்தில் லஜ்ஜையின்றி உட்கார்ந்திருப்பதை...காணும் இந்துமதிக்கு தேகம் பற்றி எரிவது போல் தோன்றியது. இங்கிருந்து ஷூட்டிங்கு நடக்கும் இடத்திற்கு இவர்களை அழைத்துச் சென்று தடபுடல் உபசாரத்துடன் சோபாக்களில் அமரச் செய்து பின் "உம்... ஆரம்பிக்கலாம்"...என்று உத்தரவிட்டார்கள்.

அப்போது நடக்கும் கட்டமாவது.—"படுபாவி கணவனோடே காலமெல்லாம் போகுதே" என்ற பாட்டைப் பாடியவாறு ஒரு மாது தன் வீட்டு வேலையைச் செய்வதாயும் அவளுடைய சிநேகிதை யொருத்தி வந்து பேசும்போது இருவரும் சினிமாவின் மேன்மைகளைப் பற்றிப் பேசுவதும் அதில் நாம் சேர்ந்துவிட்டால் நம்மை நாமே காப்பாற்றிக் கொள்ளவும் கையில் நாலு காசு நடமாடவும் கண்ணியமாயும் கம்பீரமாயும் வாழ்க்கை நடத்தலாம் என்றும் சினிமா கம்பெனியின் மகிமை அத்தகைய விசேஷமானது என்றும் சம்பாஷணைகளுடன் பாட்டுக்களும் பாடி அதைப் படமெடுத்தார்கள்.

சினிமாவைத் திரையில் பார்த்திருக்கிறார்களேயன்றி நேரில் எடுப்பதைப் பார்க்காத காமாக்ஷி, ராஜாம்பாள், சேகர் முதலியவர்கள் பல்லை யிளித்துகொண்டு அதிலேயே ஐக்யமாகித் தம்மையே மறந்தார்கள் என்றால் மிகையாகாது. அதோடு சினிமாவைப்பற்றி மிகமிக மேன்மையாகச் சொல்வதைக் கேட்டுப் பூரித்துப் போனார்கள்.

இந்த சந்தர்ப்பத்தையே எதிர்பார்த்துக்கொண்டிருந்த இந்துமதியின் இதயம் ஆயிரம் வாள்கொண்டறுக்கிறது. நூறு மைல் வேகத்தில் ஓடும் மோட்டாரைப்போல் அடித்துக்கொள்கிறது. அந்தச் சமயம்—

சினிமா கட்டடத்தில் பாடிக்கொண்டிருக்கும் ஒரு நடிகையின் கணவன் இதைக் கேட்டுக்கொண்டு வந்துவிடுவதாயும், அவன் ஆத்திரந்தீர மனைவியை நையப் புடைப்பதாயும், மனைவி பெரிய கூச்சலிட்டுக் கத்தி அழுவதாயும் அக்கம்பக்கம் உள்ளவர்கள், தெருவில் போகிறவர்கள் கும்பல் கூடுவதாயும் ஒரே கலாட்டாவான காக்ஷியாகையால் பெருங் குழப்பமும் ஏகப்பட்டக் கும்பலும் கலவரமுமாக சினிமாக் காக்ஷிக்காக ஜோடித்திருந்த கட்டம் இந்துமதிக்கு மிக மிக உபயோகமாகிவிட்டது.

இந்த ஆரவாரத்தில் மூழ்கி பல்லைப் பிளந்தவாறு எல்லோரும் அதையே கவனித்திருந்த சமயம் இந்துமதி வெகு சாமர்த்தியமாயும் தைரியமாயும் நழுவி எந்த வழியில் போவது, எப்படிப்போவது—என்கிற வழியே தெரியாவிடினும் எப்படியாவது இதைவிட்டு நகர்ந்துவிட்டால் போதும் என்ற ஒரு ஆவேச உணர்ச்சி தோன்றியதும் கிளம்பிவிட்டாள். பல இடங்களைத் தாண்டிக்கொண்டு 'செத்தேன் பிழைத்தேன்' என்று வாசலை யடைந்து நேரே தடதடவென்று நடந்து நாலைந்து சந்துக்களையும் தாண்டி மறைந்தாள். இவளுடைய உள்ளம் படும் வேதனைக்கு அளவிட்டுச் சொல்ல முடியுமா பாவம். இளந்தளிர்போன்ற சிறுமி கதிகலங்கி இடிந்து விட்டாள். அவள் கால்கள் மட்டும் ஓயாது சலிக்காது விடுவிடென்று நடந்தன. இதயத் துடிப்பு அதையும் மிஞ்சி போட்டியிட்டது.

—o—

## 21

அந்தக் காக்ஷி முடிந்ததும் ஒரே ஆரவாரம்...“பேஷ் பேஷ்! சபாஷ்! தத்ரூபமாய்......ப்ரத்யக்ஷமாய் வெகு இயற்கை பாவத்துடன் இந்த ஸீன் அபூர்வமாய் அமைந்துவிட்டது” என்று ஒருமுகமாக எல்லோரும் சொல்லிக்கொண்டு எக்காளமிட்டார்கள். “இந்துமதி! ஸீன் எப்படி”...என்று கேட்டவாறு ஒரு ஷோக் மைனர் ஓடி வந்தான். அவள் இருந்த சோபா காலியாயிருந்ததால் சுற்று முற்றும் பார்த்தான்...‘எங்கே இந்துமதி?’...என்று கேட்டபிறகே மற்றவர்கள் அதைக் கவனித்தார்கள்.

காமாக்ஷியம்மாளுக்கும், ராஜசேகரனுக்கும் திடுக்கிட்டுப் பதறச் செய்தது. மேலுக்குக் காட்டிக்கொள்ளாமல்...“இங்குதான் வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பாள். குழந்தைக்கு இதெல்லாம் புதிதல்லவா! அதனால் ஆவலாகத் தானே சுற்றிப்பார்க்கிறாளோ என்னவோ!’ என்று காமாக்ஷியம்மாள் தானேக் கூறினாள். எனினும் ஏதோ முழு மோசம் நடந்திருக்கவேண்டும். எப்படி, எங்கு போயிருப்பாள் என்கிற திகிலுடன் ராஜசேகரனிடம் ஜாடையினாலும், ரகஸியத்தினாலும் “என்ன செய்வது?” என்று கேட்டாள்.

எல்லோரும் ஒவ்வொரு இடமாகத் தேட வாரம்பித்தார்கள். “இப்படி யாராவது ஒரு பெண் போனாளா?” என்று கேட்கவும் தொடங்கினார்கள். போனான் என்று சிலரும், இல்லை என்று சிலரும், பார்க்கவில்லை என்று சிலரும் ஒன்றுக்கொன்று தகவல் இல்லாது கூறினார்கள்.

ப்ரம்மாண்டமான ஸ்டுடியோவில் ஒவ்வொரு இடமாகத் தேடிப் பார்ப்பதற்குள்ளேயே அரைமணி நேரமாயிற்று. காமாட்சியம்மாளுக்கும் சேகரனுக்கும் உள்ளுக்குள்ளே உதைக்கின்றது "எங்கே போயிருக்கும்... நம் கண்ணில் ஒரு க்ஷணத்தில் மண்ணைத் தூவிவிட்டாளே!......என்ன செய்வது?...வீட்டிற்கு ஓடிப்போய் பார்த்துவிட்டு வந்துவிடேன். எனக்கு ஏதோ பயமாக இருக்கிறது"...என்று காமாக்ஷியம்மாள் கண்கலங்கினாள்.

உடனே ஒரு காரில் வெகு அவசரமாக சேகரன் வீட்டை நோக்கிப் பறந்தான். போகும்போது வழி நெடுகலும் பார்த்துக்கொண்டே சென்றான். இந்துவை எங்கும் காணவே இல்லை. வீட்டிற்கு இவன் மட்டும் தனியாக வருவதைக் கண்ட பானுமதி ஒன்றும் புரியாது, விழித்தாள்.

சேகர் தான் இந்துவைத் தேடிக்கொண்டு வந்ததாகக் காட்டிக்கொள்ளாமல் எதையோ தேடுவதுபோல் வீடு பூராவும் ஒரு சுற்று சுற்றி வந்தான். இந்துவைக்காணாது திடுக்கிட்டவாறு "நாங்கள் சென்ற பிறகு இங்கு யாராவது வந்தார்களா!" என்று பூடகமாகக் கேட்டான்.

பானுமதி:—ஒருவரும் வரவில்லை...... அம்மா, இந்து முதலியவர்கள் எங்கே! நீ மட்டும் வந்தயே!—என்று பானு கேட்டதும் சேகரனை ஒரேயடியாக அலறச் செய்துவிட்டது. எதையுமே வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல் விடுவிடென்று உடனே சென்றான்; கூண்டிலடைப்பட்ட பறவை போன்றிருக்கும் பானுமதிக்கு ஒன்றுமே புரியவில்லை. "எதற்கு வந்தான். எதற்குச் சென்றான்" என்பதே யறியாது குழம்பினாள்.

சேகரனின் கொழுத்த உள்ளங் கூடச் சிறிது ஆட்டங் கொடுத்துவிட்டது என்றால் வேறு கூறவேண்டுமோ! அலையக் குலைய ஸ்டுடியோவுக்கு வந்தான். அப்போதும் அங்கு ஒரே கலவரத்துடன் மூலைக்கு மூலை தேடுவதை யறிந்து இடி இடித்தது போலாகிவிட்டது..... அந்த சினிமா மைனர்களில் ஒருவன் சற்று இளப்பமும் அதிகாரமும் நிறைந்த த்வனியில்..."ஏம் பாட்டியம்மா! இதென்ன மோசத் தாண்டவம்? வேண்டுமென்று முன் ஏற்பாடாகச் செய்த வேலையா?"...என்று கேட்டபோது காமாட்சியம்மாளின் மனத்தில் சுறுக்கென்று பொத்தியது. முகத்தில் அசடுவழிய... "ஐயையோ! மோசமாவது, முன்னேற்பாடாவது... ஈச்வர சாக்ஷியாக ஒன்றுமே கிடையாது. குழந்தை இந்த அபூர்வமான காக்ஷிகளைப் பார்த்ததே இல்லையாதலால் எங்கேயோ பார்த்தபடி வழி தெரியாது அலைகிறாளோ என்னவோ!" என்றுதான் பயமாக இருக்கிறது" என்று சொல்லும்போது சேகரன் வந்து சேர்ந்தான்.

மைனர்களில் மற்றொருவன் ஏளனமாக நகைத்தபடியே ஆத்திரத்துடன்..."என்னப்பா நாடகமா! சோதா நாடகமா...எங்கே உன் இந்துமதி?...நாங்கள் அப்படி யொன்றும் கபோதிகளல்ல; ஏமாந்து விடமாட்டோம். வெளியாருக்கு எதுவுமே தெரியாமல் பூடகமாக காரியம் நடந்தால் போச்சு, இல்லையேல் 25 ஆயிரம் ரொக்கத்தையும் 50 ஆயிரமாகக் கக்க வைத்துவிட எங்களுக்கு வழி தெரியும்"...என்று படபடத்துக் கூறும்போது சேகரனின் உள்ளம் பதைத்துத் துடித்து பயமும் கிலியும் ஒன்று கூடித் தவித்தது. அவனுடைய ஆத்திரம் பூராவும் இந்துமதியின் மீது

பாய்ந்து அவளைக் கொன்று விடலாமா என்கிற விபரீத ஆவேசம் உண்டானதால் செய்வதறியாது விழிக்கிறான். இன்னது பதில்பேசுவதென்றே தெரியாது அவன் நிலைமை சங்கடத்தில் மூழ்கியது.

வழியோ, துறையோ தெரியாது கால் சென்றவாறெல்லாம் விழுந்தடித்துக்கொண்டு ஓடும் இந்துமதியின் கால்கள் ஓய்ந்துவிட்டன. வெயர்வை வெள்ளம் குபீரென்று பொங்கிப் பொங்கி வழிகின்றது. இது எந்த இடம், எந்தப் பேட்டையைச் சேர்ந்தது! என்று கூடத்தெரியாது பிறரைக் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம் என்றால் பயமாகவிருந்தது. கண்ணை மூடிக்கொண்டு நடந்து சென்றால் தன்னை எங்கு கொண்டுவிடும், இந்த படபடக்கும் வெய்யிலில் எப்படி நடக்கமுடியும்? என்று ஒரு புறம் வேதனை. தன் சொந்த மக்களே இத்தகைய சதியைச் செய்துவிட்டார்களே என்கிற ஆத்திரமும் அவமானமும் ஒருபுறம் வாட்டிவதைக்கிறது. தன் தாயாரின் பொறுமையும். சாதுத்தன்மையும் எத்தகைய விபரீதத்தில் கொண்டுவிட்டது—என்று நினைக்கும்போது தாயாரின் மீதுகூடக் கோபம் தீபோல் மூண்டது.

ஒரு சமயம் காமாக்ஷியம்மாள் முதலியவர்கள் திண்ணைமீது உட்கார்ந்து சட்டம்பேசி வம்பளந்ததும், அதன் விளைவினால் பள்ளிக்கூடம் போவது குற்றம். வாத்தியார்கள் வந்து சொல்லிக்கொடுப்பதும் மகத்தான குற்றம். சித்திரம் எழுதுவது அதைவிடக் குற்றம். பரிசு கிடைத்த பொற்பதக்கத்தை போய் வாங்கிக்கொள்வது அதைவிடக் குற்றம். வீடேறி வந்த பெரியவரை நமஸ்கரித்து நேராகப் பெற்றுக்கொண்டது மன்னிக்க முடியாத குற்றம்.. என்றெல்லாம் பேசித் திட்டங்கள் போட்ட மனிதர்களா இத்தகைய கேவலமான, துர் நாற்றச் சாக்கடையில் விழுவதைப் புனித கங்கா தீர்த்தமாக, எண்ணிப் பணத்திற்காக சகல தர்மங்களையும் பலியிட்டுவிட்டார்கள்?... ஐயையோ! இதை என்னாலேயே நம்பமுடியவில்லையே! பாழும் உலகம் இத்தகைய சதிக்குள்ளா மறைந்துகிடக்கிறது?......

என்று ஏதேதோ எண்ணங்களும், ஆத்திரமும் போட்டியிட்டு உள்ளத்தில் மல்யுத்தம் செய்கிற வேகத்தில் போகும் இடம் தெரியாது போய்க்கொண்டிருந்தாள். எதிரே ரிக்ஷாவில் இந்துமதியின் பள்ளிக்கூடத்து உபாத்தியாயினி வந்துகொண்டிருப்பவள் இந்துவின் பதட்டத்தையும், உடல் சோர்ந்து முகம் விகாரப்பட்டிருப்பதையும் பார்த்து ஏதோ ஒருவித உணர்ச்சியுடன்...''இந்துமதி!... இந்துமதி!''...என்று கூப்பிட்டவாறு ரிக்ஷாவை நிறுத்தச் செய்தாள்.

எப்போதுமே ஏதாவதொரு நிமித்தத்தின்பொருட்டு அழுதுகொண்டுள்ள குழந்தைகள், தம் தம் பெற்றோர்களையோ அன்றி மிக்க சலுகையுடன் போற்றும் உற்றார்களையோ கண்டதும் எங்குமில்லாத துக்கம் பீறிக்கொண்டுவந்து, கோவென்று உச்சஸ்தாயியில் பலமாக அழுவாரம்பிக்கும்... செத்தவீட்டினர் தமக்கு மிகவும் வேண்டியவர்கள் துக்கம் விசாரிக்க வந்தால் அவர்களைப் பார்த்ததும் பீறிக்கொண்டு வரும் துக்கத்துடன் அழுவார்கள். அதேபோல் இந்துமதியின் கொதிக்கும் உள்ளத்தின் துடிதுடிக்கும் நிலைமையில் தன் பழைய வாத்யாரம்மாவைப் பார்த்ததும்

துக்கம் பீறிக்கொண்டு வந்துவிட்டதால், "டீச்சர்!" என்று கதறியவாறு நடுத்தெருவு என்பதையும் மறந்து, அவளைக் கட்டிக்கொண்டு தேகம் குலுங்கக் குலுங்க அழுவதைக் கண்ட வாத்யாரம்மாள் அப்படியே ப்ரமித்துத் திகைத்தவாறு இந்துவைச் சேர்த்துக் கட்டிக்கொண்டாள்.

வெகு படபடப்புடன் இந்து அழுதபடியே, "டீச்சர்! தெருவில் நிற்க வேண்டாம். முதலில் உங்கள் வீட்டிற்கு என்னை அழைத்துக் கொண்டு போங்கள். பிறகு விவரம் சொல்கிறேன்...ஏறி உட்காருங்கள்"... என்று கூறித் தான் ஏறிக்கொண்டு வாத்தியாரம்மாளையும் இழுத்து உட்காரச் செய்து வண்டிக்காரனை உடனே ஓட்டும்படித் தானே உத்திரவிட்டாள்

இச்செய்கையின் விவரம் புரியாத வாத்தியாரம்மாள் வெகு ஆச்சரியத்துடன் இந்துவை அணைத்தவாறு "நம்ம வீட்டுக்கே போடா!" என்றாள். இந்துமதியின் ஸ்வாஸம் அதன் பிறகுதான் ஒரு நிதானத்தில் வரத் தொடங்கியது.

—o—

## 22

ஆளுக்கொரு கேள்வியும், ஏளனமும் கோபமும் நிறைந்த இளப்பமான சொற்களும் புதைபாணம் கிளம்புவதுபோல் கிளம்பி தாக்குவதை எத்தனைதான் பணத்தாசைக்கு அடிமையாகி இருந்தபோதிலும் காமாக்ஷியம்மாளின் இதயத்தில் கூரிய வேல் பாய்வதுபோன்றும்... ஈயத்தைக் காய்ச்சி ஊற்றுவதுபோன்றும் தோன்றி வதைத்தது. இந்துமதிக்கும் பானுமதிக்கும் சொல்லாமல், தெரியாமலேயே இத்தகைய காரியத்தைச் செய்து விட்டதால் பழிவாங்கும் எண்ணத்துடன்தான் அவள் ஏமாற்றி விட்டு ஓடிவிட்டாள் என்று அவள் அந்தரங்க உள்ளத்தில் ஆழமாகத் தெரிந்ததும் பின்னும் துடிதுடித்தது.

ராஜசேகரனும் திருடன் விழிப்பதுபோல் விழித்துக்கொண்டே வீட்டிற்குப் போய் ஒரு சுற்று பார்த்துவிட்டு அசடுவழிய வந்து நின்றான். மூவர் முகமும் மூன்றும் பேஸ்த் வைத்ததுபோல் மிக மிக வேதனையுற்றுத் தொங்கிய சமயம் மைனர் மங்கேச்வரன் வந்து 'இன்னும் நான்கு மணி காலம் தவணை கொடுக்கிறேன். அதற்குள் இந்துமதியை இங்குக்கொண்டு நிறுத்தினால் போச்சு, இல்லையேல் மோசடி செய்ததாயும், பெண்ணைக்காட்டி மறைத்துப் பணத்தை அபகரித்ததாயும் உடனே போலீஸில் கம்பளேண்டு கொடுத்துவிடுவோம். ஜாக்ரதை. பத்திரிகைகளில் ந்யூஸ் பறக்கும். ஏதோ பெண் தானாக நழுவி விட்டதாகவோ, வேறு எதையோ சாக்கு சொல்லி விடமுடியாது என்று கர்ண கடூரமாயும், விபரீத பயங்கரமாயும் சொல்லிவிட்டுச் சென்றதுதான் தாமதம். காமாக்ஷியம்மாளுக்கு உலகம் கிடுகிடு என்று தட்டாமாலை சுற்றி மண்டையில் செம்மட்டியாலறைந்தது போல் வேதனை உண்டாகியது. தலையை கெட்டியாகப் பிடித்துக்கொண்டு சற்று சமாளித்து சேகரைப்பார்த்து..."என்டாப்பா! இந்த விபரீதத்திற்கு என்னடா செய்வது? நாசமாப் போன பெண் எங்கே எமலோகத்திற்குப்



போயிருக்கும்!...இதோபாரு சேகர்! நம்மை பேராபத்திலிருந்து காப்பாற்ற வழிகாட்டிய பகவான் மற்றொரு பேராபத்தை விளைவித்திருப்பது வெகு துக்கமாக விருக்கிறது. இந்துமதி என்னடா அழகில் வழிந்து போகிருள்? அவளைவிட ராஜாம்பாளே எனக்கு ரதிபோல் காணப் படுவதால் அந்த சிறுக்கிக்குப் பதில் இவளை நடிக்கச் செய்வதாக நீ ..என்று முடிப்பதற்குள் ராஜசேகரன், தாயாரை ஒரு முழி முழித்துப் பார்த்துப் பல்லைக் கடித்தவாறு "போதும் போதும் உன் யோசனை. அசட்டுப்

பிசட்டென்று உளருதே. என் ராஜாம்பாளை சினிமாவில் சேர்த்துவிட்டு, சில தடியன்கள் அந்த நக்ஷத்திரங்களின் நிழலில் ஒதுங்கிக் கொண்டே மான ஹீன மற்று காலத்தைக் கடத்துகிறார்களே அத்தகைய கூட்டத்தில் நான் சேர்ந்தவனல்ல. சினிமாவில் ராஜாம்பாள் நடிப்பதா?...சீச்சி, நீ வேணுமானால் நடித்துக் கொள்ளு''...என்று கடுமையான குரலிலும் அலக்ஷிய பாவத்துடனும் கூறிவிட்டு'' ராஜம்! உம்...உடனே நீ வீட்டிற்குப் போய்விட வேண்டும் வா''...என்று கூறியவாறு அவளை வெகு அவசரமாக அழைத்துக்கொண்டு போகக் கிளம்பினான்.

இதையறிந்த அந்த மைனர்களும் மற்றவர்களும்...''எங்கேப்பா அத்தனை அவசரமாகப் போகிறாய்?...இரு...இரு...பத்திரத்தில் கையெழுத் திட்ட திட்டத்தின்படி பெண்ணைக் கொண்டு நிறுத்திவிட்டுப் பிறகு கிளம்பப்பா! அவளை நாங்கள் கண்டுபிடித்துக் கொண்டுவரும் வரையில் உங்களை இந்த இடத்திலிருந்து கிளம்ப விடமாட்டோம். ஜாக்ரதை. அது மட்டும் நினைவிருக்கட்டும். நாங்கள் அத்தனை ஏமாந்தவர்களல்ல. இப்படியே நீங்களும் தேடுவதாகச் சென்று மறைந்துவிடப் பார்க்கும் பாச்சா இங்கு பலிக்காது. இப்படி இந்த தனியறையில் உட்காரலாம் ஸ்வாமிகளே!''...என்றவாறு ஒரு இடத்தில் இழுத்து உட்கார வைத்தார்கள்.

25 ஆயிரம் ரூபாய் பணத்தை அட்டகாஸமாக வாங்கும்போது இருந்த பரபரப்பும் குஷியும், இதே கலையில் ஒரு சிறு குற்றங் குறை கூடக் கிடையாது என்று வாதாடிய அதே சேகரன் தன் மனைவியைப் பற்றிப் பேசும்போது அவன் கூறிய வார்த்தைகளும், இப்போது அகப் பட்டுக் கொண்டு விழிக்கும் தர்மசங்கடமான நிலைமையின் அவகேட்டையும் கண்டு காமாக்ஷியின் சூன்ய இதயத்திலும்...பணத்தாசைக்கு அடிமையான ஆசை நிறைந்த இதயத்திலும்...ஒரு மகத்தான தாக்குதல் உண்டாகி வதைத்தது. ஆத்திரம் தலைக்கேறிவிட்டது.

''அட பாவி! சண்டாளா! அந்தப் பெண்ணை நடிக்கச் சொல்லும் போது வெகு பவித்திரமான ஆகாசக் கோட்டையைக் கட்டி எங்களை மயக்கி மூளையை மழுப்பி விட்டாயேடா...அதே சினிமா...அதே கலை உன் பெண்டாட்டி நடிக்க வேண்டும் என்று சொல்லும்போது வேறு ரூபமாக மாறிவிட்டதா......இப்போது அது சாக்கடைக்குச் சமமாகவா தோன்றுகிறது?......ஐயையோ! மதியிழந்து மோசம் போய் விட்டேனே......என் கண்ணிருந்தும் கபோதியாகி ஆறாத வடுவை நானே உண்டாக்கிக்கொண்டு விட்டேனே! என்னை செருப்பாலடித்தாலும் போதாதே...இந்த அநியாயம் உனக்கு அடுக்குமாடா! நீ செய்யும் அக்ரமத்தில் என்னை நானே பாழாக்கிக்கொண்டுத் தவிக்கிறேனே!''...என்று வாயில் வந்தவாறு ஆத்திரத்துடன் கூறிப் புலம்புவதைக்கண்ட சேகரன் '.சீச்சீ...கிழப்பிணமே!...வாயை மூடு...திருட்டு மாப்பிள்ளையைப் படைத்தவள் பவிஷுக்கு வாய் வேறேயா! அந்த திருடனுக்காக மானத்தைக் காக்க வழி செய்தபோது நானே இந்திரன் சந்திரன் குபேரனாக விளங்கினேன். திருட்டு மருமகன், மூட்டுப் பேத்தி, உன் வாடடுக் கத்தல் மூன்றும் வெகு ஒற்றுமையாக இருக்கிறது. தரித்திர மூதேவி எங்குதான் போயிருக்கும்? நம்மை இந்த

தர்மசங்கடமான நிலைமையில் அவமானப்படுத்திய பேடையை நன்றாக செருப்பாலடித்து கொடுக்காமல் இதுவும் பேசுவாய். இன்னமும் பேசுவாய். வாயை அடைத்துக் கொண்டு கிட''... என்று கூறி ஒரே அடியில் அவனை அடக்கிவிட்டு மைனரிடம் சென்றான்.

அவனிடம் கெஞ்சிக் கூத்தாடி...''நண்பா! நீ ஏதோ எங்கள்மீது குற்றம் சாட்டிப் பேசுகிறாய். இங்கிருந்து வேறு யாராவது அவளை ஏமாற்றி இழுத்துக் கொண்டு போய்விட்டாளோ என்கிற சந்தேகம் எனக்கு உண்டாகிறது. சத்தியமாக நாங்கள் எந்த விதமான விஷயமும் அறியமாட்டோம். நீ ஒன்று செய். என்னுடன் கூடவே நீ காரில் வா. இந்துவின் சினேகிதர் வீடுகள், ஹிந்தி வாத்தியார், ஓவிய வாத்தியார், பள்ளிக்கூடத்து வாத்தியார் முதலிய சகலமானவர்களின் வீடுகளும் எனக்குத் தெரியும். ஒருதரம் அங்கெல்லாம் போய் பார்த்து அந்த பெண்ணைப் பிடித்துக்கொண்டுவந்து விடலாம் வா. நீ இதற்குள் வீண் கலாட்டாசெய்து இவ்விஷயத்தை அம்பலப்படுத்திவிடாதே. உன்னை நான் மிக மிக மன்றாடிக்கேட்டுக்கொள்கிறேன். காரை எடுத்துக்கொண்டு வா... பொறுமையை இழக்காதே. நான் எப்படியும் அவளைத்தேடிக்கொடுத்துவிட்டு மறுகாரியம் செய்கிறேன்.'' என்று வேப்பிலையடிக்காத குற்றமாய் அவனை வேண்டினான்.

''சரி... உன் வார்த்தைப்படி இதையும் ஒரு முறை பார்த்து விடலாம். உன் மனைவியும் தாயாரும் இங்குதானிருக்கவேண்டும். அவர்களை விட மாட்டேன்......டேய்......பங்காரு! காரெடு...டேய்...சிங்காரம்!... அதோ உட்கார்ந்திருப்பவர்களை இங்கேயே இருக்கும்படி கவனித்துக் கொள்ளு. கோட்டை விட்டுவிட வேண்டாம். உம்... புறப்படு''......என்றான். வார்த்தையில் அலக்ஷியமும் க்ரோதமும்தானிருந்தது. இருவரும் காரில் ஏறினார்கள். காரும் வெகு விசையுடன் கிளம்பிச் சென்றது.

## 23

அம்புஜத்தின் ஆத்திரம் கூறவேமுடியாது பொங்கிவருகிறது. வேலைக்காரர்கள் சரியானபடி நம்பும்படியாகச்செய்துவிட்டு, இத்தகைய சூரத்தனமான காரியத்தைச் செய்திருக்கும் மனிதனின் போக்கும் செய்கையும் தீயவழியிலிருப்பினும் சாமர்த்யத்தை நன்கு எடுத்துக்காட்டுவதைக் கண்டு வியப்புக்கடலாடினாள். ''இத்தகைய அபூர்வசக்தியை நல்ல காரியங்களில் உபயோகித்தால் எத்தனைசோபிதமாயிருக்கும்? என்று ஒரு க்ஷணம் எண்ணினாள். நல்ல சூரத்தனமான காரியங்களைச் செய்து வெற்றிபெறும் கூட்டமாகையினால் அந்த சாமர்த்யத்தை அவள் உள்ளம் மிக மிகப் போற்றி வியந்தது.

அதேசமயம் முதுகில் எழுத்துடன் இருந்த மனிதன்மீது இவள் எண்ணம் பாய்ந்தது. உடனே அவனை வைத்திருந்த தனி இடத்திற்குச் சென்றாள். என்ன ஆச்சரியம்! அவனைக் காணாது திடுக்கிட்டு அதிர்ச்சியடைந்தவாறு இன்ஸ்பெக்டரைக் கூப்பிட்டு ''சார்! நான் சந்தேகித்த

பேர்வழியைக் காணவில்லையே! எங்கே?...மூலைக்கொருவராகப் பாருங்கள். அதிகநேரம் ஆகாததால் ஓடியிருக்க முடியாது. பைத்யத்துடன் பைத்தியமாக, இங்கு நடக்கும் சகல விஷயங்களையும் உளவறிந்துகொள்வதற்காகவே அவனை எதிரி ஏற்பாடு செய்துவைத்திருப்பதாக நான் எண்ணியது மிகவும் உண்மையாகி விட்டதே. அவனை நாம் சந்தேகித்ததை யறிந்துதான் அவன் எப்படியோ ஏமாற்றிவிட்டானே! என்னசெய்வது?'' என்று பதறித் தவித்தான். இந்த செப்பிடு வித்தையைப் பார்த்த போலீஸ்காரர்களே திகைத்துவிட்டார்கள்.

தப்பி ஓடிய மனிதன் சாதாரணமாகவா போனான்? தான் உடுத்தியிருந்த பயித்தியக்காரக் கந்தைகள், வேஷங்கள் முதலியவைகளைக் களைந்து மூட்டை கட்டி வைத்துவிட்டுப் போயிருக்கும் சாமர்த்தியத்தை வியந்து முடியவில்லை.

அம் மூட்டையை அம்புஜமே எடுத்து உதறிப் பார்த்தாள். ஒரு சிறிய துண்டு காகிதம் கீழே விழுந்தது. அதில்...

"துப்பறியும் வீர சிங்கங்களே! இந்திர ஜாலம், மகேந்திர ஜாலம், முதலிய வித்தைகளைச் செய்து படே படே துப்புகளை நீங்கள் கண்டுபிடித்துவிட்ட பெருமையைத் தாளம்போட்டுத் தாண்டவமாடும் பத்திரிகைகள், தடபுடல் செய்து கொட்டை எழுத்துக்களில் கொட்டிப் பரப்பி உலகை ப்ரமிக்கச் செய்கிறார்களே! அதே சிங்கங்களுக்கு எதிரில் அவர்களே வெட்கித் தலைகுனியும் வண்ணம் அதைவிடச் சிறந்த மாயாஜால மந்திரங்களை எங்களாலும் செய்ய முடியும் என்பதை ப்ரத்யக்ஷமாகக் காட்டிவிட்டோம். இனியாவது உங்களையும் ஏய்க்கக்கூடிய சாமர்த்தியசாலிகள் புவியில் இருக்கிறார்கள் என்பதை நம்பி, அறிந்து மரியாதையாய் வீட்டுடன் கிடக்கலாம்... நாயுடுவின் அத்யாயம் முடிந்துபோயிற்று. உன் உயிர் பத்திரம்"...

என்று எழுதியிருந்ததைப் பார்த்ததும், மின்னும் கதிகலங்கி விட்டது. அதிர்ச்சியும், பயமும் ஒருபுறம் வதைத்தபோதிலும் இவளை யறியாத வியப்புடன் கடகடவென்று ஒரு ஆவேசச் சிரிப்பு வந்தது.

ஏகாம்:—பலே! கற்றாரைக் கற்றாரே காமுறுவர்...பாம்பின் காலை பாம்பே அறியும்...என்கிற பழமொழி சரியாகவிருக்கிறது. அவன் தீய வழியில் காரியம் செய்தாலும் ஆச்சரியப்படத்தக்கதை நாம் பாராட்டியே தீருகிறோம் அல்லவா?...எத்தனுக்கும் எத்தனாகவன்றோ இவர்கள் வேலை செய்கிறார்கள். இப்போது நாம் என்ன செய்யலாம் என்கிறாய்?...என்றார்.

அம்புஜம் வெகு சுறுசுறுப்புடன் அந்த மூட்டையிலிருந்த கந்தைகளை அவிழ்த்து அதில் எங்கேனும் வண்ணார முத்திரை இருக்கிறதா என்று பார்த்தாள். எந்தவிதமான முத்திரையுமே காணப்படவில்லை. அந்த மூட்டையிலிருந்த துண்டு கடிதத்தையும் இதற்குமுன்பு வந்த கடிதங்களையும் சேர்த்து ஒத்திட்டுப் பார்த்தாள்.

அக்கடிதங்களில் காணப்பட்ட கரி முத்திரை இக்கடிதத்தில் இல்லை. கையெழுத்தும் வேறு மனிதருடையதாகவே தெரிந்தது. அப்போதே

எழுதி இங்கி உலராத கடிதமாகவே இதுவும் காணப்பட்டதால் எத்தனை சாமர்த்தியக்காரனுகவிருந்தால் இம்மாதிரி நம்மையே ஏய்த்துக் கூத் தடிக்கிறன்? என்று அம்புஜத்தின் வியப்பு கரைபுரண்டது. நாயுடுவைக் காணவில்லை என்கிற செய்தி போலீஸாருக்குத் தெரிந்துவிட்டதால் ஒரே குழப்பமும் குசமசவென்ற பேச்சுக்களும் பயமும்கூட உண்டாகி விட்டன. இத்தகைய நாயுடுவுக்கே சரியானபடி கடுக்காய்க் கொடுத்து ஏமாற்றும் குரப்புலிகள் நம்மை என்ன செய்துவிடுவார்களோ! நாயுடுவுக் காக நாம் பாடுபடுகிறேம் என்பதை யறிந்ததும் எங்கே தங்களையும் தூக்கிக் கொண்டுபோய் விடுவார்களோ! அன்றி, கொன்றுதான் போடு வார்களோ! அதுவுமன்றி கை கால்களை உடைத்து முடமாக்கிவிட்டுத் தமது பழியைத் தீர்த்துக்கொள்வார்களோ என்கிற எண்ணங்கள் அவர்களை உலுக்கவாரம்பித்தன.

வெகு தீவிரமாக யோசனை செய்த அம்புஜம் ஒருவிதமான முடிவுக்கு வந்தவளாய் ஏகாம்பரத்தின் காதோடு முக்கியமான ரகஸ்யத்தைச் சொன் னள். அதைக் கேட்ட ஏகாம்பரம் பரம த்ருப்தியும் நம்பிக்கையும் கொண்டு மற்ற போலீஸ்காரர்களுக்கு ரகஸியமாக இதைத் தெரிவித்தார்.

இதைக் கேட்ட எல்லோரும் கடகடவென்று சிரித்தார்கள். இது காறும் கவலையில் தோய்ந்து கிடந்த அவர்களின் முகத்தில் பரம சந் தோஷம் உண்டாகி மலர்ந்தது. என்னவிருந்தாலும் துப்பறியும் விஷயம் சாமான்யமல்ல. அதொரு தனித்த கலைதான்—என்பதை அறிந்து எல் லோரும் வியந்தார்கள்,

பைத்தியக்காரர்களை ஆஸ்பத்திரிக்காரர்கள் அழைத்துக்கொண்டு போகும்படியும் இது விஷயமான சகல தகவல்களையும் தாங்கள் கண்டு பிடித்துச் சொல்வதாயும், நாயுடுவைக் காணவில்லை என்கிற விஷயத்தை மட்டும் தயவு செய்து வெளியிடக் கூடாதென்றும் அம்புஜம் ஆஸ்பத்ரி அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டாள். அவர்களும் ஆமோதித்துப் பயித்தி யங்களை லாரியில் அழைத்துச் சென்றனர்கள்.

அவர்களுக்குமட்டும், இந்த சிக்கலான விஷயம் எப்படித்தான் கண்டு பிடிக்கப்படப் போகிறது என்கிற சந்தேகம் வேலை செய்யாமலில்லை. ஆஸ்பத்திரியின் பெரிய டாக்டர் தாம்மட்டும் இந்த அரிய விசித்திரங்களைப் பார்க்கவேண்டுமென்கிற அபாரமான ஆசை அடித்துக் கொண்டதால் அம்புஜத்தினிடமே தன்னையும் கூட இருக்க அனுமதிக்க வேண்டும் என்று வேண்டிக்கொண்டார். அம்புஜம் அதற்கிசைந்தாள். அந்த இடத்தில் நிச்சப்தம் குடிகொண்டது.

## 24

அதி வேகமாக ரிக்ஷாவை இழுத்துச்சென்ற வண்டிக்காரனுக்கு இந்துமதியின் பரிதாபத்தை அறிய அவளையறியாத ஆசை பிறந்தது. உலகத்தில் அநேகம்பேர்களுக்கு இத்தகைய குணம் இருப்பதை ப்ரத்யக்ஷ மாகப் பார்க்கிறேம். தமக்குச் சம்மந்தமில்லாத விஷயமாயிற்றே?



இதில் நாம் ஏன் ப்ரவேசிக்கவேணும், என்கிற யோசனைதான் இல்லையோ, அன்றி வம்புப்பேச்சில் ருசிகண்டதன் பலனோ—தெரியாது. பெரும்பாலோர் பிறர் விஷயங்களில் தலையிட்டு, சிலர் பெரிய விபத்தையே விளைவித்துவிடுகிறார்கள். சிலர் தம்மையறியாத ஒரு துளி நன்மையும்செய்துவிடுகிறார்கள். பிறர் விஷயத்தில் தலையிடுவதில்லை என்கிற அரிய குணம்

மக்களிடத்தில் வ்யாபித்துவிட்டால் அதிகமான சச்சரவுகளுக்கே இடம் இல்லாதுபோகுமல்லவா !

வண்டியையும் இழுத்து, ஊர் வம்பையும் இழுத்துக்கொண்டு போவதில் ரிக்ஷாக்காரன் கண்டுள்ள ருசி அவனுக்கல்லவா தெரியும்? அந்த ஆசையை அவன் எப்படி விடுவன் பாவம் !...உபாத்தியாயினிக்கு அவன் அடிக்கடி வண்டி இழுக்கும் வாடிக்கைக்காரனுகையால் அவன் சற்று சுதந்தரமாகவே பேசுவது வழக்கம். அதேபோல்......"எம்மா வாத்யாரம்மா ! இந்த காயற வெய்யல்லே நான்தான் இந்த சாண்வயத்துக்காவ நாயாட்டம் ஓடி உழைக்கணும்னு இந்த எங் தலே எயுத்து. இந்த அழவான கொயந்தே எம்மா இப்படி காலு பத்திக்க, தலெ வெடிக்க வரணம். பெத்தவங்க இப்படிகூட அனுப்புவாங்களாம்மா...ஏன் இந்த கொயந்தே இப்பிடிப் பயந்து அயுவுது?"...என்ருன்.

நல்ல விவேகமும் கூர்மையான புத்தியும் உடைய இந்துமதிக்கு இவனுடைய கேள்வி சற்றும் பிடிக்கவில்லை. உபாத்தியாயினி பதில் சொல்வதற்கு முன்பே தானுகப் பேசத்தொடங்கி..."ஏன்டாப்பா! வண்டியிழுக்கும் பாரத்தைவிட என் விஷயம் அறியாத பாரம் உனக்குத் தலைச்சுமையாக இருக்கிறதாப்பா! இந்த வீண் கவலையை விட்டுவிட்டு உன் காரியத்தை நீ செய்துகொண்டு போவாயானல் உனக்கு இன்னும் கொஞ்சம் வருமானம் கூட வரும். பிறர் விஷயத்தில் தலையிட்டு அந்த அரிய நேரத்தை நீ ஏன் இழக்கவேண்டும்? உன் வேலையைப்பாருடாப்பா!" என்ருள்.

வண்டியிழுக்கும் வீராசாமி மிக்க வியப்புடன் வண்டி இழுப்பதையும் நிறுத்திவிட்டுத் திரும்பி இந்துவின் முகத்தை ஏற இறங்கப் பார்த்தான். தாயே! நீ வயசுலே சிறுசானுலும் பேச்சிலே ப்ரமாதமாயிருக்கயேம்மா......நான் நாயிபேல ஊர் சுத்ர கயிதேம்மா. வண்டி இஸ்த்து பொயக்கரவன். இருந்தாலும் ஏதோ ஒலகம்போற விபரீதத்தேப்பாக்காமே கண்ணே மூடிக்கிட்டு இருக்க அத்தனே புத்தி எனக்கு ஏதம்மா? இப்படி நான் எதுக்குக் கேட்டேன் தெரியுமா?

போனவாரம் ஒரு பொம்பளே பாவம்! ஏழெயாம். புருசன் செத்துட்டானும். நாலு கொயந்தே இருக்குதாம், யாரோ சினிமாக்கார சோதா அந்தம்மாளுக்கு தூபம்போட்டு அப்படி, இப்படின்னு பேசி ஆசையே உண்டாக்கி சினிமா கம்பெனிக்கு இயித்துகினுபோயி அவளே கேவலம் மிருகத்தை நடத்தறமாதிரி நடத்தப் பாத்தாங்களாம். அந்தம்மா சொல்லாமெ, செத்தேன் பொயச்சேன்னு ஓடியாந்தாங்க பாரு...யம்மாடி! உசிரு பூடுமோன்னுகூட பாத்தேன். நான்தான் அந்தம்மாளே ஏத்திகினு போயி ஊட்டெ உட்டுட்டு—இனிமே இப்படி சோதாப் பசங்களே நம்பாதே தாயின்னு சொல்லிபுட்டுவந்தேன். அதனுலேதானுங்க இப்பிடி கேட்டேன்...

என்று பேசுவதைக் கேட்கக்கேட்க இந்துவின் உடல் பற்றி எரிவது போல் சித்திரவதை செய்தது. இவன் சாதாரணமாக ரிக்ஷாமட்டும் இழுக்கவில்லை. ஊர் விஷயங்களையும்கூடச் சேர்த்து இழுக்கிருன். இதனுல் சாதகம், பாதகம் இரண்டும் இருக்கும். ஆகையால் தற்போதிய தனது

நிலைமை எத்தையுமே சொல்லக்கூடாது என்று தீர்மானித்து உபாத்தியாயினியிடமும் அதையே ஆங்கிலத்தில் சொல்லிவிட்டாள்.

இதற்குள் வண்டி வாத்தியாரம்மா வீட்டுவாசலில் வந்து நின்றது. இருவரும் இறங்கி உள்ளே சென்றார்கள்... உபாத்தியாயினியிடம் தனி அறையில் சென்று தன்னுடைய துக்கம்தீர நடந்த வ்ருத்தாந்தங்களை அப்படியே சொல்லி "தாயே! என்னை நீங்கள்தான் காப்பாற்றவேணும். இந்த அக்ரமத்தை என்னால் பொறுக்கமுடியவில்லை. என்னை மனங் கூசாது விற்று கைநிறைய 50 ஆயிரம் ரூபாய் வாங்கிக்கொண்டு படுகுழியில் தள்ளத் துணிந்தவர்கள்,—என்னைப் படிக்கக் கூடாதென்றும் பாட்டு கற்றுக்கொள்ளக்கூடாதென்றும் எத்தனைதான் இட்டியும் வசைகளை பாணம்போல் ப்ரயோகித்தும் என்னைச் சித்திரவதை செய்த பாதகத்தை என்னால் நினைக்கவே முடியவில்லை. டீச்சர்! என்னைக் கைவிடாது காப்பாற்றவேண்டும். நான் என் தாயாரை எப்படியும் சண்டை போட்டாவது அழைத்துக்கொண்டு வந்துவிடுகிறேன். எங்களைக் காப்பாற்ற வேண்டும்" என்று கல்லும் கரையும்படி வேண்டினாள்.

அதிசயத்திலும் அதிசயமான இந்த விஷயத்தைக்கேட்ட அவளது மனது கரைந்தது. பாழும் சினிமா, உலகில் தோன்றியது முதல் அதன் நன்மைகளை விரல்விட்டு எண்ணிவிடலாம், ஆனால் அது செய்துள்ள தீமைகளோ—அப்பப்ப! சமுத்திர மணலை எண்ணினாலும் எண்ணலாம், அந்த அக்ரமக் கொள்ளையை எண்ணவே முடியாது. முக்கியமாக, கலையின் பெயரால் துடங்கிய சினிமா, கொலைகள்தான் செய்துவருகின்றது. உண்மையில் உயிர்க் கொலை செய்துவிட்டாலும் பரவாயில்லை. மக்களின் உயிர்நாடியான சத்தியம், தருமம், கற்பு, ஒழுக்கம், ஆசாரசீலம், கட்டுப்பாடு, அவரவர்களின் கடமைகள், தெய்வபக்தி, முதலிய சகல அம்சங்களையும் கொலைசெய்து சமூகத்திற்கே இழுக்கை உண்டாக்கி சந்தி சிரிக்கச்செய்வதைத்தான் காண்கிறோம்.

இந்தப் பாழும் மோகத்தில் அடிமையான எத்தனை ஆண்களின் குடும்பங்கள் திண்டாடுகின்றன தெரியுமா! எத்தனை எளிய பெண்களின் வாழ்க்கை பலியாகிவிட்டது தெரியுமா? சில கயவர்களின் மோக வெறிக்கு உள்ளாகி ஜென்ம ப்ரஷ்டர்களாகத் திரியும் எத்தனை நடைப் பிணங்களை நாம் பார்க்கிறோம். சினிமாவில் சேர்ந்த தலைக்கிறுக்கில் பெத்த தகப்பனை சந்தியில் விட்ட பெண்கள் எத்தனைபேர்! பெத்த தாயை நடுத்தெருவில் நிறுத்திய மங்கையர் எத்தனைபேர்!... கட்டிய கணவனை வெறுத்துச் சென்ற நாசகாலிகள் எத்தனைபேர்! த்ருசங்கு சொர்க்கம் போல் சொந்தக்காரர்களையும் வெறுக்கச்செய்து, மயக்கி நாசம் செய்தவர்களும் காரிஉமிழ்ந்து சீ கொட்டித் துரத்திவிட்ட கழுதைகள் எத்தனை பேர்கள் தெரியுமா? இந்துமதி! இத்தனை சிறுவயதில் உனக்கு அபாரமான ஞானமும், ஒழுக்கமும், எது நன்மை, எது தீமை என்று பகுத்தறிந்து அதை உறுதியுடன் நடத்தும் சக்தியும் வாய்ந்திருப்பதை வெகு வெகு வியப்புடனும், சந்தோஷத்துடனும் வரவேற்கிறேன். எது எப்படியானாலும் சரி: உன்னை மோசம்செய்து உன் வாழ்நாளை பாழாக்கத்

துணிந்த, உன் சொந்தக்காரர்கள் என்று பெயர் வைத்துக்கொண்டு செய்த அக்கிரமத்தை நான் சந்தியில் இழுத்துவிட்டு அவர்களை ஒரு ஆட்டு ஆட்டாது போவதில்லை.

என்னுடைய தங்கை வக்கீலாக இருக்கிறாள். தம்பியும் ஒருவன் வக்கீல். தங்கையின் கணவர் ஜட்ஜா உத்யோகம் பார்க்கிறார். அவர்களிடம் இவ்விஷயங்களைக்கூறி இதற்கு எப்படி நடவடிக்கைகள் எடுக்கலாம் என்று விசாரித்துக் கட்டாயம் செய்கிறேன். நீ பயப்படாதேம்மா!

இத்தனை சிறிய வயதில் நீ அந்த சினிமாவின் பயங்கரத்தை அறிந்து தப்பித்துக்கொண்டாய். மூடப்பெண்கள் சினிமாவின் தடபுடல் பகட்டிலும் அல்ப ஆசையிலும் மோகம்கொண்டு விளக்கில் விழுந்து இறக்கும் விட்டில் பூச்சியைப்போல் அவர்கள் தாமாகவே வலியவந்து விழுந்து மாள்வதையும் நான் ப்ரத்யக்ஷமாகப் பார்த்திருக்கிறேன். என்னிடத்திலேயே படித்த இரண்டு பெண்கள் சினிமாக்காரிகளின் நேசத்தை வெகுவெகு உயர்வாயும், சொர்க்கபோகமாயும் எண்ணிப் பழகியதின் பலன் அவர்களுடைய வாழ்க்கையே நிர்மூலமாகியதோடு வ்யாதிப்பிண்டமாகி இப்போது வெளியில் தலைகாட்டாமல் மூலையில் முடங்கிக் கிடக்கிறார்கள். ஒருவாய் கஞ்சிக்குப் பறக்கும் பரிபவத்தைப் பார்த்தால் எனக்கு ஆத்திரம் வருகிறதேயன்றி பச்சாதாபமே உண்டாகவில்லை.

இத்தகைய படுமோசமான உலகத்தில் நீ இம்மாதிரி சாமர்த்தியமாய் வந்ததைப்பற்றி நான் எத்தனை புகழ்ந்தாலும் போதாது. நீ சற்றும் பயப்படாதே, தைரியமாயிரு. நான் இப்போதே உன் தாயார் வீட்டிற்குப்போய் அந்தம்மாளை அழைத்துக்கொண்டு வந்துவிடுகிறேன். அவர்களைக்கொண்டே இந்த விஷயத்திற்கான குற்றச்சாட்டு எழுதச்செய்கிறேன். யார் வந்தாலும் நீ பயப்படாமல் தைரியமாயிரு." என்று கூறித் தேற்றிவிட்டு வெளியே சென்றாள். இதுவும் ஒரு அம்சத்தில் நல்லதாகவே தோன்றியதால் இந்துமதி தைரியத்துடன் அவர்களை யனுப்பிவிட்டுத்தான் உட்கார்ந்திருந்தாள். எனினும் மனம்மட்டும் நிம்மதிகொள்ளாது அலைந்தது.

## 25

எங்கும் இருள் சூழ்ந்துவிட்டது. நாயுடு வீட்டின் வாசலில் சற்று தூரத்திலிருந்து சிலர் மட்டும் எட்டிப்பார்த்துக்கொண்டு குசுகுசுவென்று பேசியவாறு 'இதென்ன கண்கட்டு வித்தையாகவிருக்கிறதே!' என்று வாய்விட்டு ஒருவன் மெல்ல சொல்வதை அருகிலிருந்த மற்றொருவன், "நானும் அதைத்தான் பாக்கறேன்"... என்றான்.

நாயுடுவின் வீட்டுமாடி வராண்டாவில் மேஜையின் அருகில் வழக்கம்போல் அவர் உட்கார்ந்து அம்புஜத்தினிடம் பேசுவதைப்பார்த்த பிறகு எதிரிகளுக்கு வியப்பும் அதிர்ச்சியும் உண்டாகாமல் வேறு என்னதான் தோன்றும்? அந்த நேரத்தில் இரண்டு பிச்சைக்காரர்கள் "தாயே! ராப்பிச்சையம்மா! சந்திப் பிச்சைத்தாயே...பசி உசிர்போவுது தருமப்ரபுவே!" என்று வீதியோடு கூவிக்கொண்டு வந்தார்கள்.

ஏற்கெனவே நாயுடு வீட்டைப்பார்த்து கதிகலங்கிப்போய் நிற்கும் ஆசாமிகளின் எதிரில்வந்து "தர்மதேவதே!...பசி பொறுக்கலே, ஐயா, கொயந்தை களெச்சிப்போவுதுங்க. ஏதாச்சும் தர்மம் பண்ணுங்கசாமி." என்று அவர்கள் காதருகில் கத்தினார்கள்.

அந்த மனிதன் மிகுந்த ஆத்திரத்துடன், "சிச்சீ! பிச்சைக்காரப் பிணமே...நடுத்தெருவில் தொந்தரவு செய்கிறாயா...பீடையே!"...என்று சிள்ளென்று அதட்டினான். பிச்சைக்காரர்களின் பசிக்கொடுமையில் அவர்களுக்கு இந்த கிராதகர்களின் சதியாலோசனை என்ன தெரியும்? பாவம்! திரும்பத்திரும்பக் கேட்டுத் தம்முடைய கூக்குரலைக் கிளப்பினார்கள். அதே சமயம் எதிரில் மாடியில் நாயுடுவும் அம்புஜமும் உட்கார்ந்திருப்பதைப் பார்த்ததும், இன்னும் உரத்த குரலில் "தாயே...அம்மா... அப்பா...பசி உயிர் போறதே...ஏதாவது கொடுக்கக்கூடாதா?" என்று மாடியை நோக்கி இவர்கள் கத்துவதைக் கண்ட அவர்கள் ஒருவரையொருவர் முகத்தைப் பார்த்துக்கொண்டார்கள்.

"சமயத்திற்குச் சனியன்போல் எங்கிருந்து வந்து சேர்ந்ததுகள்? இந்த தரித்திரங்களைக் கத்தவிடாது அப்படி மறைவாக இழுத்துக்கொண்டு போய் கையில் ஏதாவது காசைக்கொடுத்துத் துரத்திவிட்டுவா. அதற்குள் நம்ம ஆள் கடங்கிலிருந்து வருகிறானா பார்க்கலாம்." என்று இந்துஸ்தானியில் ஒருவன் சொன்னான். மற்றவன் அப்படியே அவர்களைத் திட்டியவாறு இழுத்துக்கொண்டுபோய் ஆளுக்கு ஒரு ரூபாய் கொடுத்து "இந்தாருங்கள். இங்கு இனி தொந்தரவுசெய்து கூச்சலிட்டால் உங்களைத் திருடர்கள் என்று போலீஸாரிடம் பிடித்துக் கொடுத்துவிடுவேன். போய்விடுங்கள்... என்று சற்று மிரட்டிய குரலில் சொன்னான்.

அதற்கந்த பிச்சைக்காரன், "ஐயோ! எங்களே ஏஞ்சாமி திருடன்னு போலீஸ்காரன்கிட்டே புடிச்சி தருவே? உளுமையா திருடரவங்களே பத்திரமா ஆதரப்பீங்க. நிரபராதிங்களே புடிச்சுதருவீங்களோ. இதான் ஒங்க தொழிலா சாமி! ஏதோ வயித்துப்பசி கொடுமேலே கையை நீட்டி ஒரு தம்பிடியோ ஒருவாய்சோறோ பிச்சை எடுப்போமே த்விர எங்க காலுலே ஒட்ர தூசிகூட திருடாது சாமீ!...அதோ தருமராஜா மெத்தெலே ஒக்காந்திருக்காரே! அவரு எங்க வயித்துப்பசியே அறிஞ்சு தெனம் ஒரு கவளம் சோறுபோடுவாரு. கந்தெ குடுப்பாரு. அந்தம்மா மவாலச்சுமி, பசின்னா பாக்கமாட்டாங்க. தன் எலெ சோத்தை இயுத்து இந்தாடி! தின்னு'ன்னு போடுவாங்க. அதான் அவங்களே கூப்பட்ரேன்"

என்று நியாயம்பேசுவதைக் கேட்ட அம்மனிதனுக்கு ஆத்திரம் பீறிக்கொண்டு வந்தது. "சேச்சே...பிச்சைக்காரப் பீடைகளுக்கு நியாயமாம். நீதியாம். பேச வந்துவிட்டீர்கள்...போ! போ"...என்று சீறியவாறு துரத்திவிட்டுப் போய்விட்டான்.

பிச்சைக்காரர்கள் பாவம்! வேறு எதுவும் பேசாமல் மவுனமாக நாலைந்து வீடுகளைத் தாண்டிச் சென்றார்கள். இவர்கள் ஒழிந்த சில விநாடிக்குள் மற்றும் இரண்டு பிச்சைக்காரக் கிழங்கள் நடுங்கும் குரலும்,

நரைத்த தாடியும், கூன் வளைந்த முதுகும், கையில் கோலுமாக வந்து "தர்மப்ராபூ...பசி உசிர் போவுதே!" என்று கத்தினார்கள். இதைக் கண்ட அவர்களுக்குக் கோபம் ப்ரமாதமாக வந்தது.. "தரித்திரமூதேவிகள். கடங்குக்குப்போன ஆள் திரும்பிவந்து நம் காரியம் முடிவதற்குள் இந்த பிச்சைக்காரப் பீடைகளின் உபத்திரவம் சகிக்கமுடியவில்லையே...நாம் கை கால்களைக்கட்டி கோணியில் போட்டு மேலேயும் கட்டி உருட்டியிருக்கையில் எப்படித்தான் அந்த மனிதன் தப்பித்துக்கொண்டு நம்ம கண்ணில் மிளகாயைத் தூவிவிட்டு இங்கு மாடியில் ஜம்மென்று நிர்ப்பயமாக உட்கார்ந்திருக்கிருன். இந்த மந்திர ஜால கண்கட்டு வித்தையின் மர்மம் எனக்குச் சற்றும் தெரியவில்லையே. உலகத்திலேயே கண்டிராத அதிசயமாகவன்றோ இது இருக்கிறது. முதலில் இந்த கிழப்பிணங்களைத் துரத்திவிடு. உடனே நான் அந்த காம்பவுண்டிற்குள்போய் ரிவால்வரால் சுட்டுவிட்டுத் தப்பித்துக்கொள்கிறேன். நீயும் உடனே தப்பித்துக்கொண்டு நமது பழய ரகஸிய இடத்திற்குவந்து சேர்ந்துவிடு. இனி தாமதித்தால் காரியம் கெட்டுவிடும். இந்த நாயுடு அசகாய சூரன் என்பதை அறிந்தும் நாம் அஜாக்ரதையாக இருக்கக்கூடாது. இவன் இங்கு உட்கார்ந்தபடியே நம்முயிருக்கு உலைவைத்திருப்பான். இந்த பிச்சைக்கார சனியன்களை உடனே துலைத்து விடு!'...என்று ஆங்கில பாஷையில் ஆக்ரோஷத்துடன் கூறினான்.

இதைக் கேட்ட மற்றொருவன் வெகு அலக்ஷியமாயும், சீற்றத்துடனும் "ஏய்...கிழப் பீடைகளே! உங்களுக்குப் பொழுதுபோகவில்லை என்றால் எங்காவது விழுந்து சாகிறதுதானே! ஏன் எங்கள் ப்ராணனை வாங்கி எங்கள் வேலையைக் கெடுக்கவேண்டும்?" என்று கூறியவாறு அவர்களை சிறிது தூரத்திற்கு இழுத்துக்கொண்டுபோக எண்ணி, இப்படி வந்துதுலையுங்கள், என்று கூப்பிடும்போது இரண்டு பிச்சைக்கார கூனக் கிழங்களும் "ஆகா......இதோ வருகிறோம்." என்று கூறியவாறு கூனை சடக்கென்று நிமிர்த்திக்கொண்டு தாடி, மீசை முதலிய சகல வேஷங்களையும் களைந்து எறிந்துவிட்டு கருக்காக மீசையை முருக்கிக்கொண்டு இன்ஸ்பெக்டர் ஏகாம்பரமும், துப்பறியும் வீரசிங்கம் நாயுடுவும் கம்பீரமாக நின்று இவ்விருவரையும் ஒரு க்ஷணநேரத்தில் பிடித்துக்கொண்டு விசில் அடித்தார்கள். அடுத்த க்ஷணத்திற்குள்ளேயே வசவசவென்று பல போலீஸ்காரர்கள் எப்படித்தான் வந்தார்களோ தெரியவில்லை—இவர்களைச் சூழ்ந்துகொண்டு இவர்களிடம் இருந்த துப்பாக்கியைப்பற்றிக்கொண்டு... "டேய்! கேடி! உன் முதுகு கோணல் உனக்குத் தெரியாமல் எகிறித் துள்ளுகிருயா...உம். இனி நாயுடுவைச் சுட்டுக்கொல்லு பார்க்கலாம்." என்று ஏகாம்பரம் கர்ஜனை செய்தார். நாயுடுவும் கடகடவென்று சிரித்தார்.

ஒன்றுமே புரியாது திடீரென்று எரிமலையே தலையில் விழுந்துவிட்டது போன்ற மகத்தான அதிர்ச்சியுடன் நிற்கும் இவர்களுடைய கதி கலங்கி விட்டது. தாங்கள் இந்த உலகத்தில்தான் இருக்கிறோமா! என்பதுகூட மறந்து ஒரே திகைப்பு, மயக்கம், உண்டாகி மூச்சே நின்றுவிட்டதுபோலாகியது.

அதே க்ஷணம் முதலில் வந்த இரண்டு பிச்சைக்காரர்களும் எதிரில் வந்து நின்று கடகடவென்று சிரித்தவாறு பிச்சைக்கார உடையைக் களைந்துவிட்டு அம்புஜமும் அவள் கணவனும் நிற்கிருர்கள். மாடியில் ஒரு நாயுடுவும் அம்புஜமும் உட்கார்ந்திருக்கிருர்கள். இந்த நம்பமுடியாத காட்சியைக் கண்டதும் அவர்களுக்கு மூளையே கலங்கிவிட்டதெனலாம் "ஹா... அதோ நாயுடு!...இதோ நாயுடு......அதோ அம்புஜம்......இதோ அம்புஜம்!''...என்று தம்மை மறந்து கூச்சலிட ஆரம்பித்தார்கள்.

கண்ணிமை இசைப்பதற்குள் மாடியிலிருந்த விளக்குகள் அணைந்தன. அடுத்த க்ஷணமே அங்கு உட்கார்ந்திருந்த நாயுடுவையும் காணவில்லை. அம்புஜத்தையும் காணவில்லை. மீண்டும் விளக்குமட்டும் ப்ரகாசமாக எரிய ஆரம்பித்தது. நாயுடுவின் உண்மை ஊழியர்கள் இவரைக் கண்டதும் "ஹா...எஜமான்! எஜமான்...நீங்க கடவுள் கிருபையால் பொழைச்சி வந்தீங்களா...எஜமான்!'...என்று நடுவீதி என்பதைக்கூட மறந்து காலில் விழுந்து வணங்கித் தமது அன்பைத் தெரிவித்தார்கள்.

நாயுடு எல்லோரையும் அழைத்துக்கொண்டு வீட்டிற்கு வந்தார். இந்த ஆச்சரியமான விஷயத்தைக் கண்டு ஏகாம்பரமும் ஆஸ்பத்திரியின் அதிகாரியும் வெகுவெகு வியப்புடன் ப்ரமித்தார்கள். நாயுடு எப்படி அவர்கள் கையில் சிக்கினர் என்பதையறிய ஆவலுடன் அவரைக் கேட்டார்கள். இவர்களுக்குமேல் அம்புஜம் ஆவலுடன் துடிதுடித்தாள். எல்லோருடைய ஆவலும் நாயுடுவின்மீது பாய்ந்து நிர்த்தனம் செய்தது.

—o—

## 26

திக்கு திக்கு என்று அடித்துக்கொள்ளும் பயத்துடன் உட்கார்ந்திருக்கும் இந்துமதி ஏதேதோ பலமான யோசனையில் ஆழ்ந்திருந்தாள். அச்சமயம் யாரோ கதவை இடிக்கும் சத்தங்கேட்டு உள்ளுக்குள்ளிருந்தபடியே ஜன்னலால் எட்டி வீதிப்பக்கம் பார்த்தாள்.

அவ்வளவுதான். அவள் குலை நடுங்கி தீயை மிதித்தவள்போல் துள்ளுகிருள். வெயர்வை வெள்ளம் நெருப்புபோல் சுட்டவாறு குபீரென்று பொங்கி வழிந்து ஓடுகிறது. வீதியில் தன் மாமனும் அந்தச் சினிமா மைனரும் கதவை பலமாகத் தட்டுகிருர்கள். தனக்கு ஏதோ மறுபடியும் விபரீதமான தீங்குதான் வந்துவிட்டது என்கிற நடுக்கல் சிறுமியின் இதயத்தைச் சுக்கல் சுக்கலாகச் சிதறவடித்தது. இந்த வீடே அவளுக்குப் புதியதாகையால் "எப்படி ஓடி ஒளிந்து தப்பித்துக்கொள்வது, இந்த கிராதகர்களின் கையிலகப்படாது எப்படி போகமுடியும்?' என்று தத்தளிக்கிருள்.

கதவை இடிக்கும் இடிப்பில் அக்கம்பக்கம் உள்ளவர்கள் யாராவது வந்துவிடப்போகிருர்களே! என்கிற பயம் வேறு பாதித்ததால் க்ஷண நேரம் தம்பித்தாள். பிறகு தன் குரலை முற்றிலும் மாற்றிக்கொண்டு கட்டையாய் அடி குரலால் வேலைக்காரி பேசுவதுபோல்...யாருங்க... இப்பிடி

கதவெ ஒடிக்கிறீங்க. வாத்தியாரம்மா வெளிலே போயிருக்கிறாங்க. நானு எண்ணெதேச்சிகினு எண்ணெ தலெயோடெ இருக்கறேன்... சாயங்காலந்தான் அம்மா வருவாங்க அப்போ வாங்க. நீங்க யர்ருண்ணு சொல்லுங்க அம்மா வந்ததும் சொல்றேனுங்க...என்று சமயோசித சாமர்த்யமாகக் கூறினாள்.

அதற்கந்த மனிதன், "நாங்கள் மறுபடி சாயங்காலம் வருகிறோம். வாத்தியாரம்மாளிடம் இந்துமதியைக் காணவில்லையாம். தேடிக்கொண்டு. அவளுடைய மாமா வந்தார், நீங்கள் எங்காவது பார்த்தால் தயவுசெய்து வீட்டிற்குக் கொண்டுவிடும்படி நாங்கள் கேட்டுக்கொண்டதாகச் சொல்லு என்ன... நினைவிருக்குமா"...என்றான்.

மறுபடியும் இந்து குரலை மாற்றிக்கொண்டு "சொல்றேனுங்க... இந்துமதியா... அது யாருங்க...சின்னவங்களா பெரியவங்களா... கொயந்தெங்களா... ஏண்ணே, இப்பத்தான் நான் வேலேசேயற வீட்லேந்து வேலேயே முடிச்சிகிணுவர்ரப்போ ஏதோ ஒரு பொண்ணும் பெருமாள்கோவிலுக்கு எதிரே இருக்கர கொளத்துலே உயிந்திடுச்சாம்—என்னமோ சினிமாக்காரங்களாமே, அவுங்க இன்னமோ சேஞ்சாங்களாம் தெருலேபேசிகிறாங்க. என்வேலெலே அதெல்லாம் எங்கே கவனிக்கறதுண்ணு வந்துட்டேன்... ஒருவேளே நீங்க சொல்ரது அந்தப் பொண்ணு இருக்குமோ?

என்று இவள் இழுப்பதற்குள் "ஐயயோ! படுமோசமாயிருக்கிறதே ...என்று அவர்கள் கூறிக்கொண்டே காரில் ஏறிச்செல்லும் ஓசைகேட்டு இந்துமதி "அபாடா! இந்த கண்டத்திற்குப் பிழைத்தோம்" என்று எண்ணி பெருமூச்சுவிட்டாள். பின்னும் சற்றுநேரத்திற் கெல்லாம் வாத்தியாரம்மாள் வந்தார்கள். அவர்களுடன் தன் தாயாரைக் காணாது வியப்புடன், "அம்மா வரவில்லையா டீச்சர்!" என்று கேட்டதோடு இங்கு நடந்த விஷயங்களைக் கூறினாள்.

உபாத்தியாயினி இந்துமதியின் சமயோசித சாமர்த்யத்தைக் கண்டு பூரித்தவாறு அவள் முதுகில் தட்டிக்கொடுத்துப்பின், 'குழந்தாய்! உன் தாயாருக்கு உன்னுடைய சகல விருத்தாந்தங்களையும் கூறினேன். உன்னை அவர்கள் சினிமாவில் சந்தையில் வைத்து வ்யாபாரம் செய்யும் விஷயமே தெரியாதாம். உனக்கு விவாகத்தைச்செய்துவைப்பதற்காகவே இம்மாதிரி முயற்சிப்பதாயும் தன் பெற்றோர்கள் நன்மையைத்தான் செய்வார்கள் என்றும் நம்பி இருந்தார்களாம் பாவம்.!

இந்த அக்ரமத்தைக் கேட்டதும் அவர்களுடைய மனது வெடித்து இடி இடித்ததுபோலாகிவிட்டது. "ஐயயோ! அந்த ஒரு குழந்தையின் உயர்ந்த லக்ஷ்யத்தை எதிர்பார்த்தல்லவா என் வாழ்நாள் பூராவும் இவர்களிடம் அடிமைபோலாக்கிக்கொண்டு உழைத்துவருகிறேன். பணத்திற்காகவே கிழவனுக்கு என்னை விற்றார்கள். அதே பணத்திற்காக படுமோசமான சினிமாவிற்கா என் குழந்தையை பலிவாங்கத் துணிந்தார்கள்!" என்று கூறிக் கண்ணீர்விட்டார்கள் பாவம்.

உன் மாமன் வீட்டிற்கு வந்து எதையோ தேடுவதுபோல் தேடிச் சென்ற ரகஸ்யம் இப்போதுதான் தெரிகிறது என்று அங்கலாய்த்துப்

போகிறார்கள். என்னுடன் வந்துவிடும்படியாகக் கூப்பிட்டேன். தாங்கள் எத்தனை அராக்ருதம் செய்தாலும் அதை உலகம் அறியாதபடி தம்முடைய முரட்டுத்தனத்தினாலும் மறைத்துவிடுகிறார்கள். நான் வீட்டைவிட்டுச் சொல்லாமல் வந்துவிட்டால் அதைத்தான் மிகப் பெரிதாகப் புகார்செய்து மானத்தை வாங்குவதோடு திருட்டுப் பட்டத்தையும், கேவலமான இழிச் சொல்லையும் பட்டங்கட்டிக் கூசாமல் சந்தி சிரிக்க வைத்துவிடுவார்கள். என் குழந்தையின் க்ஷேமத்திற்காக நான் இன்னும் சற்று பொறுமையுடன் இங்கிருந்து அவர்களிடம் நேராகவே சொல்லிவிட்டு வந்துவிடுகிறேன் ஆத்திரப்படவேண்டாம் என்று சொன்னார்கள்.

அதுவும் வாஸ்தவமாகவே தோன்றியதால் நான் ஒப்புக்கொண்டேன். உன் தாயாருக்குள்ள விசனமும் ஏமாற்றமும் சொல்லிமுடியாது. பாவம்! உன் தாயாருக்கு மூத்த மனைவியின் மகன் ஒருவன் இருந்தானாம். இப் போது அவனைப்பற்றிய தகவல் ஒன்றுமே தெரியவில்லையாம். அவனைத் தேடிப்பார்த்து அவனிடம் உங்களைச் சேர்த்துவிடும்படி உன் தாயார் எத்தனை சொல்லியும் உன் தாதா 'அவன் மகா சோதா. வயதுவந்த நீயும் உன் மகளும் அவனிடமிருக்கக்கூடாது. இருந்தால் அவன் கெடுத்து விடுவான். அவனுடைய சகவாஸமே கூடாது.' என்று கண்டித்து உன் தாயாரின் வாயை அடைத்துவைத்த அதே மனிதர்கள் தாங்களே இம்மாதிரி கொடுமை செய்திருப்பதை காண எனக்குப் பொறுக்கவே இல்லையே, என்று உன் தாயார் கண்ணீர் விடுகிறார்கள். பாவம்... மூத்தாளின் மகனைப் பிரித்த பாவிகள் தாங்கள் எத்தகைய த்ரோகத்தைச் செய்துவிட்டார்கள், என்பதைக் கேட்க என்னுள்ளமும் துடிக்கிறது.

இந்து! நீ இங்கிருப்பதை வெளியில் சொல்ல வேண்டாம் என்று நான் சொல்லிவிட்டு வந்திருக்கிறேன். இனி உன்னை அந்தக் கயவர்க ளிடம் விடுவதில்லை என்பதை நான் உறுதி கூறுகிறேன். நீ கவலைப் படாதேம்மா!'' என்று தேற்றும்போது மறுபடியும் வாசலில் ஒரு மோட்டார் வந்து நின்ற சத்தம்கேட்டு திடுக்கிட்டு இந்து நடுநடுங்கினாள்.

இந்துவை தனியறையில் ஒளித்துவைத்துவிட்டு வாத்யாரம்மா கதவைத் திறந்தாள். இந்துவின் மாமாவும், சினிமா மைனரும் இறங்கி நிற்பதைக் கண்டு...“யாரு...என்ன சமாச்சாரம்?' என்றாள்.

ராஜசேகரன்:—தங்களுடைய வேலைக்காரியைப் பார்க்கவேண்டும். சற்றுமுன் வந்திருந்தோம். நம்ம இந்துவை உங்களுக்கு மறந்திருக்கா தல்லவா?......

உபா:—(சற்று அலக்ஷிய பாவத்துடன்) “இந்துவா!...அது யாரு?''...

ராஜ:—இதென்ன இதற்குள்ளாகவா மறந்துவிட்டீர்கள்? உங் களுக்கு மிகவும் பிடித்தமான மாணவியாயிற்றே. என் மருமானைத்தான் சொல்கிறேன்...

உபாத்:—சார்! மன்னிக்க வேண்டும். என்னிடம் ஆயிரக் கணக் கான மாணவிகள் படித்திருக்கிறார்கள். இன்னமும் படிக்கிறார்கள். அவர்களையெல்லாம் நான் நினைவு வைத்திருக்க முடியுமா! அதிலும் பள்ளிக்கூடத்தை விட்டுவிட்டபிறகு யாருமே எனக்குத் தெரிய நியாய

மில்லை. வகுப்பில் புத்திசாலிகளான பெண்களை நான் நேசித்ததுண்டு. ஏன்? இந்துவுக்கு என்ன விசேஷம்? மீண்டும் படிக்க வருகிறாளா...

ராஜ:—அதெல்லாம் ஒன்றுமில்லையம்மா... அவளை திடீரென்று காணவில்லை... சற்றுமுன் இங்கு வந்தோம். உங்கள் வேலைக்காரி, யாரோ ஒரு பெண் குளத்தில் விழுந்துவிட்டதாகப் புளுகினாள். அங்கு போய் விசாரித்தால் இன்று யாருமே விழவில்லை, என்று சொல்லிவிட்டார்கள். வேறு எந்த இடம், என்ன என்பதை விசாரிக்க வந்தேன்.

உபாத்:—என்ன!... இந்துவைக் காணவில்லை என்றால் என் வீட்டில் எதற்காகவந்து பார்க்கவேண்டும்? யார் எப்படிப்போனால் எனக்கென்ன? இந்த வீண் விவகாரத்திற்கெல்லாம் எனக்கு நேரமில்லை. தயவுசெய்து போய்வாருங்கள்- வேலைக்காரி வீட்டிற்குப் போய்விட்டாள்....என்று மிகவும் வெறுப்பும் அலக்ஷியமும், ஆத்திரமும் த்வனிக்கக் கூறினாள்.

இதைக்கேட்ட மைனர், ராஜசேகரனைப் பார்த்து ஒரு அலக்ஷிய முழி முழித்தான்...“உம்...இன்னும் எத்தனை வீடு ஏறி இறங்கப்போகிறாய். இந்த ஹம்பக்கை என்னால் சகிக்க முடியாது. உடனே உன் தகப்பனுருக்குத் தந்திகொடுத்து வரவழைக்கிறாயா... அல்லது நேராக ஆளையனுப்பி என் வேலையை நடத்தட்டுமா!” என்று அதிகாரத்துடன் கேட்டான்.

ராஜசேகரனுக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாது விழித்த வாறு பரிதாபமும் கெஞ்சுதலும் ததும்ப அவனைப் பார்த்தான். காரும் இதற்குள் கிளம்பிவிட்டது. வாத்தியாரம்மாளின் காது கேட்கவேண்டு மென்றே அந்த மைனர் இப்படி சொல்லியிருக்கிறான் என்பதை இந்துமதி யும் உபாத்தியாயினியும் உணர்ந்துகொண்டு சிரித்தார்கள்.

உபா:—இந்து! இந்த மனிதன்தானா சினிமாக்காரன்......இவனுக் கிருக்கும் ஆத்திரத்தைப் பார்த்தால் இப்போதே அவன் இந்த விஷயமாகப் பெரிய அமர்க்களம் செய்துவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பான்போல் தெரி கிறது. நாம் ப்ரவேசித்துச் செய்வதற்குள்ளேயே காரியம் பகிரங்கமாகி விடும்போல் தோன்றுகிறது. அதுவும் நமக்கு நல்லதுதான். இன்று என் தங்கையை வரும்படிச் சொல்லியனுப்புகிறேன். நீ கவலைப்படாது தைரி மாயிரு” என்று அவளைத் தேற்றினாள். தன் தாயார் இன்னும் வரவில் லையே! என்ன நடக்கிறதோ! அவள் எந்த கதியிலிருக்கிறளோ! என்கிற கவலைமட்டும் அவளை வாட்டி வருத்தியது.

## 27

“கிழக்குரங்குபோல் உட்கார்ந்திருக்கிறாயே! உனக்கு வெட்க மில்லை...மானமில்லை? கூத்தாடிப்பயல்களும், சினிமாக்காரிகளும் விழித்து விழித்துப் பார்த்துப் பல்லிளித்துக்கொண்டு போகும் இடத்தில் உட்கார்ந் திருக்க உனக்கு வெட்கமாயில்லை? உன்பேத்தியை எங்குதேடியும் காண வில்லை. இப்பொழுது என்ன செய்வது? அந்த எமகாதகச் சிறுக்கியை நான் வெறுமை விடப்போவதில்லை. ஒரு ஆட்டு ஆட்டித்தான் விடப்போ கிறேன். தெரியுமா? சனியன்பிடித்த மூதேவி போன இடந்தெரியாது

எங்கு எவனை இழுத்துக்கொண்டு ஓடிவிட்டதோ தெரியவில்லையே?''..என்று ராஜசேகரன் பல்லைக் கடித்துக்கொண்டு கேட்டான்.

கிழவியின் முகத்தில் சாணி அறைந்ததுபோல் அசடுவழிந்தது. சொலை சொலையாய் பணத்தைப் பார்த்தபோது இருந்த உத்ஸாகமும் சந்தோஷமும் இப்போது எங்குதான் ஓடி ஒளிந்ததோ தெரியவில்லை. தான் பெத்த மகளுக்கே தான் சத்துருத்தனம் செய்ததன் பலன் இப்போதுதான் நன்ருக மனத்தில் படவாரம்பித்தது. வயிற்றில் செய்யும் சங்கடத்தைச் சகிக்க மாட்டாது வெதும்பியவாறு தவிக்கையில் மைனர் அங்குவந்து "ஏய் .. பொழுது சாயும் நேரமாகிவிட்டது, உன் மனைவியின் நகைகளை அப்படியே கழட்டி வைத்துவிட்டுப் பிறகு வீட்டிற்குப் போய் நாளைக் காலையில் இங்கு வா! தெரிந்ததா...ஏ...கிழவி! உம். தாலி சரடுதவிர மற்றவைகளை மரியாதையாகக் கழட்டிவைத்துவிட்டு வீட்டுக்குப்போய் நாளை காலையில் இந்த பெரியவாளுடன் 8 மணிக்கு இங்கு ஆஜராகவேண்டும். தெரிந்ததா?...உம்...என்ன யோசிக்கிருய்?''..என்று வெகு அலக்ஷ்யமாகக் கூறினன். விதிப்பழம் வீதியில் வந்து விலைகூவியது என்ற கதையைக் கேட்டிருக்கிருளே யன்றி கிழவி பார்த்ததில்லை. தான் பெத்த பெண்ணையே கண்ணுக்கெதிரில் மனந்துணிந்து கிழவனுக்கு கல்யாணத்தைச் செய்துகொடுத்து அந்த பணத்திலை தான் செய்து போட்டுக்கொண்டு மினுக்கும் நகைகளை இன்று வழிப்பறிக்கொள்ளையைப் போல் வந்து கேட்கும் முடிவுகாலத்தைக் காணும்போதுதான் கிழவியின் சங்கடமும் அதிகரித்து எத்தனையோ வருஷங்களுக்குப் பின்னேக்கிச்சென்று உணர்ச்சி தாக்கியது. பானுமதி விதவையானதும் அவளுடைய பெரிய வைரக் கம்மலை கிழவி மனந் துணிந்து சில மாதங்களுக்குள்ளேயே தான் அணிந்துகொண்டு குலுக்கியதும், அப்போது ஊரார் கேலிசெய்ததும், பானுமதியின் சகிக்க முடியாத சங்கடமும் அவளுக்கு இப்போதுதான் நடப்பதுபோன்ற உணர்ச்சியுடன் வதைத்தது...கண்ணீரைத் துடைத்தவாறு, "அப்பா!... இதோ பாரு''...என்று மைனரிடம் ஏதோ பேசவாரம்பித்தாள்.

இதற்குள் மைனர்..."ஏய்...இதோ பார்க்கவும் வேண்டாம். அதோ பார்க்கவும் வேண்டாம். நேற்று 25 ஆயிரம் கொட்டிக்கொடுத்ததை எத்தனை குசாலாயும் சந்தோஷமாயும் வாங்கிக்கொண்டாயோ அத்தனை சந்தோஷமாயும் குசாலாயும் இப்போது கழட்டிவை...இல்லாவிட்டால் ஒரு நக்ஷத்திரத்தைக் கொண்டு கழட்டச் செய்வேன்......மைடியர் ஜில்லி! ...இங்குவா...இந்தப் பாட்டியம்மாளுக்கு நகைகளைக் கழட்ட மறந்து விட்டதாம்...எங்கே? நைஸாகக் கழட்டிக்கொடு''...என்ருன்...

நடிப்பதற்காகப் பவுடர் போட்டுக்கொண்டு நிற்கும் ஒரு ஷோக்கு ரம்பை துள்ளிக் குதித்து ஓடிவந்தாள். அவளுடன் கூடவே மற்ருெரு தளுக்கு சுந்தரியும் வந்தாள். கிழவியின் கைகளைப் பிடித்துக்கொண்டு அநாயாஸமாக வளையல்களைக் கழட்ட முயன்ருள். கிழவி திடுக்கிட்டு இடிந்துபோய், "ஐயோ!...இருடியம்மா...என் கையையும் சேர்த்து உடைக்காதே...இந்தா''...என்று மரியாதையாகத் தானே சகலத்தையும் கழட்டி வைத்துக் கையை நொறுக்கிச் சுடுக்கித் திட்டினள்.

அதே சமயம் ராஜாம்பாளின் நகைகளையும் தானே கழட்டி தட்டில் வைத்தாள்...மைனர் அவைகளை ஒருவாறு கணக்குப்போட்டு பார்த்ததில் 25 ஆயிரம் ரூபாய் இருக்காது என்று மதிப்பு தோன்றியதால் ராஜசேகரனின் மோதிரம், சங்கிலி, கடியாரம் முதலியவைகளுக்கும் உலை வைத்துப் பிடுங்கிக்கொண்டு "டேய்! உன்னை நம்பி உனக்கு நான் செய்த சகாயத்திற்கு நீ செய்த த்ரோகத்தை நான் சாமான்யமாக விடப்போவதில்லை. உன் தாயாரும் மனைவியும் வீட்டிற்குப் போகட்டும், நீ இங்கு தான் கிடக்கவேண்டும்...உம்...பாட்டீ! போ வீட்டிற்கு"...என்றான்.

ராஜசேகரனுக்கு ஆத்திரம் பீறிக்கொண்டு வந்தது. "டேய்! நாசகாலா...நீ கொடுத்த 25 ஆயிரம் ரூபாயிக்குமேல் மதிப்புள்ள நகைகளைக் கொள்ளையடிப்பதுபோல் பறித்துக்கொண்டது போதாமல் என்னையுமா சிறையில் வைப்பதுபோல் நீ வைக்கப்பார்க்கிறாய்? ஆகட்டும். இரு இரு...உனக்கு ஏதோ விநாசகாலத்திற்குத்தான் நீ இப்படிச் செய்கிறாய்" என்று கத்தினான். அதேக்ஷணம் கிழவியும் ராஜாம்பாளும் வெளியில் இழுத்துத் தள்ளப்பட்டார்கள். சேகரன் இருந்த அறைக்கதவு பட்டார் என்று சாத்தி மூடப்பட்டதுகண்டு துடிதுடித்தான். திக்கில்லாத தன் சகோதரிக்கும் அவள் மகளுக்கும் தாங்கள் செய்த த்ரோகத்தின் ப்ரதிபலன் இது என்பதை அப்போதும் அவன் உள்ளம் நினைக்கவில்லை. ஆத்திரம் பூராவும் இந்துமதியின்மீது தாவி அவளைக் கொலை செய்துவிடவும் துணிந்தது.

## 28

"**சா**ர்; தந்தி!" என்று இரவு நடுநிசியில் ஒரு குரல் கேட்டதும் ஏற்கெனவே தூங்காமல் தவித்துக்கொண்டிருக்கும் காமாட்சியம்மாளின் தலைமேல் இடி இடித்ததுபோலாகிவிட்டது. மாலை சினிமாக் கம்பெனியிலிருந்து வந்ததும், தான் பானுமதிக்கு என்ன பதில்சொல்வது என்று மனங் கலங்கினாள்.

காமாட்சியும், ராஜாம்பாளும் நகைகளே இல்லாது துடைத்துவிட்டது போல் வந்திருப்பதைக்கண்ட பானு தனக்கு எத்தகைய விஷயமுமே தெரியாது போல் நடித்து "இதென்னம்மா...நகைகள் எங்கே...இந்துவும் சேகரும் எங்கே...ஏன் ஏதோமாதிரி முழிக்கிறாய்?" என்று கேட்டாள்.

ஒரு மகத்தான விபத்திலிருந்து தப்பவும் சமயோசிதமான புத்தியும் சாதுர்யமும் வேண்டும். ஒரு பொய் மூட்டையை மறைக்கவும் சமயோசித சாமர்த்தியமும் சாதுர்யமும் வேண்டும். இவைகளின் நன்மை தீமைகளின் பலனை தக்கபடியே அனுபவித்துத்தான் ஆகவேண்டும் என்பதையறிந்தும் அந்த நிமிடத்திற்குத் தப்புவதையே ப்ரமாத வெற்றியாக எண்ணி மகிழ்வது மனித சுபாவத்தின் இயல்பான குணமாகும்.

அதை காமாட்சியம்மாள் மட்டும் கைவிடுவாளா!...ஐயயோ...பானு... நம்ம குடிக்கே அனர்த்தமும் பேராபத்தும் வந்துவிட்டது. நாங்கள் இந்துமதிக்காக ஒரு வரனை நிச்சயிக்கவேண்டிப் போனோமல்லவா...

போகும் வழியில் சில கொள்ளைக்காரர்கள் எங்களை வழி மடக்கிக் காரை நிறுத்தி கத்தியையும் துப்பாக்கியையும் காட்டி எங்களை எல்லாம் பய முறுத்திச் சகல நகைகளையும் பறித்துக்கொண்டே போய்விட்டார்கள்.

நடுக்காட்டில் விடப்பட்ட நாங்கள் இடம் தெரியாது கண்ணீர்விட்டுக் கலங்கி எப்படியோ கால்போன இடமெல்லாம் நடந்து வந்துசேர்ந்தோம். இப்போது என்ன செய்வதென்றே எனக்குத் தெரியவில்லை. குழந்தை யின் கதி என்னவாயிற்றோ?...என்று முடிப்பதற்குள் பானுமதியும் இதையே முதல்முதல் கேட்டு இடிந்துபோனவள்போல் துடித்துக் கதறி னாள். "என் குழந்தையைப் பறிகொடுப்பதற்காகவா இழுத்துக்கொண்டு போனாய்? ஐயயோ! இனி எனக்கு இந்த உலகத்தில் என்ன இருக்கிறது? நான் இப்போதே சமுத்திரத்தில் விழுந்து ப்ராணனை விட்டுவிடுகிறேன்." என்று இறைந்தவாறு ஓடவாரம்பித்தாள். காமாட்சியம்மாள் கூடவே ஓடி அவளைத் தடுத்துக்கட்டிப்பிடித்து..."அவசரப்படாதே பானு! நான் வரும் வழியில் போலீஸில் எழுதி வைத்துவிட்டுத்தான் வந்திருக்கி றேன். அவர்கள் தேடித்தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்த ஆபத்தான விஷயத்தை வெளியாரறியாமல் எப்படியாவது மூடிக்காக்க வேண்டும். இச்சமயம் தகப்பனாரும் ஊரிலில்லையே...உன் சகல கஷ்டங்களையும் பொறுத்துக்கொண்டு இதுபரியந்தம் மானமாக வாழ்ந் ததுபோல் இனியும் நீ பொறுமையாயிரு. எனக்காக இரு...என்று நிதானமாயும் உண்மையில் தாங்கமாட்டாத துக்கத்துடனும் கூறினாள்.

எது எப்படியானால் என்ன? இந்துமதி என்னவோ க்ஷேமமாயிருக் கிறாள். அதை வெளியிட்டுப் பின்னும் ஆபத்தை உண்டாக்கக் கூடா தென்று பேசாதிருந்தாள். பெற்றதாயே உண்மையை ஒளித்து இத்தகைய சரசம் பேசுகிறதைக்கண்டு "இதென்ன அக்ரம உலகம்? பணம் என்றால் பிணமும் வாய்திறக்கும் என்பார்களே, அந்த உண்மையை நான் என் வாழ்க்கையில் எத்தனை ப்ரத்யக்ஷமாகப் பார்க்கிறேன். திருடனும் வழி பறியாம்—இந்துவையும் சேகரனையும் தூக்கிக்கொண்டு போய்விட்டார் களாம்—அடாடா! என்ன அக்ரம வார்த்தை! என்று உள்ளுக்குள் மாய்ந்து போகிறாள். இந்த விஷம் நிறைந்த செய்கையின் பலன் எத்தனை தூரத்தில் கொண்டுவிடுமோ தெரியவில்லையே இச்சமயம் நமக்கென்று சகாயம் செய்ய யார் இருக்கிறார்கள்?'...

என்று வெகுநேரம் குழம்பித்தவித்தாள். எப்படியாவது இச்சமயத் தில், தான் தன் மூத்தாளின் மகனைப்பற்றி தாயாரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டும் என்கிற தடுக்கமுடியாத வேட்கை உண்டாகியது. தன் மகளைப்பறிகொடுத்த துக்கம் தாங்காமல் புலம்புகிற மாதிரி கதறிக் கொண்டே..."அம்மா! ஆதிமுதல் என் வாழ்நாள் பூராவையும் கெடுத்துக் குட்டிச்சுவராடித்தாயிற்று. இன்னும் இந்துவுக்கும் அந்த வாஸனை போகா மல் உலை வைத்துவிட்டீர்கள். போனதெல்லாம் போகட்டும். என்னு டைய மூத்தாள் மகனை இச்சமயம் நான் அண்டி உதவிகோரினால் அவன் சகோதரியை அவனே காப்பாற்றக்கூடும். அவனிருக்குமிடம் உங்களுக்கு நன்றாகத் தெரியும். அதை நீ தயவுசெய்து சொல்லு. அவனிடம் நான்

போய் மன்றாடிக் கேட்கிறேன். இப்போதுள்ள பேராபத்தான நிலைமையில் நாம் பேசாமலிருக்கக்கூடாது. அப்பாவும் ஊரிலில்லை. இப்போது நான் அவனைப் பார்த்தேதீரவேண்டும்'' என்று பிடிவாதமாகக் கூறினள்.

காமாட்சியம்மாளுக்கு என்ன பதில் சொல்வதென்றே தெரியாது திகைத்தாள். இங்கு நடந்துள்ள ரஸாபாஸத்தை அவனறிந்தால் எப்படியாகுமோ என்று யோசனையும் உண்டாகியது. அவனுடைய பிதா வைத்த பணத்தை எல்லாம் இவர்கள் கபளீகரம் செய்திருக்கையில் அந்த ஆத்திரத்தைக் கொண்டு அவன் ஏதாவது செய்து உபத்திரவித்தால் என்ன செய்வது என்று தோன்றியதால் பழயபடியே ''அவன் சோதா. அவனிடம் பேசக்கூட நமக்கு லாயக்கில்லை. அத்தகைய மனிதனின் சகவாஸம் இருப்பதை யறிந்தாலே நம்மைப் பிறர் பரிகஸிப்பார்கள். எந்த விதமான குறைவுமின்றி இந்துவை உன் பிதா காப்பாற்றுவார். நீ மட்டும் சற்று பொறுமையாக இரு... என்றே மழுப்பிவிட்டாள்.

''இன்னும் என்னதான் நாடகங்கள் நடக்கிறதோ பார்க்கலாம்'' என்று எண்ணி பானுமதி வெகு ப்ரயாஸைப்பட்டு தன்னைத்தான் அடக்கிக் கொண்டாள். எனினும் ''இவர்களுடைய நகைகளை யார் பிடுங்கிக் கொண்டிருப்பார்கள்... சினிமாக்காரர்களா... அல்லது தன் சகோதரனே பிடுங்கிக் கொண்டு இவர்களைச் சந்தியில் விட்டுவிட்டுப் போயிருப்பானே! என்கிற சந்தேகம் வந்துவிட்டதால் அதே கலவரத்துடன் படுத்திருந்தாள்.

இத்தகைய பேராபத்திற்கு என்ன செய்தால் தப்பமுடியும் என்ற ஏக்கத்தில் மூழ்கிய காமாக்ஷியும் படுத்துப் புரண்டுகொண்டிருந்தாள். அதே சமயந்தான் நாம் முதலில் தெரிவித்தபடி தந்திச் சேகவன் கூப்பிட்டான். காமாக்ஷியம்மாளின் குலை நடுங்கியது. பானுமதிக்கு இன்னதென்று தெரியாத திகில் சூழ்ந்துகொண்டு எழுந்து ஓடிவந்தாள். தந்தியை வாங்கக் கூடத்தெரியாது காமாட்சியம்மாள் கைகால்கள் உதறலுடன் ''டேய் கிட்டு... கிட்டு!''... என்று கத்தினள்.

அரைகுறை தூக்கத்தில் கிட்டு அலறியடித்துக் கொண்டு ஓடி வந்து தந்தியை வாங்கிப்பார்த்தான். ''ஐயையோ! அம்மா!... அப்பாவையும் அத்திம்பேரையும் போலீஸார் கைதியாக்கிட்டாளாம். அக்கா தந்தி அடிச்சிருக்காம்மா''... என்று கத்தினன். இந்த அதிர்ச்சி தாங்காது காமாட்சியம்மாள் கிழேயே விழுந்துவிட்டாள். பானுமதிக்கு இன்னதென்று தெரியாத சித்திரவதை செய்கிறது. தன் பிதாவை ஏன் கைதியாக்கி இருக்கிறார்கள்?... அவருக்கு என்ன ஆபத்து நேர்ந்திருக்கும்? ஒருவேளை கையில் பணத்தைக் கொண்டு போயிருக்கிறாரே! இதையே வைத்து எவனாவது வேண்டுமென்று இந்த பணத்தைத் திருடிக்கொண்டு வந்துவிட்டதாக ஒருபுகார் செய்திருப்பானே... ஒன்றுமே விளங்காத புதுமையாக இருக்கிறதே... ஒரு வேளை இந்துமதி தங்களை ஏமாற்றிவிட்டாள் என்கிற வஞ்சத்திற்காக இந்த சினிமாக்கார மைனரே இந்த சதியாலோசனை செய்திருப்பானோ? ராஜசேகரனையும் காணவில்லை. விவரமே புரியாத இந்த மர்மமான விபத்தை எப்படிப் போக்குவது? இந்துவின் இருப்பிடம் காட்டி விட்டால் அதொரு விதத்தில் பேராபத்தாக முடிந்துவிடும். காட்டா விட்டால் குடும்பத்திற்கே நீங்

காத விபரீதமான பேரிடி இடித்துவிட்டது போலாகும். இந்த நிலைமையில் நாம் என்ன செய்வதென்றே தெரியவில்லையே''...என்கிற மகத்தான குழப்பமும் தவிப்புமடைந்து தாயாரைத் தேற்றித் தெளிவிக்க முயன்றாள். கள்ளனுக்குள்ளேயும் ஒரு பக்காத்திருடன் இருப்பதுபோல் இத்தனை அமர்க்களத்தையும் கவனிக்காது ராஜாம்பாள் என்னதான் செய்கிறாள் என்பதையறிய பானுமதி அவளுடைய விடுதியில் போய் எட்டிப் பார்த்தாள். அங்கு அவளைக்காணவில்லை. மற்ற இடங்களில் தேடினாள். இந்துவின் தனியறையில் அவளுடைய பெட்டிகள், பீரோக்கள் முதலியவைகள் திறந்து கிடந்தது கண்டு திடுக்கிட்டவளாய் அவைகளை உற்றுக் கவனித்தாள்.

இந்துவின் புடவைகள், நகைகள், அவளுக்குக் கிடைத்த மிகச்சிறந்த பொக்கிஷம் போன்ற ஓவியப்பரிசுகள், அவள் எழுதி அடுக்கி வைத்திருந்த படங்கள், தன்னுடைய நகைகள், புடவைகள் ஒன்றையும் காணவில்லை. வீடு பூராவும் ராஜாம்பாளைத் தேடியபிறகு அலறியவாறு "அம்மா!...... ராஜத்தை எங்கே காணவில்லை? உள்ளே இந்துவின் பீரோவில் சகலமும் களவு போயிருக்கிறதே! இதென்ன அனியாயம்!'' என்று கத்தினாள். இதைக்கேட்ட காமாட்சி, "ஐயையோ! இதென்னடீ அனியாயக் கொள்ளை! கிணறுவெட்டாமலேயே பூதம் கிளம்புகிறது. அவள் என்னைத்திட்டிடு திட்டும் பார்த்த பார்வையும் கண்டு பயந்து நடுங்கினேன். நான் நினைத்தபடியேதானே சகலமும் நடந்துவிட்டது. அவள் அகப்பட்டதைச் சுருட்டிக்கொண்டு பிறந்தகத்திற்கு ஓடிப்போய்விட்டாளா...இதென்ன அக்ரமகாலண்டியம்மா?''...என்று பெரிதாக ப்ரலாபித்த வண்ணம் தலைதெறிக்க உள்ளேவந்து தன் பெட்டிகளைப் பார்த்தாள்.

சர்வமும் சூறையாடப்பட்டிருப்பதைக் கண்டதும் காமாக்ஷியம்மாளின் தலைமீது வானமே இடிந்து விழுந்ததுபோலாகிவிட்டது. குழந்தைகள் என்னவாயிற்று என்று போய் பார்த்தாள். குழந்தைகள் பாவம்! நிம்மதியாகத் தூங்கிக்கொண்டிருந்தன. 'குழந்தைகளையும் விட்டுவிட்டு, இத்தனை சொத்துக்களையும் திருடிக்கொண்டு படுபாவி எங்கு போயிருப்பாள்?' என்ற பெரிய கலக்கமும் பின்னும் குழப்பமும் உண்டாகி வதைக்கும்போதுதான், காமாக்ஷியம்மாளின் இதயத்தில் தான் தன் மகளுக்கும் பேத்திக்கும் செய்த த்ரோகத்தின் பரிசு இது என்ற ஒரு உணர்ச்சி மின்னல்போல் தாக்கி வதைத்தது.

---

## 29

**நா**யுடுவின் வீட்டிற்குள் எல்லோரும் சென்றதும் அகப்பட்டுக்கொண்ட திருடர்களை போலீஸாரிடம் ஒப்படைத்து அனுப்பிவிட்டுத் தான் அப்பாடா என்று இஸிசேரில் உட்கார்ந்தார்.

இன்ஸ்பெக்டர் ஏகாம்பரம் நாயுடுவின் உடம்பு முழுவதும் தழும்பு தழும்பாய் எழும்பி இருப்பதைக் கண்டு பரிதாபத்துடன் "இதென்ன

அனியாயம்! நீங்கள் அந்த முரடர்களிடம் எப்படி அகப்பட்டுக் கொண்டீர்கள்? கோணியில் போட்டு புலியைக் கட்டுவது போலல்லவா கட்டிவிட்டான் பாவி!"...என்று ஆவலுடன் கேட்டார்.

நாயுடு:—இந்த சரீரம் கட்டுப்படுவதும் புதிதல்ல; தழும்பேறுவதும் புதிதல்ல. காய் காய்த்துவிட்டது. நான் இந்த பக்கா கேடியைப் பற்றி நினைக்கவே இல்லை. இத்தனை சடுதியில் இவன் தானாகவே வந்து மாட்டிக் கொள்வான் என்றும் நான் எதிர்பார்க்கவில்லை. இன்று காலையில் வந்த மொட்டைக் கடிதத்தைப் பார்த்ததும் நான் இந்த மனிதன் எழுதியிருப்பான் என்று எண்ணவேஇல்லை. சென்ற வருஷம் சினிமாக் கம்பெனியில் நடந்த கொலைக்கேஸில் சம்பந்தப்பட்ட சிலர் என்மீது கறம் வைத்திருப்பதாயும் பகை தீர்க்கப் போவதாயும் நான் காற்று விசேஷமாக அறிந்தேன். அவர்கள் செய்கைதான் இது, பாங்கியின் கொள்ளையிலும் அவர்களே சம்பந்தப்பட்டிருந்தாலும் இருக்கலாம் என்றுதான் நினைத்தேன். கடிதத்தில் கரியின் அடையாளம் ஒட்டிக் கொண்டிருந்ததை கவனித்ததால் அது விஷயமாகவும் என் மூளை வேலை செய்தது. கரியின் அடையாளம் இருப்பதற்கு இரண்டு காரணங்கள் இருக்கலாம்...

அம்புஜம்:—அப்பா! ஒன்று கரிக்கடைக்காரன். மற்றொன்று இஞ்சன் ட்ரைவர்... இதுதானேப்பா...

நாயுடு:—அடஅசடே!... இவ்விரண்டு மட்டுமல்ல, ஓட்டலில் வேலை செய்யும் வேலைக்காரனைக்கூட இருக்கலாம், கரி அடுப்பில் சமைக்கும் சமையல்காரனைவும் இருக்கலாம், களாய் பூசுகிறவனையும் இருக்கலாம்...

ஏகாம்:—சரிசரி... தாங்கள் எந்த எந்த அனுமானத்தைக் கொண்டு என்ன செய்தீர்கள்? அதைச் சொல்லுங்கள் முதலில்...

அம்புஜம்:—அப்பப்பா... இந்த மனிதர்களுக்கும் பாங்கித் திருட்டுக்கும் சம்பந்தம் உண்டா இல்லையாப்பா......ஏகாம்பரம் இல்லை என்கிறார். விஷயம் எப்படியப்பா...

நாயுடு:—இரும்மா! அவசரப்படுகிறாயே! நான் தெருவோடு போகும் போது ஒரு வீதியில் இடிந்த பாழும் சத்திரம் இருக்கிறது. அந்த சத்திரத்து வாசலில் இரண்டு பேர்கள் உட்கார்ந்து பாத்திரங்களுக்கு களாய் பூசிக்கொண்டிருந்தார்கள். வீதியோடு போகும் நான் அவர்களை முதலில் பார்க்கவில்லை; அவர்கள் என்னை வெகு கூர்மையாகப் பார்ப்பதை நான் ஓரைக் கண்ணாலறிந்துகொண்டேன். ஆனால் இவர்கள் யார்? என்ன என்பதை அறிய நான் விரும்பக்கூடவில்லை.

இதற்குள் இருவரில் ஒருவன் எழுந்து உள்ளே ஓடினான். அடுத்த நிமிஷத்திற்கெல்லாம் ஒரு பக்காப் பேர்வழி வெளியில் வந்தான். இதற்குள் நான் சத்திரத்தைத்தாண்டிப் போய்விட்டேன். களாய் பூசுகிறவன், உள்ளிருந்து வந்தவன் ஆக எல்லோரும் ஏதோ குசமசவென்று பேசிக் கொண்டார்கள். நான் பார்க்காததுபோல் பார்த்தவாறு மீண்டும் இரண்டடி எடுத்து வைத்தேன்.

உள்ளிருந்து வந்த மனிதனை எங்குமே பார்த்ததாக நினைவுகூட இல்லை. இருப்பினும் தடதடவென்று என் முன்பு அவன் ஓடிவந்து "தர்ம

துரையே!...மகா ப்ரபுவே...தங்களை தரிசிக்க வேண்டி நாங்கள் இரவு பகல் காத்துக் கிடக்கிறோம். எங்களைத் தெரியவில்லையா! நம்ம கொழுந்தையைத் தூக்கிக் கொண்டுபோய்விட்ட மகா பாவியைத் தாங்கள் துப்பறிந்து கண்டுபிடித்து தண்டனைசெய்த புண்ணிய மூர்த்தியே! உங்கள் அனுக்கிரகந்தான் இன்று நாங்கள் பூமியில் உயிருடனிருக்கிறோம்...எங்களை தெரியவில்லையா?'...என்று ஏதேதோ சொல்லி என் காலில் விழுந்து வணங்கி வெகுவாய் சந்தோஷப்பட்டுக் கூத்தாடி என்னை ஆகாயம் வரையில் தூக்கிவைத்தான்.

எனக்கென்னவோ இந்த மனிதன் சொல்வது புரியவில்லை. எதற்கும் பொறுமையாகவே நின்று தலையை ஆட்டினேன். இதற்குள் மற்றொருவன் ஓடிவந்து "நாயினு!...ஐயாவே அக்கா பாக்கணமாம். இட்டுகினு வரச்சொல்லிச்சு. கும்பிடணுமாம்"...என்றான்.

உண்மையில் எனக்கு ஒரே கலவரமும் குழப்பமுமாக இருந்ததால் நானே சற்று யோசித்தவாறு நின்றேன். எத்தனையோ கேஸ்கள் இது போல் நான் செய்திருப்பதால் யாரு என்ன என்று புரியவில்லை. அந்த மனிதர்கள் என்னை விடுவதாக இல்லை. கட்டாயப்படுத்தி அழைத்துச் சென்றதால் நானும் துணிந்துதான் கூடவே உள்ளே சென்றேன்.

என்ன ஆச்சரியம்!...நான்தான் யானைக்குக் குழிதோண்டி பிடிக்கும் தந்திரத்தை உபயோகிக்கும் புலி என்று எண்ணினேன். என்னையே அவர்கள் பிடித்த அதிசயத்தை நான் என்னதான் சொல்வேன் போங்கள். வாசல்கதவுகளை எல்லாம் தாண்டி கூடத்து அறைப்பக்கம் என்னை அழைத்துச் சென்றார்கள். நான் அந்த அறையில் காலை வைத்ததுதான் தாமதம், ஏதோ கிரு கிரு என்று இறங்குவதுபோல் தோன்றியது...?

அம்பு:—ஐயையோ...எங்காவது குழி வெட்டியிருந்தார்களா...

நாயுடு:—குழியா! அதுமட்டுமில்லையே, குழிக்குச்சரியாக ஒரு பெரிய கோணியை வாய் திறந்து மடக்கி ரெடியாக வைத்திருந்த அதிசயத்தை நான் இப்போதும் வியக்கிறேன். கோணிக்குள் வாட்டமாக நான் அகப்பட்டதுதான் தாமதம் உடனே கயிற்றை இழுத்துக் கட்டியவாறு... "டேய் புலியே...துப்பறியும் மகாகனம் பொருந்திய புலியே!...இப்போது என்ன சொல்கிறாய்? கேவலம் ஒரு சுண்டெலிபோல் அகப்பட்டுக் கொண்டாயல்லவா?..."என்று எல்லோருமாகச் சேர்ந்து எக்காளமிட்டுப் பெரிதாகச் சிரித்தார்கள்...அப்போதுதான் என்னுடைய நிலைமையை நான் உணர்ந்தேன். என்னைக் கோணியில் கட்டியபிறகு ஒருமனிதன் வெளியில் வந்து..."அப்பாடா...ஒருகாரியம் முடிந்ததா? டேய் நாயுடு...சிங்காரவேலு அன்று சிறை சென்றபோது என்ன சொன்னான் என்பதை இப்போது நினைத்துப் பாரடா..."இதே சிங்கார வேலுவின் கையால் உன்னைக் கட்டிப்போட்டுச் சித்திரவதை செய்யாவிட்டால் பாரு" என்று சொன்னது நினைவுவருகிறதா...சொன்னபடியே செய்து முடித்த சிங்காரவேலு நான் தானடா...இனிமேல் நீயும் உன் மகளும் புகழ்மாலை சூட்டிக் கொள்ள எமலோகம் போய் ஏற்பாடு செய்யலாம். உன்னையும் சிறைபிடித்து உன் வீட்டையும் பகல் கொள்ளையிட்டு உன் மகளையும்

சூறையாடி உன் வீட்டிலேயே நான் எனது சாகஸத்தைக் காட்டி ப்ரமிக்கச் செய்துப் பின்னர் உன்னைப் பரலோக மனுப்பாவிடில் பாரு, உன் மகளை மட்டும் லேசில் கொல்லப் போவதில்லை. எங்களுக்கு அடிமையாகக் கொள்ளப்போகிறோம். நீ செய்யும் ஜாலவித்தைக்கு மேல்பட்ட வித்தைகளை நாங்கள் செய்து காட்டி உன்னைத் திணறவைத்த பிறகு எங்கள் வேலையை முடிப்போம்.'' என்று கர்ஜனை செய்தான்.

அவன் குரலைக் கேட்ட உடனேயே எனக்கு அந்த மனிதன் யாரு என்பது நன்றாக விளங்கிவிட்டது. அடடாடா...போயும் போயும் இவனிடம் அகப்பட்டுக்கொண்டோமே. என்று ஒரு க்ஷணநேரம் தம்பித்தேபோய் விட்டேன். ஏற்கெனவே அந்த மொட்டைக் கடிதத்தைக் கண்டு பயந்து தவிக்கும் அம்புஜத்தின் கதி என்ன ஆவது, இவர்கள் போய் என்ன அக்ரமத்தைச் செய்வார்களோ! என்கிற எண்ணம் உண்டாகியது. கோணிக்குள்ளிருந்தபடியே மெல்ல அந்த மனிதனை கோணித்வாரத்தினால் பார்த்தேன். அவன் யாரென்பதை நன்றாகப் புரிந்துகொண்டேன். நான் எதற்கும் வாயைத் திறந்து பதில் சொன்னால்தானே அவர்களுடைய ஆத்திரம் அதிகரிக்கும். மவுனமே சிறந்த மார்க்கம் என்று எண்ணி ஊமை போலிருந்து அவர்கள் சொல்வதை எல்லாம் கேட்டுக் கொண்டிருந்தேன். ''டேய்! இதோ இக்கடிதத்தை அந்த சித்ராங்கியிடம் கொடுத்து விட்டு ஒரு ஆட்டு ஆட்டிவையுங்கள், அந்த மாமாஜால மைனை மங்கையை தப்பித்துக்கொண்டு பிழைத்துப் போகட்டும் என்றே எழுதி ஆசைக் காட்டி அவளை நம்பவைத்து நாம் தூக்கிக்கொண்டு வந்துவிட்டால் நமக்கு மிகவும் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆகையால் ஒருவன் பயித்தியக்கார ஆஸ்பத்திரிக்கு ஓடுங்கள், ஒருவன் இந்த கடிதத்தைக் கொண்டு அவளிடம் கொடுங்கள,'' என்று பெரிய மகாராஜன் கட்டளையிடுவது போல் இட்டான். அவர்களுடைய அசுர செய்கையைக்கூட வியக்காமலிருக்கமுடியவில்லை. இந்த பாங்கி களவுக்காக இந்த மனிதர் கட்டாயம் இதில் ப்ரவேசிக்காமலிருக்கமாட்டார். பாங்கிக்கு இதே வழியாய்த்தான் போகவேண்டும் ஆகையால் இந்த சந்தர்ப்பத்தில் நாம் இவரைப் பிடித்துச் சரியானபடி தண்டித்துவிட்டால் பழி நம்மீது படாது பாங்கிக் கொள்ளைக்காரர்கள்மீது போய்விடும்—என்று அவர்கள் முன்கூட்டியே பாங்கு களவு விஷயம் தெரிந்தவுடனே சகல ஏற்பாடுகளும் செய்து வைத்திருப்பது எனக்கே ப்ரமிப்பாய்விட்டது.

பயித்தியக்கார ஆஸ்பத்ரியில் இவர்களுடைய கையாள் ஒருவன் வேலைசெய்கிறானாம். அவனைக்கொண்டு சில பயித்தியங்களை என் வீட்டில் புகுத்தி ரகளைசெய்து அம்புஜத்தை வெளியேற்றி வீட்டிலுள்ள சகலத்தையும் களவாடிக்கொண்டு வருவதோடு நான் என்னென்ன விதமாக என் வேலையைச்செய்து வருகிறேன், அந்த உளவுகளை எல்லாம் எனது அந்தரங்கப் பெட்டியிலுள்ள சாமான்களால்...கடிதங்களால் அறிந்துகொண்டு தம் தொழிலுக்கு இவைகளை உபயோகப்படுத்தித் தாமே திக்விஜயம் செய்யலாம் என்று அவர்கள் தீர்மானித்ததை நிர்ப்பயமாக என்னெதிரிலேயே பேசிக்கொண்டார்கள்.

அப்போதுதான் என் பேராபத்தான நிலைமையின் பயங்கரத்தை உணர்ந்துகொண்டு இதற்கு என்னவழி செய்து தப்பித்துக் கொள்ளலாம் என்று வெகுவாக யோசித்தேன்; ஒன்றுமே புலப்படவில்லை......

ஏகாம்பரம்:—அடேயப்பா! கேட்கும்போதே பயமாயிருக்கிறது. பாவம்! பிறகு எப்படித்தான் மூட்டைக்குள்ளிருந்து வெளியே வந்தீர்கள்?

அம்புஜம்:—அப்பா! நல்லவேளையாக காலையும் கையையும் கட்டிப் போடாமல் அப்படியேபோட்டுக் கட்டியதால் கட்டாயம் அவர்கள் சற்று ஏமாந்திருக்கும் சமயம் கோணியைக் கிழித்துக்கொண்டு வெளியே வந்திருப்பீர்கள்... அப்படித்தானேப்பா......

நாயுடு:—(கடகடவென்று சிரித்தவாறு) வெகு சுலபமாக நீ பேசிவிட்டாய். ஆனால் நடந்தது என்ன தெரியுமோ! நம்பியவர்களுக்குப் பகவான் சதா பக்கலில் இருந்து எந்தவழியில் துணை செய்வான் என்கிற ப்ரத்யக்ஷ உண்மையை நிதர்சனமாகப் பலவகையிலும் நான் கண்டனுபவித்திருக்கிற நம்பிக்கையைக் கைவிடாமல் நாராயண ஜபம் செய்தவாறு உரக்கக்கூட மூச்சுவிடாமல் உட்கார்ந்திருந்தேன். உனக்கு எவ்விதமான ஆபத்தும் நேராதிருக்கவேண்டுமே என்கிற திகில்தான் என்னை பாதித்தது.

அவர்கள் திட்டம்போட்டதுபோல் ஆள்கள் மூலைக்கொருவராக ஓடினார்கள். நிசப்தம் குடிகொண்டிருந்தது. நான் மெல்ல வெளியே வரலாமா என்று ப்ரயத்தனம் செய்தேன். ஒன்றும் பலிக்கவில்லை. இதற்குள் சில மணிநேரமாகிவிட்டது. அச்சமயம் ஒருவன் அலையக்குலைய ஓடிவந்து......"எஜமான்...நாம் ப்ளான் போட்டதுபோல் சகலமும் நடத்திவிட்டோம். ஆனால் அந்த அம்புஜம் இருக்கிறாளே அவள் மகா யூகசாலி. நம்ம ஆள் பயித்தியமாக நடித்ததை அவள் எப்படியோ துப்பறிந்து கொண்டு அவனையே பிடித்து ஒரு ரூமில் போட்டுப் பூட்டினாள்.

சமயம்பார்த்து நாங்கள் தப்பவைத்துவிட்டோம். இருப்பினும் அவளைப் பிடிக்க முடியவில்லை. அவள் இருக்கும் சுறுசுறுப்பையும் ஆத்திரத்தையும் பார்த்தால் மோப்பம் பிடிக்கும் நாயைப்போல் இங்கேயே வந்துவிடுவாள் என்று தெரிகிறதால் நீங்கள் முதலில் இந்த கோணிமூட்டையை அப்புறப்படுத்தி விடவேண்டும்." என்றான்.

அதைக் கேட்கும்போது என்னையும் மீறி கலகலவென்று சிரிப்பு வந்துவிட்டதால் சப்தம் வெளியில் கேட்கும்படிச் சிரித்துவிட்டேன். அடுத்த நிமிடமே அவர்கள் கேவலமான பாஷையில் என்னைத் திட்டியபடியே... "இருடா சுண்டெலி! அடுத்த க்ஷணம் உன் கதி என்ன ஆகப்போகிறது என்பதை உன் கண்களே பார்த்துப் பதைக்கும்படிச் செய்து விடுகிறோம்" என்று கர்ஜித்தார்கள்.

பின்னும் சற்று நேரத்திற்கெல்லாம் என்னை மூட்டையுடன் தூக்கிக் கொண்டு போனார்கள். எங்கே என்ன என்பது தெரியாது சற்று திண்டாடினேன். வாசற்பக்கம் வரும்போது நான் பெரிதாகக் கத்தி விடலாம் என்று எண்ணிப் பேசாதிருந்தேன். ஆனால் கோணியுடன் என்னை ஒரு பெரிய பூதம் போன்ற காரின் பின்னாலுள்ள மூட்டைகள் வைக்கும்

இடத்தில் அடைப்பதை நான் உணர்ந்தேன். நிசப்தமாக இருந்த இட மாகையால் நடுவீதியல்ல என்பதை மட்டும் உணர்ந்து கொண்டு நான் சற்று பெரிதாகக் கூச்சலிட்டேன்.

அடுத்த விநாடியே அந்த அறையின் கதவை டமால் என்று சாத்திய ஓசை கேட்டது. உடனே காரும் கிளம்பியது. எங்கு போகிறது என்ன என்பதே எனக்குப் புரியவில்லை. இதோடு நம்மை எங்கோ ரயில் பாதை யில் முன்பொருதரம் உருட்டப்பட்டது போல் உருட்டி விடப் போகிறார் கள் என்று தான் நான் தீர்மானித்து விட்டேன். அந்த முரடர்களிடம் கெஞ்சிக் கூத்தாடி பல்லிளிக்கவும் மனம் இடந்தரவில்லை. பகவன்நா மத்தைத் தவிர வேறு துணை இல்லை என்ற உறுதியுடன் நான் ஜபித்த வாறிருக்கையில் கார் சடக்கென்று நின்றது. உள்ளுக்குள்ளே போட்டு அடைத்துக் கதவையும் பூட்டியிருந்ததால் எனக்கு ஒன்றுமே சந்தடி கேட்கவில்லை.

சில நிமிஷங்களுக்குப் பிறகு என்னை அடைத்திருந்த பக்கத்துக் கதவு திறக்கப்பட்டது. இது எந்த இடமானாலும் சரி, நான் பெரிதாகக் கூச் சல்போடுவதே நலம் என்று எண்ணி "ஐயயோ! ஐயயோ... உயிர் போகி றதே"...என்று பெரிதாகக் கத்திவிட்டேன்.

அடாடா...என்ன ஆச்சரியம்! ஆண்டவனின் அருள் சக்தியை நான் என்னென்று சொல்வேன்......அதிகாரத்துடன் "டேய்! தேங்காய் மூட் டையையா கொண்டுபோகிறீர்கள்?...உம்...டேய் நூத்திமூணு...பாரடா அந்த மூட்டையை" என்று ஒருவன் சொல்லும் போதே இவர்கள் போலீஸ் காரர்தான் என்று நன்றாகத் தெரிந்துவிட்டதும் என் சந்தோஷம் ஆயிரம் பங்காகப் பொங்கிப்பூரித்தது. பின்னும் பெரிய தொண்டையில் ப்ரமாதமா கக் கூச்சலிட்டு "ஐயா! போலீஸ்காரய்யா! ப்ளாக்மார்கெட்டு அரிசியானா லும் ஏதோ சில ஜனங்களுக்கு ஆகாரத்திற்கு உதவும். என்னை அநியாய மாய், அக்ரமமாய்த் தூக்கிக்கொண்டு போகிறார்கள்." என்று கத்தினேன்.

உடனே ஒருவன் கோணியுடன் என்னை இழுத்தான். இதற்குள் மற்றவர்கள் "டேடேடே...அதோ ஆள் ஓடுகிறான். பிடியுங்கள்" என்று கூக்குரலிட்டவாறு ஓடினார்கள். கோணியை வெளியில் எடுத்ததும் கூட் டம்கூடி காரைச்சுற்றியிருந்ததைக் கோணிச் சந்திலால் பார்த்தேன். அதற் குள் கோணியை அவிழ்த்துவிட்டார்கள்...உள்ளிருந்து வேர்க்க விலவிலக்க நான் வெளியில் வந்ததைப் பார்த்ததும் அந்த போலீஸ்காரர் வியப்புடன் ஒரு துள்ளுதுள்ளியவாறு..."ஹா...நாயுடுகாருவா...ஐயயோ! தங்களையா இப்படிப் பிடித்துக் கட்டிக் கொண்டுபோகிறார்கள்!" என்று மிக்க பதை பதைப்புடனும், ஆச்சரியத்துடனும் கூறியவாறு எனக்கு உபசரிப்பதில் ஈடுபட்டார்கள்.

இதற்குள் நான் அந்த போலீஸ்காரரிடம் ஜாடை செய்து என்னை இன்னார் என்று அறிவிக்கவேண்டாம், இந்தக் கூட்டத்தை அப்படியே அவரவர்களின் ரகஸிய இடத்துடன் பிடித்துவிடுவதற்கு இதுதான் தகுந்த சமயம்; ஆகையால் பேசாமலிருக்கும்படிக் கூறினேன்.

இதற்குள் ரோட்டில் ஓடியவர்களைத் தூரத்திக் கொண்டு போனவர்கள் எதிரில் வருபவர்களிடமும் கூறி ஓடுபவர்களை மடக்கிப் பிடித்துவிட்டார்கள். அவர்களைக் கொண்டே ரகஸ்ய இடங்களைக் காட்டச் செய்ய எண்ணிக் கைகால்களைக் கட்டி அவர்களை வண்டியில் போட்டுக் கொண்டு கிளம்பும்போது மாலைநேரமாகிவிட்டது.

இதற்குள் என் வீட்டில் என்ன நடக்கிறது என்பதையறிய அவர்களைச் சேர்ந்த ஒரு கூட்டம் வட்ட மிடுவதையறிந்த நான் போலீஸ்காரன் ஒருவனை மாறு உடையில் அவர்களிடம்போய் ரகசிய கடங்கில் நாயுடுவை உருட்டியாகிவிட்டது—என்று சொல்லிவிடச்செய்தேன், அதைக்கேட்ட அவர்கள் பரமசந்தோஷத்துடன் என் வீட்டில் பகிரங்கமாக நுழைந்து அம்புஜத்தைத் தூக்கிக்கொண்டுபோவதற்காகப் பெரிய ப்ளான் செய்திருந்ததையும் அறிந்தேன்.

எல்லாவற்றையும்விட ஆச்சரியமாய் அம்புஜம், என்னைப்போலவும் தன்னைப்போலவும் செய்துள்ள பொம்மையை மின்ஸார விசையுடன் வராண்டாவில் உட்காரவைத்திருப்பதை தூரவிருந்து நானே பார்த்து முதலில் ப்ரமித்தேன். எதற்காக இவள் இம்மாதிரி செய்திருக்கக்கூடும் என்று யோசனைசெய்தேன்...

அம்பு:—ஏம்பா; நீங்களே அதைப் பார்த்தபிறகு ஏன் உள்ளே வரக் கூடாது? நாயுடு காணவில்லை என்கிற விஷயம் ஊரில் பரவக்கூடாது என்பது ஒன்று, அவரைப் பிடித்துள்ள கூட்டத்தினர் தூரவிருந்து இதைப்பார்த்தால் கட்டாயம் திகைப்பார்கள். அதைக்கண்டு அவர்களைப் பிடித்துவிடலாம் என்கிற யோசனையினால் நான் இதை ஏற்பாடு செய்துவிட்டு, வீதியில் உலாவியவாறு நின்றால் இதற்குச் சம்பந்தப்பட்டவர்களை உடனே உளவறியலாம் என்பதற்காக அப்படிச்செய்தேன், அப்போது தான் ஏகாம்பரம் என்னிடம் ஓடிவந்து "அப்பா வந்துவிட்டார். அவரும் நானும் பிச்சைக்காரர்கள்போலவே வருகிறோம். நீ இனி கவலைப்படாதே" என்று சொன்னார். அதுதான் எனக்குப் பரம த்ருப்தியை அளித்துப் பூரிக்கச்செய்தது. உங்களைப் போலீஸார் காப்பாற்றியதும் அவர்களைப் பிடித்ததும் இவர்களுக்கு ஒன்றுமே தெரியாதாப்பா...

நாயுடு:—என்னை ரகசிய கடங்கில் போடுவதற்காக காரில் அனுப்பி விட்ட பிறகு அந்த முக்ய எதிரி உன்னை அழைக்கவே பார்த்தான். நாம் கடங்கில் தள்ளச் செய்த மனுஷன் எப்படி இங்கு வந்து உட்கார்ந்திருக்கிறான் என்ற பெருத்த சந்தேகமும் கவலையும் வந்துவிட்டதால் தம் கையாட்களில் சிலரை ரகசிய கடங்குக்கு அனுப்பிவிட்டு அவர்கள் அலைவதை நான் பார்த்தேன். எந்த வீரன் என்னைப்பிடித்தானோ அந்த வீரனையே நான் பிடிக்க வேண்டும் என்பதால் நானே பகிரங்கமாக எதிரில் வராமல் மாறு வேஷத்தில் வரும்போது ஏகாம்பரத்தைச் சந்தித்து உனக்கு விஷயத்தைச் சொல்லச் சொல்லிவிட்டு அவரையும் என் கூடவே சேர்த்துக் கொண்டு வெகு சுலபமாகப் பிடித்துவிட்டேன்.

இன்று பூராவும் இந்த எதிர்பாராத விபத்துக்குள்ளாகவும் எதிர்பாராத பக்கா எதிரிகளை வலுவில் பிடிக்கவுமே சரியாகிவிட்டது. பாங்கிக்

கொள்ளையின் விஷயத்தை இனிதான் கவனிக்கவேண்டும். இந்த மனிதர்கள் அதில் சம்பந்தப்படவே இல்லை என்கிற வரையில் ஏகாம்பரம் சொல்கிறார் நான் அதை ஆராய்ந்து பார்த்த பிறகுதான் சொல்லுவேன். சரி......நினைத்த காரியம் நின்று, நினையாத காரியம் முடிந்தது. இனி இக் கூட்டத்தினரைப் பற்றிய கவலை எனக்கில்லை. ஏகாம்பரத்தின் வேலை அது. நான் போய் பாங்கியைப் பார்த்துவிட்டு வருகிறேன்...

அம்பு:—அப்பப்பா...நம்ம சொத்துக்களும் கடிதங்களும் களவு போயிருப்பதை எப்படியப்பா...

நாயுடு;—அவசரப்படாதேம்மா. அவைகள் பத்திரமாக போலீஸி லிருக்கின்றன ..என்று கூறிவிட்டு மற்ற காரியங்களை ஏகாம்பரத்தை கவனிக்கச்செய்துவிட்டு உடனே வெளியே போனார். இந்த ஆச்சரியமான விஷயங்களைக் கேட்ட, பார்த்த மற்றவர்கள் ஆச்சரியத்தால் ப்ரமித் தார்கள். அம்புஜத்தின் முகம் மலர்ந்தது.

## 30

நடுநிசியில் எந்த விதமான காரியமும் செய்ய முடியாது தவித்த வாறு காமாக்ஷியம்மாள் இக்குமக்கும் ஓடுகிறாள். எதற்காகத் தன் கணவனையும் சேர்த்துக் கைதியாக்கி இருப்பார்கள் என்ற பெருத்த குழப்பம் அவளுடைய இதயத்தைத் துளாவியது. தன் மருமகள் குழந்தைகளை விட்டுவிட்டு இத்தனை பொருள்களையும் சுருட்டிக்கொண்டு இந்த நடுநிசியில் எப்படித் தன்னந்தனியாகத் தாயார் வீட்டிற்குப் போயிருக்கக்கூடும்? என்ற பேரிடி போன்ற அதிர்ச்சியும் பாதித்ததால் கிட்டுவைக் கூட துணைக்கு அழைத்துக்கொண்டு ராஜாம்பாளின் பிறந்த வீட்டிற்குச் சென்றாள்,

அங்கு நிச்சிந்தையாக எல்லோரும் தூங்கிக்கொண்டிருந்ததால் கதவைத்தட்டி எழுப்பினார்கள். ராஜாம்பாளின் தாயார் அலையக்குலைய ஓடிவந்து காமாக்ஷியம்மாள் நிற்பதைக்கண்டு, "என்ன மாமீ!... இந்த பாதிராத்திரியில் வந்தீர்கள்? குழந்தைகள் சுகந்தானே...ராஜாம்பாள் வெறுமனே இருக்கிறாளோன்னோ...மாப்பிள்ளை ஊரிலிருக்கிறாரா?...என்று ஏதேதோ கேட்கிறாள்.

இதைக் கேட்ட காமாக்ஷியம்மாளின் தலையில் இடி இடித்தமாதிரியாகி விட்டது. "ராஜாம்பாள் இங்கு வரவில்லையா!"...என்றதும், அவள் தாயார் உண்மையில் நடுநடுங்கிபோய் "ராஜாம்பாளா... இந்த நடு ராத்திரியிலா... இங்கு எதற்காக வரப்போகிறாள்? ஏன் அவள் எங்கே?"...என்றாள்...

காமா:—ஐயயோ! வெக்கக்கேடே!...நான் என்னத்தைச் சொல்வது. வீட்டில் இருக்கும் நகைகள், புடவைகள் ஒன்றையும் காணவில்லை ராஜத்தையும் காணவில்லை குழந்தைகள் தூங்குகிறதுகள். ஒரு வேளை இங்கிருப்பாளோ என்று ஓடிவந்தேன். இந்த அனியாயக்கொள்ளைக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லையே!—என்றாள்.

ராஜத்தின் தாயார் பெரியதாக கத்திக் கொண்டே தன் மகனை எழுப்பி விஷயத்தைக் கண்ணீர் விட்டவாறே சொன்னாள். இதைக்கேட்ட அவன் வெறுப்பும் அலக்ஷ்யமும் கொண்ட பார்வையுடனும் குரலுடனும் பேசத் தொடங்கி "சரிதானம்மா! சரிதான்...நான் இந்தக் கூத்தாடிக் கூட்டத்தை சில தினங்களாகவே கவனித்துத்தான் வருகிறேன். நான் நினைத்ததுபோல தான் நடந்திருக்க வேண்டும். சினிமாக்காரர்களின் சினேகமும், நடிப்பதற்கு ஒப்பந்தமும் ஆகிவிட்டது என்று நான் முன்பே சொல்லவில்லையா! அதன் பலனைத்தான் ஏதோ விபரீதம் நடந்திருக்க வேண்டும், பேராசை பெருநஷ்டம் என்பது பொய்யே இல்லை. இந்த ராத்திரியில் யார் என்ன செய்யமுடியும்? பொழுது விடிந்தால் தானே தெரிகிறது" என்று மிகவும் அலக்ஷியமாயும் கோபத்துடனும் சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

ஆண் மக்களின் மனநிலைமை கடினமானது; ஏதோ கூச்சலிட்டுப் போய் விட்டான்! பெண் பிள்ளையின் மனம் கேட்குமா! அதிலும் பெத்த தாயாராகையால் தவிக்கிறாள். நடுநிசியில் யார் என்ன செய்ய முடியும்? காமாக்ஷியம்மாளுக்கு இங்கு ஏன் வந்தோம் என்று ஆகிவிட்டதுடன் தங்களுடைய ரகஸியம் பூராவையும் இவன் அறிந்திருப்பதைக் கண்டு அபாரமான கலக்கத்தை யடைந்து பதில் பேசாமல் கிட்டுவை அழைத்துக் கொண்டு தன் வீட்டிற்குத் திரும்பினாள்.

நோயாளிகளுக்கும் கவலை மிகுந்தவர்களுக்கும் ஒரு நிமிஷம் கழிவது ஒரு மணியாகத் தோன்றும். ஒரு இரவு கழிவது ஒரு யுகமாகத் தோன்று வது சகஜந்தானே. எப்படியோ பாழும் இரவைக் கழித்தார்கள். பொழுது விடிந்ததும் காமாக்ஷியம்மாள் கிட்டுவை இழுத்துக் கொண்டு சினிமாக் கம்பெனிக்குச் சென்றாள்.

அஸல் பிச்சைக்காரியைப்போன்று வரும் காமாக்ஷியைக் கண்டதும் வேலைக்காரர்கள் உள்ளே விட மறுத்து விரட்டினார்கள். ஐயோ பாவம்! காமாக்ஷியம்மாள் எத்தனைதான் கெஞ்சிக் கூத்தாடி பல்லை இளித்தும் ஸாகஸம் பலிக்கவே இல்லை. இவள் கண்ணுங் கண்ணீருமாகப் புலம்பிக் கொண்டு கேட்டில் நின்ற சமயம் வெகு தடபுடலான கார் பும்பும் என்று ஊதிக்கொண்டு கேட்டுக்குள் போவதற்காக வந்தது.

கேட்டுக் காவற்காரன் 'தே...ஒத்திப்போம்மே! எஜமான் வாரு... போ...போ'...என்று கத்தினான். சுவரோடு சுவராக காமாக்ஷியும் கிட்டுவும் ஒட்டிக்கொண்டு நின்றார்கள். கார் கேட்டுக்குள் போகும்போது காமாக்ஷி அந்த எஜமானிடம் முறையிட எண்ணி..."அடேய்......இதோ பாரு...என் பிள்ளையை—என்று பெரியதாகச் சொல்லும்போது காரில் அந்த எஜமானனுடன் வெகு உத்ஸாகமாயும் சம்பிரமாயும் அமர்ந்துச் செல்லும் ராஜாம்பாளை தற்செயலாகப் பார்த்துவிட்டாள்.

அவ்வளவுதான்! தீயை மிதித்தவள் போல் துள்ளிக் குதித்தவாறு 'ஐயயோ...ராஜம்! ராஜம்... இதென்னடீ அக்ரமம்!... அனியாயக்கொள்ளை ...என்று வயிற்றிலும் வாயிலும் அடித்துக்கொண்டு கத்துவதைப் பார்த்த அவ்விருவரும் கிலகிலவென்று சிரித்துவிட்டு குழந்தைகளுக்கு நன்கு

காட்டுவது போல் பூ...என்று முகத்தை நீட்டியவாறு போனார்கள். இந்த வயிற்றெரிச்சலை அவளால் சகிக்கவே முடியாது பெரியதாக அலறி அடித்துக்கொண்டு கத்தவாரம்பித்தாள். கார் என்னவோ உள்ளே போய் சேர்ந்துவிட்டது.

ஒவ்வொரு சோதனையும் தனக்கே வந்தபிறகல்லவா தான் செய்த பாவத்தின் பயங்கரம் மனத்தில் தோன்றும். அதே போல், கிட்டு தன் மன்னி காரில் போவதைப் பார்த்ததும் அவனையும் அறியாத ஆத்திரத்துடன் "அம்மாம்மா...நீ அக்காவையும், இந்துவையும் செய்த சதிதான் உனக்கே இந்த கதி வந்தது பாரு. பாரு...எளியாரை வலியாரடித்தால் வலியாரை தெய்வம் அடிக்கும் என்றும், 'அப்பாருக்கிட்ட கப்பரை ஆலச்சுவற்றில் சாத்திருக்கு' என்ற பழமொழியும் பாட்டி அடிக்கடி சொல்வாளே... அது இப்போது சரியாக ஆய்விட்டது, பாவம்! இந்துமதியை மோசம்பண்ணப் பார்த்த உன்னையே பகவான் மோசம்பண்ணிட்டார்— என்று குதித்தவாறு கூறிவிட்டு ஓடிப்போய் ராஜாம்பாளின் பிறந்த வீட்டிற்குச்சென்று "ராஜாம்பாள் அகப்பட்டுவிட்டாள். சினிமாக்காரனுடன் காரில் ஜம்னுபோறா... கவலைப்படாதேக்கோ;" என்று 'மொட்டைத் தாதன் குட்டையிலே விழுந்தான்', என்று சொல்வதுபோல் சொல்லிவிட்டு அங்கிருந்து தன் வீட்டிற்கு ஓடிவந்து..."அக்காக்கா! மன்னி அகப்பட்டுட்டா... சினிமாக்காரனோடெ காரிலே ஜம்முனு போறத்தை அம்மாவும் நானும் பாத்தோம். நிஜம்மா பார்த்தோம். அம்மாவுக்கு நன்னா வேணும். பாவம்! இந்துவை சினிமாவில் சேர்க்க ஏற்பாடுசெய்தாள். அது எனக்குத் தெரிஞ்சுபோச்சு. நான் உன்னிடம் சொல்லக்கூடாது என்று அண்ணா, அம்மா எல்லாரும் என்னைக் கண்டித்து மிரட்டினார்கள். அதனால் நான் சொல்லாமெ இருந்தேன். இந்த சினிமாவிலே சேர்ந்தால் நான் கல்யாணம் பண்ணிக்கமாட்டேன் என்றுகூடச் சொல்லிவிட்டேன்." என்று தானே மடமடவென்று ஒப்பிப்பதைக்கேட்ட பானுமதியின் உணர்ச்சிகள் பலவிதமாகப் பொங்கிப் பெருகின.

---

## 31

சிறையிலடைத்திருப்பதுபோல் உட்கார்ந்திருக்கும் ராஜசேகரனின் ஆத்திரம் கரைபுரண்டு கொந்தளிக்கிறது, தன் ஆத்திரந்தீர இந்துவை வெட்டிப் புதைத்து விடலாமா! என்று நினைக்கிறான். அடுத்த நிமிஷம் தன்னை இப்படி அவமானப்படுத்தும் சினிமாக்காரனைக் கொன்றுவிடலாமா என்று நினைக்கிறான். சகலமும் அதீதமான உணர்ச்சியில் தோன்றுகிறதேயன்றி தான் செய்யப்புகுந்த காரியத்தின் அவகேடு அவனுக்குச் சற்றும் தெரியவில்லை.

இரவு பூராவும் பல்லைக்கடித்துக்கொண்டு கழித்தான். உதயமாகியதும் ஜன்னலின் அருகில் நின்று கம்பெனியின் ஒவ்வொரு பாகத்தையும் உற்றுக் கவனித்துக்கொண்டு வந்தான். கம்பெனியிலேயே இருக்கும்

நடிகைகளின் கொம்மாளமும் பாட்டும் கூத்தும் உத்ஸாகமான களியாட்டமும் மற்றவர்களின் தடபுடலும் ஒரு புது உலகம்போல் தோன்றியதேயன்றி சினிமாக்கம்பெனிபோல் தோன்றவில்லை. அபாரமான கோபத்துடன் துள்ளும் உள்ளத்திற்கு சற்று சலனம் உண்டாகி விரைக்க விரைக்க பார்த்துக்கொண்டு நிற்கும்போது கம்பெனியின் ஷோக்கு மைனரும் ராஜாம்பாளும் தடபுடல் உல்லாசத்துடன் பேசிக்கொண்டு அங்கு வருவதைக்கண்டதும் தீயைமிதித்தவன்போல் ஒரு துள்ளுதுள்ளி தலையைப் பிடித்துப் பிச்சிக்கொண்டு...“ராஜம்!...ராஜம்...டேய்...த்ரோகி...அடி... சண்டாளி!”...என்று பெரியதாகக் கத்தினன்.

இந்த குரலைக் கேட்டு எல்லோரும் இவ்விடமே பார்த்து ப்ரமித்தார்கள். ராஜமும் அந்த மைனரும் வெகு முடுக்காயும் அகம்பாவத்துடனும் ஒரு முறைப்பு முறைத்துப் பார்த்துக் கேலிச்சிரிப்பு சிரித்தபடியே போய்விட்டார்கள்.

ராஜசேகரனின் இதயம் சுக்கல் பதினயிரமாக வெடித்துவிடும் போலாகி விட்டது. அவனால் முடிந்தவரையில் கோ வென்று கத்தி விட்டான். ஏன் என்று கேட்பாரே இல்லை ‘ஐயோ! என் மனைவியா இந்த பாதகனுடன் உலாவுகிருள்? ஐபயோ! குடி முழுகிப் போய்விட்டதே... என்ன செய்வேன்? அடிப்பாவி இந்துமதீ...உன்னலல்லவா எங்கள் கதி இப்படியாயிற்று!’ என்று கத்துகிருன். கூண்டிலகப்பட்ட பறவைபோல் துடிக்கிருன். எத்தனைதான் கூச்சலிட்டுக் கத்திக் கூப்பிட்டும் ஒருவரேனும் உள்வழி எட்டிப் பார்க்கவில்லை.

ஒத்திகை நடக்கும் ஓசைவேறு கேட்கிறது. அதில் தன் மனைவியின் குரல் முடுக்காகவும் பெரிதாகவும் கேட்கக் கேட்க இவன் வயிற்றில் செய்யும் சங்கடம் சொல்லி முடியவில்லை. ஆனது ஆகட்டும் என்று கதவை தடதட வென்று தட்டிப் பிளந்தான். ஏன் என்று கேட்பாரே இல்லாததால் அவனுக்கு மிகவும் களைப்பும் கோபமும் உண்டாகிச் சோர்ந்துவிட்டான்.

சினிமாக் கம்பெனியின் முதலாளியான மைனர் அதிகாரத்வனியில் “டேய்...சின்னசாமீ! நாளைய தினம் ஷூட்டிங்கில் வனராணியாக ராஜாம்பாள் நடிக்கப் போகிருள். எக்ஸ்ட்ராக்கள் 50 பேர்கள் ஆணும் பெண்ணுமாக வேண்டும். சுமாரான அழகு போதும். சரியானபடி ஆட்களைத் தேடிப்பிடித்து இன்று மாலையே அழைத்துக் கொண்டுவா. 30 பேர்கள் போலீஸ் வீரர்களாக நடிக்க வேண்டும். ஆகையால் நல்ல உயரமும் கட்டுமத்தான சரீரமும் உடைய ஆட்களாகப் பாரு. எங்காவது சோற்பேறி மடத்திலும், மண்டிக் கடைகளிலும் ரயில்வே ஸ்டேஷனிலும் போய் பார்த்தால் ஆள் கிடைப்பான் என்று டயரெக்டர் சொல்கிருர். ஆகையால் இப்போதே போய் ஏற்பாடு செய்’ ‘என்று உத்திரவிடுவது ராஜசேகரன் காதில் விழுந்ததும் அவனை யறியாது ஏதோ ஒரு விதமான பரபரப்பும் ஆவலும் உண்டாகியது. யார்காலிலாவது விழுந்து கெஞ்சிக் கூத்தாடி வெளியே போய் விடவேண்டும். தானே மாறு வேடத்தில் எக்ஸ்ட்ராவாக வந்து போலீஸ்காரனை நடிக்கும்போது அந்த பாதகியை அப்படியே மென்னியைத் திருகிவிடவேண்டும். அவளையும் கொன்றுவிட்டு

நானும் தூக்கு மரத்தில் மாட்டித் தொங்கலாடத் தயார்—என்கிற அதீத மான யோசனை செய்து முடிவுகட்டி விட்டான். தனக்கு ஆகாரமாவது கொண்டுவருவார்களா என்று எதிர்பார்த்துக்கொண்டே நின்றிருந்தான். மனதுமட்டும் மகத்தான யோசனையிலாழ்ந்திருந்தது.

## 32

"பாங்கிக் கொள்ளைக்காரர்கள் வெகு வெகு கெட்டிக்காரர்கள். தங்கள் திருட்டை நாயுடு எப்படியும் கண்டு பிடித்து விடுவார். ஆகையால் அவரை அடியோடு முதலிலேயே முடித்து விட வேண்டு மென்று நாயுடு வுக்கே வழிவைத்துவிட்டார்கள். ஒன்ரு, இரண்டா, இத்தனை பெரிய கொள்ளையை இனி கண்டு பிடிக்கப் போகிறவர்கள் யாரிருக்கிருர்கள்? நாயுடுவைப் போன்ற கைதேர்ந்த தந்திரப் புலிகள் இனி யாரிருக்கிருர்கள்? இந்த கொள்ளையில் சம்பந்தப்பட்டவர்கள், யார் யாருக்கு வாய்க்கரிசி போட வேண்டுமோ அவர்களுக்குச் சரியானபடி போட்டு இதை அமுக்கித் தப்பித்துக் கொள்வார்கள். கேஸ் எப்படியோ சிதறித்தான் போய் விடப்போகிறது" என்று பொதுஜனங்கள் இதே பேச்சாகப் பேசவாரம் பித்துவிட்டார்கள்.

சில குதர்க்கவாதிகளும் கொழுப்புப்பிடித்தவர்களும் தம் தம் மனம் போனபடி வ்யாக்கியானம் செய்வதில் பின்னடையவில்லை அதாவது எத் தகைய வழக்காலும் சளைக்காமல் ஓடிவரும் நாயுடு இதில்மட்டும் ஏன் எட்டியேபார்க்கவில்லை. ஒரு வேளை கொள்ளையில் சம்பந்தபட்டவர்கள் நாயுடுவுக்கும் பெருந்தொகையைப் பங்குகொடுத்துவிட்டு அவரை மவுன மாக இருக்கும்படிச் செய்துவிட்டார்களோ என்னவோ! என்கிற மதிப்பு ரையை தாராளமாகப் பேசவாரம்பித்தார்கள்.

பக்கா குள்ளநரியாகிய நாயுடுவுக்கா உலகத்தின் போக்குத்தெரியாது. தான் மறைந்திருப்பதாகவே உலகம் மதிக்கும்படியும் தான் ரகஸிய மாகவே இந்த வேலையைச் செய்யவேண்டுமென்றும் திட்டம் வகுத்து நாயுடு ஊரிலில்லை என்ற வதந்தியைப் பரக்கவிட்டார். போலீஸாரையும் இது விஷயமாக வெளியில் சொல்லவேண்டாமென்று நாயுடு திட்டம் போட்டார்.

இரவு பத்துமணிசுமாருக்கு நாயுடு பாங்கியின் அதிகாரியின் வீட்டிற் குச்சென்று வெகுநேரம் அவருடன் பேசிக்கொண்டிருந்துப் பின் பாங் கிக்குச்சென்று வெகுகவனமாக ஒவ்வொன்றையும் ஊன்றிக் கவனித்துப் பார்த்துவிட்டுச் சென்ருர்.

சுமார் ஒருவாரம் வரையில் தமக்கு யார்மீது சந்தேகமோ அவர்களை எல்லாம் மாறுவேஷத்திலிருந்தபடியே நன்ருகக் கவனித்ததோடு அவர்கள் வீட்டிற்கு யார் யார் வருகிருர்கள், என்ற குறிப்பை வெகு அழகாக கவனித்துக்கொண்டார்.

பாங்கியின் அதிகாரிகளான பெரிய பெரிய மனிதர்கள் எல்லோரும் தங்களுக்கு யார் யார் மீது சந்தேகம் என்பதை ரகஸ்யமாக நாயுடுவினிடம்

சொன்னார்கள். ஆனால் நாயுடுவின் அனுபவத்தில் அதற்கு நேர்மாறாகவே அவருடைய யோசனைகளும் யுக்திகளும் தோன்றுவது வழக்கம். அதே போல் பாங்கி உத்யோகத்தில் சற்றும் சம்பந்தப்படாத மூன்றாம் மனிதர்கள் மீதே இவருடைய சந்தேகமும் கண்பார்வையும் விழுந்திருப்பதைக் கண்ட அம்புஜம் கூட வியப்புற்று "ஏம்பா; இந்த மனிதனுக்கும் பாங்கிக்கும் என்ன சம்மந்தம்? பாங்கியில் அவன் கணக்கு வைப்பதற்குக் கூட யோக்யதையற்ற அப்பாவியாயிற்றே. போயும் போயும் ஒரு தச்சன் மீது உங்களுக்கு எப்படியப்பா சந்தேகம் உண்டாகிறது? இந்த ரகஸியத்தை எனக்குச் சொல்லுங்கள்.'' என்றாள்.

நாயுடு:—ஆதாரம் இல்லாது நான் காலை வைக்கவே மாட்டேன். தச்சனுடைய மகன் இரும்புப் பெட்டிகள் செய்யும் பெரிய ஷாப்பில் வேலையாயிருக்கிறான்.

அம்பு:—இதென்ன வேடிக்கையப்பா! ஊரில் எத்தனையோ இரும்பு ஷாப்புகள் இருக்கின்றன. ஆயிரம் தச்சன்களும் கருமான்களும் வேலை செய்கிறார்கள். பாங்கியின் கொள்ளைக்கும் இந்த அன்றாடம் கூலிவேலை செய்யும் தச்சனுக்கும் என்னப்பா சம்பந்தம்?

நாயுடு:—கூலிவேலை செய்யும் தச்சனுக்குமட்டுமா சம்பந்தம்? அதிலுள்ள வேடிக்கையை உனக்குச் சொன்னால் போதாது; இன்னும் சில தினத்தில் நேரில் காட்டுகிறேன். சொல்வதைவிட பார்ப்பது மிக்க சுவாரஸ்யமல்லவா? சரி; நாளையதினம் நீ ஒரு பக்கா நாட்டுப்புறத்து தச்சமேஸ்திரியின் மனைவியாகவேண்டும். அதற்கு வேண்டியபடி சகலமும் தயாராகட்டும். நான் அவசரமாக வெளியே போய்வருகிறேன்—என்று கூறிவிட்டு வெளியே சென்றார்.

அம்புஜத்திற்குத் தன் பிதாவுடன் இதுபோன்ற விஷயங்களில் வேலை செய்வதென்றால் அசாத்ய ப்ரீதி. தனி உத்ஸாகம். ஆகையால் சகல ஏற்பாட்டையும் ஒரு நொடியில் நடத்தினாள். மறுநாள் காலையில் அம்புஜம் சாக்ஷாத் தச்சமேஸ்திரியின் மனைவிவடிவில் எதிரில் ப்ரஸன்னமானதைக் கண்டு நாயுடு பரம சந்தோஷத்துடன் முதுகில் தட்டிக்கொடுத்தவாறு "இதோ! இந்த சீட்டில் நான் விவரமாக எழுதியிருப்பதைப் படித்துக் கொண்டு மனத்தில் வைத்துக்கொள்ளு. இந்த சீட்டு பத்திரம். வெளியாருக்குக் காட்டிவிடப் போகிறாய்...சரி. தயாராகக் கிளம்பு'' என்றார்.

அம்புஜம் கடிதத்திலுள்ள சகல ரகஸியங்களையும் படித்து மனத்தில் பெருமிதமான வியப்பும் திகைப்பும் அடைந்து கடிதத்தை மடித்து மடியில் பதுக்கிக்கொண்டாள்.

ஒரு சிறிய தட்டோடு வீட்டு வாசலில் விசாலமான இடத்தில் தச்சமேஸ்திரி பெரிய ஒரு மரத்தை வாளால் அறுத்துக்கொண்டிருந்தான். நாயுடுவும் அம்புஜமும் அங்கு வந்து, "கோவிந்த ஆசாரி வீடு இதுதானுங்களா?... அவரு இருக்காரு?''... என்றார் நாயுடு.

ஆசாரி:—நீங்க யாருங்க!...நான்தான் கோவிந்த ஆசாரி... இன்னா சமாச்சாரம்?...

நாயுடு:—அடாடாடா ...... நீங்கதானுங்களா ... நாங்க மூத்துப் பேட்டையிலிருந்துவரோங்க...நம்ம ஊருக்கு ஒரு பெரியவரு வந்திருந்தாரு. அவரு ஒங்களேப் பத்தி ப்ரமாதமா சொன்னரு, ஒங்க வீட்டிலே பொண்ணு இருக்குதாமல்ல, அத்தெ நம்ப மகனுக்கு கட்டிக்கலாமுண்ணு அவரு சொல்லி, நேரே போயி கேளுங்க இன்னரு.

கோவி:—அடாடாடா...வாங்க...வாங்க...ரொம்ப ரொம்ப சந்தோஷங்க...என் மகள்தான் கல்யாணத்துக்கு இருக்கா... அந்த பெரியவரு யாரோ தெரியல்லேயே...... இப்படி ஒக்காருங்க...... அம்மா...மீனட்சி... இந்தா... அம்மாளே கூப்பிடு, இந்தம்மாளே உள்ளே இட்டுகிணு போம்மா ...ஒங்கபுள்ளே இன்ன பண்ராரு...

நாயுடு:—பத்து ரூபா பரிக்ஷை பாஸு பண்ணி இருக்கான். மோட்டாரு கம்பெனியிலே வேலேயா இருக்கான்... ஒங்களெப்பத்தி அந்த பெரியவர் ரொம்ப ரொம்ப சொன்னரு. கேக்கறப்பவே எங்களுக்கு சந்தோஷமாயிருந்தது...நாங்க தெய்வ பக்தியும் நம்பிக்கையும் கொண்டவங்க. சாமிகிட்ட ஜோஸியம் பாத்தம்...கட்டிக்கலாம், போயி கேளுங்கன்னு சீட்டு வந்துடுச்சு. ஒடனே ஓடியாந்தோம்...சம்மந்தம் முடிஞ்சுடுத்துண்ண ரொம்ப நல்லது. இவதான் என் மவ...என் மவனுக்குத்தான் இப்போ கல்யாணத்துக்கு பாக்கவந்தோம்...

கோவிந்:—ரொம்ப சந்தோஷங்க. தெய்வ பக்தியும். நம்பிக்கையும் இல்லாட்டிப்போன இன்ன உபயோகம்?... அவங்க மனுஷாளா, நாயி... மிருகம். இல்லே... அதுபோலல்ல! நம்ப வீட்லேகூட பூஜெ புனஷ்காரம் எல்லாம் உண்டுங்க. சாமி உள்ளுன்னு தனியாவச்சிருக்கேனுங்க.

நாயுடு:—அப்படியா! பரம சந்தோஷம். எங்க வீட்லே கூட் சாமி உள்ளுன்னு தனியா இருக்குதுங்க. படங்கல்லாம் சிங்காரிச்சு தெனம் பூஜெதான், நைவேத்தியந்தான் ...பஜனேதான் ... அல்லம் உண்டுங்க...

இதற்குள் தச்சனின் சம்சாரம் வந்து அம்புஜத்தை அழைத்துப்போய் "இப்படி உக்காருங்க...ஒங்களெ பாததாலே மகாலக்ஷ்மிமாதிரி இருக்குதுங்க. ஒங்க தம்பியா கல்யாணப்பிள்ளே ...ஒங்களாட்டமே இருப்பாரா.?" என்றள்......

அம்பு:—என்னேவிட இன்னும் செழுப்பு, ஒயரம், நல்லா இருப்பான். கண்ணப்பாச்சாரின்னு பேரு. அதேமாதிரி கண்ணனேப் போலேயே இருப்பான். ஒங்க பொண்ணுதான கல்யாணப் பொண்ணு. எங்கே கூப்பிடுங்களேன் பார்க்கலாம்.

ஜானகி:—இதோ வரா...திடீர்னு நீங்க வந்ததனலே தலெகிலே ஒண்ணும் வாரிக்கில்லே...வாரிண்டுவரா...என் மகள்தான். நல்ல புத்திசாலிங்க...என்னமோ கொஞ்சம்......

அம்பு:—இன்னங்க... இதுக்கென்ன ப்ரமாதம்?...தத்துவாயி இருக்குன்னுங்க...அதானே சொல்றீங்க. பரமாதம்...இது மனுசா செய்ற காரியமா...கடவுள செய்யற காரியமல்ல! அதெப்பத்தி பரவாயில்லே. நாங்க தெரிஞ்சுதான் வந்தோம். தத்துவாயிருக்கறதனலே பொண்ணு அதிகம் பேசாமே அடக்கமா இருந்தா போறது. அதனலே எந்த காரியமும்

கெட்டுப்போகாது பாருங்க—என் தங்கச்சிக்குகூட ஒரு பொண்ணு ஊமையாயிருக்குது. அதுக்கு என்ன பண்ணலாம். தலைவிதிதானே......

ஜானகி:—அடாடாடா...இத்தின நல்லவங்களே நான் பாத்ததே இல்லீங்க. எங்களுக்கு சொத்துக்கு ஒன்னும் குறைவில்லெங்க...இந்த கொழுந்தமேலெ நெறய பணங்கூட அவங்க அப்பாரு வெக்கத்தான் போருரு......யாரும் கிட்டவந்து பாத்தப்றம்.....தத்துவாயாண்ணுட்டு போயிட்ராங்க......ஏதோ...கொயங்தெக்கு நீங்கதான் தாயி தகப்பனுங்க......அதோ வந்துட்டாளே......ஸீதா...வாம்மா, அம்மாளே நமஸ்காரம் பண்ணு''...என்ருள்.

நல்ல வசீகரமான பெண் 22வயதுக்குக்குறைவில்லை, அவள் வந்து அம்புஜத்தை வணங்கினள். பேசாமல் மவுனமாய் உட்கார்ந்தாள்...அம்புஜம் அவளைத்தடவிக் கொடுத்துப்பின் "உனக்கு தத்துவாய் என்பது தெரியும். நீ சங்கோஜப்பட வேண்டாம்...உனக்குப் படிக்கத் தெரியுமாம்மா.''

ஸீதா:—தெத் தெத் தெத் தெத் தே...ரியாது...

அம்பு:—இந்த காலத்திலே எல்லாரும் படிக்கிருங்க. எங்க காலத்திலேதான் மூடமாக வெச்சுட்டா. எனக்கு ஒரு எழுத்துத் தெரியாது. இனிமே படிக்க மூளே ஏதுங்கோ...ஆசைமட்டும் அடிச்சுகிறதுங்க...

ஜான:—நானும் அப்படித்தான். என் மகன் நல்லா படிப்பான். அவன் இலும்பு பெட்டி கம்பெனிலே வேலே...

அம்:—(வியப்புடன்.)...இலும்புப் பெட்டியா...நானு பாத்ததே இல்லேங்க...அது எப்படிருக்கும்?

ஜான்:--பணக்காரங்க ஊட்லே பணம், நகை, அல்லாம் வெப்பாங்க அது பண்றவேலேயே இவனுக்குத் தெரியும். எங்க ஊட்லேகூட ஒரு பொட்டி எங்க மகன் வெச்சிருக்கான்—என்று கூறியவாறு அதிருக்கும் விடுதிக்குப் போய் ஜன்னலால் காட்டினாள்.

இதைப்பார்த்த அம்புஜம் ப்ரமாதமாக வியப்பும் திகைப்பும் அடைந்து "அடாடாடா!...இதை நாங்க பாத்ததே இல்லீங்க...இது இன்னு வெலெ இருக்குங்க? பத்தாயிரம் ரூபாயிருக்குமா?...

ஜான,—இருக்குமாம்...எனக்குத் தெரியாது...

அம்:—இது நேரிய பணம் வெக்கறதா...

ஜா:—எங்களுக்கு அத்தனெ பணம் ஏதுங்க?...எம்மெவன் ஏதேதோ சாமானுங்க...மருந்துங்க, என்னென்னமோ வெச்சிருக்கான். அத்தெ யாருக்குமே தொறக்கத் தெரியாது. சாவிகூட அவன்தான் வெச்சிருப்பான்

அம்பு—அப்படியா! ...சரி...இனிமே கல்யாணத்தைப் பேசலாமல்லா...என்னும்மா! என் தம்பியே கட்டிகிறயா...

ஸீதா—கிக் கக் கக் கக் கட்டிகிறேன்.

ஜானகி:—எங்க பையன் ஊரிலே இல்லீங்களே. நாளே நாளெலே வந்துடுவான். அதுவரைக்கும் நீங்க இருந்து கல்யாணத்தெ முடிச்சி தாம்பூலத்தே மாத்திக்கிட்டுப் போகலாமுங்க. எப்படியும் இந்த சம்மந்தத்தெ நிறுத்தவே கூடாதுங்க...அம்மா...நவநீதம்...காப்பி பலகாரம் கொண்டாம்மா...

அர்புஜம் :—வாணுங்க... இப்பதான் சாப்பிட்டுவிட்டு வந்தோமுங்க வீரச்சே ஒருங்கையோடே வரக்கூடாதுண்ணு எங்க பாட்டி பலகாரம் செய்து குடுத்தா...இந்தாங்க, இத்தெ அல்லாருக்கும் குடுங்க.—என்று மூட்டையைக் கொடுத்தாள்.

மூட்டையை அவிழ்த்ததும் கண்களைக் கவரும் பலகார தினுசுகளைப் பார்த்ததும் நாக்கில் ஜலம் ஊறியது. உள்ளே கொண்டு வைக்கும்போதே அந்தம்மாளும் அவர்களுடைய பெண்களும் வெகு ருசியுடன் சாப்பிட்டார்கள். நாயுடு வாசலிலேயே தச்சனுடன் பேசிக்கொண்டிருந்தார்.

பலகாரங்களைச் சாப்பிட்ட மூவரும் அதன் ருசியை தடபுடலாக வியந்து பேசியபடியே அவர்களை யறியாது தூங்குவதுபோல் மயங்கிப் படுத்து விட்டார்கள். நாயுடுவின் ரகஸிய கடிதத்தில் கண்டபடி முதல் காரியம் நடந்ததும், தன்னுடைய மாறு சாவியால் தச்சனுடைய மகனின் தனியறையைத் திறந்தாள்.

இரும்புப்பெட்டி சாவியை வைத்துள்ள ரகஸிய இடத்தை ஆராய்ந்தாள். சதுர செங்கல்களால் தரை கட்டப்பட்டிருந்ததால் வெகு யூகத்துடன் செங்கல்களைப் பார்த்துவந்தாள். ஒருபெரிய இரும்புத்தொட்டி ஒரு ஓரமாக வைத்திருந்தது; அதை மெல்ல நகர்த்திவிட்டுக் கீழே கவனித்தாள். செங்கல் எடுக்கவரும் நிலைமையிலிருந்தது. செங்கல்லை மெல்ல எடுத்தாள். அதன் அடியில் ஒரு இரும்புப்பெட்டியில் இரும்புப்பெட்டிசாவி வைத்துப் பூட்டப்பட்டிருந்தது. அந்த பெட்டிக்கு மாறுசாவி போட்டுத் திறந்து இரும்புப்பெட்டி சாவியை எடுத்து, பெட்டியை வெகு ஜாக்ரதையாகத் திறந்தாள். பெட்டிக்குள் ஒரு கத்தை கடிதங்கள் இருந்தன. அவைகளை அப்படியே எடுத்து பத்திரப்படுத்திக்கொண்டாள். இரும்புப்பெட்டியின் பூட்டை உடைக்கும் ஆயுதங்கள் த்ராவகங்கள் முதலிய சகலமும் இந்தப் பெட்டியில் இருப்பதைக்கண்டு குறிப்பாக எழுதிக்கொண்டாள். மறுபடியும் பழயபடியேவைத்துவிட்டு புறக்கடைப்பக்கமாக கம்பி நீட்டினாள்.

நாயுடுவின் கடிதத்தில் கண்டபடி சகலமும் செய்துவிட்டுப்பின் தான் போவதை அறிவிப்பதற்காக ஒருமாதிரித்வனியில் ஊஊ... கூகூ... என்று பக்ஷிகத்துவதுபோல் கத்தினாள். கழுகுக்கண்ணுடனும் பாம்புக்காதுடனும் இதே நினைவுடன் பார்த்துக்கொண்டிருக்கும் நாயுடுவுக்கு இந்தகுரல் காதில் கேட்டதும் பரமசந்தோஷம் உண்டாகியது... ஏற்கனவே இவர் ஏற்பாடுசெய்திருந்தபடி அம்புஜம் வெளியில் சென்றதும், ஒருவனை யனுப்பி ஆசாரியை வெளியில் அவசரமாக அழைத்து ஒரு சமாச்சாரம் சொல்வதாக அழைத்துச்சென்றுவிடும்படிச்செய்தார்.

அந்த ஆள் வந்து கூப்பிட்டதும், "இதோ! ஒரு நிமிஷம் இருங்க யாரோ அவசரமாக கூப்பிடறாங்க" என்று சொல்லிவிட்டு கோவிந்தாசாரி போய்விட்டான். நாயுடு நேரே உள்ளே சென்று பின்பக்கத்து வழியாகக் கம்பி நீட்டிவிட்டார். ஏதோ பிரமாதமாகத்தான் வீடு கட்டப்போவதாயும் அதற்காக மரசாமான்களுக்குக் கணக்கும் ஜாபிதாவும் கேட்பதாகவும் வந்த மனிதன் கோவிந்தாசாரியிடம் அரைமணி நேரம் பேச்சுக் கொடுத்துவிட்டு விடைபெற்றுக்கொண்டு போய்விட்டான்.

ஒரே நாளில் தனது தத்துவாய் மகளுக்கும் இடம் கிடைத்துவிட்டதும், பெரிய வேலை ஒன்று வந்ததும் கோவிந்தாசாரியின் சந்தோஷம் கரை புரண்டது, குஷியுடன் வந்தான். நாயுடுவைக் காணாததால் தம் மகளுடன் பேசிக்கொண்டிருப்பதாக எண்ணி சற்றுநேரம் பார்த்தான். நாயுடுவின் சந்தடியே காணாததால் தானு உள்ளே சென்றான்.

என்ன ஆச்சரியம்! நாயுடுவும் அவர் மகளும் காணவில்லை. தன் மகளும் மனைவியும் நிம்மதியாகத் தூங்குவதையும் பார்த்து ஒன்றுமே புரியாது வீடுபூராவும் ஒரு முறை பார்த்தான். ஒன்றும் விளங்கவில்லை "இதென்ன தூக்கம் இந்த வேளையிலே?... அவங்க எங்கே?... தே... ஸீதா ... தே... எயுந்திரு" என்று எழுப்பினான்.

அவர்கள் தூங்கினாலல்லவா எழுந்திருக்கப் போகிறார்கள்? புரட்டிப் புரட்டி எழுப்பிப்பார்த்தான். ஒருவராவது நினைவுடனில்லாது மயங்கிக் கிடந்ததால் அவனுக்கு திடுக்கிட்டு ஏதோ ஒரு விதமான பயம் உண்டாகியது "வந்தவர்களையும் காணவில்லை. இவர்களும் இப்படி விழுந்து கிடக்கிறார்கள். இதென்னமோ தெரியவில்லையே" என்று கதி கலங்கி விட்டான். அவனுடைய யோசனைகள் எங்கெங்கோ சென்று அலைந்தன.

---

## 33

காமாக்ஷியம்மாள் வெளியே போயிருக்கையில் பானுமதி மிகுந்த துக்கத்துடனும் கலவரத்துடனும் கண்ணீர் பெருகியவாறு உட்கார்ந்திருக்கையில், வாசலில் ஒரு கார் வந்து நின்றதும் "எந்த சினிமாக்காரப்பாவி வந்துவிட்டானோ? வீட்டில் ஒருவருமில்லையே" என்ற பயத்தினால் வீதிக் கதவை சாத்தித் தாளிட்டு விடலாமா! என்று யோசிப்பதற்குள் காரிலிருந்து போலீஸ் இன்ஸ்பெக்டரும் ஒரு போலீஸ் சேவகனும் இறங்குவதைப்பார்த்ததும் பானுமதியை அப்படியே வீட்டோடு ஒரு தட்டாமாலை சுற்றி ஆகாயத்திற்கும் பூமிக்குமாக பந்தடிப்பதுபோல கலக்கி அலக்கடித்து விட்டதால் நிலைகலங்கி அப்படியே சுவரோடு சுவராகச் சாய்ந்து விட்டாள். உடல் நடுங்கி வெயர்வை வெள்ளம் குபீரென்று பொங்கியது.

"ஐயோ! வீட்டில் யாருமே இல்லையே! கிட்டுகூட இல்லையே: உள்ளேயே அடைத்துக் கிடந்தவளை ஏன் இப்படிச் சோதனை செய்கிறார் கடவுள்! ஏதோ பெரிய ஆபத்து வந்துவிட்டதே... என்ன செய்வேன்?" என்று இவள் கலங்குவதற்குள் போலீஸ் இன்ஸ்பெக்டர் உள்ளே வந்து... "அம்மணி! பானுமதிதேவி இருக்கிறார்களா.!" என்ற வாக்யத்தைக் கேட்டதுதான் தாமதம்... பானுமதியின் தலைமீது எரிமலையே புரண்டு விழுந்து விட்டதுபோல் அலறித் துடித்து செய்வதறியாது கலங்கிப்போய் நின்றாள். தேகம் கிடுகிடென்று நடுங்குவதை அவளால் தடுக்கவே முடியவில்லை.

அவளுடைய தேகம் படபடவென்று நடுங்குவதைக் கண்ட இன்ஸ்பெக்டர் ஒரு மாதிரி கலக்கத்தை யடைந்து..."அம்மணீ! போலீஸ்காரன் என்பதைப் பார்த்துத் தாங்கள் இப்படி நடுங்குவதாக நினைக்கிறேன்.

தாங்கள் யாரோ எனக்குத் தெரியவில்லை. நான் பானுமதி தேவியைப் பார்க்கவேண்டும். பயப்படாமல் தயவு செய்து பதில் சொல்லக் கோருகிறேன். நான் அன்னியன் யாருமில்லை. பானுமதி என்னுடைய தாயாராக வேண்டும். நான் பாஸ்கரன்''...என்று கூறிமுடிக்குமுன்...''ஹா...பாஸ்கரனா!...உண்மையாகவா...என் இந்துமதியின் அண்ணவா?''...என்று அலறியவாறு கேட்டு அவனை ஏற இறங்கப்பார்த்தாள்.

இதுவரையிலிருந்த துடிப்பு ஒரு தினுசு. இப்போதுண்டாகிய ஆச்சரியம், மின்சாரத்தாக்குதல் போன்ற அதிர்ச்சி எல்லாம் ஒன்றுகூடி அவளை அரைக்ஷணத்தில் மாற்றிவிட்டது''பாஸ்கரனா!..அப்பா..நான் தான் பானுமதி...என்னல் பேசவேமுடியவில்லையே!''என்று கண்ணீர் கக்கினள்.

இந்த வார்த்தையைக் கேட்டதும் பாஸ்கரன் ''தாங்களா பானுமதி தேவி!...அப்பா இறந்த போது பார்த்ததுஎனக்கு நினைவே இல்லை என்று கூறியவாறு தனது உத்யோக உடையுடன், சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து எழுந்து ''அம்மா...நிற்கவேண்டாம் இப்படி உட்காருங்கள், என் செல்வி இந்துமதி எங்கே?'' உங்களைக் கடவுள் சிக்ஷித்தது பாதி என்றால் மனிதர்கள் செய்த சதி முக்கால்வாசியாக ஆகிவிட்டது. நான் பலதரம் தங்கள் பிதாவுக்குக் கடிதங்கள் எழுதினேன். நேரிலும் பலதரம் வந்தேன். அந்த அயோக்ய மனிதன் என்னைக் கண்டவாறு பேசியும் உள்ளேயே சேர விடாதபடித் தடுத்தும் துரத்திவிட்டார். நானும் சிறுவனுகையால் கோபம் தாளாது போய்விட்டேன். வருஷங்கள் பலபல ஓடிமறைந்தன, எப்படியாவது என் தங்கையை வந்து பார்க்கவே சமயம் பார்த்துக் கொண்டிருந்தேன்.

பகவான் பக்தர்களுக்கு வத்ஸலனல்லவா?...உங்கள் பிதாவையும் உங்கள் சகோதரியின் கணவனையும் என் கையினலேயே கைதியாக்கிச் சிறையிலடைக்கும்படிக்குச் செய்துவிட்டார்...இவர் தன் பெண்ணுக்கும் பேத்திக்கும் செய்த த்ரோகம் வீண் போகுமா?

பானு:—பாஸ்கரா...எங்கப்பாவை நீயா கைது செய்தாய்? என்னல் பேசவேமுடியவில்லையே...அப்பா! உன்னை நான் சரியாகக்கூடப் பார்த்ததில்லை. நீ தான் பாஸ்கரன் என்றுநம்புவதற்குக்கூட எனக்கு ஆதாரமில்லையே! உலகம் போகிற போக்கு...

என்று முடிப்பதற்குள் பாஸ்கரன் தன் சட்டைப் பைக்குள் தயாராக வைத்திருந்த தனது தாயார், தகப்பனர், தான் குழந்தையாயிருந்தபோது மடியில் வைத்து எடுத்த புகைபடமும், பானுமதியின் கல்யாணத்தில் எடுத்த புகைப் படமும்,—பானுமதியின் கணவன் விரலில் போட்டிருந்த ஒரு வைர மோதிரத்தை மட்டும் அவர் இறந்த போது தனக்கே வேண்டும் என்று நாலுபேர்களை மத்யஸ்தம் வைத்துக் கேட்டு வாங்கிச் சென்றான்,—அந்த மோதிரம் முதலிய சகலத்தையும் எடுத்துக்காட்டி 'அம்மா! உங்கள் பிதா என்னைப் பற்றி அவதூறாகவும். அபாண்டமாகவும் சொல்லி எங்கள் புனிதமான இதயத்தில் துராக்ருதமான எண்ணங்களை பயங்கரங்களை வேரூன்றச் செய்துவிட்டார் என்பதையும் நான் அறிவேன், பயப்படவேண்டாம் தாயே! கடவுள் க்ருபையினல் நான் இது

வரையில் எத்தகைய துஷ்க்ருத்யங்களிலும் ப்ரவேசித்தறியமாட்டேன் என்னுடைய உத்யோக தோரணையில் என் கடமையைச் செய்தபிறகு தான் உங்கள் தந்தை என்பதை அறிந்தேன். ஆனால் என்னை அவர் இன்னும் அறியவில்லை. அதுவும் எனது நல்லகால மென்றே எண்ணி உடனே இரவே ரயிலேறி இதோ நேராக வந்திறங்கினேன். முதலில் நான் வருவதற்குப் பயந்தேன். இங்கு உங்கள் தாயார் என்ன சொல்வார்களோ! தம்பிகள் என்ன சொல்வார்களோ! தாங்கள்தான் என்ன நினைப்பீர் களோ! என்று மயங்கினேன்.

தாயே! உங்கள் நாட்டுப் பெண் ஸாரதாதான் என்னைத் தைரிய மூட்டி "முதலில் போய் சித்தியையும், உங்கள் சகோதரியையும் அழைத்து வந்து விடுங்கள் இந்த சமயம் விட்டால் மறுபடியும் இதுபோல் சந்தர்ப்பம் கிடைக்காது. அடிக்கடி உங்கள் பிதா சொப்பனத்தில் தோன்றி "இந்து வைக் கைவிடாதே... பானுமதியைக் கைவிடாதே''... என்று சொல்வதாகச் சொல்கிறீர்களே அவர் ஆத்மா த்ருப்தியாவதற்கு இதுதான் தருணம் உடனே போய் வாருங்கள்" என்று என்னைக் கட்டாயப்படுத்தி அனுப் பினாள். அவள் வேறு யாரும் இல்லை. உங்கள் ஆருயிர் சிநேகிதை ஜானகியம்மாளின் நாத்தினார் மகள்தான், அவர்கள்கூட உங்களை ஒரு சமயம் வந்து பார்த்தார்களாம். நீங்கள் எந்த நிலைமையில் இருக்கிறீர்கள் என்பதை அறிந்தார்களாம். உங்களுக்காக அவர்கள் இருந்தவரையில் கண்ணீர்விட்டுக் கதறினார்கள்.

பானு இடை மறுத்து..."என்ன! ஜானகி இப்போது...

பாஸ்:—தாயே? அவர்கள் இறந்து நான்கு வருஷங்களாகிவிட்டதே! அது தெரியாதா?...

பானு:—அடாடா... எனக்காக அனுதாபமும், அன்பும் கொண்ட அவளுமா போய்விட்டாள்!... எனக்கு எந்த விஷயமுமே தெரியாதே... அப்பா பாஸ்கரா!... எதற்காக என் தந்தை கைதியானார்... என்ன காரணம் ... என் தங்கையின் கணவன் என்ன குற்றம் செய்தான்...?

பாஸ்:—சகலமும் சொல்கிறேன்... முதலில் இந்துமதியைக் கூப் பிடுங்கள். அவளைச் சினிமாவில் சேர்த்துவிட்டதாயும் அதனால் உங்கள் தகப்பனார் தன் மருமகப் பிள்ளையின் கடனைத்தீர்க்க வந்ததாயும் போலீஸ் தகவல் கிடைத்திருக்கிறது... இந்துமதி எங்கே...

பானு:—(அப்படி இப்படி சுற்று முற்றும் பார்த்து) அப்பா... ஸத்யமாக நீ பாஸ்கரன்தானே... ஏனென்றால் உலகத்தை நம்பவே முடியவில்லை. என்னைப் பெற்றவர்களே இத்தகைய த்ரோகத்தைச் செய்திருக்கையில் மற்ற எதையும் நான் கண்டு பயப்படுகிறேன். ஏனென் றால் சினிமாக்காரர்களே என்னை இம்மாதிரி வந்து ஏமாற்றுகிறார்களோ என்ற சந்தேகம் வேறு என்னை அந்தரங்கமாகப் போட்டு வாட்டுகிறது...

பாஸ்:—தாயே... மகா உத்தம சிகாமணியாகிய தாங்கள் பயப்படுவது சகஜம். இதோ! உங்கள் தகப்பனார் எழுதியுள்ள கடிதங்களைப் படித்துப் பார்த்தால் பிறகு நீங்கள் நம்பக் கூடும்.—என்று கூறி ஒரு கத்தைக் கடி

தங்களை எடுத்துக் கொடுத்தான். பானுமதி அவைகளை படித்துப் பார்த்த பிறகு மனது சமாதானமாகியது.



நடந்த சகல விஷயங்களையும் பாஸ்கரனிடம் கூறிவிட்டு "பாஸ்கரா... உன் தங்கை இருப்பிடம் என்னைத்தவிர வேறு யாருக்கும் தெரியாது. அவளைச் சினிமாக்காரர்கள் தேடியலைகிறார்களாம். இந்த லக்ஷணத்தில். என் தாயார் ராஜத்தைத் தேடிக் கொண்டு ஓடினாள். அவள் சினிமாக் காரனுடன் கூசாமல் போவதைக்கண்டு கிட்டு ஓடிவந்து சொன்னான். பகவான்தான் உன்னை இப்போது அனுப்பி என்னைக் காப்பாற்றச் செய் திருக்கிறார்.

பாஸ்:—சித்தி! இனி சற்றும் பயப்படவேண்டாம். உங்களிருவரை யும் நான் இன்றே என்னுடன் அழைத்துக்கொண்டு போய் உன் மருமக ளிடம் சேர்த்துவிடுகிறேன். அம்மா! நீங்கள் தற்போது ஓர் பெரிய கொள்ளைக்கூட்டத்தாரிடம் அகப்பட்டுக் கொண்டிருப்பதை அறிந்தால் நடுநடுங்குவீர்கள். உங்கள் தம்பியைக் கைதியாக்குவதற்கு இவ்வூர் போலீஸார் வாரண்டு கொண்டுபோயிருக்கிறார்கள். உங்கள் தம்பி ராஜ சேகரனின் ஓவியச்சாலையையும் சர்க்கார் ஸீல் வைத்தாயிற்று. சினிமாக் கம்பெனிக்காரர்களும் இத்தனை நேரம் மரியாதை பெற்றிருப்பார்கள்.

பானு:—என்ன!...ராஜசேகரன் கூடவா கைதியாவான்?...ஐயயோ எனக்கு விவரம் புரியச்சொல்லுங்களேன்...

பாஸ்:—அம்மா! வருத்தப்படவேண்டாம். தாம்தாம் செய்த வினை யைத் தாம்தாம் அனுபவித்துத்தானே ஆகவேண்டும். துப்பறியும் நிபுண ரான ராஜாராம்நாயுடு இந்த விவரங்களை வெகு சுலபமாகக் கண்டுபிடித்து விட்டார். அவைகளைப் பின்னால் சொல்கிறேன். முதலில் தயவு செய்து இந்துமதியை நீங்கள் இதேகாரில் அழைத்துவாருங்கள்—என்று சொல்லிக் கொண்டிருக்கையில், காமாக்ஷியம்மாள் 'லபோதிபோ' என்று அடித்துக் கொண்டு அலங்கோலமாக ஓடிவந்தாள்.

இங்கு ஒரு போலீஸ்காரன் நிற்பதைக்கண்டு சப்த நாடியும் ஒடுங்கிப் போய் "ஐயயோ! இதென்னக்கொள்ளை!"...என்று திகைத்து நின்றாள். அவளுடைய தோற்றம் பைசாசம்போல் காணப்பட்டது. இத்தனை கேவல மான நிலைமையிலும் பானுமதிக்குத் தான் இவனிடம் பேசுவதைப்பற்றி தன் தாயார் என்ன சொல்லிவிடுவாளோ! என்கிற மகத்தான பயம் உலுக்கிவிட்டது.

## 34

இரவு முற்றும் தூக்கமில்லாது தன் தாயார் என்ன செய் வாளோ! என்கிற கவலையிலேயே பொழுதைக் கழித்த இந்துமதிக்கு உதயமானதும் இருப்பே கொள்ளவில்லை. "டீச்சர்! எது எப்படியானாலும் ஆகட்டும். என்னை எங்கள் வீட்டிற்கு அழைத்துக்கொண்டு போங்கள். என் மனம் ஏதோ பயப்படுகிறது. எங்க மாமாவுக்கு என்மீதுள்ள கோபத்தில் எங்கம்மாவைக் கொலைகூடச் செய்துவிடுவானோ என்று

பயமாயிருக்கிறது. எங்கம்மாவை முதலில் நான் பார்த்தால்தான் எனக்கு மனச்சாந்தியடையும். எங்க மாமாவும் தாதாவும் என் விஷயமாகச் செய்துள்ள சதியை நாம் முதலில் போலீஸுக்கே தெரிவித்துவிடலாம் என்று தோன்றுகிறது. "பணத்திற்காசைப்பட்டு என்னை விற்கப்பார்க்கிறார்கள் என்னை சர்க்கார்தான் காப்பாற்றவேண்டும்." என்று நானே சர்க்காரிடம் ஒரு விண்ணப்பம் செய்துகொள்ளலாம் என்று தோன்றுவதால் தயவு செய்து என்னை எங்கள் வீட்டிற்கு அழைத்துக் கொண்டு போங்கள்'' என்று கெஞ்சினாள்.

இந்துமதியின் தாயன்பைக் கண்டு சந்தோஷமடைந்த உபாத்தியாயினி, இந்து சொல்லும் யோசனையை அங்கீகரித்து அப்படியே செய்வதாக இசைந்தாள். ராஜாப்பாள் ஓடிவிட்டதோ, தன் தாதா கைதியானதோ. மற்ற எந்த தகவலும் இந்துமதிக்குத் தெரியாததால், அவளுடைய தாயாரைப் பற்றிய கவலையே அதிகமாக இருந்ததால் அவளுக்கு நிமிடம் போவது யுகமாகத் தோன்றியது.

வாத்தியாரம்மாள் தனது முக்யமான வேலைகளை முடித்துக்கொண்டு இந்துவின் விருப்பப்படி கிளம்பினாள். இந்துமதியின் வீட்டு வாசலில் கார் நிற்பதைப் பார்த்ததும் இந்துவுக்கு முதலில் திடுக்கிட்டது "டீச்சர்! ஒருவேளை சினிமாக்காரனாகவிருக்குமோ.? எனக்குப் பயமாக இருக்கிறதே... ஐயயோ! வாசலில் ஒரு போலீஸ் சேவகன் நிற்கிறானே. டீச்சர்! அம்மாவுக்கு ஏதோ ஆபத்து வந்துவிட்டது'' என்று பதறியவாறே இறங்கி தட்தடவென்று உள்ளே சென்றாள்.

போலீஸ் இன்ஸ்பெக்டர் நிற்பதும், அசல் பிச்சைக்காரியைப் போல் பாட்டி அழுதவாறு நிற்பதும் கண்டு நடுங்கிய இந்துமதி ஓட்டமாக ஓடி 'அம்மா' என்று பானுமதியைச் சேர்த்துக் கட்டிக்கொண்டு... "இதெல்லாம் என்னம்மா ?''... என்று மிரள மிரளப் பார்த்தாள்.

இந்துமதி திடீரென்று வருவாள் என்பதை பானுவும் எதிர்பார்க்கவில்லை. காமாட்சிக்கு இவளைப் பார்த்ததும் ஒரே அதிர்ச்சியும் ஆத்திரமும் துக்கமும் ஒன்று கூடி... அவளை விறைக்க விறைக்க பார்த்தாள்.

இந்துமதிக்கு அந்த நிமிஷம் இத்தகைய அசுரதைரியம் எப்படித்தான் வந்ததோ? தெரியவில்லை. தன்னை விறைக்க விறைக்கப் பார்க்கும் பாட்டியை கதிகலங்கும்படிப் பார்த்து..."ஏய் கிழப்பிணமே! மிருகங்கள் கூட தாம் பெற்ற மக்கள் என்றால் தனித்த வாஞ்சையைக் காட்டி ஆதரிக்கின்றன, அனுதாபத்துடன் பாடுபடுகின்றன; தன் குட்டிக்கு ஒரு ஆபத்து விளைந்துவிட்டதென்றால் கும்பல்கூடி கத்திக் கதைந்து தமது உள்ளத் துடிப்பை உலகிற்குக் காட்டி ப்ரமிக்கச் செய்கின்றன. அத்தகைய மிருகத்தைவிடக் கேவலமான மாமிஸப் பிண்டங்களாகிய உங்களுக்கு இனி இந்துமதியோ பானுமதியோ கட்டுப்பட்டு த்ரோகவலையில் வீழ்ந்து தம் தம் வாழ்க்கையை நாசம் செய்துகொள்வார்கள் என்று நீங்கள் கனவு காணவேண்டாம்.

தான் பெத்த பெண்ணை, இளமங்கையை கிழவனுக்குக் கட்டி அதன் மூலம் பணம் பறித்து கொள்ளைக்கூட்டத்தைப் போல் குடும்பத்துடன்

பகிர்ந்துகொண்ட வயிற்றெரிச்சல் போதாமல் இப்படியுமா ஆரம்பித்தீர்கள்? தூத்தூ! பேமானிப்பிழைப்பு. இம்மாதிரி மானத்தை வித்து மானங்கெட்டு வாழ்வதைவிடப் பாழ்கிணற்றில் சந்தோஷமாக விழுந்து சாகலாமே! பேயானாலும் தாய் என்பார்கள். நீ பேயையும் விழுங்கும் ப்ரம்ம ராக்ஷஸி என்பதை அறிந்தேன். என் தாயாரை அழைத்துக் கொண்டு போவதற்கே இப்போது வந்தேன். நேற்று முதல் சினிமாக்காரனும் உன் மகனும் என்னை வலை போட்டுத் தேடுவதை நான் அறியாமலில்லை. நானே ஏமாற்றி விரட்டியனுப்பினேன். பெத்த பாசங்கூட அற்று, பணந்தான் ப்ரதானம் என்று திரிந்த அல்ப நாய்களின் கூட்டமாகிய உங்களிடம் இனி அரைக்ஷணம் நேரங்கூட இருக்க முடியாது. அம்மா! புறப்படு. பிச்சை எடுத்து நாம் ஜீவிக்கலாம். இந்தா பாட்டி... இதோ இதையும் கழட்டி வைக்கிறேன். எனக்கு ஒரு தூசிகூட வேண்டாம்...

ஐயா போலீஸ்காரரே! தாங்கள் உண்மை போலீஸ்காரரோ அன்றி சினிமாக்காரர்களின் மாயா வேஷமோ தெரியாது. எதுவாயிருந்தாலும் ஆண்டவனின் அருள் ஒன்று எங்களுக்குத் துணை போதும்.''

என்று படபடத்துக் கூறியவாறு நகைகளைக் கழட்டி பாட்டியின் முகத்தில் விசிறியடித்துவிட்டுத் தாயாரைக் கையைப் பிடித்துத் தடதடவென்று இழுக்கப்போனாள். அதுவரையில் பாஸ்கரனின் சமிக்ஞையை அறிந்து பானுமதி போசாதிருந்தாள். பாஸ்கரனையே பார்த்து இந்துமதி கேட்டதும் பாஸ்கரன் கடகடவென்று சிரித்தவாறு 'என் செல்லமே!... என் பிதா எனக்களித்துச்சென்ற பாக்கியலக்ஷ்மீ!'...என்று இந்துவைக் கையைப்பிடித்துக் கொண்டு கண்ணீர் வழியும் தன் கண்களில் ஒத்திக்கொண்டு, "என் செல்லத் தங்கையே!... நான் வெறும் போலீஸ்காரன் மட்டுமல்ல உன்னைப் பெற்ற பிதாவே என்னையும் பெற்று உனக்கு அண்ணனாகக்கொடுத்துள்ள உன் சொந்த மனுஷ்யன். உன்னுடைய தாதா பாட்டியின் அக்ரமத்தினால் என்னை நீ பார்க்க முடியாதபடி த்வேஷ மென்கிற முள் வேலி இட்டு நம்மைப் பிரித்திருந்த மகானுபாவனை கடவுள் என் கையினாலேயே கைதியாக்கிச் சிறையில் உட்காரும்படியாக சன்மானம் செய்துவிட்டார். உன் மன்னி உங்களை உடனே அழைத்து வரும்படியாக அனுப்பினாள்... அம்மா! என் செல்வீ! என் சந்தோஷம் சொல்லவே முடியவில்லை.''

என்று பாஸ்கரன் சொல்லிக்கொண்டே போவதைக் கேட்கக் கேட்க இந்துமதியின் முகத்தில் ஜ்வலித்துப்ரகாசிக்கும் புதிய உணர்ச்சிகளின் எல்லை சொல்ல முடிாவில்லை. "அம்மா! உண்மையாவா இவர் என் அண்ணன்!... சத்தியமாகவா... அண்ணா! அண்ணா!...சத்யமாக... கடவுள் மீது ஆணையாக நீங்கள் என் அண்ணாவா?''...என்று பித்துப் பிடித்தவள் போல் கூவினாள்.

"கண்ணா! சத்யமாக இவர் உன் அண்ணாதான். இவர் நம்மைப்பற்றி உன் தாதாவுக்குப் பல கடிதங்கள் எழுதியிருக்கிறார். அவைகளைப் பற்றி ஒன்றுமே நமக்குச் சொல்லாது மறைத்து விட்டதோடு அவரைப் பற்றி அவதூறாக நம்மிடம் சொல்லிவிட்டு இவருக்கும் கடிதங்கள் எழுதியிருப்பதை என்னிடம் காட்டினார். இதோ பாரு...

என்று கொடுத்தாள். இந்த எதிர்பாராத சம்பவங்களைப்பார்க்கும் காமாக்ஷிக்கு ஏற்கனவே உள்ள அதிர்ச்சியுடன், வானமே இடிந்து தலை மீது விழுந்துவிட்டதுபோலான பெரும் தாக்குதல் உண்டாகி...“ஐயயோ! பாஸ்கரனுடா நீ?”...என்று திகைப்புடன் கூறுவதற்குள் பாஸ்கரன்... “ஆமாம். பல வருஷங்களுக்கு முன்பு இந்துவைப்பார்க்க வேண்டும் என்று நான் வந்தபோது அடிக்காத குற்றமாக அடித்துத் துரத்தினீர்களே அதே பாஸ்கரன்தான் இன்று தைரியமாய் அதிகாரதோரணையுடன் வந்திருக்கிறேன். இப்போது என்னை விரட்டியடிக்க உன்னால் முடியாது பாட்டி! என் சகோதரியையும் என் தாயாரையும் கடவுள் பாத சாக்ஷியாக நான் சந்தோஷமாக அழைத்துச் செல்ல வந்திருக்கிறேன்...“விதை விதைத்தவன் விதையை அறுக்கிறான். வினை விதைத்தவன் வினையறுக்கிறான்” என்கிற பழமொழியை கடவுள் உனக்கும் எனக்கும் நிதர்சனமாகச் செய்துவிட்டார்...

என்று சொல்லும்போது இந்துமதி அவளை மீறிய உணர்ச்சியுடன் “அண்ணா!”...என்று கூவியவாறு அவன் காலைக் கட்டிக் கொண்டு வணங்கினாள்: சொர்க்கப் பதவி அகப்பட்டால்கூட இந்துவுக்கு இத்தனை சந்தோஷமும், பேரின்பமும் பொங்கி இருக்காது. இதைக்கண்ட பானுமதியின் ஆனந்தம் கரைபுரண்டது. “அப்பா பாஸ்கரா! உன் சொத்தை உன்னிடம் சேர்த்துவிட்டேன், இனி என் உயிர் போனாலும் பாதகமில்லை.” என்று தழுதழுத்த குரலில் கூறினாள்.

இந்துமதியை பாஸ்கரன் எழுப்பி நிற்கவைத்து‘அம்மா...சில வருஷங்களுக்கு முன்பு ஓவியப்பரிசு பெற்ற ஒரு நங்கையின் புகைப்படங்கூட உன் சாயலாகவே இருந்தது. அதுகூட நீதானா என்ற சந்தேகமாயிருக்கிறது...

பானு:—இவளேதான்...அந்தக்கலை, சங்கீதம், ஹிந்தி பயில்வதற்கு ஆயிரம் குற்றமும் குறைகளும் சொல்லிய இதே மனிதர்கள் உதவாக்கரைச் சாக்கடையில் வெகு தாராளமாகவும் பரம திருப்தியுடனும் கங்கா ஸ்நானம் செய்வது போன்ற புண்ணிய கைங்கர்யம் செய்வது போல் என் கண்மணியின் வாழ்க்கையைப் பலியிடத் துணிந்தார்கள். அந்த கடவுள் தான் இத்தனை சிறுவயதான இவளுக்குச் சமயோசிதமான புத்தியையும் தைரியத்தையுங் கொடுத்துக் காப்பாற்றினார். அந்த சமயம் சாக்ஷாத் லக்ஷ்மிதேவியே நேரில் வந்து ஆதரித்ததுபோல் இந்த உபாத்தியாயினி ஆதரித்தார்கள் “எளியாரைவலியாரடித்தால்வலியாரை தெய்வமடிக்கும்.” என்பதுபொய்யாகுமா!” என்று தனது ஆத்திரந் தீரப் பேசிய பிறகுதான் மனது சற்று அடங்கியது

---

## 35

**நீ**ச்சன் வீட்டிலிருந்து திரும்பி வந்த நாயுடுவும் அம்புஜமும் தம் வேஷங்களைக் களைந்துவிட்டு உட்கார்ந்தார்கள். அதேசமயம் பாங்கியைச் சேர்ந்த சொந்தக்காரர் அங்கு வந்து சேர்ந்து “என்ன நாயுடுகாரு! நாட்கள்

உருண்டுகொண்டே போகிறதே. ஒரு தகவலும் கிடைக்கவில்லை. போலீஸ்காரர்களோ, தினம் ஏதோ வந்து பார்ப்பதும் தடபுடல் செய்வதும் பாங்கியில் காவல் இருக்கும் கிழவனைப் பிடித்துச் சிறையில் அடைத்திருப்பதுமாக அட்டகாசம் செய்கிருர்கள். ஊர் வதந்தியோ, நாயுடுவுக்கு இதில் அக்கரையே இல்லை. பாங்கிக்களவில் அவருக்கும் பங்குகிடைத்து விட்டது போலிருக்கிறது—என்று அபாண்டமான பழியைச்சொல்கிருர்கள். மத்தியில் காரியம் கெட்டுப் போகின்றதே'' என்ருர்.

இதைக்கேட்ட நாயுடு சிரித்துக்கொண்டே ''ஸார்! யார் எதைவேண்டுமாயினும் சொல்லட்டும். இந்த சரீரம் ஆதிமுதல் பட்டுப் பட்டுக் காய்காய்த்து விட்டதேயன்றி இதற்கு ஒரு வித உணர்ச்சியும் இல்லை. சில கொள்ளைகளில் உலகம் என்ன சொல்லியது தெரியுமோ? 'தந்திரப் புலியான நாயுடுவே கொள்ளை யடித்திருப்பான். அதனுல்தான் பேசாமலிருக்கிருன்' என்று கூடச் சொல்லிற்று. இந்த விஷயத்தில் பங்கு கிடைத்ததாகத்தானே சொல்கிருர்கள். பரவாயில்லை. நான் எந்த காரியத்தையும் நிதானமாக ஆர அமர யோசித்துச் சரியான விஷயங்கள் கிடைக்கும் வரையில் தாமதித்துத்தான் ப்ரவேசிப்பேன். இந்த கொள்ளை விஷயத்தில் சிக்கல்கள் அதிகம்: ஆனல் தாமதித்து ஆராய்ந்து கண்டு பிடித்தது மிக மிகச் சுலபம்... உங்களுக்கு இதன் பொக்கிஷதாரின்மீது சந்தேகம். இல்லையா... அவரைத்தானே நீங்கள் என்னை கவனிக்கச் சொன்னீர்கள்?...

பாங்கர்:—ஆமாம் .. உமக்குமேல் நானும் அவரை கவனித்துத்தான் வருகிறேன். திடீரென்று ஒரு பெரிய பங்களாவும், காரும் வாங்கிவிட்டதோடு பாங்கியில் 50-ஆயிரம் ரூபாய் ரொக்க மிருக்கிறதாமே. அது ஏது சார்?...

நாயுடு:—அதுதான் அத்ருஷ்ட மென்பது. அவர் சில செல்வவந்தர்களுடன் ரகஸியமாகக் கூட்டுவ்யாபாரம் செய்கிருர். நல்ல காலத்தின் பலன் இந்த உலகயுத்தத்தின் காரணமாக இவர்களுக்கு சுக்ரதசை யடித்ததால் லாபம் ஏராளமாக வந்தது. அதைக் கொண்டு பகிரங்கமாக செலவு செய்கிருர். இன்னென்று பாரும். திருடி சம்பாதித்ததானலும் சரி, கருப்பு மார்கெட்டில் சம்பாதித்ததானலும் சரி. லஞ்சம் வாங்கும் குள்ள நரிகளானலும் சரி. பணத்தை சிலர் உடனுக்குடன் பகிரங்கமாகவே செலவுசெய்யமாட்டார்கள். சிலர் அடுப்பங்கரையில் புதைத்து பூதங்காப்பது போலக் காப்பார்கள். சிலர் பெட்டியிலேயே வைத்து கோழி, முட்டையை அடைகாப்பதுபோல் காத்துத் தாம் பஞ்சவேஷமே போடுவார்கள். பாங்கியில் வைத்தாலும் பிறருக்குத் தெரிந்துவிடும். வீடு நகைகள் முதலியவைகள் வாங்கினல் பிறர் அறிந்துவிடுவார்கள் என்று எத்தனை பேர்கள் இம்மாதிரி செய்கிருர்கள் தெரியுமா! தாம் அடைகாப்பதுபோல் பிறர் அடைகாக்காமல் பகிரங்கமாகச் செலவிடும் தம் போன்ற லஞ்சக்காரர்களை இவர்கள் கேலி செய்து பழித்துப் பேசுகிருர்கள். இது உலக விசித்திரங்களில் ஒன்று...

பாங்கர்:—அப்படி என்ருல் பொக்கிஷதாருக்கும் இதற்கும் சம்மந்தமில்லை என்று சொல்கிறீர்கள்?

நாயுடு:—கட்டாயம் சம்பந்தமேயில்லை. பாவம்! அவர் எத்தனை மனவருத்தப்பட்டு உருகுகிறார் தெரியுமா...

பாங்கர்:—பாங்கியில் வேலையாயிருப்பவர்களைத் தவிர வேறு யாரய்யா இதைச் செய்திருக்க முடியும்.?

நாயு:—சாதாரணமாக மனித சுபாவத்தில் நினைக்கும் நினைப்பு இதுதான். ஆனால் உண்மை என்னவோ சில சமயம் சில இடத்தில் வேறாக ஆய்விடுகிறது: இந்தக் கொள்ளை ஒரு பெருங் கொள்ளைக் கூட்டத்தினராலோ பாங்கியின் தொழிலாளர்களாலோ நடக்கவே இல்லை.

பாங்கர்:—என்ன, என்ன? ஒருவரும் சம்பந்தப்படவில்லையா! திருட்டு விவரம் கண்டுபிடித்தாகிவிட்டதா!...யாரு...சொல்லுங்கள் நாயுடுகாரு!...

நாயுடு:—சொல்வதற்காகத்தான் நாங்களே அங்கு வருவதாகக் கிளம்பினோம். நீங்களே வந்துவிட்டீர்கள். இதோ படத்திலுள்ள மனிதன் யாரு, சொல்லுங்கள்—என்று ஒரு புகைப்படத்தைக் காட்டினார்.

புகைப்படத்தை உற்றுக் கவனித்த பாங்கர்..."இவன் தச்ச ஆசாரியல்லவா?...பாங்கியில் சில வேலைகள் செய்தான். இவனுக்கு"......

நாயுடு இடைமறுத்து "இவனுக்கு என்று இழுக்க வேண்டாம்... இதோ! இக்கடிதங்களை தயவு செய்து படித்துப் பாரும்" "என்று கூறி சிலவற்றைக் கொடுத்தார். பாங்கர் வியப்புடன் படிக்கவாரம்பித்தார்.

"ஆசாரி! அன்று தங்களை நேரில் சந்தித்து ஸகஸ்ர நாமாவளியைக் கொடுத்து ஒப்பந்தம் செய்துகொண்டபடி தாங்கள் அந்த தனலக்ஷ்மியை எங்களுக்கு முடித்துக் கொடுத்துவிடவேண்டும். இரும்புப் பெட்டி கம்பெனியிலிருப்பதால் உங்களுக்கு சகலவிதமான சலுகைகளும் உண்டு...8-தேதி சந்திக்கிறேன்...

"ஆசாரிக்கு பலே...பலே...நாங்கள் கட்டாயம் நீங்கள் சொல்லியபடி மோட்டாருடன் பெண்ணை அழைத்துப்போக வருகிறோம்"...

பாங்கர்:—இதென்ன! விளையாட்டு நாயுடுகாரு! ஏதோ கல்யாண விஷயமாகவன்றோ எழுதியிருக்கிறது! கல்யாணத்திற்கும் இதற்கும் என்னய்யா சம்மந்தம்,? என்னை ஏதோ கேலி செய்வது போல்...

நாயுடு:—சார்! அப்படி நினைக்க வேண்டாம். உங்களை கேலி செய்வதற்கா நாங்கள் பாடுபடுகிறோம்? ஸகஸ்ரநாமமென்பது ஆயிரம் ரூபாயை இனம் கொடுத்தது என்று அர்த்தம். தனலக்ஷ்மி என்பது பணத்தைக் கொள்ளையடித்து எங்களிடம் சேர்க்கவேண்டும் என்பது அர்த்தம் தெரிந்ததா...

பாங்:—(வியப்புடன்)...என்ன பணத்தைக் கொள்ளையடிப்பதா... எனக்கு ஒன்றுமே புரியவில்லை. விவரமாகச் சொல்லும்.

நாயுடு:—இந்த கொள்ளை நடப்பதற்கு ஒருமாதம் முன்புதானே பாங்கியில் ரிப்பேர்கள் நடந்தன...

பாங்கர்:—ஆமாம்...

நாயுடு:—அதை முதலில் நான் தெரிந்துகொண்டேன். பாங்கி உத்யோகஸ்தர்களை கவனிப்பதுபோல் இந்த ரிப்பேர் செய்த சகல தொழிலாளிகளையும் வெகு பக்குவமாகக் கவனித்து அவர்களுடன் பேச்சுக

கொடுத்தேன். 'தச்ச மேஸ்த்ரி சாதாரண மனிதனில்லை. இரும்புப்பெட்டி செய்யும் கம்பெனியில் வேலை செய்கிறவன். வேறு வேலைக்குப் போகவே மாட்டான். தான் வேலை செய்யும் கம்பெனியில் லீவு எடுத்துக் கொண்டு இதில் மட்டும் வேலை செய்தான்' என்று கொல்லத்து மேஸ்திரி பெருமையாகப் பேசிக் கொண்டான்.

இதில்தான் எனக்குச் சந்தேகம் உண்டாகியதும் இரும்புப்பெட்டி கம்பெனிக்குப் போய் இந்த ஆளை கவனித்துக்கொண்டேன். உங்கள் பாங்கியின் இரும்புப்பெட்டியும் இதே கம்பெனியில் வாங்கியது என்பதை முத்திரையாலறிந்து கொண்டேன். இவன் தனது தொழிற்சாலையில் லீவு வாங்கிக்கொண்டு ஏன் இங்கு ரகஸியமாக வேலை செய்யவேண்டும். ஏதோ மர்மம் இருக்கிறது என்று எனக்குப் பட்டது. அதனால் நானே ஒரு வீடு கட்டப் போவதாகவும் தச்ச வேலை அவனே செய்ய வேண்டும் என்றும் கூப்பிட்டேன். அவன் முடியாது என்றும் தன் ஆபீஸில் உத்திரவு கிடையாதென்றும் யோக்யமாகக் கூறிவிட்டான்- இவன் பாங்கியில் திருட்டுத்தனமாகத்தான் வேலை செய்திருக்கிறான் என்பதை அறிந்தேன்.

பிறகு அவனையே தொடர்ந்து கவனித்து வந்தேன். யார் இவனிடம் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள், யார் யாரிடம் இவன் பேசுகிறான்—என்று கவனித்தேன்; தபால்களையும் கவனித்தேன். உள்ளூரில் இவன் சாமர்த்தியமாய் களவாடி வெளியூருக்கு உதவியிருப்பதை அவனுக்கு வந்த கடிதங்களால் அறிந்தேன்- ரகஸ்ய வார்த்தைகளால் கடித மெழுதியதை தபால் முத்திரையுள்ள ஊருக்குச் சென்று அங்கு யார் யார் புதிய முறையில் என்னென்ன செய்கிறார்கள் என்று கவனித்தேன்.

சாதாரண செல்வவந்தர்களின் பிள்ளைகள் நால்வர் ஒன்று கூடி பாங்கியில் முதல் வைக்காமல், ஒரு ஸினிமாக்கம்பெனி ஆரம்பித்திருப்பதையும் அதில் ஒரு நடிகையைக் கட்டாயமாகத் தமக்குக்கொடுத்தால் தாம் 10 ஆயிரம் ரூபாய் பணம் கொடுப்பதாயும் மற்றொரு அல்ப சித்திரம் வரையும் மனிதனிடம் பேசிக் கொண்டிருப்பதையும் அதைக்கொண்டு ஐவேஜியே இல்லாத அம் மனிதன் சித்திர கலாசாலை ஏற்படுத்தியிருப்பதையும் ஸினிமாக்கம்பெனியின் சொந்தக்காரன் வீட்டில் காவல்காரனாக வேலை செய்தபடியே சகல உளவையும் கண்டுபிடித்தேன்.

நான்குபேர் சேர்ந்து டாக்ஸியில் அடிக்கடி சுற்றுவதால் நான் ஒரு டாக்ஸிட்ரைவருக்கு விஷயத்தைச் சொல்லி நானே ட்ரைவராக இருந்து அவர்கள் ஆங்கிலத்தில் பேசும் சகல விஷயங்களையும் அறிந்து கொண்டு ஊருக்குத் திரும்பிவந்தேன். தச்சனை கையும் மெய்யுமாக ஆராய்வதற்காக அவன் வீட்டில் பெண்கொள்வதற்குப் போவது போல் சம்மந்தியாக இன்றுதான் சென்றோம்.

சகல உளவுகளையும் கண்டு கொண்டு போலீஸாருக்கு விவரமாகத் தகவல்கள் கொடுத்துவிட்டு வந்தோம். பூட்டை த்ராவகங்களின் உதவியினாலும் தேர்ந்த...தெரிந்த ஆயுதங்களின் உதவியினாலும் தச்சனே உடைத்திருப்பதற்குச் சாக்ஷி அதற்கான சகலமும் அவன் வீட்டு இரும்புப் பெட்டியிலிருக்கின்றன. உங்கள் பாங்கியில் களவுபோன நோட்டுக்களின்

நம்பர்களுள்ள 6000 ரூபாய் நோட்டுக்கள் அவன் பெட்டியிலிருக்கின்றன. சினிமாக்காரர்கள் சில பெரிய நோட்டுக்களை வெகு ஜாக்ரதையாக மாற்றி இருக்கிறார்கள். ஆயினும் ஒரு நடிகைக்காக 25-ஆயிரம் ரூபாய் நோட்டுகளை மட்டும் அவசரத்தில் அப்படியே கொடுத்துவிட்டார்கள்.

அந்த பெண்ணின் பாட்டனார் அதே நோட்டுக்களை கவர்மெண்டு கஜானாவில் கொடுத்ததும் நம்பர் ஏற்கெனவே சகலமான போலீஸிலும் தகவல் கொடுத்திருந்ததால் உடனே வெகு சுலபமாகப் பிடித்து விட்டார்கள். இன்னேரம் சினிமாக்காரர்கள், சித்திரக்காரன் எல்லோருக்கும் சுபச்செய்தி போயிருக்கும். பழி ஓரிடம் பண்டமோரிடம் பார்த்தீர்களா !... இனிமேலாவது பாங்கியில் வேலையாயிருப்பவர்கள்மீது சந்தேகப் படமாட்டீர்களோ ?......

இதைக் கேட்டதும் வந்த மனிதர் அப்படியே திகைத்து வியப்பால் கட்டுண்டுபோய்...“நாயுடுகாரு! நான் எத்தனை முட்டாள்தனமாக வெல்லாம் எண்ணி விட்டேன் தெரியுமா... அடாடா! இத்தனை நாட்களாகி விட்டதே என்கிற கோபம் கூட எனக்கு இருந்தது. பாங்கியில் நான் யார் யார் மீது சந்தேகங் கொண்டேனோ அவர்களை மிகவும் கேவலமாக நடத்தி வருகிறேன். இது மகா பிசகு என்று தெரிந்து விசனப்படுகிறேன்...உம் அபாரமான யோசனையும் மூளையின் சக்தியும் என்னை ப்ரமிக்கச் செய்கின்றன. என் மருமகப்பிள்ளை பாஸ்கரன் என்பவர் போலீஸ் இன்ஸ்பெக்டராக இருக்கிறார். அந்த ஊரில்தான் பாங்கி காஷ்கீபர் ஏதோ கையாடிவிட்டதாயும் அது விஷயமாகத்தான் அலைவதாயும் கடிதம் வந்தது....

நாயு:—ஆம்... ஆம்... சொல்ல மறந்துவிட்டேனே ! அந்த இன்ஸ்பெக்டர் உங்கள் மருமகன்தானா? மெத்த சந்தோஷம். அவரிடமும் நான் சகலமான நோட்டுகளின் நம்பர்களையும் அனுப்பி இருந்தேன். அந்த பாங்கியின் காஷ்கீபர் கையாடிவிட்டதால் உங்களுக்கும் இந்த காஷ்கீபர் மீது சந்தேகம் உதித்ததாக்கும். அந்த காஷ்கீப்பரின் மாமனார்தான் இந்த கள்ள நோட்டுக்களுடன் அவனைக் காப்பாற்றப் போனார். தன் பேத்தியை சினிமாக்காரனுக்கு மனந்துணிந்து வித்த காசுதான் அது. இன்னொரு ஆச்சரியம் பாருங்கள். அந்த மனிதன் பாஸ்கரின் தகப்பனாருக்கு மாமனாராம். சினிமாவுக்காக விற்ற பெண்தான் பாஸ்கரனின் சகோதரியாம். அதை அறிந்து அவன் மனம் உருகி உடனே தன் தங்கையைக் காப்பாற்ற ஓடினான் என்ற தகவலும் எனக்குக் கிடைத்துவிட்டது, இந்த விசித்திரமான பாங்கிக் கொள்ளை ஒவ்வொரு ஊரில் ஒவ்வொரு விதமாக நடந்து பரிணமித்து விட்டது, இது வியப்பிலும் வியப்பல்லவா? பாங்கி ஒரு ஊரு, கொள்ளை யடித்தவன் வேறு ஊரு, பணத்தை அபகரித்தவன் மற்றோரு ஊரு. என்ன வேடிக்கை பாருங்கள்.

பாங்கர்:—எனக்கு உண்மையில் இப்போது வியப்பும் சந்தேகமும் கூறவே திறமில்லை. நாயுடுகாரு... நீங்கள் அசகாயப் புலிதான் சார்! என் மருமகனுடைய தங்கை கிடைத்து விட்டாளா? அவனுடைய தங்கையைத் தான் ரக்ஷிக்க வேண்டும் என்று எத்தனை ஆசையுடன் முயன்றும் அந்த கிழம் இடந்தரவே இல்லை. நல்ல காலத்திற்குத் தான் இப்படி இக்

கல் முக்கலாக சகலமும் நடந்தது. அவன் தங்கையை என் மகனுக்குக் கட்டிக் கொடுக்க அவனுக்குப் பரிபூர்ண விருப்பம். இனியாவது அது நிறைவேறட்டும்...நான் அவசரமாகப் போய் இந்த விஷயங்களை பாங்கி பங்குதாரர்களுக்குத் தெரிவிக்கிறேன். நாயுடுகாரு! மிக மிக வந்தனம். உம்மைப் பிறகு பார்க்கிறோம்....

நாயுடு:—பிறகு என்ன! மகன் கல்யாணத்தில் பார்க்கலாமல்லவா? ...இன்னொன்று சொல்ல மறந்துவிட்டேனே. என் கையாள்தான் சினிமாக் கம்பெனியில் விளக்கு போடுகிற ஆளாக வேலை செய்கிறான். அந்த பெண்ணுக்கு இந்துமதி என்று பேராம். அவளுக்குத் தெரியாமல் தாதா, பாட்டி, மாமா மூவரும் இந்த சதி செய்தார்களாம். அந்த பெண் சொல்லாமல் இவர்களுக்குக் கடுக்காய் கொடுத்து விட்டு ஓடி விட்டாளாம். ஸினிமாக்காரன் தவிக்கிறானாம். பதிலுக்கு அப்பெண்ணின் பாட்டி, மாமி, மாமன் மூவரையும் அவன் ஜும்ஸிக்கிறானாம். இந்தத் தகவலும் எனக்குக் கிடைத்துவிட்டது. இதை ஏன் சொன்னேன் என்றால் உங்கள் மருமகன் அந்தப் பெண்ணை உங்கள் மகனுக்கு மணம் செய்விப்பதாகச் சொல்லிக் கொண்டிருப்பதாகத் தெரிவித்தீர்களே. அந்த பெண் ஸினிமாவில் சேர்ந்து விட்டாள் என்று எங்கு நிஷித்தம் செய்து விடுவீர்களோ என்பதற்காக அவள் சினிமாக்காரன் கண்ணில் மண்ணைத் தூவி விட்டுச் சென்று விட்டதையும் சொன்னேன்...

பாங்கர்:—அடாடா...என் மருமகன் இப்போது என்னதான் சந்தோஷப்படுவார் தெரியுமா? சரி...உங்களுக்கு ஆயிரங் கோடி வந்தனம்... நான் மறுபடியும் வருகிறேன்—என்று கூறி விடை பெற்றுக்கொண்டு போனார். நாயுடுவின் பாரமும் குறைந்து சந்தோஷத்துடன் மகளைப் பார்த்தார். அவள் முகத்தில் ஆனந்தத்தின் தாண்டவம் ப்ரகாசித்தது.

## 30

ராஜாம்பாள் சகலத்தையும் களவாடிக்கொண்டு ஓடி விட்டது இந்துவுக்குத் தெரிந்ததும் அவள் உண்மையில் தன் மாமனுக்குப் புத்தி கற்பித்ததாகவே எண்ணினாள். "அண்ணா! இனி என்னை இந்த இடத்தில் அரை நிமிஷங்கூட வைக்காதே. இப்போதே மன்னியிடம் அழைத்துக் கொண்டுபோய் விடு, பணத்திற்காகப் பாசத்தையும் இழந்து மானத்தையும் இழந்த மகாபாவிகளின் கண் முன்பு என்னை இனிவிடாதே அண்ணா! டீச்சர்! நீங்கள் செய்த மகத்தான உதவியை நான் ஏழு ஜென்மம் எடுத்தாலும் மறக்கமாட்டேன். என்னுடைய பக்கில் பகவான் இருக்கிறார் என்பதை இப்போது உணர்ந்தேன். அம்மா!...உம்...ஒரு தூசி கூட நமக்குவேண்டாம். பணம், பணம் என்று அடித்துக் கொண்ட பாவிகள் பணத்தினால் சகல சுகபோகபாக்யங்களையும் அடைந்து மகிழட்டும்." என்று சபிப்பதுபோல் கூறி அண்ணனின் கரத்தை இழுத்தாள்.

பாஸ்கரன்;—அம்மணி! உன் பரிசுத்தத்தைக் கண்டு பூரிக்கிறேன். சித்தி! வாம்மா—என்று வினயத்துடன் கூப்பிட்டான்.

அதேசமயம் அவ்வூர் போலீஸார் ராஜசேகரனின் சித்திர சாலையை முற்றுகையிட்டு ராஜசேகரன் சினிமாக்காரர்கள் முதலிய சகலரையும் கைதியாக்கிக் கொண்டு போனதோடு இவ்வீட்டையும் சோதனை போட வந்தார்கள். காமாக்ஷியம்மாளின் உயிர் போய்விடும் போல் துடித்தது. "அப்பா! பாஸ்கரா! நேர்வழியை பகவான் காட்டியிருந்தும் அதை விட்டுக் கோணவழியில் சென்றதன் பலனை அனுபவித்துவிட்டேன். நீ முதலில் இவர்களை அழைத்துக் கொண்டுபோய்விடு. இனி இங்கு இவர்களை அனுப்பவேவேண்டாம்" என்று தானே முன் கூட்டிக் கூறி விட்டாள்.

அடுத்த நிமிடம் கார் 'பும் பும்' என்று பறந்தது. பானுமதியின் கண்களில் மட்டும் கண்ணீர் வழிந்தது..........."ஸாரதா... இதோ உன் நாத்தனாரும் மாமியாரும்..." என்று சந்தோஷத்துடன் பாஸ்கரன் கூறிய குரலைக் கேட்டதும் ஸாரதா ஓடி வந்து முன்பின் பழகியவளைப்போல் "வாம்மா...... இந்து நமஸ்காரம்.....இவள்.........ஓவியப்பரிசு பெற்ற ...இந்துமதியல்லவா?" என்று வியப்புற்றதைக்கண்ட பாஸ்கரன் "ஆமாம் ஸாரதா! நான் கூட முதலில் இதைக்கண்டு இப்படித்தான் கேட்டேன். பரிசு பெற்ற ஓவியத்தைக் கூட உம் தம்பிதான் வாங்கியிருக்கிறான் என்பதை நான் இன்னும் சொல்லவில்லையே. ஓவியத்தைத் தீட்டிய சிறந்த ஓவியச் செல்வியையே நாம் பரிசாக உன் சகோதரனுக்கு அளித்து விடவே கூடவே கூட்டிக்கொண்டு வந்துவிட்டேன். சித்தி! இந்த நிமிடம் முதல் இந்த வீடும் [illegible]ங்களும் உன் சொந்தப் பொருள்கள்... சாரதா... எங்கே பாலுவும் ச[illegible]வும்?"...என்று கேட்டுக்கொண்டே குழந்தைகளைத் தூக்கிக் கொண்டுவந்து பானுவிடம் கொடுத்தான்,

இத்தகைய அன்பு [illegible]ச்சியைக் கண்டறியாத பானுமதி கண்ணீர் பெருகக் குழந்தைகளை வாரியணைத்து முத்தமிட்டுப் பூரித்தாள். பிரிந்தவர் கூடினல் பேசவும் கூடுமோ! என்கிற பழமொழிப்படிக்கு வெகு காலங்களுக்கு முன்பு சரியாகக் கூட பார்க்காத நிலைமையில் பிரிந்தவர்கள் கூடியதும், ஆனந்தம் கட்டறுத்துக் கொண்டு காட்டு வெள்ள போல் பொங்கிவிட்டது. மணிகணக்கும் நாள் கணக்கும் கூடப் போவது தெரியாது போய் விட்டது. இவ்விரு அறைகளுக்கும் புதிய புதிய உலகத்தில் புதிய வாழ்வு ஆரம்பித்ததுபோல் உணர்ச்சி தோன்றியது. இந்துமதியை ஸாரதா கட்டித்தழுவி பல முத்தங்களிட்டாள்.

சாரதாவின் தகப்பனருக்குத் தந்தி சேர்ந்ததற்கு முன்பே நாயுடுவால் சகல விஷயங்களும் தெரிந்துவிட்டதால் இவர்கள் சற்றும் எதிர்பாராதவிதமாய் தாயார் தகப்பனர் தம்பி முதலியவர்கள் இறங்கியதைக் கண்டதும் சாரதாவும் பாஸ்கரனும் ஆனந்தக் கூத்தாடி அகமகிழ்ந்து வரவேற்று 'தந்தி சேர்ந்திருக்கக்கூட டயமில்லையே. எப்படி இதற்குள் வந்துவிட்டீர்கள்? விஷயம் தெரியுமா...

பாங்கர்:—அடேயப்பா! உங்களுக்கு முன்னல் எனக்கு சகலமும் நாயுடு சொல்லிவிட்டார். அதனல்தான் உடனே புறப்பட்டுவந்துவிட்டோம்.

சாரதா:—இந்துமதி... இதோபாரம்மா...என்று தானே அழைத்து வந்தாள். ஆனந்தம் என்கிற பொருள் ஒவ்வொருவருடைய இதயத்திலும் நிர்த்தனம் செய்தது..குழந்தாய்...உன் ஓவியத்தையே கண்டு பரமசந்தோஷத்துடன் மயங்கிய ப்ரக்ருதி இதோபாரம்மா...என்று பரிகாஸம்செய்தாள்...

பின்னும் சில மாதங்கள் சென்றன. சட்டப்படி வழக்குகள் விசாரணைகள் நடந்து தண்டனைகளும் விதிக்கப்பட்டன. நாயுடுவின் முன்னிலையில், பாங்கர் தனது குமாரனின் விவாகத்தை வெகு ஆடம்பரமாயும் அபார மனத்ருப்தியுடனும் செய்து நாயுடுவுக்கு ஏராளமான சன்மானத்தைச் செய்துப் பூரித்தார். இந்த நித்யகல்யாண மங்கள வைபவசுகத்தைக் கண்டு பானுமதியின் துயரங்கள் எல்லாம் சூரியனைக் கண்டபனி போல் பறந்துபோய் ஆனந்த மயமாகப்பூரித்தது. இன்பமே கண்டறியாத பானுவுக்கு இதைவிட பாக்யம் வேறு என்ன இருக்கிறது? சந்தோஷ ஸாகரத்தில் திளைந்தது.

104179

முற்றிற்று.

43/50.

ஜகன்மோகினி பிரஸ், திருவல்லிக்கேணி.

## ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள்

## எழுதிய நாவல்கள்

வைதேகி
பத்மசுந்தரன்
சண்பகவிஜயம்
ராதாமணி
கௌரீமுகுந்தன்
நவநீதகிருஷ்ணன்
கோபாலரத்னம்
மாதவமணி
சாருலோசனா
சுகந்த புஷ்பம்
வீரவஸந்தா
சாமளநாதன்
ருக்மிணீகாந்தன்
ஸாரமதி
நளினசேகரன்
பரிமளகேசவன்
மூன்று வைரங்கள்
உத்தமசீலன்
* கதம்பமாலை
* ஸரஸாரஜன்
காதலின் கனி
சோதனையின் கொடுமை
படாடோபத்தின் பரிபவம்
தியாகக்கொடி
ஜெயஸஞ்சீவி
பக்ஷமாலிகா
புத்தியே புதையல்

மங்களபாரதி
பட்டமோ பட்டம்
சுகுணபூஷணம்
பிச்சைக்காரக் குடும்பம்
ஆனந்தஸாகர்
அம்ருததாரா
இன்பஜோதி
ராஜமோஹன்
அனாதைப்பெண்
ப்ரேமப்ரபா
அன்பின் சிகரம்
சாந்தகுமாரி
மாயப்ரபஞ்சம்
சந்திரமண்டலம்
வானக்குயில்
உளுத்த இதயம்
மகிழ்ச்சி உதயம்
ஜீவியச் சுழல்
மாலதி
வத்ஸகுமார்
கஸ்தூரீதிலகம்
கானல் நீர்
படகோட்டி
ஆத்மசக்தி
உணர்ச்சி வெள்ளம்
சந்தோஷ மலர்
கருணாலயம்
புகழ்மாலை

தயாநிதி
சுடர் விளக்கு
கலாநிலயம்
ஞானதீபம்
வாத்ஸல்யம்
க்ருபாமந்திர்
மதுரகீதம்
பிரார்த்தனை
இதய ஒலி
மலர்ந்த இதழ்
அமுதமொழி
பிரதிக்ஞை
ஆசைப்ரவாகம்
வாழ்க்கைத் தோட்டம்
அபராதி
வெளுத்த வானம்
ப்ரதிபலன்
பவித்திரப்பதுமை
பெண் தர்மம்
உண்மைச்சித்திரம்
தெய்வீக ஒளி
சிலாசாஸனம்
புதுமைக்கோயில்
மனத்தாமரை
தபால் விநோதம்
ஓவியப்பரிசு
இனிய முரசு
ஆண்டவனின் அருள்

---

ஷை நாவல்களில் பெரும்பாலும் தற்போது கைவசமில்லாததால் வாசகர்கள் தங்களுக்குத் தேவையான புத்தகங்கள் கிடைக்குமா என்றும் தற்கால விலையையும்பற்றி முதலில் எழுதித் தெரிந்துகொண்டு பிறகு பணம் அனுப்பவும்.




## வை. மு. ஸ்ரீநிவாஸன் எம். ஏ. பி. எல்.

## எழுதிய முதல் நவீனம்

1. மங்களபுரியில் மகிழ்ச்சி உதயம்
2. நாமகரணமும் நாற்பது திங்களும்
3. மங்களபுரியின் மூன்று திலகங்கள்
4. ஜீவியச் சுழலில் சோதனையின் கொடுமை
5. புயலும் அமைதியும்
6. குருகுல வாசமும் குமரனின் உள்ளமும்
7. ராஜ்யாபிஷேகமும் ராஜ்ய பாரமும்
8. காதல் போதனை—கம்பன் வர்ணனை
9. எதிர்பாராத சம்பவம்
10. அதிர்ச்சியும் வைராக்யமும்
11. இதய ஒலி
12. போர்க்களத்தில் மனப்போர்
13. உணர்ச்சி வெள்ளம்
14. இருண்ட வானம்
15. உதய சூரியன்

கிளேஸ் பதிப்பு—சுமார் 25 படங்களுடன்

3-ம் பதிப்பு ரூ. 1—4.

ரிஜிஸ்டர் போஸ்ட் மூலம்—ரூ. 1—7.




1. சேற்றில் முளைத்த செந்தாமரை
2. அகமலர்ச்சியும் ஆபத்தும்
3. பரபரப்பும் பரிதவிப்பும்
4. வாழ்வும் தாழ்வும்
5. சோகமும் மோகமும்
6. இடியும் மின்னலும்
7. பிரசாரமும் விசாரமும்
8. அன்றும் இன்றும்
9. அலறலும் ஆறுதலும்
10. விழிப்பும் உழைப்பும்
11. விளம்பரமும் விபரீதமும்
12. மனக்கண்ணாடியே உலகம்!
13. இன்னலைப் புன்னகைப்போம்!
14. உயிர் நிலை—உயர் நிலை.
15. பொருள்—அருள்—அமைதி
16. மனதின் சூக்ஷ்மாணுக்கள்
17. அருள் நிலத்தில் அமரானந்தப்பயிர்!
18. அவனியில் யாவும் அவனாலே!
19. காதல் விளக்கம்—அன்பின் தாயகம்!
20. மதமா, மனமா?—மனத்திருவிளையாடல்!

சுமார் 50 படங்களுடன் (பல கலர்களில்) ஸ்பெஷல் பதிப்பு

ரூ. 1-4. ரிஜிஸ்தர் போஸ்டு மூலம் ரூ. 1-7.

Jaganmohini Press, Triplicane.